A

# DESCRIPTIVE CATALOGUE

OF THE

# TAMIL MANUSCRIPTS

IN THE

**Tanjore Maharaja Sarfoji's Saraswathi Mahal Library, Thanjavur.**

BY

Pandit (Late) L. OLAGANATHA PILLAY,
Professor of Tamil & Sanskrit College, Thiruvaiyaru.

★

*Prepared under the orders of the Administrative Committee of the Library*

★

VOL. II.

1964.

A

# DESCRIPTIVE CATALOGUE

OF THE

# TAMIL MANUSCRIPTS

IN THE

**Tanjore Maharaja Sarfoji's Saraswathi Mahal Library, Thanjavur.**

BY

Pandit (Late) L. OLAGANATHA PILLAY,
Professor of Tamil & Sanskrit College, Thiruvaiyaru.

★

*Prepared under the orders of the Administrative Committee of the Library*

★

VOL. II.

Ukkadai Sri Ambal Press,
THANJAVUR.
1964.

விலை 3—50.

# முகவுரை.

இதில் முதற்பாகத்தில் வந்திராத பற்பல வேதாந்த நூல்களும், சைவ வைணவ சித்தாந்த சாத்திரங்களும் தோத்திரங்களும், சோதிட நூல்களும் பிறவும் காணப் படும். இவைகளுக்கு இடையில் சிற்சில வைத்திய நூல் களும் வந்துள்ளன. அப்பகுதிக்கு இங்கிலீஷ் எழுத் தாகிய L அடையாளமாகப் போடப்பட்டது.

மூன்றும் பாகத்தில் பலவகையான வைத்திய சாத் திரங்களும், அருமையான அனுபவ வைத்திய முறை களும், முந்திய பாகங்கட்கு இன்றியமையாத அட்டவணை கள் பலவும் வந்திருக்கின்றன.

1925-ஹு ஆகஸ்டு-மீ 30-உ. } பண்டிதர் (காலஞ்சென்ற) L. உலகநாத பிள்ளை,
தமிழ் & சமஸ்கிருத காலேஜ், திருவையாறு.

---

பலவகையான வைத்திய சாத்திரங்களும் பிறவும் நாலாம் பாகமாக அச்சாகிவருகிறது.

முதற்பதிப்பு 1925.

இரண்டாம் பதிப்பு 1964.

# பொருளடக்கம்.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| **நீதி நூல் :** | | | |
| திருமலை வெண்பா | ... | ... | 73 |
| புறத்திரட்டு | ... | ... | 203 |
| **தனிப்பாடல் :** | | | |
| தஞ்சை சிவாஜிமகாராஜா பேரில் பாடல் | | ... | 2 |
| **மான்மியம் :** | | | |
| காசிகாண்டம் | ... | ... | 173 |
| சேக்கிழார் புராணம் | ... | ... | 167, 169 |
| திருவாதவூரர் புராணம் | ... | ... | 115 |
| பூவனூர்ப் புராணம் | ... | ... | 218 |
| **விகடம் :** | | | |
| பல ஜாதிகம் | ... | ... | 1 |
| **வேதாந்த நூல்கள் :** | | | |
| சத்தப்பிரகரணம் | ... | ... | 13 |
| சுருதிகீதை | ... | ... | 16 |
| ஷை வசனம் | ... | ... | 19 |
| ஞானசோபனப்பாடல் | ... | ... | 21 |
| ஞானவாசிட்டம் | ... | ... | 4, 5 |
| தாசபோதம் | ... | ... | 14, 16 |
| நித்திய தீபன சல்லாபம் | ... | ... | 11 |
| பகவத்கீதை | ... | ... | 19 |
| பஞ்சதசப் பிரகரணம் | ... | ... | 5, 7, 8 |
| பிண்டசக்கரம் | ... | ... | 9 |

| | பக்கம். |
|---|---|
| பிரபோதசந்திரோதயம் ... ... | 8 |
| விவேகசிந்தாமணி புவனகோசம் ... | 20 |
| வேதாந்த சூடாமணி ... ... | 8 |


## சைவசமைய நூல்கள்.

1. சைவாகமங்களும் சித்தாந்த சாத்திரங்களும் :


| | |
|---|---|
| இருபா இருபது ... ... | 33, 58 |
| உண்மை நெறி விளக்கம் ... ... | 47, 63, 112 |
| உண்மை விளக்கம் ... ... | 43, 72 |
| உபதேசத் திருமந்திரம் ... ... | 110 |
| கொடிக்கவி ... ... | 58 |
| சங்கற்ப நிராகரணம் (உமாபதி சிவம்) ... | 25, 38 |
| சிவஞான சித்தியார் சுபக்ஷம் ஞானப்பிரகாசருரை | 69 |
| ஷை நிரம்பவழகிய தேசிகருரை ... ... | 23 |
| ஷை மூலம் ... ... | 33, 58 |
| ஷை பரபக்ஷம் மூலம் ... ... | 31, 73 |
| சிவஞான போதம் மூலம் ... | 29, 57, 72, 153 |
| சிவதருமோத்தரம் ... ... | 74, 77 |
| சிவப்பிரகாச மூலம் ... | 36, 58, 72, 73, 149 |
| சைவசமயநெறி மூலம் ... ... | 78, 80 |
| திருக்களிற்றுப்படியார் ... ... | 45, 59, 73 |
| திருமந்திரத்திரட்டு ... ... | 81 |
| திருமந்திரம் ... ... | 85, 149 |
| திருவருட்பயன் மூலம் ... ... | 37, 65 |
| திருவுந்தியார் மூலம் ... ... | 44, 60 |
| தேவி காலோத்தர மூலம் ... ... | 41, 59 |
| நெஞ்சுவிடு தூது ... ... | 64 |
| போற்றிப் பஃறொடை ... ... | 59, 150 |
| வினா வெண்பா ... ... | 39 |

| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| **2.** சைவக் கட்டளை : | | |
| சித்தாந்த தத்துவக்கட்டளை | ... ... | 107 |
| சிவப்பிரகாசக் கட்டளை | ... ... | 106 |
| தத்துவக் கட்டளை | ... ... | 187 |
| தத்துவத்திரட்டு | ... ... | 100 |
| **3.** சைவசாத்திரங்கள் : | | |
| அந்தர்யாகம் | ... ... | 96 |
| அந்தேஷ்டி சமய தீக்ஷை | ... ... | 91 |
| இரக்ஷா சக்கரவிதி | ... ... | 97 |
| ஐக்கிய வியல் | ... ... | 49 |
| சங்கற்பநிராகரணம்(மறைஞான சம்பந்தர்) | ... | 53 |
| சித்தாந்த நிச்சயம் | ... ... | 66, 67 |
| சிவஞான தீபம் | ... ... | 80 |
| சிவதரிசனம் | ... ... | 50 |
| சிவபுண்ணியத் தெளிவு | ... ... | 201 |
| சிவபூஜாபத்ததி | ... ... | 86, 104 |
| சிவபூஜையகவல் | ... ... | 82, 96 |
| சிவபூஜையந்தாதி | ... ... | 93 |
| சிவப்பேறு | ... ... | 116 |
| சிவானந்தபோதம் | ... ... | 55, 60 |
| சிவாநந்தமாலை | ... ... | 147 |
| சூரியபூஜை | ... ... | 90 |
| சைவானுஷ்டானமுறை | ... ... | 84 |
| ஞான அந்தியேஷ்டி | ... ... | 62 |
| ஞான அம்மானை | ... ... | 66 |
| ஞானதீக்ஷை | ... ... | 40, 63 |
| ஞானபூஜை | ... ... | 40, 60 |
| தெளிவுண்மை போதம் | ... ... | 112 |

பக்கம்.

நித்தியகன்ம வகவல் ... ... 94
நியமவகவல் ... ... 89, 95
பஞ்சாக்கரவுண்மை ... ... 98
பதிபசுபாசப்பனுவல் ... ... 51
பரமவுபதேசம் ... ... 48
புவனகோசம் ... ... 56
பூஜையட்டவணை ... ... 83, 88
போகதூடணம் ... ... 49
போஜனவிதி ... ... 61, 97
ப்ரசாதமந்திரவிவரம் ... ... 153
முத்தி நிச்சயம் ... ... 61

4. யோகசாத்திரங்கள் :

அட்டாங்கயோகம் ... ... 54
உபதேசக்கட்டளை ... ... 210
சர நூல் ... ... 108
நித்திய சரவிபரம் ... ... 111

5. சிற்றம்பல நாடிகள் சாத்திரம் :

அறிவானந்த சித்தியார் ... ... 100
திரிகாலத்திரங்கல் ... ... 102
துகளறுபோதம் ... ... 47, 66, 115

6 வள்ளலார் சாத்திரம் :

சதாசிவ ரூபம் ... ... 149
ஞான சாரம் ... ... 152
தத்துவ விளக்கம் ... ... 42
திருநெறி விளக்கம் ... ... 151

7. வீரசைவ சாத்திரம் :

சிவப்பிரகாச விகாசம் ... ... 113

பக்கம்.

| | | | |
|---|---|---|---|
| வீராகமம் | ... | ... | 28 |
| வைராக்கிய சதகம் | ... | ... | 25 |
| வைராக்கிய தீபம் | ... | ... | 27 |

8. பட்டினத்துப்பிள்ளையார் பாடல் :

| | | |
|---|---|---|
| பட்டினத்தார் நெஞ்சொடு புலம்பல் | ... | 144 |
| ,, நெஞ்சொடு மகிழ்தல் | ... | 103 |
| ,, மெஞ்ஞானப் புலம்பல் | ... | 118 |
| ,, வெண்பா ... | ... | 116 |

9. பத்திரகிரியார் பாடல் :

| | | |
|---|---|---|
| பத்திரகிரியார் மெஞ்ஞானப் புலம்பல் | ... | 118 |

10. சிவவாக்கியர் பாடல் :

| | | | |
|---|---|---|---|
| சிவவாக்கியம் | ... | ... | 264 |

சைவத் திருமுறைகள் :

| | |
|---|---|
| காரைக்காலம்மையார் திருவாலங்காட்டுப்பண் | 126, 132 |
| ,, திருவிரட்டைமணிமாலை | 158 |
| ,, மூத்த திருப்பதிகம் | 122, 127, 132 |
| திருத்தொண்டர் திருவந்தாதி ... ... | 161, 169 |
| திருவாசகம் | 144, 153, 154, 157, 159, 160, 245 |
| திருவிசைப்பாத் திரட்டு ... ... | 137 |
| தேவாரத் தலமுறை ... | 128, 132, 133, 134 |
| தேவாரத்திரட்டு ... | 122, 141, 142, 191 |
| தேவாப்பதிகங்கள் | 119, 120, 134, 136, 146, 160, 168, 172, 173, 175, 215 |
| பெரிய புராணம் | 162, 164, 165, 166, 168, 172, 173, 175, 176, 177, 178 |

திருமுறைக்கின்றியமையாதவை

| | |
|---|---|
| அடைவு திருப்பதிக்கோவை ... ... | 123, 131 |

பக்கம்.

அறுபத்துமூவர் மரபு முதலிய தெரிவிக்கும் அடைவு ... ... 170, 218
சிவஸ்தலக் கோவை ... ... 188
திருத்தொண்டர் புராணச்செய்யுட்டொகை 176
திருப்பதிக்கோவை 124, 126, 131, 134, 136, 138, 243
பெரியபுராண சாரம் ... ... 166, 169
மூவர் திருப்பாட்டின் பெருமை ... ... 171
வைப்புத்திருப்பதிக்கோவை ... ... 125. 131

சைவத்தோத்திரங்கள் :

அபிராமியந்தாதி ... ... 145,207
அரசூர் திருமேனியம்மன் தோத்திரம் ... 198
உதய திவாகர தோத்திரம் ... ... 325
கணபதி தோத்திரம் ... ... 261
கதிர்காம வேலன் தோத்திரம் ... ... 191
கந்தசாமி பேரிலனுபூதி ... ... 148
கந்தரலங்காரம் ... ... 193
கந்தரனுபூதி ... ... 112, 195
கேதார பூசை ... ... 204
சனீச்வரன் அகவல் ... ... 216
சிவகாமியம்மனகவல் ... ... 194, 200
சித்தரந்தாதி ... ... 1 6, 207
சிவகவசம் ... ... 139
சிவசூரிய தோத்திரம் ... ... 262, 263
சுப்பிரமணிய கவசம் ... ... 204
சுப்பிரமணியர் தோத்திரம் ... ... 217
சௌந்தரியலகரீ மூலம் 205, 206, 207, 210, 211, 213, 214

பக்கம்.

௸ சக்கரத்துடன் ... ... 205
௸ உரையுடன் . 208, 209, 211
தியாகராஜர் தோத்திரம் ... ... 243
திருப்புகழ் 178 181, 184, 185, 186. 187, 188
திருவகுப்பு ... ... 218
திருவாரூர் இரட்டை மணிமாலை ... 202
தேவிவச்சிர பஞ்சர கவசம் ... ... 140
தோத்திரத்திரட்டு ... ... 200, 221
மாணிக்கவாசகர் தோத்திரம் .. ... 157
மீனாக்ஷியம்மன் கலி வெண்பா ... ... 197
வருமுருகாற்றுப்படை ... ... 219
விநாயகர் அகவல் ... ... 214
விநாயகர் கவசம் ... ... 204
வேழ முகம் ... ... 196, 197

வைணவ சமய நூல்கள் :

1. வைணவ சித்தாந்தம் :

அர்ச்சராதி ... ... 227
அஷ்டசுலோகி வியாக்கியானம் ... 17
இராமானுஜகிரந்தம் ... ... 222
எழுபத்துநாலு சிம்மாசன திருநாம விவரம் 241
சரணாகதிநிஷ்டா ... ... 226
சரம சுலோக விவரணம் ... ... 17
சரம ரகஸ்யம் ... ... 226
சரம ரகஸ்யானுசந்தானகம் ... ... 225
சரீர தத்துவம் ... ... 227
திருக்கோட்டியூர் நம்பி வார்த்தை ... 239
திருவாய்மொழிப்பிள்ளை வியாப்தி
அனுசந்தானம் ... ... 227

பக்கம்


திருவாய்மொழி வாசகமாலை என்னும் விவரண சதகம் ... ... 224
திருமந்திரார்த்த வியாக்கியானம் ... 18
நாலு வார்த்தை ... ... 17
நியாய தசகம் ... ... 18
நியாய திலகம் ... ... 18
நியாயவிம்சதி வியாக்கியானம் ... ... 18
நீங்கரிய பெறுநெறியும் ... ... 226
பரம ரகஸ்யம் ... ... 224
பிரபந்த பரித்ராணம் ... ... 227
பெரிய ஜீயர் திருவுள்ளக்கருத்து ... 226
மாதாபிதாயுவதய : ... ... 225
ரகஸ்யத்ரய விவரணம் ... ... 17
ரகஸ்யத்ரய வியாக்யான பிரமாண சங்கிரகம் 19
விஷ்ணுஸ்ஸேஷீ ... ... 226
ஸ்ரீவசனபூஷணம் ... ... 228
க்ஷமாஷோடசி வியாக்யானத்துடன் ... 17


**2.** வைணவ திவ்விய பிரபந்தம் :


அமலனுதிப்பிரான் வியாக்யானம் ... 234
இயற்பா ... 228, 254, 255
இராமானுஜ நூற்றந்தாதி ... ... 229
சிறிய திருமடல் ... ... 242
திருப்பதிக்கோவை ... ... 234, 243
ஷை வேறு ... ... 235
திருவாய்மொழி ... 230, 233, 245, 246
திருவாய்மொழி நூற்றந்தாதி ... ... 232
திருவாய்மொழி வியாக்யானம் ... ... 245
திவ்விய பிரபந்தம் பெரிய திருமொழி 247, 250, 251, 253, 255

பக்கம்


| | | |
|---|---|---|
| ஷை முதலாயிரம் திருமாலை | ... | 240 |
| நித்தியானுசந்தானம் ... | | 238, 251, 252 |
| நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி | ... | 237 |
| நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை | ... | 238 |
| விஷ்ணு திருப்பதிக்கோவை | ... | 189 |

வைணவத் தோத்திரங்கள்

| | | |
|---|---|---|
| இராச கோபாலசுவாமிதாலாட்டு | ... | 265 |
| ஷை திருப்பள்ளி யெழுச்சி | ... | 263 |
| இராமாயணத்திருப்புகழ் ... | | 255, 259, 260 |
| இலக்குமி தோத்திரம் ... | ... | 204, 214 |
| சரஸ்வதி தோத்திரம் ... | ... | 196, 261 |
| சீதாகல்யாணம் ... | ... | 259 |
| செங்கமல நாச்சியார் தாலாட்டு | ... | 265 |


## வைத்திய சாத்திரங்கள் L.

சரீரவைத்தியம்


| | | |
|---|---|---|
| அகத்தியர் வைத்திய ரத்தினச்சுருக்கம் | ... | 307 |
| ,, வைத்தியம் பின்னெண்பது | ... | 311 |
| தெக்ஷிணாமூர்த்தி பூரணகாவியம் 1500 | ... | 301 |
| தேரையர் வைத்தியம் ஆயிரத்தொன்று | ... | 302 |
| நாளுரோக சிகிச்சைகள் ... | ... | 314 |
| பதார்த்த குணம் ... | ... | 313 |
| பலவகை மருந்துகள் ... | ... | 323 |
| மருந்து சுத்திகள் ... | ... | 304 |
| யாகோபு வைத்திய சூத்திரம் ஐம்பது | ... | 305 |
| யூகிமுனி வைத்திய சிந்தாமணி | ... | 316 |

விஷ வைத்தியம் :

| | | |
|---|---|---|
| விஷ வைத்தியம் ... | ... | 290, 318 |

பக்கம்

மாட்டு வைத்தியம் :

மாட்டுவைத்திய அட்டவணை ... 289

இரசவாத நூல்கள் :

அகத்தியர் குருசெயநீர் அறுபது ... 309
,, வாதத்திறவுகோல் நாற்பத்தெட்டு ... 308
கொங்கணர் கடைக்காண்டம் ... 300
தன்வந்திரி செயநீர் ஐம்பது ... 312
பதினெண் சித்தர் ஆணிக் கோர்வை ... 321

ஜாலநூல்களும் மந்திரங்களும் :

அகத்தியர் தண்டகபக்ஷணி ... 310
திருமந்திரம் ... ... 320
பலவகை ஜாலங்களும் மந்திரங்களும் ... 319
மந்திர முறைகள் ... ... 322

சோதிட நூல்கள் :

இராசி ஆருடம் ... ... 267
காலச் சக்கரம் ... .. 286, 287
கெவுளி சாத்திரம் ... ... 268, 289
சகுண முஷ்டி ... ... 287
சங்கிரம பலன் ... ... 274
சாதகாலங்காரம் ... ... 271
சாமுத்திரிகாலட்சணம் ... ... 288
சினேந்திரமாலை ... ... 282
சூடாமணி உள்ளமுடையான் ...272, 275, 276
277, 278, 279
சோதிட நூல் ... ... 269
சோதிடத் திரட்டு ... ... 292

| | | | பக்கம் |
|---|---|---|---|
| தும்மல் காதல் | ... | ... | 290 |
| நக்ஷத்திரமாலை மரணகண்டிகை | | ... | 280, 282 |
| பஞ்சபக்ஷி வசனம் | ... | ... | 266 |
| மாசபலன் | ... | ... | 285 |
| லக்கின பாவம் | ... | ... | 283 |

காமநூல் :

| | | | |
|---|---|---|---|
| சம்பராரி புராணம் (கொக்கோகம்) | | ... | 292, 293 |

கிருஸ்தவமத நூல் :

| | | | |
|---|---|---|---|
| அதிகாலை செபம் | ... | ... | 299 |
| அதியரம்மானை | ... | ... | 295 |
| அர்ச்சிரேஷ்டராகிய கோரிய பாபு | | ... | 300 |
| அர்ச்சிய சிஷ்டமாதாவின் பாடல் பிரார்த்தனை | | | ,, |
| அவஸ்தைபரி பிரார்த்தனை | | ... | ,, |
| அன்னம்மாள் பிரார்த்தனை | | ... | 299 |
| ஆறுகால மந்திரம் | | ... | 300 |
| இருதயத்தின் பிரார்த்தனை | | ... | 300 |
| இன்னுசியார் பிரார்த்தனை | | ... | 300 |
| உத்தரிக்கிற தலத்திலிருப்பவர்க்காக வேண்டுகோள் | ... | ... | 299 |
| உத்தரியமாதாவின் பிரார்த்தனை | | ... | 300 |
| ஏசுநாதர் திருநாமப் பிரார்த்தனை | | ... | 299 |
| ஏசுநாதர் பெரிய பிரார்த்தனை | | ... | 299 |
| காவல் சம்மனசின் பிரார்த்தனை | | ... | 300 |
| சகல அர்ச்சிய சிஷ்டர்களின் பிரார்த்தனை | | | 299 |
| சர்வேச்வர மதம் | ... | ... | 297 |
| சவரியார் பிரார்த்தனை | ... | ... | 300 |
| சும்மன் சுக்கன் பிரார்த்தனை | | ... | 299 |

பக்கம்


ஞானேபதேசம் ... ... 297
திவ்விய சாங்கோபாங்கத்தின் பிரார்த்தனே 300
தேவமாதா அம்மானே ... ... 294
தேவமாதாவின் ஏழு வியாகுலத்தின் செபம் 300
நற்கருணேப் பிரார்த்தனே ... ... 300
பதினலு சந்தோஷம் ... ... 299
பொது சம்மதி விளக்கம் ... ... 298
யோசையப்பர் பிரார்த்தனே ... ... 299

A DESCRIPTIVE CATALOGUE

OF THE

# TAMIL MANUSCRIPTS

IN THE

# TANJORE PALACE LIBRARY.

## XVI விகடம்.

### 650 No. 618 *(a)* பல ஜாதிகம்.

ஏடுகள் 195; Lines 6 in a Page.

இதில் பலவகையான சிருங்கார ரசமான விகடங்கள் இருக்கின்றன. செய்தவர் பெயர் முதலியவை தெரியவில்லை.

Beginning:

சேத்து ராமேசுவரம் சிவதர்மம். சேது ராமலிங்கம் திருப்பணி தர்மம் தர்மமே ஜெயம் தர்மமே நித்யம் தர்மமே சாசுவதம், சிவதர்மமே திருப்பணி தர்மம். உப்பூர் பிள்ளையாரே ஊர்ரெட்சித்து உசிதமாய் உண்டிகை செய்தோம் ஒடந்தையான நவரோங்களே லூர்ச்சித்து சேமக்கலம் அடித்தோம் உணரிமயான சரஸ்வதிதாயே னெனத்து உண்டிகே வருமானக் கணக்கும் படித்தோம். உபதேசியரான குரு சுவாமியே வேண்டி ஊரெங்கும் யாசகம் செய்து திருப்பணி நடத்துவோம்.

End :

சரணென் றடைந்தார் தமக்குவரு வினை யெலாந் தாங்கு
வோன் புருடமேரு
தன்னுடைய செய்கைபோ லெவரையும் பார்க்கின்ற
தகைமையோன் தெய்வபுருடன்

திரணமெனினும் பிறர்பொருட்காசை யில்லாத செய்கை
யோன் புருடரத்னம்
தீராத வினைவரினு மற்பரை மதியாத தீரனே புருட
சிங்கம்

பொருவிலாத் தந்தை தாயென்னிலுங் கண்டபடி புகலு
வோன் புருடோத்தமன்
போற்றுவமர் மனதினிற் குறிப்பறிந் துதவுவோன்
புருடனுயமென்பர்காண்

மரபெலாமிப்படிப் புகழ்ந்தகுண சேகரன் மணவாள
நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே வரத
வேங்கடராயனே

651 (*b*) தஞ்சையை அரசுபுரிந்த
சிவாஜி மகாராஜா பேரில் பாடல்கள்.
Lines 6 in a Page.

Beginning :

கந்தமணி கஸ்தூரி திலதமணி சிங்கார கனநுதலிலங்கிடுமணி
கனகரத் தினசிகர மோதிரமணிக் கையால் கனகமது
ஈந்திடுமணி

சந்தமணி சரபோசி மகராசன் தஞ்சைநகர் தாளு ஈன்
றிடுமணி
சங்கீத சாகித்திய லீலாவி னோதமணி சர்க்குண
சல்லாப வேள்மணி

இந்தமணி வேணிபெருவிடை யீசரிணையடியை யேத்திப்
பணிந்திடுமணி
யின்பமுறு மன்புவளர் பூலோக தேவேந்திர னென்
னவு முதித்திடுமணி

சொந்தமணி யன்னதாதா சகலருக்கு நய துல்லியகுண...
குமணி
சொன்ன சொற்றவருத சீவாசி மகராச சொன்ன
நவரத்தினமணியே.

End :

புள்ளிமயில் வாகனனை யீன்றிடுங் கடவுள் பரிபூரண
வுல்லாச வாசர்
பொருந்து சுருதிக்கு மெட்டாத பெருவிடை யீசர்
பொன்னடி வணங்கி யோங்கி

வெள்ளி ரிஷபம் செய்துவைத்த சரபோசி துரை வேந்த
னருளிய வுற்பன்னன்
விற்பனக்கனக நவரத்தின மணிமாலை மாமேரு புய
மீதி லணிவோன்

துள்ளிக்குதித்த குதிரைக்கு நகுல னித்திய சுகசோபன
சித்தசன்
சொர்னமதனைத் துரும்பாய் நினைத்திடு வீரசூர
கெம்பீரதீரன்

அள்ளிநிதி யந்தணர்க்குப் பொழிய வந்திடும் ஆடக
முகிற்கரத்தான்
அஷ்டதிசை புகழ்கொண்ட சீவாசி மகராச
அணிதுங்க செய சிங்கமே

குறிப்பு :

இவைகளை யல்லாமல் சிவாசிமகாராஜா பேரில் சிங்காரப் பதமும் இருக்கின்றது.

## XVII. வேதாந்த சாஸ்திரம்.

### 652. No. 135 ஞானவாசிட்டம்.

ஏடுகள் 199; பூர்த்தி சிதிலம் Lines 4—7 in a Page.

இது, வசிட்டமுனிவர் இராமபிரானுக்கு உபதேசித்த ஞான நூல்.

இதற்கு வாசிட்ட ராமாயணம் எனவும் பெயர் வழங்கும். இது வைராக்கியப் பிரகரணம், முமுக்ஷுப்பிரகரணம், உற்பத்திப்பிரகரணம், ஸ்திதிப்பிரகரணம், உபசாந்திப் பிரகரணம், நிர்வாணப் பிரகரணம் என்று ஆறு பிரிவுகளையுடையது. நாற்பத்துமூன்று கதைகளைக் கொண்டது. வான்மீகி முனிவர் திருவாய்மலர்ந்தருளிய யோக வாசிட்டத்தின் சாரமாக காச்மீரபண்டிதரால் வடமொழியில் ஆறுயிரம் சுலோகத்தால் இயற்றப்பட்ட இதனைத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுளாக இயற்றியவர் மாதவபட்டர் என்கிற வீரை ஆளவந்தான் என்பவர். இவர் பாண்டிய நாட்டில் வேம்பத்தூரில் அந்தண குலத்திற்பிறந்தவர். இந்தப் பிரதியில் இந்நூல் முழுதும் இருப்பினும் சிதிலமாயிருக்கின்றது. இது உரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது.

Beginning:

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை
யண்மை தூர மறவகத்துன்னுவாந்
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்ட
முண்மை யாக வொருங்குரை செய்யவே.

* * * * * *

திகழுநான் முகன்முதற் றேவர் மூவருஞ்
சகலவே தங்களுஞ் சாத்தி ரங்களும்

புகலுஞா னத்திஹற் புரண மானது
நிகரில்லா சிட்டமா நிபுண ஞான நூல்

End :

தாளவந்தாமலரோன்றன் மனத்துதித்த வசிட்டன
யன்றன்பாற் கேட்டு
நாளவந்தான் போகாத விராமனுக்கங்குபதேசம் நல்கியிங்கே
யாளவந்தான் விரையின் மாதவபட்டன........ கியவ தாரமாகி
மீளவந்தான் வந்து தமிழ் வசிட்டராமாயணமும்
விளம்பினனே.

ஞானவாசிட்ட முற்றும்
ஆக திருவிருத்தம்–2052.

## 653. No. 316 ஞானவாசிட்டம்.

ஏடுகள் 308 ; பூர்த்தி Lines 7 in a Page.

இதுவும் முற்பிரதியைப்போன்றது. முழுவதும் இருக்கிறது. இதில் முதலிரண்டு ஏடுகள் மிகச்சிதைந்துள்ளன.

## 654. No. 256 பஞ்சதசப்பிரகரணம்.

ஏடுகள் 70 ; Lines 5 in a Page.

இது வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. இது வித்தியாரண்யரால் வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. பதினைந்து பிரகரணங்களைக்கொண்டது. தமிழில் மொழிபெயர்த்து வசனரூபமாக இதனை எழுதியவர் இன்னவரெனத் தெரியவில்லை. ஆனால் "ஞானப்பிரகாசன் உண்மைதருநாதன் நங்குருநாதன்" என வந்துள்ளதைக்கொண்டு இதனை இயற்றியவர் ஞானப்பிரகாசரது மாணவரில் ஒருவரென ஊகிப்பதற்கிடங்

கொடுக்கின்றது. சாதாரண நடையாயிருப்பதுடன் பிழையு மதிகமாயிருக்கிறது. இதில் சித்திர தீபிகையும் திருப்தி தீபிகையில் ஒரு பாகமும் இருக்கின்றன. இடையிடையே சிதைந்திருக்கிறது.

Beginning :

சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்னவதனம் தியாயேத்
சருவவிக்கினோபசாந்தயே.
சிந்திதரு நாதன் தென்கயிலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குருநாதன்.

வித்தியாரண்ய சுவாமியள் லோக அனுக்கிரக நிமித்தமாய் சகல வேதாந்திகத்தினுடைய பொருள்களெல்லா மனதிலே சேகரிச்சுக்கொண்டு சகல வேத வேதாந்தமெல்லாம் விகரிக்கமாட்டாத பேர்க்குஞ் சகல வேதாந்தமெல்லாம் படிச்சாலும் அதில் அர்த்தம் தெளிந்தவை யறியமாட்டாத பேர்க்கும் சகலர்க்கு மெளிதாக வேதாந்தத்தினுடைய உண்மைப் பொருளைக் கண்டனுபவித்து மோட்சமடையத் தக்கனையாக சகல வேதாந்த சம்மதப்படிக்கு தம்முடைய மனதிலேயிருக்கிற பிரம்மானுபோகத்தை பஞ்ச தேசப் பிரகரணத்திலே வெளிபண்ணவேணுமென்று பதினைஞ்சு பிரகரணத்துள்ளே முந்தின பிரகரணத்திலே அத்தியாரோபவாதமென்கிற ரெண்டு நியாயத்தையுந் தழுவிக்கொண்டு பரமாத்மாவினிடத்திலே ஆரோபிக்கப்பட்டிருக்கிற செகத்தினுடைய லட்சணம் சித்திரமேயல்லாம லுண்மையல்ல என்கிறதை சித்திரப்பட திட்டாந்த முகனையாக வெளிபண்ணினபடி.

End :

குழந்தைப் பிள்ளையடிச்சாலும் வைதாலும் தகப்பனத்தை மனதிலே காணமல் திரும்பி சீராட்டுகிறுப்போல அஞ்ஞானி யள் தூஷிச்சாலும் பூசிச்சாலும் திருமரிதானபடி செய்யாமல் அவர்களுக்கு சம்மதமாக திரிவிதகரணத்திலும் கர்மத்தைப் பண்ணிக்கொண்டு அவர்களுக்கு ஞானமேற்றிவைக்கிறதே செய்காரியமென்றுத்திரம் ஞானிக்கும் ஞானப்பியாசம் பண்ணு கிறபோரோடேகூடி யிருக்கிறபோது.

---

## 655. No. 528 பஞ்சதசப்பிரகரணம்.

ஏடுகள் 128 ; Lines 5 in a Page.

இது, முற்பிரதியோடு தொடர்ந்த பிரதி. திருப்தி தீபி கையின் கடைசி பாகத்திலிருந்து நூல் முழுவதுமிருக்கிறது. இடையிடையே சிதிலமாயிருக்கிறது.

Beginning :

செய்காரியமேதென்கிற சங்கைக்குத்தரம் ஞானங்களைப் போதிச்சு கர்மாதியினைத் தூணித்துக் கர்ம......த்தானுந்து டர்ந்து காட்டவேணுமென்றுத்தரம் ஞானி தனிச்சிருக்கும் போது செய்காரியமே தென்கிற சங்கைக்குத்தரம் தன்னுடைய கிருக கிருத்தியானந்தத்தைக்கண்டு மகிழ்ந்து பிரமமென என்ன பாக்கியம் பண்ணிஞேமோ நம்முடைய அஞ்ஞான மெந்த வழிபோச்சோ.

End :

உபாதிய ளெதினலே துடைபட்டுது பிரமம் நிருபாதி யாய்த் தோன்றுகின்ற தெதினலே யென்கிற சங்கைக்குத்த ரம்... அகோரமுட விர்த்தி சீலே முதலான சேடங்களிதுக ளெல்லாங் கர்மம் பெந்தத்துக்கு உபாதியோகத்தினலும்

விவேகத்தினுலும்..... யெல்லாந் தள்ளுபடும்......னத்திரிபுடி யில்லாதபடியினுலே நிருபாதியாய் சுயம்பிரகாசமாயிருக்கிற பிரமத்தை ........வடிவாய்த்தானுக.........ன்றுத்தரம் இப்படி பிரமானந்தத்துக்கு வழிபாடாகத்தானே விஷையா.........இது வழியெல்லாரும் மோட்சத்தை அடையக்கடவான்.

விஷயானந்த முற்றும்.

சிவமயம். தேவிசகாயம்.

## 656. No. **527** பஞ்சதசப் பிரகரணம்.

ஏடுகள் 105; அபூர்த்தி Lines 6—7 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில், முதலிலிருந்து வித்தியானந்த முடிய இருக்கிறது. ஆனுல் விஷயானந்தமட்டு மில்லே. சிறிது சிதிலமாயிருக்கிறது.

## 657. No. **531**. வேதாந்த சூடாமணி மூலம்.

**ஏடுகள் 35; பூர்த்தி Lines 6 in a Page.**

இது, வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. இது 290 போன்றது. இதனை இயற்றியவர் சிவப்பிரகாசர். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

## 658. No. **533** பிரபோத சந்திரோதயம்.

ஏடுகள் 179; அபூர்த்தி Lines 5—10 in a Page.

இது, வேதாந்த நூல்களுள் ஒன்று. மெஞ்ஞானவிளக்கம் எனவும் வழங்கும். இதனை இயற்றியவர் மாதை திருவேங்கடநாதர். இவர் அந்தணர். மதுரை நாயக்கரது பிரதிநிதியாகத் திருநெல்வேலியை ஆண்டிருந்தவர்.

Beginning :

நீர்கொண்ட பெருக்கினைவெங் கானலிற்கண் டாற்போல்
நெடுவிசும்பு முதனிலநீ ரொன்றினிடத் தொன்று
வேர்கொண்ட முவுலகு மேதுதே ராதார்க்கு
மெய்யாகித் தேர்ந்தளவின் மீண்டுமவை பொய்யாந்
தார்கொண்ட பனியுருப்போலனனிட யானந்தந்
தாளுகி நிருமலமாய்த் தழைத்தோங்கு மொளியாய்
ஏர்கொண்ட வாத்மபோதந்தனையே வணங்கி
யிதையகமலத்திருத்தி யெப்போதும் வாழ்வாம்.

* * * * *

அத்துவிதம் வாசாமகோசர மனுதீத மசலமூலந்
தத்துவ மப்பிரமேயஞ் சர்வசம சச்சிதானந்த சாந்தஞ்
சுத்தமவியத்தம விகார மனுபவந்துரியஞ் சுயம் பிரகாச
நித்திய நிற்குண மனந்தம் நிரதிசய பிரமமென நின்ற
தொன்றே.

End :

அத்தகைச் சிரத்தை வந்தவன் கழற் ளுெழாமுனம்
பொய்த்த சீடரைப் புணர்ந்து கோடி யென்ற போழ்தின்
வாய்க்
கைத்தலத்த வஞ்சிமெய்க லந்த ணைக்க வேயன்னுர்
சித்த நெக்குடம்பமர்ந்தோர் மாற்ற மின்ன செப்பினுர்.

குறிப்பு :

இதில் உற்பத்தி சருக்கமுதல் சமணுதியர் சருக்கத்தில் 45-ம் செய்யுள் முடிய இருக்கிறது.

---

## 659 No. 535 பிண்டசக்கரம்.

ஏடுகள் 7 ; பூர்த்தி Lines 6 in a Page.

இது தேக உற்பத்திக் கிரமத்தைக் கூறுவது. அச்சிடப் படவில்லை.

Beginning :

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையில் மேய மெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து

செனனத்தின் முறைமை யேதோ வென்னில் அது வருமாறு : பராபரமாகிய பரமேசுவரன் தராதலம் படைக்கத் தானினைந்தருளி பராபரத்தில் பரந்தோன்றி பரத்திற் சிவந் தோன்றி சிவத்தில் சத்தி தோன்றி சத்தியில் நாதந்தோன்றி நாதத்தில் விந்து தோன்றி விந்துவில் சதாசிவந் தோன்றி சதாசிவத்தில் மஹேசுரந்தோன்றி மஹேசுவரத்தில் ருத்திரன் தோன்றி ருத்திரனில் விஷ்ணு தோன்றி விஷ்ணுவில் பிரமாத் தோன்றி பிரமாவில் ஆத்மாத்தோன்றி ஆத்மாவிலாகாசந் தோன்றி ஆகாசத்தில் வாயுத்தோன்றி வாயுவில் அக்னி தோன்றி அக்னியில் அப்புத் தோன்றி அப்புவில் பிருதிவி தோன்றி பிருதிவியில் ஓசை தோன்றி ஓசையிலன்னந் தோன்றி அன்னத்தில் மாங்கிஷந்தோன்றி மாங்கிஷத்தில் ரசந்தோன்றி ரசத்தில் உதிரந்தோன்றி உதிரத்தில் மேதை தோன்றி மேதையில் அத்தி தோன்றி அத்தியில் மச்சை தோன்றி மச்சையில் சுக்கிலந்தோன்றி சுக்கிலத்தில் சுரோணி தத்தினலே யெடுக்கப்பட்ட தேகம்.

End :

இனி காயாபுரி யென்னுங் கழனியை ஞானக்கினியாலே சுட்டுப்போட்டு பள்ள மேடுகளுள்ளதுங் குருவென்னுங் கலப் பையாலே சமம் பண்ணிக் களைக்காணுதி முந்நூற்றறையும் பிடிங்கிச் சுட்டுப் போட்டு 96 அங்குலங் கொண்ட நிலத்திலே மோனகமென்னும் எருவைப் போட்டு முளையில்லாத விதையை விதைக்கவும். அறிவென்னும் வாய்க்கால் வாங்கிச் சாந்த மென்னும் நீர் பாச்சி சமாதான மென்னு மதகு திறந்து

மெஞ்ஞானப் பயிர் செய்து அந்த தானியவண்ணம் தவளத்தி னெளியுமாய் பின்னிப்பிரகாசம் போன்றிருக்க சாந்தமென்னு மருபம் உருவை மிழுங்கிச்சு. ஆனந்தமென்னு மட்சர மஞ்சும் அறியும் வகை ஓமென்றும் ஓதியறிந்தால் ஈசுவரனென்னு முகூர்த்தமாவன் யவ்வென்னு மக்ஷரமோதியறிந்தால் தானவ னுவன். இப்படிப் பொருந்திய சிவயோகி பாதத்தீர்த் தமே வாரணாசி தீர்த்தப்பிரசாதமாமே. நம்பினனுதனுவன் சிவலிங்கத்தின் சேடமே விதையாம். நம்பின.........சேடமே பாவமறுக்குமென்று பரமேச்வரன் நந்திக்கு அருளிச்செய்தார். நந்தி திருமூல தேவருக்கு அருளிச்செய்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

## 660. No. 536 நித்திய தீபன சல்லாபம்.

ஏடுகள் 88 ; சிதிலமாயிருக்கிறது Lines 9—10 in a Page.

இது, குருவும் சீடனும் நித்தியமான விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிப்பதுபோல வசனரூபமாக எழுதப்பட்ட ஒரு நூலாகும். எழுதியவர் பெயர் முதலியவை தெரியவில்லை. இதில் ஒன்பது சல்லாபங்களிருக்கின்றன. இது அச்சிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

இது தவிர பாபகிருத்தியங்களை விலகி பாபகிருத்தியங்களிலே மனது செல்லாத வண்ணம் பாவிக......யக்கினையிடுவேனென்று பயமுண்டாக்கவேணும். அதுபோல லோககர்த்தாவான சர்வேசுரன் அளவில்லாத நீதியுடையராயிருக்கிறபடியினலே லோகத்திலே யிருக்கிற சர்வ ஜனங்களை யிரட்சிக்கிறவராய்ப் புண்ணியமானது இன்னதென்றறிவித்துப் புண்

ணியத்திலே புத்தியுண்டாக்கவேணுமென்று புண்ணியாத்மாக்களுக்குச் சம்பாவனை குடுப்பேனென்று அருளிச் செய்ய வேணும்.

* * * * * * *

*சீஷன் :—*

அதெப்படி யென்று திருவுளம்பற்றி யருள்க.

குரு :—

இராமன் இராவணனைக் கொன்றதினாலே மகா கொலை பாதகம் கட்டிக்கொண்டானும். அந்தக் கொலை பாதகம் நீங்க வேணுமென்று இப்படிப்பட்டவிக்கிரகத்தைப்பூசித்தானென்று இந்த தேசத்திலுள்ள புராணசித்தமாம். இத்தை நன்ருக ஆராய்ந்து பார்க்கும் போது பக்தியுடையவர்கள் மனசிலே கொல்லத்தக்கதல்லவென்று எளிசாயறியப்படும். அதேனென்ருல் பாபியாயிருக்கிற இராவணனைக் கடவுளாயிருக்கிற இராமன் கொன்ருல் இப்படிப்பட்ட கடவுளுக்கு கொலைபாதகஞ் சித்திச்சுதென்று சொல்லுகிறது பிரத்தியட்ச பொய்யென்று எல்லாராலும் காணப்படும். அதேனென்ருல் சகலத்துக்கும் கத்தனானவன் பாவிகளைக் கொல்லுகிறதினாலே கொலைபாதகங் கட்டிக் கொள்ளுகிருனென்று சொன்னோமானல் லோகத்திலுண்டான பாபிகளும் தன்ம பாலகரும் கடவுள்...........யே மரணமடையும்போது அவருக்கு எண்ணப்படாத கொலை பாதகங்கள் சம்பவிக்கிறதென்று ......லவேணும். இப்படிப்பட்டபொய்யை மெய்யென்று கொள்ளப்போகாது. ஆதலாலே யிராமர் சர்வேசுரனுயிருந்தால் பாபியாயிருக்கிற இராவணனைக் கொன்றதனாலே பாபங்கட்டிக்கொண்டானென்று சொல்லுகிறது புத்திக்கொத்துவராத பொய்யென்கிறதுக்குச் சந்தேகமில்லை.

* * * * * * *

End :

சருவேசுரனானவர் சிட்டிக்கிறவருமாய் இரட்சிக்கிறவருமாய் நசிப்பிக்கிற......கானத்தைத் தள்ளித் தம்முடைய இஷ்

டத்தைத் தருபவருமாய் அனுக்கிரக..........மோட்சத்தைக் குடுக்கிறவருமாயிருக்கிருரென்று அறி..... ...........................................................................................................................................சல்லாபமுற்றும்.

## 661 No. 539 சத்தப்பிரகரணம்.

ஏடுகள் 58 ; பூர்த்தி நல்ல நிலைமை Lines 8—9 in a Page.

இது, வேதாந்த நூல்களில் ஒன்று. இராகத்துவேஷப் பிரகரணம், தூலப்பிரகரணம், முமூட்சுப்பிரகரணம் சாதன சதுஷ்டயப்பிரகரணம், சூட்சுமப்பிரகரணம், காரணப்பிரகரணம், நிசானந்தானுபூதிப் பிரகரணம் என ஏழு பிரகரணங்களை உடையது. இதனைச் செய்தவர் பெயர் முதலியவை தெரியவில்லை. இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

விருமானந்தம் பரம சுகதம் கேவலம் க்ஞான மூர்த்திம்
விசிவாதீதம் கெகன சதுர்சம் தத்துவமசியாதி லட்சியம்
யோகம் நித்யம் விமல சமலம் சர்வதீ சாட்சி பூதம்
பாவாதீதம் திரிகுண ரகிதம் சற்குரும்தன் னமாமி.

* * * * * * *

எந்த ராகத்துவேஷத்திஞலே திரிவித கரணங்களும் திரிவித கர்மங்களும் செய்யப்படுதோ அந்த ராகத்துவேஷங்களுடைய சுருபத்தை நிருபிக்கிறேும். ராகத்துவேஷங்களாவதே தென்னில் ராகமென்றும் துவேஷமென்றும் காமமென்னும் குரோதமென்றும் லோபமென்றும் மோகமென்றும் மதமென்றும் மாச்சரியமென்றும் ஈரிஷையென்றும் அசூயையென்றும் டம்பமென்றும் தர்ப்பமென்றும் ஆங்காரமென்றும் இச்சையென்றும் பத்தியென்றும் சிரத்தையென்றும் பதினறுவிதம். இதற்கு விவரம், ஸ்ரீ விஷயமாய் வருகிற சித்தவிர்த்

திக்கு ராகமென்று பேர். இந்த ராகம் முமுட்சுக்களானபேர் சர்வாத்மனுய் விடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்ருல் இந்த ராகத்தினுலே பூர்வத்திலே ராவணுசுரன் முதலான பேர் பிராணகானி பந்நாசம் ராச்சியகானி யிகபரங்களிலே அபகீர்த்திகள் இது முதலான அநேக அனர்த்தங்கள் அனுபவிச்சுது சாஸ்திரத்தினுலே கேட்டிருக்கிருே மானபடியினுலே இந்த ராகமும் முமுட்சுவாயிருக்கப்பட்டவன் சர்வாத்துமனுல் விடவேண்டியது.

End :

வேதாந்தானுபவ மறிஞ்ச பெரியோர்களுக்கு ஏதாகிலு முண்டானுலல்லவா இல்லை யென்று சொல்லவேணுமென்று தத்தாத்திரேய யோகீஸ்வரர் பூரணுனந்த போதமென்கிற கிரந்தத்திலே நிரூபிச்சிருக்கிருரானபடியினுலேயும்.

சுலோகம் :

விபேத சனக்கியானெஞ்ச மாத்தியந்தி கங்கந்தே
ஆத்மனே பிருமனே பேத அசந்தக்க கரிஷியதி.

சுலோகம் :

பிரத்தி யக்ஷத மிதபேதம் எச்சத்தாமாத்திரம்
கோசரம் வச்சர மாத்தும சமவேத்தியம்
தக்கியானம் பிரம சமுக்கிதம்.

என்று விஷ்ணுபுராணத்திலே மயித்திரியருக்குபதேசிச்சிருக்கிற படியினுலேயு மிதுவே பிரமாணம். சித்தம்.

ஆக ஏழுப்பிரகரணம் சமாப்தம்.

---

## 662. No. 550 நாரபோதம்.

ஏடுகள் 29 ; பூர்த்தி Lines 5 in a Page.

இது, மகாராஷ்டிர பாஷையில் துக்காராம் சுவாமிகள்

இயற்றியுள்ள தாசபோதமென்கிற வேதாந்த சாஸ்திரத்தின் மொழி பெயர்ப்பு

இதில் நவவித பக்தி, ஞானவைராக்கியம் முத்தி முதலிய வற்றின் இலட்சணமும் பிறவும் கூறப்பட்டுள்ளன. இதில் நாலு தசகங்களும் தசகம் ஒன்றுக்கு பப்பத்து சருக்கமும் இருக் கின்றன. இதனை மொழிபெயர்த்த ஆசிரியர் பெயர் முதலி யவை தெரியவில்லை. நடை சாதாரணமானது.

Beginning :

ஸ்ரீராமகர்த்தன், ஸ்ரீராமன் சமர்த்தன் குரு கிருபை சகல கிரந்தத்துக்கு மிராசா, தாசபோதம், சுவாமி வாக்கியம், இனி மேற் கேட்கிறவாள் கேட்கிறுன் இதுவென்ன சாத்திரம் மிதி லென்ன சொல்லியிருக்கிறது. ச்ரவணம் பண்ணினத்தினு லென்ன பிராப்தியாகும். அப்போ சுவாமி வாக்கிய மிந்த சாத்திரத்துக்குப் பெயர் தாசபோதம். குரு சீஷாள் தருக்கம் விசிதமாய்ப் பத்திமார்க்கம் சொல்லப்பட்டது. நவவித பத்தி பின்னும் ஞானவைராக்கியத்தின் லெட்சணமுஞ் சொல்லி யிருப்பது. அத்தியாத்துமப் பிரசங்கம் வெகுசாய்ச் சொல்லப் பட்டது. பத்தியின் யோகத்தினுலே தெய்வத்தை மனுஷாள் நிச்சயமாயடைவார்கள் இந்தச் சாத்திரத்தினுடைய அபிப் பிராயமிப்படியிருக்கப்பட்டது. பின்னுமோ முக்கிய பத்தி யினிச்சயஞ் சுத்த ஞானத்தினிச்சயம் ஆத்தும ஸ்திதியினிச் சயம் சொல்லியிருப்பது.

* * * * * * *

End :

சாயுச்சிய முத்தியென்றுல் நிற்குணத்தினுடைய சுருபம் சகுணபத்தி சலிக்கும். நிற்குண பத்திக்கு சலியாது: ஆனதி னுலே சத்குருவைச் சேர்ந்தால் இதுகள் யாவத்தும் பிராஞ் சனமாய்த் தெரியவரும். இப்படிக்கு குரு சீசர் தர்க்கத்தில்

தாசபால உபதேச விளக்கத்தில் நிவேதன பக்தி நாலாந்த சகத்தில் பத்தாஞ் சர்க்கம் எழுதிமுடிந்தது முற்றும். சர்க்கம் 10.

கவி ஸ்ரீராமன் கர்த்தன் ஸ்ரீராமன் சமர்த்தன்.

663. No. **551** தாசபோதம்.

ஏடுகள் 271 ; பூர்த்தி Lines 5 in a Page.

இது முன் பிரதியைச் சேர்ந்தது. இதில் 5-முதல் 7 தசகங்களிருக்கின்றன.

664. No. **552** தாசபோதம்.

ஏடுகள் 278 ; பூர்த்தி Lines 5 in a Page.

இது முன் பிரதியைச் சேர்ந்தது. இதில் 8 முதல் 11 தசகங்களிருக்கின்றன.

665. No. **553** (*A*) தாசபோதம்.

ஏடுகள் 297 ; பூர்த்தி Lines 5 in a Page.

இது முன் பிரதியைச் சேர்ந்தது. இதில் 12 முதல் 16 தசகங்களிருக்கின்றன.

666. No. **553** (*B*) தாசபோதம்.

ஏடுகள் 242 ; பூர்த்தி Lines 5 in a Page.

இது முன் பிரதியைச் சேர்ந்தது. இதில் 17 முதல் 21 தசகங்களிக்கின்றன.

667. No **554** (*a*) குருநீகீதை.

ஏடுகள் 270 ; Lines 5—7 in a Page.

இது வேதாந்த நூல்களில் ஒன்று. கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது. முழுவதுமிருக்கிறது.

668. (*b*) அஷ்டச்லோகீ வ்யாக்யானம்.

Lines 6—8 in a Page.

இது பட்டர் என்பவர் வடமொழியில் இயற்றிய அஷ்டச்லோகீ என்னும் நூலின் விரிவுரை. கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

669. (*c*) க்ஷமாஷோடசீ வ்யாக்யானத்துடன்.

Lines 7 in a Page.

இது, மணிப்பிரவாளத்தில் எழுதியுள்ளது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

670. (*d*) ரஹஸ்யத்ரய விவரணம்.

Lines 7 in a Page.

இது மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்டுள்ளது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

.671 (*e*) சரமச்லோக விவரணம்.

Lines 7 in a Page

இது மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

672. (*f*) நாலு வார்த்தை.

Lines 7 in a Page.

இதனை இயற்றியவர் நம்பிள்ளை. அச்சிடப்பட்டுள்ளது.

673. (*g*) நியாயவிம்சதி வ்யாக்யானம்.

Lines 8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் இருக்கிறது. இதனை இயற்றியவர் வேதாந்தாசாரியார். இது அச்சிடப்படவில்லை.

674. (*h*) நியாயவிம்சதி வ்யாக்யானம்.

Lines 8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் இருக்கிறது. இதனை இயற்றியவர் நாராயண முநீந்திரர். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

675. (*i*) நியாயதிலகம்.

Lines 6—8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் இருக்கிறது. இதனை இயற்றியவர் வேதாந்தாசாரியார். இது அச்சிடப்பட்டுள்ளது.

676. (*j*) நியாயதசகம்.

Lines 6—8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் வேதாந்தாசாரியார். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

677. (*k*) திருமந்திரார்த்த வ்யாக்யானம்.

Lines 6—8 in a Page.

இது மணிப்பிரவாள நடையிலிருக்கிறது. இதனை இயற்றியவர் மணவாளமாமுனிவர். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

678. (*l*) ரஹஸ்யத்ரய வ்யாக்யான பிரமாண ஸங்கிரஹம்.

Lines 4—5 in a Page.

இது மணிப்பிரவாள நடையிலுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது அச்சிடப்பட்டிருக்கிறது.

679. No. **555** சுருதி கீதை வசனம்.

ஏடுகள் 46 ; அபூர்த்தி Lines 6—8 in a Page.

இது, வேதாந்த நூல்களில் ஒன்று. தமிழும் கிரந்தமுமாகக் கலந்து மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது.

Beginning :

.........வாயத்திலே நாராயண ஸம்வாதத்தினாலே வேதங்களினாலே நிர்குணமான பிரஹமத்தினுடைய......

End :

வேதாந்தங்களும் அறியாது......ஆகையினாலே......

680. No. **557** பகவத்கீதை.

ஏடுகள் 24 ; அபூர்த்தி சிதிலம் Lines 6—8 in a Page.

இது, கண்ணபிரான் அருச்சுனனுக்கு உபதேசித்த வேதாந்த நூல். இதன் முதல் 4 ஏடுகளின் தலைப்புகள் அரிக்கப்பட்டுள்ளன. இந்நூல் உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றுஞ் செய்வினை யிரண்டுமொன்றி.............................தின்ற

பொய்யிரு ளகல ஞானப் பொருள் கதிர் விரித்த புத்தேட்
கைவள ராழிச் செங்கட் கடவுளைக் கரத்துள் வைப்பாம்.

* * * * * * *

மண்ணுளும் பெருஞ்செல்வ மன்றியே மாயாத
விண்ணாடு பெற்றிடினு மென்னுடைய மெய்யுணர்வு
நண்ணும லடுதுயர நலியாமற் காப்பதனைக்
கண்ணுவிங்கெவ்விடத்துங் காண்கிலே னெனக்கலுழ்ந்தான்.

நெய்மார்பிற் சொரிவதென நெடுங்கண்கள் நீர்சோர
விம்மாநின் றவன்காதல் வெந்தீயால் வேவாமே
கைம்மாறென் றின்றியுயிர் காக்கவே கடன்பூண்ட
வம்மாயன் திருவாய்மை யருண்மாரி யாலவிப்பான்

End :

........ருளார் கின்றதுழாய் முடியாய் சொல்லு மனமுந்
துடர்வரியா
யுருளார் சகட மிறவுதைத்தா யுயிர்கட்கெல்லா முள்ளுயிரே
யிருளார் பாழ்தே கிடந்திளைக்கு மென்பாலிரங்கு நீயிசைத்த
பருகா ரமுதென் செவிகளாற் பருகியயர்வே பாழி...தே

குறிப்பு :

இதில் பத்து அதிகாரங்கள் முடிய இருக்கின்றன.

---

681. No. 589 விவேகசிந்தாமணி புவனகோசம்.

ஏடுகள் 84 ; அபூர்த்தி ; Lines 7—8 in a Page.

இது, வேதாந்த நூல்களிலொன்று. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதில் புவனங்களின் விவரமும் அவற்றிலுள்ள சீவர்களின் தூல தேகாதிவிவரமும் அப்புவனங்களை நடத்தும் தேவர்களின் அதிகார நிலைமையும் பிறவும் கூறப்பட்டுள்ளன. கடைசி ஏடுகள் சிதைந்திருக்கின்றன. இந்நூல் அச்சிடப்படவில்லை.

Beginning :

சித்தி தருநாதன் தென்கயிலே வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச ணுண்மை
தருநாத னங்குருநா தன்.

துரத்தியுனே யாசை துடராம ஞளும்
விரக்தியினு லாங்கவற்றை விட்டுப்—பரத்திலன்பு
செய்யடா செய்யடா சேரப்பிர பஞ்சமெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

ஈச்வரனிடத்திலே எண்பத்து நான்கு லட்சமான சீவராசிகள் ஸ்தூல சரீரங்களுதிப்பாகும். மற்றந்த ஸ்தூல சரீரத்தினிலே பிருதிவியாதி பூதம் பஞ்சிகரித்திருக்கும். வரி......தில் அஸ்தி சர்மங்களாகி பஞ்சகங்களே பிருதிவி. மூத்திரத்தாதி பஞ்சகங்களே அப்பு. சக்ஷுத்திரிஷ்டினே ஸபாதி பஞ்சகங்களே அக்கினி. தாவனசலனுதி பஞ்சகங்களே வாயு. காம குரோதாதி பஞ்சகங்களே ஆகாயம் இது ஸ்தூல பஞ்சவிம்சதிகள்.

End :

பின்னே அந்த ருத்திரன் ஸ்திதியென்பதே ஈசுவரனுக்கு ஒரு...........அதிகாரஞ்சமாப்தியாகி வேருெரு அதிகாரி யுதிக்கும். அந்தப்படி தினம் முந்நூற்று அறுபதாகில் ஒரு வருஷம் அந்தப்படி நூறு வரு........ளாசங்கையான ருத்திரருக்கு அதிகாரம் சமாப்தியாக வேறதிகாரிகளுதிக்கும். பின்னே அந்த ஈசுவர ஸ்திதியென்பதே.

---

## 682. No. 615. ஞான சோபனப்பாடல்.

ஏடுகள் 11 ; பூர்த்தி ; Lines 4—6 in a Page.

இது வேதாந்த விஷயத்தை அமைத்துச்செய்த சோபனப்பாடல். இதைச் செய்தவர் மாதை வேங்கடநாதர்

என்பவர். இவர் மெஞ்ஞான விளக்கமென்னும் பிரபோதசந்திரோதயம் செய்தவராதலால் அதிலுள்ள வேதாந்த விஷயசாரமே இதில் அமைந்துள்ளது. இவரைப்பற்றிய விஷயங்களைப் பிரபோதசந்திரோதயத்துக் குறிப்பிற் காண்க. அச்சிடப்படவில்லை.

Beginning :

பூவிசைந்த குழைமடவாள் புகழ் சோபன தமிழ்பாட
கோவியர் மோகன ரான கோபாலர் பதந்துணையே
சுகமொழியார் கற்குமிந்த சோபனஞ்சேர் தமிழ்பாட
செகதலத்தில் மயில் விளக் குஞ் சிலைக்காமன் துணையாமே.

ஆதிப்பெண்காள் சோபனமே அற்புதப்பெண்காள் சோபனமே
நீதிப்பெண்காள் சோபனமே நியமப்பெண்காள் சோபனமே
காரியப் பெண்காள் சோபனமே காமியப்பெண்காள் சோபனமே
வீரியப்பெண்காள் சோபனமே விசயப்பெண்காள் சோபனமே

* * * * * * *

மாயையிலந்தக் கரணம் பிறந்தான் மானதன் ஆங்காரன் கூடப்பிறந்தான்
நேயபத்தி யென்ெருரு பெண்ணும் பிறந்து நிலைபின்னர் சஞ்சாரம் வாழவே வந்தாள்
கன்மமாம் சில கற்பகம் பூத்துது காயமாம் பலகாய்களுங் காச்சுது
தன்மபாவப் பழங்கள் பழுத்துது சார சொர்க்க நரகங்களாச்சுது.

* * * * * * *

சத்தியத்தைச் சொல்லடா சாந்தி மாதைச்சேரடா
நித்தியத்தை நினையடா நிவிர்த்திப்பெண்ணைக்கூடடா
நல்லோர் தம்மை நாடடா நாஸ்திகரை நலியடா
எல்லோரு நீ தானடா எங்குமாயிருப்பாயடா

* * * * *

End :

வேதியன் மாதப்பெருமாள் குமாரன் வேந்தர் தொழுந்
திருவேங்கடனுதன்

போதக சோபனப்பாடல் படித்தோர் பூமியில் பேரின்பம்
பொருந்திவாழ்வார்

மாதவர் கோபாலர் வாழி மனுநெறி வாழி மழைமுகில்
வாழி

மேதினி வாழிதென் மாதைவாழி மெய்த்திருவேங்கட
நாதையன் வாழி.

## XVIII. சைவசமய நூல்கள்.

### i. சைவாகமங்களும் சித்தாந்த சாத்திரங்களும்.

683. No 529 சிவஞான சித்தியார் சுபக்ஷம்
நிரம்பவழகிய தேசிகருரை.

ஏடுகள் 200 ; அபூர்த்தி ; Lines 5—7 in a Page.

இது, சைவாகமத்துட் கூறப்படும் பதி பசு பாச இலக்கணங்களை உணர்த்துவது. சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கனுள் ஒன்று. இதனை இயற்றியவர் அருணந்தி சிவாச்சாரியார். இதில் எட்டாஞ் சூத்திரம் 37-ம் செய்யுள்வரை உரையுடன் இருக்கின்றது. இதில் முதலில் 20 ஏடுகளில்லை.

Beginning :

சொல்லப்பட்டது மூன்று வகைப்பட்டிருக்கும். அதே தென்னில் பக்கம் நிகர் பக்கம் நிகரில் பக்கமெனத்.........ன பக்ஷபக்ஷமென்றும் சபக்ஷபக்ஷமென்றும் விபக்ஷபக்ஷமென்றும் இப்படி மூன்ருகக்காணப்படும். பக்கமென்றதேதெனின்...... ருளுக்கிடமாம் எ—து தன் பக்ஷமானது தானறுதியிட்ட பொரு ளுக்கிடமாயிருக்கும் நிகர் பக்கமேதெனின்...........பக்கம் எது தனக்கொத்த பக்ஷமானது தான் அறுதியிட்ட பொருளுக்கு வமையாயிருக்கும். நிகரில் பக்கமேதெனின் சென்றடையாத விடமாம் நிகரில் பக்கம் எது தனக்கொவ்வாத பக்ஷம் தான் அறுதியிட்ட பொருள் சென்றடையாத பக்கமாம். முதலென்ற விரண்டு பொருளுண்மைக்கிடமாம்.

* * * * * * *

ஒருவனேடொருத்தி யொன்றென்றுரைத்திடு முலக மெல்லாம் எது நீ நித்தியமென்ற பிரவஞ்சம் அவனவளென்ற வுயர்திணையாயும், அதுவென்ற அஃறிணையாயும் மூன்று வகையாகச் சொல்லப்பட்ட பிரவஞ்சங்களெல்லாம், வருமுறை வந்து நின்று போவதுமாதலாலே எது தோன்றுகிற கிரமத் திலே தோன்றி நிற்கிற கிரமத்திலே நின்று அழிகிற கிரமத் திலே யழிவதுமாய் வரும். ஆகையாலே பிரபஞ்ச மனித்தியம் அதுவன்றியும் பிரபஞ்சஞ் செடமாயிருந்தபடியாலே யிது தானு கக் காரியப்படமாட்டாது. ஆகையால், தருபவனெருவன் வேண்டும் எது இவையிற்றையுண்டாக்கு வானெரு கத்தா வுண்டாகவேணும். பாஞ்சராத்திரி, பிரபஞ்சம் சிருட்டி கத்தா வாவே யுண்டாவதொழிந்து சங்கார கத்தாவாலே யுண் டாமோ வென்ன, அவனே மறுத்தருளிச் செய்கின்ருர், தான் முதலீறுமாகி மருவிடும் எது சங்கார கத்தா தானே சிருட்டி கத்தாவையும் திதிகத்தா வையும் தோற்றுவிக்கவும் இரக்ஷிக்

கவும் கத்தாவாய்ப் பொருந்தி நின்று செய்வன். அப்படி செய்யில் அவனையுமொருத்தர் படைக்கவேண்டுமென்று பஞ்ச ராத்திரி சொல்ல, அவனை யொருத்தர் படைக்கவேண்டுவ தில்லை. அதெங்ஙனே யென்னின், அனாதிமுத்த சித்துரு மன்னி நின்றேற எது அனாதியே.... தையும் பொருந்திநின்று காரிப்படுத்துகச் செய்தேயும் தானென்றுடனுந் தோய்வற நிற்கிற ஞானமே தனக்குத் திருமேனியாகவுடையவன். ஆகையால் தனக்கு வேண்டின வடிவுதானே கொண்டு நின்று செய்வதனென்றவாறு.

அசத்திய மென்றறிந்து சத்தியத்தைத் தெரிசித்தவன் அந்தச்சத்தியமாயுள்ள சிவனுக்கடிமை யென்றறிந்து அந்த சிவனோடுங் கூடிப்பின்பு சிவ .....காண். அதென் போல வென்னில், முன்னிறை நீர் சிறை முறிய முடிகியோடி முன் னீர் சேர்ந்தன்னீராய்ப்பின்னீங்கா முறைபோல் எது முன்னே சிறை .....அந்தக்கரை முறிந்த போது விரைந்து சென்று சமுத்திரத்தைக்கூடி யுப்பு நீராய் பின்பு பழைய நீராகாத......

---

## 684 No. 538 (*a*) சங்கற்ப நிராகரணம்.

ஏடுகள் 64 ; பூர்த்தி ; Lines 8—9 in a Page.

இது சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். இது முழுவதும் இருக்கிறது. சிதைந்துள்ளது.

---

## 685. (*b*) வைராக்கிய சதகம்.

Lines 8—10 in a Page.

இது வேதாந்த நூல்களில் ஒன்று அந்தாதியாக விருத்தயாப்பான் அமைந்த 100செய்யுட்களையுடையது. அவற்

றுள் 50 செய்யுள் சாத்திரமும் 50 செய்யுள் தோத்திரமுமாக அமைந்துள்ளன. இதனைச்செய்தவர் வீரசைவ மரபினராகிய சாந்தலிங்க சுவாமிகள். இவர் செய்த வேறு நூல்கள் வைராக்கிய தீபம், கொலை மறுத்தல், அவிரோதவுந்தியார் என்பன. இது சிதம்பரசுவாமிகள் உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

வாழி நெஞ்சமே சென்றிடேல் நின்றிதோர் வார்த்தை
யெற்குரை செய்வாய்
கீழியாமியற்றுயர்தவத் திவ்வுடற் கிடைத்ததன் ஞேமற்றீ
தூழி காலமிங் கிருக்குமோ நீயு மோர்ந்துளை யெனிலுள
போழ்தே
சூழு மேழ்பவந் தொடைத்தல் செய்யாயிதன்ருெழுதான்
றுணைத்தாளே.

நவிலி லிம்மனை மக்களுக்கோர் துணை நாமல்ல திலையென்றே
கவலையுற்றரன் றனைமறந்தனையுனைக் காலனுர் கொடுபோகிற்
குவலை யத்தடைந்திவரை நா டொறும்புரந் திடுவையோ
குறிக்குங்காற்
சவலை நெஞ்சமே சிவனலதுயிர்க்குயிர் தானுமோர் துணை
யாமே

End :

எனக்கீய்ந்தினி யாண்டிட வேண்டுமெம்மீசனே மற்
றுனக்கே சரணஞ் சரணம் புலனெடு மென்றன்
மனக்கோதனைத்து மிறந்தோங் கறிவாகி யாங்கே
பிணக்காண் பவன் காட்சியுமற்றவப்பேதை வாழ்வே

சிவமயம்

குறிப்பு :

இதில், 24-ம் பக்கம் ஆரம்பித்து 29 வரையில் முற்பாதி 51 செய்யுட்களும் 43–ம் பக்கம் முதல் 48-ம் பக்கம் முடிய பிற்

பாதியும் 49 செய்யுட்களும் எழுதப்பட்டிருக்கின்றன 30-ம் பக்கம் முதல் 42-ம் பக்கம் வரையில் வீராகமம் எழுதப்பட்டிருக்கிறது.

---

### 686. (c) வைராக்கிய தீபம்.

Lines 9—10 in a Page.

இதுவும் வேதாந்த நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவரும் சாந்தலிங்க சுவாமிகளே. 100 செய்யுட்களை உடையது. இதில் 98 செய்யுட்களே இருக்கின்றன. இதுவும் சிதம்பர சுவாமிகள் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டரு
டுயவன...றுணையே சுமக்க வென்ற
..........................டுய்த்தொழ
நேயமோ டனுதினம் நினைக நெஞ்சமே.

கயல்விழி மனைவி யனைமுத லியவாங் கட்டது தனையெனைதெனவு
மியல்பதா வசுத்த மாதியா ருடற்கட் டிதனையா னெனவும் வைத்தெனுமோர்
மயல்தரு மிருளைத் துறவெனு மொளியான் மாற்றி நெஞ்சகத்தினை விளக்கஞ்
செயலினிந் நூற்குப் பெயர்வயிராக தீபமென்றுரைத்திடப் படுமால்.

End:

அருந்தவ விலக்கிவ்வுடற் . வதுதா ன்ச்சமாதிகடரு மூவா
திருந்துதஞ் சிந்தை சிவன்கணே யாவர் வரினுமென் றமை யிற் பேதிப்பான்

பொருந்தினும் வானேரெதிர் முதிர்கொலை வெம்பூ தமாதிய வளைந்திடினு
மிருந்மிதஞ் சமாதி நிலைகுலை யாதோரெண்ணிய வெண்ணி யாங் (கடைவர்)

---

## 687. (*d*) விராகமர்.

Lines 8—13 in a Page.

இது, வீரசைவத்தின் உண்மையாகிய குருலிங்க சங்கமங்களின் பெருமையைக் கூறுவது. 110 செய்யுட்களை உடையது. இப்பிரதியில் இந்நூல் முழுவதுமிருக்கிறது. இதனைச் செய்தவர் திருமறிசை சாந்தலிங்க சுவாமிகள். அச்சிடப்படவில்லை.

Beginning :

அரிய சஞ்சித மகலவும்
புரியு டம்பிட ரொழியவும்
விரியு நம்பவ மிரியவுங்
கரிமு கன்கழல் கருதுவாம்.

சோதிகுரு பரன்சரணந் தொழுதுசிர மிசையிருத்தி
நீதிதருங் குருலிங்க சங்கமத்தி னிலைமை யெல்லா
நாதனுமைக் குரைத்ததனை நயந்துலகெண் ணல்லமைய
ரோதியநற் கருநடத்தின் பயன்றமிழா லுரைத்திடுவாம்.

End :

பூத சாரஞ் சுவர்க்கத்தில் போகநுகரு மவர்க்குடலாம்
பூத மகலா வெழுநரகம் புகுபா தகருக் குடலாகும்
பூத பரிணா மத்தாலம் புவியுள் ளோர்கட் குடலாகு
மோது மிவைமூன் றறையு மொரு வுரவாரருளைப் பெறு வாரே. 110

இது, 293-ம் நம்பரின் உட்பிரிவிலுள்ள வீரசைவ மகத்துவத்தை ஒத்திருக்கிறது. ஆனால் சிற்சில பேதமும் காணப்படுகின்றன.

---

### 688. No. 54 (a) சிவஞானபோதம் மூலம்.

ஏடுகள் ; 293 மிகவுஞ் சிதிலம் Lines 6—8 in a Page.

இது, சைவாகமங்களில் கூறப்படும் சித்தாந்த முணர்த்தும் முதனூலாகும். இதில் பதி பசு பாசமென்ற முப்பொருள்களின் பொதுச் சிறப்பென்னும் இருவகை இலக்கணங்களும் ஏது திருட்டாந்தங்களால் இனிது விளக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு சூத்திரங்களைக்கொண்டது. இதனை இயற்றியவர் மெய்கண்ட தேவர் என்பவர். இதற்குச், சிற்றுரையும் பேருரையாகிய மாபாடியமும் இருக்கின்றன. இந்நூல் இவ்வுரைகளுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் திருப்பெண்ணைகடத்தில் சைவவேளாளர் குலத்தில் அச்சுதகளப்பாளர் என்பவர்க் கருந்தவப் புதல்வராய்த் தோன்றிச் சுவேதவனப் பெருமான் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்றுத், தமது மாமன்மனையில் திருவெண்ணெய் நல்லூரில் வளர்கையில், ஆகாயமார்க்கமாகச் சென்றுகொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் இளம்பருவத்தில் இவர்பால் விளங்கிக்கிடந்த பரிபாகத்தைக்கண்டு சிவதீக்ஷை செய்து மெய்கண்டான் எனத் தீக்ஷா நாமமிட்டுச் சிவஞானபோதத்தினை உபதேசித்து, ' இதனைத் தமிழிற் செய்க ' எனக் கட்டளையிட்டுச் செல்ல, இவரும் வெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப்பிள்ளையாரிடம் சைவாகமங்களை ஓதியுணர்ந்து அவர் அருளிய சூர்ணிகையைக் கொண்டு சிவஞானபோதமும் அதற்கு உரையும் செய்தருளினர் என்பர். இவருக்கு

அருணந்தி சிவாசாரியர் முதலிய மாணவர் நாற்பத்தொன் பதினர் என்ப. இவரது காலம் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கூறுவர்.

Beginning :

கல்லார் மலே
வில்லா ரருளிய
பொல்லா ரிணேமலர்
நல்லார் புனே வரே.

மலர்தலை யுலகின் மாயிரு டுமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுக ணிருடீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னுன்மா நாடி
மயலற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே. எ—து பாயிரம்

* * * * *

முதற் சூத்திரம் :

அவனவ ளதுவெனு மவ்வமூ வினைமையிற்
ரேற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனூர் புலவர்.

எ—து. சூத்திர மென்னுதலிற்றோ வெனின் சங்கார

காரணனையுள்ள முதலை மூன்று வகுத்து வுலக மென் பதுணர்த்துத னுதலிற்று இதன் பொழிப்புரைத்துக் கொள்க.

End :

எந்தை சனற்குமா ரனேத்தித் தொழவியல்பா
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் ருரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

முற்றும்.

மூன்று மலங்கெடுத்து மூலமா மப்பொருளுந்
தோன்ற வருளுந்தன் ரூண்டர்க்கிங்—கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கு
மெய்கண்ட தேவன் விரைத்தாள்

ஐயொருபத் தேழு மாங்கறைந்த நாலாறு
மையொன்ப தோரெட்டோ டாரூறுந்—துய்யவே
யொன்பது மென்றேது ஞ் சிவஞான போதமதில்
மன்னனருள் வெண்பா வகை.

சிவஞானபோத முற்றும். மெய்கண்டாய நம.

திருஞான சம்பந்தன் திருவடி வாழ்க.

---

689. *(b)* சிவஞான சித்தியார் பரபக்ஷம் மூலம்.

Lines 6—7 in a Page.

இதுவும் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று சிவ ஞான போதத்தின் வழிநூல். இது சுபக்ஷம், பரபக்ஷம் என்னும் இரண்டு கூறுடையது. அவற்றுள் இது சுபக்ஷத்தை சித்தாந்தஞ் செய்தற்குப் பரமதங்களைக் கண்டித்துரைப்பதாகிய பரபக்ஷமாகும். இதனை இயற்றியவர் அருணந்தி சிவாசாரியார். இவர் திருத்துறையூரில் ஆதிசைவ குலத்திற் பிறந்தவர். சகலாகம பண்டிதர் என்னும் காரணப் பெயருடையவர் மெய்கண்ட தேவரது மாணவருட் சிறந்தவர். இவரது

காலமும் 13-ம் நூற்றூண்டின் முற்பகுதியேயாம். இவர் செய்த வேறு நூல் இருபா இருபது.

Beginning :

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த ஞல்வாய னைங் கரத்த ஞறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொருவா ரணத்தின் ருள்க
ளுருகோட்டன் பொடும் வணங்கியோவாதே யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமு மொன்ருேவென்னச் செய்யுந் தேவே

* * * * *

இறைவனையு மிறைவனு லியம்பு நூலு
மீண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி
முறைமைகளும் பெத்த மொடு முத்தி யெல்லா
மூதுலகி லெனக்கியன்ற முயற்சியாலே
சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோலுண்டாய பொய்கொண் மார்க்கத்
துறைபலவுங் கடாவிடையாற் சொல்லிப் போக்கித்
துகடீர விந்நூலிற் சொல்லகிற் பாம்.

End :

இப்படி பிருகுசாபத் தீரைந்து பிறப்பில் வீழ்ந்து
மெய்ப்படு துயரமுற்ர வருபவன் விமலனல்ல
னெப்படி யாலுஞ் சொன்னேனிறையரி யல்லனென்று
மைப்படு கண்ட னண்டன் மலரடி வணங்கிடாயே.

பரபக்ஷ முற்றும்.

## 690. (c) சிவஞானசித்தியார் சுபக்ஷம் மூலம்.

Lines 7—8 in a Page.

இது பரமத கண்டனஞ் செய்து சுபக்ஷத்தைச்சித்தாந்தஞ் செய்தலின் சுபக்ஷமெனப் பெயர்பெற்றது. இதனை இயற்றியவரும் அருணந்தி சிவாச்சாரியரே. இது அறுவர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேருங்
குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்திங்
கறிவினிலருளான் மன்னியம்மை யோடப்பணுகிச்
செறிவொழியாதுநின்ற சிவனடி சென்னிவைப்பாம்.

அருளினு லாகமத்தே யறியலா மளவினுலுந்
தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலா நீங்கிக் கண்டு வாழலாம் பிறவிமாயா
விருளெலா மிரிக்க லாகு மடியரோ டிருக்கலாமே.

End :

பரபிரம மிவனென்றும் பரசிவன் ருனென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்ரு னென்று
மான்றருசீர் நிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடவே யவனிவன்ரு ஞயே
யிரங்கி யவா ரணமாமை மீனண்டஞ் சினையை
யியல்பினுெடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா ஞக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்திந்தும் பார்த்துந் தானே.

## 691. (d) இருபா இருபது.

Lines 8 in a Page.

இதுவும் சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று. பதி

பசு பாசங்களின் உண்மையை உணர்த்துவது. வெண்பாவும் அகவலும் தம்மிற் கலந்து அந்தாதியாக வரப்பாடப்பட்டிருத்தலின் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் அருணந்தி சிவாசாரியார். உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் — வெண்ணை நல்லூர்
மெய்கண்டா னென்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டா ருள்ளத்துக் கண். (1)

கண்ணகன் ஞாலக் கதிரவ னொனென
வெண்ணைத் தோன்றிய மெய்கண்ட தேவ
காரார் கிரகக் கலியாள் வேலை நின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லானு துடையே னெனதுள
நீங்கா நிலைமை யூங்கு முளையா
லறிவின் மைமலம் பிறவின் மையெனி
னோாவினை யுணர்த்தும் விராய்நின் றனையோ
திப்பியந் தேரப் பொய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றாய்ப்
பேறு மின்று மெமக்கெம் பெரும
விருநிலந் தீநீ ரியமானன் காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின்
வேறு வுடனு வு(வி)ளம்பல் வேண்டுஞ்
சிறியருள்ல் சிறுமை யுடைத்தா
லறியாது கூறினே யபக்குவ பக்குவக்
குறிபாத் தருளினன் குருமுத லாயெனின்
பக்குவ மருளினு மறியேன் மிகத்தகும்

பக்குவம் வேண்டிற் பயனிலை நின்றான்
பக்குவ மதனாற் பயன் வரினே நின்னைப்
பக்குவ நிகழ்த்தா தன்னைப் பாரிலி
யென்பதுந் தகுமே மும்மலஞ் சடமனு
மூப்பிள மையில நின்மலன் பருவ
நிகழ்த்திய தார்க்கோ வுணர்வெழு நீக்கத்தை
யோதிய தெனினே யிணையிலி யாயினை
யென்பதை யறியேன் யானே நீக்கினு ந்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டுங்
காண்பார் யார்கொல் காட்டாக் காலெனு
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்டக் கிளர்த்த மெஞ் ஞானத்தி
னுட்பா லவர்க்கரு ளென்பதை யறிவே. (2)

End :

உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்று
மற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவ
னந்த மாதி யில்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நின்றுத்தி
டிருள்வெளி யாக்கு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு
மின்றி யொன்றாய் நின்றவ

* * * * *

மலமுத லாயின மாய்க்கு
மூலக வுயிர்க்கெ லாமொரு கண்ணே. (20)

இருபா விருபது

முற்றும்.

## 692. (e) சிவப்பிரகாசம் மூலம்.

Lines 8 in a Page.

இது, சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. பொது உண்மை என இரண்டு பிரிவுடையது. பதி பசு பாசங்களின் இலக்கணத்தை நன்கு விளக்குவது. 100 விருத்தங்களை உடையது. இதனை இயற்றியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இவரது காலம் சகம் 1235. இவர் இயற்றிய வேறு நூல்கள் வினா வெண்பா, திருவருட் பயன், கொடிக்கவி, சங்கற்ப நிராகரணம், உண்மை நெறி விளக்கம், போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடு தூது, கோயிற் புராணம். சேக்கிழார் புராணம், திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிக்கோவை, முதலியவை. இந்நூல் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழல்நாளு மறவாம
லளியாலு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய விணைகூட நினையாவே.

ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தி யாகி
யுலகமெலா மளித்தருளு முமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியிலு முறவணங்கிப் போற்றல் செய்வாம்.

End :

திருவருள் கொடுத்து மற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்றால் விளம்பிய வேது நோக்கிப்

பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப் பின்முன்
றருமலை யொழியக் கொள்வோன் றன்மையிற் சாற்றலாமே.

சிவப்பிரகாசம் முற்றும்.

---

## 693. (*f*) திருவருட்பயன் மூலம்

Lines 8 in a Page.

இது, சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.
அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிறை நிற்கு நிறைந்து.
தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்.

End :

என்ற வினையுடலோ டேறுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும்.

மும்மை தருவினையு மூளாவார் மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம்.

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக. (100)

திருவருட் பயன்

முற்றும்.

---

694. *(g)* சங்கற்ப நிராகரணம்.

Lines 8 in a Page.

இதுவும் சித்தாந்த சாஸ்திரம் பதினான்கில் ஒன்று. உலோகாயதன் முதலிய பரசமயிகளுடைய கோட்பாடுகளை எடுத்துக்காட்டி மறுத்துச் சைவ சித்தாந்தத்தை நாட்டுவது. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

திருந்த ருந்தவம் பொருந்துபவன் முனிவர்க்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்
பாச மங்குசந் தேசுறு மெயிறொண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்கதங் கடகம் பொங்கிழை யாரம்
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்டதின் பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

End :

இதுகதி யாக முதலறி வுயிரேற்
பொறிபுல னீங்க வறிதுயி ரன்றே
யடைகாய் நூற்றிடை சேர்சிவப் பென்னி
விந்தியத் தொகையின் வந்தறி வொன்றும்.

வெண்ணெயம் பதிதிகழ் மெய்கண் டவனரு
ளுண்ணிலை யுடையோ னொருவ னுரைத்த

தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமி ழுண்மையை
யருளுட னுய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடு மென்றே.

சங்கற்ப நிராகரண முற்றும்.

---

695. (h) வினா வெண்பா.
Lines 8 in a Page.

இதுவும் சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று. ஆசிரியர் உமாபதி சிவாசாரியார். அச்சிடப்பட்டுள்ளது. இதில் சிவப் பிரகாசத்தின் சாரம் விளங்கப் பதின்மூன்று வெண்பாக்களால் சைவசித்தாந்தம் சுருக்கமாக வினவப்பட்டுள்ளது. அச்சிடப் பட்டுள்ளது.

Beginning :

உன்னை யொழிந்து செயலில்லை யுன்றனக்கு
மென்னை யொழிந்து செயலில்லை — மன்னவனே
மின்றுன்று வேணியாய் மெய்கண்டா நானடிமை
யென்கின்ற தெவ்வா றியம்பு.

அனாதியினீ யென்னை யகலா திருக்க
வனாதியிலெற் காணவமுண் டான—தனாதியனே
சுத்தாதொல் வெண்ணைச் சுவேதவன மெய்கண்டா
யெத்தா லடியேற் கியம்பு.

End :

அருளா லுணர்வார்க் காவாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித் — தெருளா
வினாவெண்பா வுண்மை வினவாரை யூமன்
கனாவின்பா லோதுவிக்குங் காண்.

வினா வெண்பா முற்றும்.

---

696. (*i*) ஞான பூஜை.

Lines 8 in a Page.

இது, மானத சிவபூசை செய்யும் முறையைப் பதினெட்டு விருத்தங்களாற் கூறுவது. ஆசிரியர் உமாபதி சிவாசாரியார். அச்சிடப்படவில்லை.

Beginning :

பணித்தவரு ளுடன்சந்தி பண்ணி ேனோர்கள்
பயில் காலந் தருசந்தி பகர்வன் கங்குற்
புணர்த்தியசூக் குமவுடலாற் போகந் துய்த்துப்
பூதவுடற் போகத்திற் போத ளுதை
துணர்த்தியபோ துணர்ந்துணர்வை யுயிராற் சந்தித்
தொண்புனலா லுடற்சுத்தி யோங்கு வித்துக்
கணக்குறுநீ றிடக்கையா லஞ்செழுத்தாற் குழைத்துக்
கலந்தொருமைத் திரிமுண்டங் காட்டத் திட்டே.

End :

எழுந்தலர்தூய்ப் பணிந்திருந்து நியாத மெய்தி
யெழிற்குரவ ரிறைவன்று னெய்த வேத்தி
மொழிந்தலர்கோ யிலையணுகப் பண்ணு வித்து
மும்மலர்முன் னுதவுபாத்தியா சமனவர்க்க முறையே
பொழிந்தலர் தூய்ப் பீடத்துந் தண்டுலத்து மிறைஞ்சிப்
போக்குகவற் கியஞான பூசையிது புனிதற்
கழுந்துபர குரவர்தரு முச்சிட்டங் காதற்
காமல்ல மாலியமென் றறைந்தனவா கமமே. (18)

ஞான பூசை முற்றும்.

697. (*j*) ஞான தீக்ஷை.

Lines 8 in a Page.

இது, ஞான தீக்ஷை முறையை எட்டு விருத்தங்களாற்

கூறுவது. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். அச்சிடப்படவில்லை

Beginning :

மன்னுபல பிறவிகளில் முன்னே செய்த
வைதிகமா தவவலியால் மருவிச் சைவந்
தன்னில்வளர் சமயவிசேட தியான
சரிதைகிரி யாயோகந் தரித்து ஞான
நன்னிலைமை பெறச்சத்தி னிபாத மேவி
நாடுமள வினிலிறைவ னருளால் நண்ணும்
பன்னரிய பரகுரு மற்றவனை நாளும்
பணிந்துபணி செயவந்து பலிக்கு மன்றே.

End :

தேசுமிகு மருட் பயனற் சிவப்பிர காசத்தின்
றிருந்துபொதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி
யாசிலருள் விணுவெண்பாச் சார்புநூ லாய
லருளொளிதிற் குறிகூட வனைத்து ஞான
பூசைதகக் காரணமுன் புகன்றதனிற் புரிந்து
புணர்விக்கச் சிவஞான போதசித்தி வழிநூல்
மாசில்சத மணிக்கோவை முன்னூல் சான்று
மருவுதிரு முறைத்திரட்டு வைத்தனமன் னுயிர்க்கே. 8

ஞான தீக்ஷை முற்றும்.

698. *(k)* தேவிகா லோத்தரம் மூலம்.

Lines 8 in a Page.

இது, சைவ சித்தாந்த உண்மையை வினவிய உமாதேவியார்க்கு சிவபெருமான் உரைத்தருளிய உத்தரமாகும். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

காவிநேர் கண்ணுமைக்குக் கண்ணுதலோ னன்றுரைத்த
தேவிகா லோத்தரமென் சித்தத்தே—மேவுவகை
பொன்புரையு மேனிப் பொருகளிறே நீயெற்கு
னன்புரையு நன்று யருள்.

* * * * *

வானவர் தலைவ விந்த மன்னுயிர் முத்தியெய்த
வானவா சாரஞான மருளினு லருளென் றேத்தி
மானம ரயில்வே லொண்கண் மணமலி குமுதச் செவ்வாய்த்
தேனமர் குழலா டேவன் றிருந்தடி பணிந்து சொன்னாள்.

உத்தம குணத்தாய் ஞான மொழுங்கெனு மிரண்டி னுலே
மெய்த்தவர் முத்தி யெய்தும் விதியினை விரித்து ரைப்ப
னித்திற முரைத்த தால மிதனினுல் விளங்கா தாருக்
கெத்தனை யனந்த கோடி நூலினு மினிவி ளங்கா.

End :

முன்னுன ஞானமுட னுசாரமுடி வெல்லா
மென்னுலே யிக்கால ஞானத்தை யியம்பினவான்
மின்னுரு நுண்ணிடையா யினியுனக்கு மீட்டிதனைச்
சொன்னுலென் சொலத்தகுவ தனைத்தினையுஞ் சொன்
னேமே.

தேவிகாலோத்திர முற்றும்.

639. *(l)* தத்துவ விளக்கம்.

Lines 8 in a Page.

இது சைவ சித்தாந்த உண்மை கூறும் நூற்களுள் ஒன்று. 51 கலித்துறைகளை யுடையது. இதனை இயற்றியவர் கண்ணுடைய வள்ளலார் என்பவர். இவரைத் திருஞான சம்பந்தரின் திருவருள் பெற்றவர் என்பர்.

Beginning :

சித்தத் துவந்தெமக் கின்பம் படச்சென்னி மேலிருந்து
மெத்தத்து வங்கட்கு மேலா வனவிக லார்பசு நூற்
கொத்தத்து வந்து குறுகாதன கொச்சை மன்னவன்ரு
ளித்தத் துவவிளக் கம்பகர் வான்பணிந் தேத்துவமே.

மேடுங் குழியும் விழுந்தேன் விழுங்க வெழுந்து விண்ணைக்
கூடும் பொழிற்கொச்சை வேந்தன் குரைகழற் கன்பர் குன்றுங்
காடுங் கடுஞ்சுர முங்கட லேழுங் கடந்தரிதிற்
றேடும் பொருளினுஞ் சேர்ந்தவுற் ருரினுஞ் சீரியரே.

End :

பவமே வியநெறிப் பந்திக்கு மீசன் பசுக்கடம்மை
யவமே வியநெறிப் போகங்க லால்முற்ற வந்நிலையே
தவமே வியநெறி சத்திகண் ணுச்சென்று சார்ந்துபின்னைச்
சிவமே வுவரென்று காண்கொச்சை காவலன் சித்தரிப்பே. (51)

தத்துவ விளக்க முற்றும்.

700. *(m)* உண்மை விளக்கம்.

Lines 8 in a Page.

இது சைவ சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் ஒன்று. இதனை இயற்றியவர் திருவதிகை மனவாசகங் கடந்தார். இவர் மெய்கண்ட தேவரது மாணுக்கருள் ஒருவர். அச்சிடப் பட்டிருக்கிறது.

Beginning :

வண்மைதருமாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மை விளக்க முரைசெய்யத்—திண்மதஞ்சே
ரந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.

ஆருறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாரு வினையேது மற்றவற்றின்—வேருகா
நானேது நீயேது நாதனிட மஞ்செழுத்துத்
தானேது தேசிகனே சாற்று (23)

End :

மன்னதிகை வாழு மனவா சகங்கடந்தான்
மின்னனைய வாழ்விலுறு மெய்கண்டான்—பன்மறைகள்
வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மைவிளக் கஞ்செய்தா னுற்று.

உண்மை விளக்கம்

முற்றும்.

701. (n) திருவுந்தியார்.

Lines 8 in a Page.

இதுவும் சைவ சித்தாந்த நூல் பதினுன்கில் ஒன்று. இதனை இயற்றியவர் உய்யவந்த தேவநாயனுர் இவர் திருவியலூரில் தம்மைக்கண்டு தரிசித்த ஆளுடைய தேவ நாயனுரின் பரிபாகத்தை அறிந்து இந்நூலை இயற்றி அவர்க்குச் சைவ சித்தாந்தத்தை உபதேசித்தனர் என்பர். உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

அகளமா யாரு மறவறியாப் பொருட்
சகளமாம் வந்தானென் றுந்தீபற
தாளுக வந்தானென் றுந்தீபற.

பழக்கந் தவிரப்பழகுவ தன்றி
யுழப்புவ தென்பெணே யுந்தீபற
யொருபொரு ளாலேயென் றுந்தீபற.

* * * * *

ஏகனு மாகிய னேகனு மானவ
ஞுதனு மாஞுனென் றுந்தீபற
நம்மையே யாண்டானென் றுந்திபற.

End :

வைய முழுது மலக்ஷயங் கண்டிடு
முய்யவந் தானுரைக் குந்தீபற
வுண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற.

திருவுந்தியார் முற்றும்.

---

## 702 (*o*) திருக்களிற்றுப்படியார்.

Lines 8 in a Page.

இதுவும் சைவசித்தாந்த நூல்கள் பதிஞன்கனுள் ஒன்று. இது திருவுந்தியாரின் வழி நூலாகும். 100 வெண்பாக்களாலாயது. இதனை இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனுர். இவர் திருக்கடவூரில் ஆட்டுவணிகர் குலத்தில் பிறந்தவர் ஒருநாள் ஆளவந்த தேவநாயனுர் என்னும் பெயருடைய ஒரு பெரியவர் திருக்கடவூருக்கு வந்திருந்தபோது அவரை எதிர்ப்பட்டு வணங்கிய இவரது மலபரிபாகத்தைக் கண்டு அருள்புரிந்து தம்குருவின் பெயராகிய உய்யவந்த தேவ நாயனுரென்னும் பெயரையே இவர்க்கு தீக்ஷா நாமமாக இட்டுத் திருவுந்தியாரை உபதேசித்துச் சென்றனர். சில நாட் சென்றபின் சிதம்பரத்தை யடைந்து இவ்வுய்யவந்த தேவநாயனுர் தவம்புரிந்திருக்கையில், தம்மை வழிபட்டு வந்த ஒரு பக்குவியின் பொருட்டு மனமிரங்கி இந்நூலை இயற்றினர். இவரைக் கீழ்க்குலத்தினராகக் கருதிய சிலர் இந்நூல் அங்கீகரிக்கத் தக்கதன்று என்று மறுத்ததைக் கண்ட பல அறிஞர்கள், இதனை நடராஜப்பெருமான் ஏற்றுக்கொள்வாராயின் நாமெல்லோரும் கைக்கொள்ளுவதிற் றடையில்லை என்று

ரைத்து நடராஜர் வீற்றிருக்கும் சிற்சபையினிடத்துள்ள பஞ்சாக்ஷரப்படியில் இந்நூலை வைத்திட்டனர். அப்பொழுது அப்படியில் செதுக்கப்பட்டிருந்த கல்யானை துதிக்கையால் இந்நூலை எடுத்து நடராஜரது திருவடிக்கண் சேர்ப்பித்தது. அதனைக் கண்டயாவரும் வியந்து, இதற்குத் திருக்களிற்றுப்படியாரெனப் பெயரிட்டனர் என்பர். இது உரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

Beginning :

அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப றென்றறிவ
மம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப—ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லாற்போ னிற்ப ரவர்.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே வுணர்வெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யார்றிவார் பேசு.

End :

சிந்தையிலு மென்றன் சிரத்தினிலுஞ் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமற்—றந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதலா
லேதுசொல்லி வாழ்த்துவே னின்று (100)

ஆதார மாகி யருளொடு நிற்கின்ற
சூதான வின்பச் சுகவடிவை—யோதாம
லுள்ளவா கூடி யுணர்வொழிய நிற்பதலால்
தெள்ளவா ராதே சிவம். (101)

திருக்களிற்றுப்படியார் முற்றும்.

703. (*p*) துகளறுபோதம்.

Lines 8 in a Page.

இதுவும் சைவசித்தாந்தமாகிய பதி பசு பாசம் என்னும் முப்பொருளையும் உணர்த்துவது. சீகாழி சிற்றம்பல நாடிகள் இயற்றியது. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

பதிபசு பாசந் தெரிந்தந்த பாச
விதிவழியை வென்றதனின் வேருங்—கதிவழங்கு
மெய்கண்டான் சந்தான மேவிச் சிவானந்தங்
கைகண்டார் காணுற் கரு.

உற்ற சரிதை யொழியாத நற்கிரியை
குற்றமிலா யோகக் குறிநெறியு—முற்றிப்
பிறந்தார்க டாமறியப் பேசுகே னன்றிப்
பிறந்தா ரறியாத பேறு.

End :

அந்த மலமறுத்திங் கான்மாவைக் காட்டியதற்
கந்த வறிவை யறிவித்தங்—கிந்தறிவை
மாருமல் மாற்றி மருவுசிவப் பேறென்றுங்
கூருமற் கூறக் கொடி. (100)

துகளறு போத முற்றும்.

704. (*q*) உண்மைநெறி விளக்கம்.

Lines 8 in a Page.

இது, சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் ஒன்று. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

மண்முதற் சிவமதீருய் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவமதீருய் மலஞ்செட மென்றல் காட்சி

மண்முதற் சிவமதீருய் வகைதனிற் ருனி லாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதுமன்றே.

End :

பாதகங்கள் செய்திடினுங் குலேகளவு கள்ளு
பயின்றிடினும் பலர் செய்யா நெறிபற்றி விடினு
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள் வந்திடினுந்
தனக்கெனவோர் செயலன்றித் தானதுவாய் நிற்கி
ஞதனிவ னுயிருடலா யுண்டுறங்கி நடந்து
நாஞபோ கங்களையுந் தாஞகச் செய்து
பேதமற நின்றிவனேத் தாஞக்கி விடுவான்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே. (6)

உண்மைநெறி விளக்க முற்றும்.

705. (r) பரம உபதேசம்.

Lines 8 in a Page.

இது சைவ சாத்திரங்களுள் ஒன்று. இதனை இயற்றிய வர் மறைஞான சம்பந்தர். அச்சிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

ஆரணத்தி னுட்பொருளு மாராய்வா ரம்பவன
வாரணத்தின் ருள்கள் நினைப் பார்.

* * * *

அந்தப்பே ரின்பந் திளேத்திருப்ப ஞதிமுத்த
னந்தச் சிவஞெடிரண் டற்று.

End :

செறிமா செறிவைப் பரமோப தேச
மறைஞான சம்பந்தன் வாக்கு.

பரம உபதேச முற்றும்.

## 706. (s) ஐக்கிய வியல்.

Lines 8 in a Page.

இது, சைவ சாத்திரங்களுள் ஒன்று. சிவத்தோடு ஆன்மாவுக்கு ஐக்கியம் இன்னவிதத்திலெனக் கூறுவது அச்சிடப்படவில்லை.

Beginning :

பவளத் துருவன் பசுபதி மைந்தன்
கவளக் களிற்ற னனத்தான்—குவளைப்பூம்
பாதம் பணிவாம் பரிப்பாஞ் சிரத்துளத்தும்
போதமெமக் கோங்குதற்கிப் போது.

* * * * *

சய்யோக மென்றுஞ் சமயவாயந் தானென்று
மெய்துஞ்சம் பந்தமிரண் டெப்பொருட்கு—மெய்துமிவை
யாதியு மனாதியும்பெற் றாகுமே நான்குவித
மாதியந்த மற்றதனோ டைந்து.

End :

மெய்யன்பர்க் கிந்நூல் விளம்பினன்மெய் யன்பரும்போய்
மெய்யன் புறம்புகுந்து வீற்றிருப்பர்—மையலரித்
தின்புறுதஞ் சித்தின்னிலையத் தினுயிருக்
கன்பன் மலரடி சேர்ந் தார்ந்து. (15)

ஐக்கியவியல் முற்றும்.

## 707. (t) போகதூடணம்.

Lines 8 in a Page.

இது, மாதர் போகத்தைப் பழித்துரைப்பது. அச்சிடப்படவில்லை.

அம்பவள வெற்பு மரகதக்குன் றுமளித்த
செம்பவள வெற்பெனவாஞ் சீர்.

ஆகத் தருவருப்பைக் கண்டறிந்து மாயிழைபான்
மோகிப்பர் தீயவினை முற்றினர்—மோகத்தை
யற்றே மலங்கழிப்ப ராருமது போலவள்பாற்
கற்றூர் சிலங்கழிப்பார் காண். (1)

தோன்றுஞ் சுகமும் தொலைந்ததின வுந்தோலி
ஞேன்றுநகத் தின்குணமோ வோர்ந்துரையா—யூன்று
நகம்போ விளையார் நகம்செறிந்த தோல்போ
லுகந்த புருடனென வோர். (2)

End :

மண்ணின் மணந்தோன்றும் வாரியுறி னம்மணந்தான்
மண்ணின் குணமோவாரி தன்குணமோ—பெண்ணினல்லா
ராகத்தைத் தோய்ந்தான்மெய் யானந்தந் தானவட
ஞகத்தி னின்போசொல் லாய். (3)

முற்றும்.

---

708. (*u*) சிவதரிசனம்.

Lines 8 in a Page.

இது, சிவதரிசனம் அவசியம் எனக்கூறுவது. அச்சிடப் படவில்லை.

Beginning :

பச்சூன் தழுவிப் பணிமொழியார்க் காளாவர்
கைச்சூ னுடலமலங் காண்பரோ—வச்சோ
மரம்போலு முள்ளகிது மாற்றிமதி செய்யு
மரன்பாதத் தார்வமிலா தார்.

End :

அம்மா னமல னருளியவே தாகமத்தைத்
தம்மான் குரவனது தாள்பணிந்து—தம்மை
கொடுத்தவனுக் கையமுங்கூ ருதே குறித்தார்க்
குடற்சிறையும் போமின் புறும். (4)

சிவதெரிசன முற்றும்.

---

## 709. (*v*) பதி பசு பாசப்பனுவல்.

Lines 8 in a Page.

இது, பதி பசு பாசங்களின் லக்ஷணத்தைக் கூறும் சைவ நூல்களில் ஒன்று. குறள் வெண்பாவாலமைந்தது. பிரமாண வியல், பதி சாதகவியல், பசு சாதகவியல், பாச சாதகவியல், பொதுவியல், போதகவியல் என்று ஆறு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் சிதம்பரம் குகைமடம் மறைஞான சம்பந்தர். அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீதுறை தில்லையில்
கனக சபையிற் பனக முனிவனும்
போத மிகுத்த புலிக்கான் முனிவனு
மாதவ விரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரு
மருமா மறையா லடிபணிந் தேத்தப்
பாணு கம்பர் பணிலமும் வாண
ஞன் குடமுழ வாதியு முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாத்

தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தியி னுளுஞ் சிந்தனை பண்ணி
யப்பதி தன்னி லருங்குகை மடத்தி
லெப்பதி யோரு மேத்தவு மிருந்தோன்
இகமது தன்னிற் சுகனையொப் பானேன்
வெண்ணெயம் பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டு வருதலொப் பானேன்
அருந்தமி ழுணர்வா லகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியஞ் சிவமயஞ் செய்தோ
னுசில் வடநூற் போச ராச
னுதி கமலாலயமுதற் புராண
மோது மதியாற் சூதனை யொப்போன்
மூவா முதலா முதியவர் பாட
லாவ லுடனே யடங்கலு முணர்ந்தோ
னவமிகு நூல்கள் நாலு விதத்துடன்
சிவதரு மோத்தரந் தமிழாற் செய்தோ
னுகம பண்டித னருந்தவர் புகலு
மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோ
னண்ணிய நவமறை ஞான சம்பந்த
னெண்ணிய முதனூ லியல்வழு வாமல்
அதிக சைவ வளவைமுன் காணப்
பதிபசுப் பாசப் பனுவல்செய் தனனே,

என்பது பொதுப்பாயிரம்.

End :

பிரமபுரத் தீசன்பால் பேதை முலைப்பாலைப்
பருகியபா லன்பேர் பரித்தோ—னிருமலன்சொல்
லாய்ந்துரைத்த செய்யுள்வகை முந்நூறு மாருறு
மேய்ந்ததுணை பக்குவர்க்கென் றெண்.

* * * * *

பக்குவர்க்குப் போதித்தான் பாசவித மூன்றொன்று
மூக்கொழியக் கண்டமலன் ருளுள்ளும்—பக்குவரும்
போதித்தா னுந்தம் போதானந் தந்திளைப்பர்
சாதிப்ப தல்லவந்தச் சம்

## 710. (w) சங்கற்ப நிராகரணம்

Lines 9 in a Page.

இதுவும் சைவசித்தாந்த உண்மையுணர்த்தும் நூல்களில் ஒன்று. இது ஐக்கியவாதி முதற் சைவவாதி ஈருய எண்மர் களின் சங்கற்பங்களை நிராகரித்துச் சைவசித்தாந்தத்தை நாட்டுவது. இதனை இயற்றியவர் மறைஞான சம்பந்தர். அச் சிடப்படவில்லை.

Beginning :

செய்யவுரு வேழ விஞயகன்ருள் சிந்திப்பார்
மையலற வாய்க்கநல்கு வாக்கு
பூமேலான் மாலமரர் போற்றமணி மன்ருடி
யோமேன னென்னுளத்து முண்டு.

* * * * *

ஒன்றுலகு தோன்று முபாதான மாயைமற்
ருென்றுவினை யென்றுள் ளுணர்.

* * * * *

இருண்மலந்தா ருவிக் கிலையேற்றுன் பின்பங்
கருவிகொடு காண்பதென்னே காண்.

* * * * *

பதியே யமலன் பசுக்கள் சமலர்
பதிபசுவார்க் கும்பாச மூன்று.

End .

நிரந்தவர்சங் கற்ப நிராகரிக்கு மிந்நூல்
பரிந்துலகோ ருய்யப் பகர்ந்தான்—றிருந்திமறை

யோங்கி விளங்க வுதித்தமணே யோட்டினன்பேர்
தாங்கினஞய்ந் தாகமமுந் தான்.

ஆரியனு லேயந் திரிவுமற வாராய்ந்த
கூரியரே யிந்நூல் குறித்தவரா—தேருமவ
ரார்ந்தவர்தம் பாதத் தறிக வவலமலந்
தீர்ந்துவிடும் வாய்க்குஞ் சிவம்.

அயிக்கவாதி முதல் சைவாந்தமான லெட்டுப் பெயர் சங்கற்பங்களேயு நிராகரித்தவர் சைவ சித்தாந்தியெனக்கொள்க.

## 711. (x) அட்டாங்க யோகம்.

Lines 9 in a Page.

இது, யோகத்திற்குரிய எட்டு அங்கங்களேயும் குறள் வெண்பாவாற் கூறும் நூல். மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

வெண்கோட்டன் செய்யன் கரிமுகனுள் வீற்றிருந்தெ
னெண்கோட்டந் தீர்த்தளிப்ப னின்பு.

* * * * *

இமய நியமமிணங் காதனமா யாமம்
மயலில் பிரத்தியா காரம்.

* * * * *

தாரணே யோடு தியானஞ் சமாதியுமென்
ருேரிருநான் கங்கமி யோகின்.

End :

அடங்கினர்க்கிவ் வட்டாங்க மாரியன் போதிக்க
விடம்பர்க் குணர்த்தின் விழும்.

தீர்வார்மா சுத்தமர்க்குத் தேற்றினருந் தேறினருஞ்
சேர்வார் பரம சிவம்.

அட்டாங்க யோக முற்றும்.

---

712. (y) சிவானந்த போதர்.

Lines 9 in a Page.

இது, முத்தி நெறியை விளக்கிடுந் தசகாரியத்தை கூறுவது. இதனை இயற்றியவர் பெயர் முதலியவை தெரியவில்லை. அச்சிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

முப்பது வகைபடு முத்திநன் நெறியினைச்
செப்புவன் மைத்து தெசகா ரியத்தில்
பெறையி லைம்பூதமும் பொய்யென வருளால்
முறையுறு நீங்கு முத்தி சகலமும்
பஞ்ச பூதப் பழிப்புறு முடலு
பஞ்சு புலன்றனி யறிந்திடு பொறியளுஞ்
செறிந்தொரு புலனைத் தெரிந்திடிற் றனித்தனி
யறிந்திட வறியா வந்தக் கரணமு
மக்கர ணங்க ளகல வகன்றிடுந்
தக்க கலாதி தத்துவக் குழுவு
மத்தகு கலாதிக ளகல வகன்றிடுஞ்
சுத்த தத்துவமுந் தொடர்ந்தெழு முயிர்ப்பும்
வடிவுறக் கண்டு மலபெதை தெளிந்து
நெடிதுற வாங்கவை நீங்க வேவெழுந்
தத்துவ ரூபந் தத்துவ தெரிசனந்
தத்துவ சுத்தி தன்னு ளடங்கும்
மாயையுங் கன்மமு மாமா யையுமென
ஆயவிம் மூன்று மகன்றிடு மிவனே

தத்துவா தீதந் தன்னின்மைக் குழம்பினை
யொத்திடு மலவிரு ளுறுபது கேவலை
மற்படு கேவலத் தந்தகா ரத்துயிர்
நிற்பது கேவல நிலையது வாகு
மிருள்மல நீங்குதற் கெண்ணுத றிரோத
மருள்வாடி வான வவதர மாகு
மங்குயிர் காண்பதற் காதர வுறுமிடஞ்
சங்கர னிச்சா சத்தியின் றெரிசன

* * * * *

End :

பெறுபரா னந்தப் பெரிக்கினிற் கலந்தாங்
குறுவதா னந்த யோகம தாகும்
அருந்து மானந்த வவச மேலீடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
வையகங் காண்பது மறித்துக் காட்சியே.

சிவானந்த போத முற்றும்.

713. (z) புவன கோசம்.

Lines 6 in a Page.

இது புவனங்களையும் அவற்றிலுள்ளவர்களையும் கூறும் சைவநூல் அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

அருண்மேரு முலகுக்கா தார சத்தி
யாதியா வுன்மனையே யந்த மாகத்
தெருண்மேவு புவனவகை யனைத்து மண்ணோர்
சிந்தையுறு வந்தமிழாற் செய்யவேண்டி
யிருண்மேவு கண்டர்மதித் துண்டர் காழி
யீசரடி யார்தமது நேசர் தந்த

பொருண்மேவு ஞானமதப் புழைக்கை நால்வாய்ப்
போதகத்தை யாதரித்துப் போற்றல் செய்வாம்

பாயபுகழ் ஞதரவி யாத்தி னந்தத்திற்
பகருப புவனத்தா தார சத்தி
யாயவிற லுருத்திரர் நாலெட்டுக் கோடி
யவர்சூழு மனந்தருட னமரு மும்பர்
மேயகடா கங்கோடி யதன்மே லாகி
விரிகமல முகமொருநான் கிரட்டி தோள்க
ளேயவா னரசோரி யாச னத்தே
யிருப்பரொளி யனந்தரரு ளேவல் பூண்டே.

End :

துன்னுமுன் மனேமே லதன்மிசைக் காலந் தொழில் சிரந்தத்து
வன்னமெய் நாம முதனடு விறுதி வயதிவை யின்றிநீ டொளியாய்
முன்னரு மருவாய் மலமாயெல்லா முதன்மை யோடறிவ னுக்கிரக
மன்னவை யுளவாஞ் சிவமஃதடையு மவர்பர முத்த ரென் றறியே. (128)

புவனகோச முற்றும்.

Colophon :

ஞானப்பிரகாசன் றிருவடி வாழ்க.

பரஞ்சோதித் தம்பிரான் முறை தற்புருஷர் எழுதி முகிந்தது.

முற்றும்.

---

714. No. 553. *(a)* சிவஞான போதம்.

ஏடுகள் 141 ; சிதிலமாயிருக்கிறது.

Lines 10—12 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*a*) போன்றது.

715. (*b*) சிவஞான சித்தியார் சுபக்ஷம்.

Lines 12—15 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*c*) போன்றது.

---

716. (*c*) சிவப்பிரகாசம்.

Lines 13—15 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*c*) போன்றது.

---

717. (*d*) இருபா விருபது.

Lines 12—14 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*d*) போன்றது.

---

718. (*e*) கொடிக் கவி.

Lines 15 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரம் 14-ல் ஒன்று நான்கு செய்யுட்களை யுடையது. மலத்தை தீக்ஷா கிரமத்தால் போக்கக் கொடி கட்டியது போல செய்யப்பட்டிருத்தலின் இந் நூல் இப்பெயர் பெற்றது. ஒரு காலத்தில் சிதம்பரத்தில் கொடி யேறுதல் தடைபட்டபோது இந்நான்கு செய்யுளையும் பாடிக் கொடியேற்றினமையின் இப்பெயர் பெற்றது எனவும் கூறுவர். இதனை இயற்றியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்.

Beginning :

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையனை—நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிறியாமை தாமே
குறிக்குமரு ணல்கக் கொடி. (1)

End :

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்
பேசுமெழுத் தோரெழுத்தும் பேசாம னின்றெழுத்தும்
கூசாமற் கூறக் கொடி. (4)

கொடி முற்றும்

719. (*f*) தேவிகாலோத்தரம்.

Lines 14—17 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*k*) போன்றது.

720. (*g*) திருக்களிற்றுப்படியார்

Lines 14—17 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*o*) போன்றது.

721. (*h*) போற்றிப்பஃறொடை.

Lines 15—16 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் ஒன்றுகும். இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியார்.

Beginning :

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப—ஞமன்னு
வேதம்வே தாந்தம் விளக்குஞ்செய் விந்துவுட
ஞதநா தாந்த நடுவேதம்—போதத்தா
லாமளவுந் தேடவளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேற்றும்வகை—மாமணிசூழ்
மன்று ணிறைந்து பிறவி வழக்கறுக்க

நின்ற நிருத்த நிலைபோற்றி—குன்ருத
பல்லுயிர்வெவ் வேறு படைத்து மவைகாத்து
மெல்லை யிளைப்பொழிய விட்டுவைத்துந்—தொல்லையுறு
மந்த மடிநடுவென் றென்ன வளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி.

End :

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெஞ்ஞானப் புண்ணியநூல்—போற்றி யெங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேருய்வந் துண்ணின்ற
சம்பந்த மாமுனிபொற் ருள்.

போற்றிப் பஃருடை

முற்றும்.

722. (*i*) ஞான பூசை.

**Lines 13—15 in a Page.**

**இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*i*) போன்றது.**

723. (*j*) திருவுந்தியார்.

**Lines 13—15 in a Page.**

**இது, 541-ம்நம்பர் உட்பிரிவு (*n*) போன்றது.**

724. (*k*) சிவாநந்தபோதம்.

**Lines 11—12 in a Page.**

**இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*y*) போன்றது.**

## 725. (*l*) முத்தி நிச்சயம்.

**Lines 13—15 in a Page.**

இது. இன்னதுதான் முத்தி என முத்தியின் நிச்சயத்தை 19 வெண்பாக்களால் சுருங்க உணர்த்தும் சித்தாந்த நூல். இதனை இயற்றியவர் ஞான சம்பந்தன் என்பவர்.

அச்சிடப்படவில்லை.

Beginning :

சிவசத்தி யைததிளைப்பர் சீவன்முத்த ரென்னு
மவசத் தமர்பா தகமென்—சிவசத்தி
தன்னைக்கண் டாங்கருளாற் சச்சிதா னந்தமென்னு
மன்னைத் திளைத்துவாழ் வார்.

* * * *

சிற்றின்பம் பேரின்பஞ் சீவகுண மென்றனைநீ
யுற்றிங் கிரண்டு முணர்ந்திலையோ—சிற்றின்ப
நாடிற் கரும்பல நாதனுருப் பேரின்ப
நீடிப் படிகம்போ னீ. (6)

End :

ஆகங் கரணமறி யாமை சுகதுக்கம்
போக மவையணைந்த போதெல்லா—மோகமாய்த்
தானவையாம் பான்மைபோற் றற்பரா னந்தநீ
தானதுவாய் நிற்குந் தரம்.

முத்தி நிலையணுக்கள் சேர மொழிந்திட்டான்
சத்தியமெஞ் ஞானசம்பந் தன்.

முத்தி நிச்சய முடிந்தது முற்றும்.

## 726. (*m*) போசன விதி.

**Lines 14 in a Page.**

இது, ஞானிகள் போசனஞ் செய்யு முறையை நான்கு செய்யுட்களாற் சுருங்க உரைப்பது. ஆசிரியர் இன்னரெனத்

தெரியவில்லை. பிழைகள் அதிகமாயிருக்கின்றன.

அச்சிடப்படவில்லை.

Beginning:

திருவளரச் சனையிதனைச் செலுத்திமுன்னீ
செய்தவினைப் பயனருந்தச் சிந்தையாறி
யிருவருமே லொருவருள னில்லாதில்லை
யிடவுரியோர் கொடுவர நின்று விப்பிக்கு
மருளுட னே யிடுபவர்தா மானை வாணு
மவரேவல் புரிதுமினி யன்றி யப்பா
லொருவரிதென் றுள்ளதிட வல்ல துண்ணு
யுண்மையூ ணிடுசோறென் றுரைக்குமன்றே. (1)

End:

ஆரமுதா நீரருந்தி...........சகம் கப்பி
யடைக்காய் ற் கடுக்காய்சுக் கடுத்தொன்றுமென்று
கூறியபே ருணர்வுடனே தூங்கிக் கங்குற்
குளிர்வெம்மைக் கிசைபூசை கொள்ள நல்கி
யோருணவு நெவேதியா துண்ணு வாய்மை
யுடையையா யுயர்ஞான யோகமுற்றுச்
சாருமரு ணித்திரையு முய்த்துணர்க ஞான
சரிதமிது மெய்கண்டான் சந்தானத்தே. (4)

போசன விதி முற்றும்.

727. (n) ஞான அந்நிஷ்டி.
Lines 14—15 in a Page.

இது, ஞானிகள் இறந்தால் அவருக்குச் செய்யும் கிரியை யைக்கூறுவது. செய்யுட்டொகை இரண்டு. செய்தவர் பெயர் விளங்கவில்லை. அச்சிலில்லை.

Beginning :

உடற்பொறைவிட் டுயிருணர்வி னுடனடக்கி யண்ண
ஹுருவிலுரு வெடுக்குநெறி யுயர்ம யான
விடத்திலொரு கடத்தலி .. .. யிருத்தி யாலு
வெய்தும்வகை திருநாம மிறைஞ்சி யங்கி
யடுத்ததொரு குண்டத்திற் றண்டு லத்தி
லர்ச்சித்தா குதியுமழல் வழங்கியட்ட மூர்த்தி
தொடைக்கணர னுருவினையா லிதுகவர்க வென்று
தொழுதிரந்து சவமதனைச் சுத்தி சேர்த்தே. (1)

End :

அங்கியினுங் கும்பத்து மரனொருமை யுன்னி
யவனுடலா குதிபண்ணிற் றுகத் தானே
செங்கனல்வந் தைம்பூதச் சிகைவிறகி லவன்றன்
சிரமணுகப் பூரணையைத் திருத்திநாமப்
பெங்குபுன லிடையாகச் சூழ்ந்து போந்து
புனன்மூழ்கி யன்றுமுதற் புனித னன்பர்
மங்கலம தாவமது செய்வி யாண்டு
வரவரவுஞ் செயவருளே மன்னு மன்றே. (2)

ஞானந்திஷ்டி முற்றும்.

---

728. (*o*) ஞானநிஷ்டை.
Lines 14 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*j*) போன்றது.

---

729. (*p*) உண்மை நெறி விளக்கம்.
Lines 14 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*q*) போன்றது.

## 730. (q) நெஞ்சுவிடு தூது.

Lines 13—16 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. தமது ஞானாசாரியார் பால் நெஞ்சைத் தூதுவிடு முகத்தால் அவரது அருமை பெருமைகளை விளக்குவது. இதனைச் செய்தவர் உமாபதி சிவாச்சாரியார்.

Beginning:

பூமேவு முந்திப் புயல்வண்ணன் பொற்பமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன்—ருமேவிப்
பன்றியு மன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்து
மென்று மறியா வியல்பினா—னன்றியு
மிந்திரனும் வானோரு மேனோரு மெப்புவியு
மந்தர வெற்பு மறிகடலு—மந்தரமும்
வேதமும் வேத முடிவும் விளை விந்துவுட
னாதமுங் காணா நலத்தினான்—ஓத
லரியா னெளியா னளவிறந்து நின்ற
பெரியான் சிறியான் பெண்பாகன்—றெரியா
வருவா னுருவா னருவுருவ மில்லான்
மரியான் மரிப்பார் மனத்தான்.

* * * * *

ஆதிமறை யோதி யதன்பயனொன் றும்மறியா
வேதியர்சொன் மெய்யென்று மேவாதே—யாதிமே
லுற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே—நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே—நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே—விழித்தருளைத்
தந்தெம்மை யாண்டருளுஞ் சம்பந்த மாமுனிவ

னந்தங் கடந்தப்பா லாய்நின்ரு—னெந்தைபிரான்
வீற்றிருக்கு மோலக்க மேவியடி வீழ்ந்திறைஞ்சிப்
போற்றி சயசய போற்றியென—வேற்றகரி
யன்றுரித்த வெம்பிரா னின்பவனி யாதரித்தார்
வென்றிமத னம்புபட்டு வீழ்வாரோ—நின்றிடத்து
நில்லாது செல்வ நிலையில்லை யென்றென்று
பொல்லா நரகம் புகுவரோ—பல்லாருங்
கத்துஞ் சமயக் கணக்கிற் படுவரோ
சித்தம் பலகாற் றிகைப்பரோ—முத்தம
பொருத நகைமடவார் பூங்கலவி யின்ப
மருவி மயங்கி வருவாரோ—கரவாத
நாளிரு பத்தேழு நவக்கிரக முங்கலியுங்
கோளிதுவென் றெண்ணிக் குறிப்பரோ—வேளை
யெரித்த விழியாய்நின் னின்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல்—வருத்தமெலாந்
தீரா யெனவுரைத்துச் செங்கமலப் பூந்திருத்தாள்
தாரா யெனப்பலகாற் ருழ்ந்திறைஞ்சி—யோரரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
யீங்கொன்ற வாரா யினி.

வெம்பும் பிறவியலை விழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் ருர்வாங்கி—யம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாமகல
நெஞ்சமே வராய் நினைந்து.

நெஞ்சுவிடு தூது முற்றும்.

வெற்றிவேலே துணை. திருஞான சம்பந்த குருவே துணை.

731. (*r*) திருவருட்பயன்.

Lines 15 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*f*) போன்றது.

## 732. (*s*) ஞானவம்மானை

Lines 13—14 in a Page.

இது ஞானத்தை அம்மானையாற் கூறுவது அச்சிடப்படவில்லை.

Beginning:

குஞ்சரக் கன்றினைக் கும்பிட்டே னம்மானை
கொள்ளைப் பிறப்பைக் குலைத்தேன்கா ணம்மானை
யஞ்சினேன் வஞ்சப் பிறப்பினுக் கம்மானை.
யாகம்பொய்க் கூற்றுவ ஞனதே யம்மானை. (1)

End:

ஞானந்தா ஞனலுந் தேசிகாணம்மானை
நான்கண்ட தெய்வமுந் தேசிக னம்மானை
யானந்தா தீதனுந் தேசிகனம்மானை
யம்மானை யம்மானை யம்மானை யம்மானை (31)

ஞானவம்மானை முற்றும்.

## 733. (*t*) துகளறு போதம்.

Lines 13—15 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவு (*p*) போன்றது.

## 734. (*u*) சித்தாந்த நிச்சயம்.

Lines 10—13 in a Page.

இது, சைவசித்தாந்தத்தின் உண்மையை விளக்கும் நூல். நூறு கலித்துறைகளையுடையது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning:

சித்தாந்த மியாதென்று சிந்திப் பவர் தமக்குச்
சித்தாந்த நிச்சயத்தைச் செப்பவே—முத்தனு

மைமுகத்தான் றந்த வருட்கதிரோன் போல்விளங்குங்
கைமுகத்தா னேமிகவுங் காப்பு.

நல்லோர்கள் போற்றிய மெய்கண்ட நாதன் மகிழ்ந்தளித்த
சொல்லாரு நூற்பொரு டன்னைப் பிறிதொன்று சொல்லு
மிந்தக்
கல்லார் தருஞ்சொற் கழித்துச் சித்தாந்தக் கருத்திதெனப்
பொல்லாத பிள்ளை யடிதினம் போற்றிப் புகலுதுமே. (1)

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருளை
பையமில் மெய்யடி யாருக் களித்ததை யன்றறியார்
பையவுள் வந்து பொருள்மாறு பாடு பகர்தலினாற்
செய்ய பொருளவன் செப்பிய தீதெனச் செப்புவமே (2)

ஒருமைய தாகுஞ் சிவானந்த முத்தி யினையொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக் கிணையெனப் பேசுவது
பருமை யொழியுமின் சித்தாந்த மீதெனப் பாரின்வந்து
தருமை யழகிய சிற்றம் பலகுரு சாற்றினனே. (6)

**End :**

சொன்னநற் சித்தியி னுண்மையை நீயுந் துணிந்தறிய
முன்னவ னனந்தந் தன்னை முத்தாரம் முயன்றருந்திப்
பின்ன மிலாம விருப்பனென் றுகமம் பேசியதா
லன்னியர் விட்டுச் சிவானந்த முத்தியென் றேயறையே. (100)

முற்றும்.

## 735. ( ) சித்தாந்த நிச்சய வுரை.

Lines 12—14 in a Page.

**Beginning :**

சிவஞான போதத்தில்,

நாடிய வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியென் றேர்ந்தவகை—நாடிலரன்

றன்ஞலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரென்னு மெனவறிவா ரின்று.

இதில், அரன்றன்ஞலே தன்னையுங் கண்டு தம்மைக் காணுரென்றும்,

'சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
லிதமித்தல் பாசத்திலின்றிக்—கதமிக்
கெரிகதிரின் முன்னிருள் போலேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ரர்ங்கு.'

இதில், சத்தருளிற் காணிலென்றுங் கதிர்முன்னிருள் போலேலா வசத்தி னருகணையார் சத்தினருகணை வாரென்றும், சித்தியாரில்,

'அருளது சத்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளான் மாட்டி மன்னுயிர்க் களிப்பன்கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்.'

இதில் மருளினை யருளால் வாட்டி யென்று மிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வென்றும்,

'அறிபொரு ளசத்தாய் வேரு மறிவுருப் பொருள்சத் தென்னி
லறிபவ னறியா னுகி லதுவின்று பயனு மில்லை
யறிபவ னருளிஞலே யன்னிய மாகக் காண்ப
னறிபொரு ளறிவாய் வேரு யறிவரு ளுருவாய் நிற்கும்.'

இதிலறிபவ னருளிஞலே யன்னியமாக் காண்பனென் றும்,

End :

இதில் விறகிற் றீயின் பாலிற் படுநெய் போலென்றும் திருவாசகம்,

'கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணிக்
கள்ளும் வண்டு மருமலர்க் கொன்றையா

ளள்ளுங் கீழுளு மேலுளு யாவுளு
மெள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே.'

என்றும், 'பூவினுற்றம் போன்றுயர்ந் தெங்கு மொழிவற நிறைந்து மேவிய பெருமை யென்றும், 'அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே' யென்னும் பாட்டில் 'களிசே ரடியார் களி சிறப்பக் காட்சி கொடுந்துன்னடியை யென்பாற் - பிரைசேர் பாலி னெய்ப் போலப் பேசாதிருந்தா லேசாரோ' என்றும்

Colophon.

சருவதாரி வரு மார்கழிமீ 15௳ சோமவாரமும் கார்த்திகை நக்ஷத்திரமும் துவாதெசியும் பெற்ற சுபதினத்தில் சித்தாந்த நிச்சயமாகிய சாத்திரம் உரை முத்தும்.

வைத்தியநாதன் கையெழுத்தாக எழுதி நிறை வேறினது.

வைத்தியநாத சுவாமிதுணை. சிவசகாயம்.

## 736. No 544 சிவஞான சித்தியார் சுபக்ஷம் ஞானப்பிரகாசருரையுடன்

ஏடுகள் 226 ; அபூர்த்தி சிதிலம் Lines 7—10 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் ஒன்று சிவஞான போதத்தின் வழிநூலாகும். முதநூலிற் சூத்திர யாப்பாற் சுருங்க உரைத்திட்டதை விருத்த யாப்பினுல் விரித துரைத்தலில் அதற்கோர் விரிந்த உரைபோல்வது. இது பர மதக் கொள்கைகளை வினு விடைகளால் ஆராயும் பரபக்ஷமும், அவற்றை கண்டித்துத் தன்மத சித்தாந்த நிலையிடும் சுபக்ஷ மும் என்று இரு பெரும் பகுப்புடையது. இதனைச் செய்தவர் அருணந்தி சிவாசாரியார். அவர் இப்பொழுதைக்கு 600 வரு டங்களுக்கு முன் பெண்ணையாற்றை யடுத்துள்ள திருத்துறை யூரில் ஆசிசைவ மரபில், பிறந்தவர். சகலாகமபண்டிதர்

என்னும் காரணப் பெயர் பெற்றவர். இந்நூற்கு உரை செய்தவர் மறைஞான சம்பந்தர், சிவாக்கிர யோகிகள். ஞானப்பிரகாசர், நிரம்ப வழகிய தேசிகர், சிவஞான முனிவர், சுப்பிரமணிய தேசிகர், என்னும் அறுவராவர். இதில் முதல் ஏடில்லை. 5-ம் ஏடுவரையில் சிதிலமதிகம் இடையில் சில ஏடுகள் முறிந்தும் சிதிலமாயும் இருக்கின்றன 1-ம் சூத்திரத்தின் கடைசி செய்யுளின் சிறிது பகுதிக்கு உரையில்லை. இந்நூல் அறுவர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

[சிந்தைத் திருக்கோட்டும் அந்தச் சிவத்தியானத் துவாரத்தினுலே] சிற்சத்தியினது விரிந்த வறிவு தொழில்களை மறைத்த [மலசத்தியினது வியாபாரத்தைத்] தடுத்ததனுல் பண்ணப்பட்ட [வஞ்ஞானத்தைத் துரத்தும்] அயன்றிருமார செல்வமு மொன்ரே வென்ன பிரமததுவம் விட்டு ஞுத் துவ மென்கின்றவை சொரி (ஸ்வரிய) [மு மொரு பொருளோ வென்ன] செய்யுந் தேவே தேவே செய்யு மென மாறுக, தேவாந் தன்மையைச் செய்யும். முன்னிருந்த சிவத் [துவத்தை தானே விளக்கித் தனித்தனி] யவர்களைச் சீவன் போலச் சிவன்களாகத் தானே பண்ணும். முத்தி வியத்தி இரண்டு மோ [க்ஷ மென்கையால், திருகோட்டு மென்றந் தனுல் சிவத்துவாபி வியத்தியும் பாசமுத்தியும் செய்யும் தேவே யென்றதனுல் [சொல்லப்பட்டதறிக] தான் என்பது எழுவாய்.

ஒட்டும் என்பதும் செய்யும் என்பதும் பயனிலை.

குருவினது பெருமை கூறுகின்றது.

பரமபிரம மிவனென்றும் பரசிவன்ரு னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்ரு னென்று

மான்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடவே யவனிவன்ரு ஞயே
யிரங்கியவா ரணமாமை மீனண்டஞ் சினையை
யியல்பிஞேடு பரிசித்து நினைத்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே.

பரம்-சுத்த சிவனிவன்ரு னென்றும், பிரமம்-சுத்தசிவ மத்திய நிருத்த [சிவ மிவன்ரு னென்றும்] பரசிவன்ரு னென்றும், இருபரசிவனெனு மிலயசிவ னிவன்ரு னென்றும் [பராபர]ன்ரு னென்றும் [அநாகத சிவனெ]ன்னும் போக சிவன்ரு னென்றும், பரஞான மிவனென்றும் ஞானக்கிரியாப் பிரவிர்த்தி மாஞகிய சதாசிவனென்றும் அ தி கா ர சிவ [ன்ரு னெ]ன்றும், அரன்றருஞ் சீர்நிலை யெல்லாம் மகேசுர னுருத்திரன் மால் பிரமன் முதற் சிவபேதமனைத்தும், இவன்ரு னென்றும், ஆரோபிதசிவாத்து விதத்திஞலே, அருட்குருவை வழிபடவே கிருபா சமுத்திரமாகிய தேசிகனைப் பாவனை பண்ண, அவனிவன்ரு ஞயே அந்தச் சிவ னிந்தக் குரு தேகத்தி லாவேசித்து இந்தக் குருவாவே இரங்கிய வாரண முதற் பதப்பொருள் வெளிப்பொருள். இம்முத்திருட்டாந்த தாட்டாந்திகப் பொரு ளுணர்ந்துரைக்கு மிடத்துயிர்க் கியற்கையால் மலத்தின் மறைந் [த சிவஞல் விளங்கு மென்னும் பொருள் விளங்கிற்று.]

[சொல்லி ஞவிற் றுரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடுஞ்
செல்லு மெய்யாரு ளாந்நிசெய் சிந்திக்க
நல்ல ஞானப் பிரகாச னவிற்றுரை.]

737. No **545** சிவஞானபோதம்.

ஏடுகள் 51 ; Lines 5—7 in a Page.

இது, 543-ம் நம்பர் போன்றது. முழுவதுமிருப்பினும் சிதிலமாயிருக்கிறது.

---

738 No. **584** (*a*) சிவப்பிரகாசம் மூலம்.

ஏடுகள் 35 ; அபூர்த்தி சிதிலம் ; Lines 4—6 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். இது 541-ம் நம்பர் உட்பிரிவாகிய (*e*) போன்றது. இதில் 31-ம் செய்யுள் முடிய விருக்கிறது.

---

739. (*b*) உண்மை விளக்கம்.

Lines 4—6 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. இதனை இயற்றியவர் திருவதிகை மனவாசகங் கடந்தார். இது 541-ம் நம்பர் உட்பிரிவாகிய (*m*) போன்றது.

*குறிப்பு :*

இதில் திருவாசகத்திலுள்ள திருச்சாழலில் 2 செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன.

---

740. No. **585** சிவப்பிரகாசம்.

ஏடுகள் 67 ; பூர்த்தி Lines 5 in a Page.

இது, 541-ம் நம்பர் உட்பிரிவாகிய (*e*) போன்றது.

*குறிப்பு :*

இதில் சிவஞான போதத்துள்ள சூத்திரங்கட்கும் வெண்

பாக்களுக்கும் முதனிலைப்பு எழுதிய நான்கு ஏடுகள் கடைசியில் கோர்க்கப்பட்டுள்ளன.

---

741. No 586. சிவப்பிரகாசம்.

ஏடுகள் 38 ; அபூர்த்தி. Lines 5—6 in a Page.

இது, மேற்பிரதி போன்றது. இதில் 96 செய்யுட்கள் இருக்கின்றன.

---

742. No. 595. (*a*) திருக்களிற்றுப்படியார் உரையுடன்.

ஏடுகள் 22 ; அபூர்த்தி சிதைந்துள்ளது Lines 10 in a Page.

இது, 541-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*o*) போன்றது. இதில் 44 முதல் 88 வரையுமுள்ள செய்யுட்கள் உரையுடனிருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

---

743. (*b*) சித்தியார் பரபக்ஷம்.

Lines 8 in a Page.

இது, 541-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*b*) போன்றது. இதில் பவுத்தரிற் சவுத்தராந்திகன் மறுதலை முதல் பாட்டாச்சாரியன் மத மறுதலை முடிய இருக்கின்றது.

---

744 ( ) திருமலை வெண்பா.

Lines 8 in a Page.

இது, திருமலை என்பவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து ஈற்றடி இரண்டும் திருக்குறளை அமைத்து வெண்பா வாலுரைக்கும் நீதி நூல். அறத்துப்பாலில் 38 செய்யுட்களும்

பொருட்பாலில் 22 செய்யுட்களுமே இருக்கின்றன. ஏனை யவை இல்லை. அபூர்த்தி ; அச்சிடப்படவில்லை.

Beginning :

மருமலியுந் திண்புயத்தான் வாழப்புக் குட்டி
திருமலைவெண் பாநீதிசெப்ப—வருள்புரியுங்
கோகனகத்தாள் கொழுநன் றிருமருகன்
மாகனகத் தாண்மலர் காப்பு.

நீர்கொண்ட வேணியா னீள்சரண மேபரங்கான்
சீர்கொண்ட செல்வத் திருமலையா—ஆரொன்றைக்
கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழாஅ ரெனின். (1)

பல்லக்கிற் புண்ணியத்தைப் பாவஞ் சுமந்துவருஞ்
செல்வத்தைப் பாராய் திருமலையா—சொல்லில்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (4)

End :

கல்வி யறிவமைச்சுக் கண்களோ டொத்தமைந்தோர்
செல்வ முடிவேந்தர் திருமலையா—தொல்லுலகில்
ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டு
தெற்றென மன்னவன் கண்.

ஊக்க முடையா னொருவன் விசையனிடித்
தீக்கு மவனெல்காண் திருமலையா—ஆக்கை
பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

---

## 745. No. 363. சிவதருமோத்தரம்.

**ஏடுகள் 100 ; அபூர்த்தி Lines 5 in a Page.**

இது, சந்தான சர்வோத்தமம் என்னும் சைவாகமத்தின்

பிரிவாகும். அகத்தியமுனிவர் வினவிய சிவதருமங்களுக்கு உத்தரமாக முருகக் கடவுள் கூறியதாகலின் சிவதருமோத்தரம் எனப்பெயர் பெற்றது. பரமதருமாதியியல் முதல் கோபுரவியல் ஈருகப்பன்னிரண்டு இயல்களை உடையது.

இதனைத் தமிழில் மொழிபெயர்த்து இயற்றியவர் மறைஞான சம்பந்தநாயனர். இவர், பெண்ணுகட மெனும் திருக்குடந்தையில் வைதிக சைவமறையவர் குலத்தில் பிறந்தவர். அருணந்தி சிவாசாரியரிடம் சிவதீக்ஷை பெற்றவர். இவரது மாணுக்கர் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர். இது உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

மலைக்குமகள் பெற்ற மகனைக் கயமுகத்தனை மனத் தெழுதியா
னலற்பிணி பிறப்பற வணுக்களை யகத்திய முனிக் கருளின
லுலப்பில் கருணைக்கட லுருத்திர னுருத்தனிலுதித் தகுமா
னிலக்குமிய லைக்கலியினைக் கவுமுரைப்பனுல கிட்ட முறவே.

திருமாலும் போதினனுந் தேவருமா முனிவருமோ செறிந்து போற்ற
மருவாரும் பொழினிலவுந் தில்லை மணிமன்றுடன் மகிழ்வான்றன்னை
யுருவாகித் தானுயிர்கட் குருவாக்கி யளித்தடக்கி யுய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனையடி பணிந்து ளத்திற் பேணுவாமே

End :

என்வினை தன்னையறுத்தவனே யேதுயரென்ன
விறுத்தவனே
முன்மலைவாரை முருக்கினனே முன்னினர் நெஞ்சு
முருக்கினனே
யன்னையு மத்தனு மறறவனே யகமெனு பற்பனு
மற்றவனே
முன்னொரு வேள்வி முடித்தவனே முதிர்சடை
கங்கை முடித்தவனே.

குறிப்பு :

இதில் முதலாவது பரமதருமாதி யியல் முதல் எட்டாவது சனனமரண வியலில் 99-வது செய்யுள் வரை இருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1-வது தருமாதி யியல் செய்யுள் | | 52 |
| 2-வது சிவஞான வியல் | ,, | 83 |
| 3-வது ஐவகை யாகவியல் | ,, | 34 |
| 4-வது பல விசிட்ட காரணவியல் | ,, | 61 |
| 5-வது சிவதருமவியல் | ,, | 35 |
| 6-வது பாவவியல் | ,, | 107 |
| 7-வது சுவர்க்க நரகவியல் | ,, | 224 |
| 8-வது சனன மரண வியல் | ,, | 101 |
| 9-வது சுவர்க்கநரக சேடவியல் | ,, | 49 |
| 10-வது சிவஞான யோகவியல் | ,, | 128 |
| 11-வது பரிகாரவியல் | ,, | 10ɔ |
| 12-வது கோபுரவியல் | ,, | 228 |
| ஆக விருத்தம் | | 1202 |

746. No. 364. சிவதருமோத்தரம் உரையுடன்.
ஏடுகள் 88 ; அபூர்த்தி Lines 7—9 in a Page.

இது முற்பிரதி போன்றது. இதில் 11-ம் இயலாகிய பரிகாரவியல் 83 செய்யுட்கள் மட்டும் உரையுடனிருக்கின்றன.

Beginning :

இவ்வோத்தென்ன பெயர்த்தோ வெனின் ஒத்துமுதலிய தோத்தினது பெயருரைப்பவே விளங்குமாகலினிவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின் பரிகாரவியலென்னும் பெயர்த்து. ஆத்துமாக்களுக்கு வாதனுபலத்தாலே இரு வினைப் பயன்களைப் பொசிக்குமிடத்து ஏறிய பாவம் போம் படிக்கும் பரிகாரத்தைக் கூறியதெனவறிக. இத்தனிச் செய்யுளென்னுதலிற்றோ வெனின் பரிகாரவிதங்களிற் சிறிது தொகுத்துணர்த்துதனுதலிற்று.

அறிந்திடுக பரிகாரம் வல்வினை யறுத்தற்
கறைந்திடுவா மருமுனிவபரிகார சுத்தி
நிறைந்த புனலான் மாசு நீக்கலுடற் காடை
நிகழ்நீரின் முக்கறுகை நீசரைப் பேசிடினும்
பிறந்திறந்த வாசூசம் பேணியறன் மூழ்கும்
பெற்றியெனப் பேசிய வம்முறையனைத்தும் பெற்றூர்
சிறந்த பரிகாரத்தைச் செய்தவலமான
தீவினையிற் றீர்ந்திடுவர் நன்பலமுஞ் செறிவார்.

எஃது வாராய் சிறப்பினையுடைய வகத்திய மாமுனிவனே! யான்மாக்களாற் சித்த பாபம் போம்படிக்குப் பரிகாரத்தை யாம் சொல்வாமதனை யறிவாயாக. அஃதெவ்வாற்றனென்னி னுடலின்கணவத் துவாரத்தாலுண்டாங் குற்றம் போபடி யச்சுத்தியாகையின் பொருட்டுநதி முதலியவற்றின் மூழ்காமல் வெந்நீரின் மூழ்குங் குற்றமும் புடவையிற் சுக்கில முதலியது

பட்ட குற்றமும் போம்படி சுத்திசெய்யு முறைமையினையு மிழிந்த சாதிகளுடன் பேசின குற்றமுமவர்களுடைமையைப் பொசித்த குற்றமும் போமுறைமையினையு மந்தணர் முதலாயினர்க் குண்டாகிய விருவிதவாசூசமும் போனவாறே முழுகிச் சுத்தராகு முறைமையினையுமிங்ஙனங் கூறிய குற்றங்களைச் செய்தோ.. ளை குற்றம் போம்படிக்கு அதற்கதற்கேற்ற பரிகாரஞ் செய்து பாவங்கள் போனவாறே புடம் வைத்த பொன் போல விளங்கிச் சுத்த ரத்துவரவிலுண்டான போகங்களைப் போசித்திருப்பார்களென்றவாறு, நன்பலமுமென்ற உம்மையால் மோக்ஷமுமெனவறிக.

End :

அஃதுச் சரிக்க வருகமல்லாதார் இருதயமந்திரத்தை யுச்சரித்துக் கூட்டுக எல்லாங்கூட்டியிருக்கிற நடுவிற் பாத்திரத்தைத் தொட்டுச் சங்கிதையையும் சிவகாயத்ரியையு மொருக்காலபிமந்திரித்துப் பணிமாறப்பண்ணி யபிடேகஞ் செய்க. பரிகாரநிமித்தமாகின் மூலமந்திரத்தை நூற்றெட்டுருப் பஞ்சகெவ்வியத்திலே யபிமந்திரித்துத் திக்கிபந்தனமுஞ் சோடிகாமுத்திரையினுலுமவகுண்டனம் பரிகார முத்திரையினுலும் பண்ணி வெளஷடந்தமான சத்தி மந்திரத்தாற் றேனமுத்திரையு மூலத்தாற் பரமீகரணமுங் கொடுக்கவென்றவாறு ..................................83.

குறிப்பு :

இத்துடன் மந்திரங்கள் எழுதிய 6 ஏடுகளும், திருமந்திரம் எழுதிய ஏடுகள் 2-ம் இருக்கின்றன.

---

747. No. 371. சைவசமய நெறிநூலிம்.

ஏடுகள் 56 ; பூர்த்தி சிதிலம் Lines 5—8 in a Page.

இது, சைவ ஆகமத்திற் கூறியுள்ள சில நெறிகளைக் கூறுவது. ஆசாரிய லட்சணம், சீட லட்சணம், பொது லட்

சணங்களைச் சொல்வது. இதனைச் செய்தவர் மறைஞான சம்பந்தர். இவரைப்பற்றியவைகளை 363-ம் நம்பரிற் காண்க. இது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களால் சென்னை வித்தியானுபாலன யந்திரசாலையில் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

நல்லார் தொழும்வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துள்
பொல்லார்தாள் யாஞ் சூடும்போது. (1)

உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந்தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை. (2)

ஒன்ருகி யைந்தொழிற்கு மைந்துவித முற்றுயிரு
ணின்றருள்பொற் பாதநினைப் பாம். (3)

அடியரிடர் நீர்த்தருளு மானைமுகன் பாதம்
கடிமலர் தூய்க் கைதொழுவாங் கண்டு. (4)

அமரரிடர் தீர்த்தே யவர்க்கருளும் வென்றிக்
குமரனடி சிந்திப்பாங் கூர்ந்து. (5)

End :

மகிழ்வுறக் கேட்பாருங் கருவினை மாற்றிப்
புகழுறச்சேர் வார்மேற் புரம். (745)

முற்றியநாட் கேட்டிந்நூல் முன்வைத்தியன்றபொரு
ளர்ச்சிக்க தேசிகர்க்கார் வத்து. (746)

பந்த மறுக்கும் பசுபதிக்கும் பத்தர்க்கும்
அந்தணர்க்கு மூட்டுகவன் னம். (747)

இந்தமுறை தன்னை யியன்றபடி தாமியற்றில்
வந்துறுமே முன்சொல் வரம்.

சைவ சமயநெறி சாற்றின சம்பந்தனுயிர்
மையலற வாய்க்க வரம்.

சைவ சமயநெறி முற்றும்.

---

748. No 372. சைவ சமயநெறி.

ஏடுகள் 13 ; அபூர்த்தி Lines 8—12 in a Page.

இதுவும் முற்பிரதி போன்றது. ஆனால் அபூர்த்தி.

---

749. No. 373. சைவ சமயநெறி.

ஏடுகள் 63 ; பூர்த்தி Lines 6—9 in a Page.

இது 371-ம் நம்பரைப்போல் பூர்த்தியாயிருக்கிறது. இது மற்றவைகளைவிடப் பழமையாயிருப்பதுடன் பிழையில்லாமலு மிருக்கிறது.

---

750. No. 597. சிவஞான தீபம்.

ஏடுகள் 28 ; அபூர்த்தி Lines 8—10 in a Page.

இது, சைவசித்தாந்தம் உரைக்கும் நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவர் சிதம்பரம் இரேவண சித்தர். இவர் சகாப்தம் 1516-ல் இருந்தவர். அகராதி நிகண்டு செய்தவர் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. இதில் முதலாறு செய்யுட் களில்லை.

Beginning :

பாசவிரு ளைவகையு மிரிய நோக்கிப்
பரமனருட் குருவால்வந் துணர்த்தி னாலும்
பாசமக லாதபிர வஞ்ச வாட்கை
பரிந்தாசை யுடனுயிர்கள் விரும்பு நீர்மை
யோசையுத தியில்நீரை யெடுத்து மேக
முவரகற்றி யமுதுதாக்கி வுலகம் போற்ற

நேசமுற வைத்திடினு நில்லாதோடி
நெடுங்ஙடல்புக் குவராகு நீரொப் பாமே. (1)

End :

கருமுகி னிகான குழல்மடவாலிபர் களபமென கிலினை
கலவாரே
மருமல ரயனொ டரிமகபதி மிகமகிழ்பத மணமுற மதி
யாலே
யுருவுத விருவினை விதிவிபரி மததமுறு பிறவியி னெறி
யுழலாரே
யருமறைமுடி வினிடை முடையவனிணையழு மடியவரடி
யாரே. (174)

குரு முன்னிற்க. ஹரி ஓம்.

*குறிப்பு :*

கசையில் சிற்றிலிங்கேசர் தோத்திரம் 4 செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன.

---

## 751. No. 387 (7) திருமந்திர திரட்டு.

ஏடுகள் 80 ; Lines 4—7 in a Page.

இது, சைவாகமத்தின் நுண்பொருளை உணர்த்தும் நூல் 3000 செய்யுளை உடையது. இதனை இயற்றியவர் திருமூல நாயனர். இவர், கைலாயத்தில் நந்திதேவரது அருள் பெற்ற சித்தருள் ஒருவர், பசுக்களின் துயரத்தை ஒழிப்பதற்காக, இறந்துகிடந்த மூலன் என்னும் இடையனது உடலில் புகுந்தமையால், திருமூலர் எனப்பெயர் பெற்றவர். அறுபத்து மூன்று சிவனடியாருள் ஒருவராதலால், நாயனர் எனப்பட்டார். திருவாவடுதுறையில் அரசமரத்தடியில் யோகத்திலமர்ந்து வருடத்திற்கோர் பாடலாக மூவாயிரம் பாடலையும் இயற்றினர் என்பர். இதில் தேர்ந்தெடுத்து எழுதப்பட்டுள்ள சில செய்யுட்கள் இருக்கின்றன.

Beginning :

திருவடி மகிமை.

தாடந் தனிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து வேதாந்த......................
தாடந்து தத்துவா தீதத்த தாஞ்சிவன்
தாடந்து பாதந் தணிப்பிக்குந் தானே.

End :

காட்டுங் குறியுங் கடந்தவக் காரண
மேட்டின் புறத்தி னெழிதி ..தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டி டிலல்லது
ஆட்டின் கழுத்தி னதர்க்.............

திருமந்திரத் திரட்டு முற்றும்.

---

752. (*b*) சிவபூசையகவல்.

Lines 15 in a Page.

இதில் சிவபூசை செய்யும் விதம் கூறப்பட்டுள்ளது' இதனைச் செய்தவர் கமலை ஞானப்பிரகாச பட்டாரகர். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

ஓசைச் சிவாகமத்தி லுள்ளபடி கண்டமைத்த
பூசைத் திருவகவல் போற்றவே—யாகில்
பொருணயமுஞ் சொன்னயமும் போதத்து ணல்குங்
கருணைபொழி வாரணமே காப்பு,

பூங்கம லத்தயன் புண்டரீ கக்கண்ண
னீங்கிவர் காணரு மிலிங்கதமாகிய
சங்கரன் றன்னைச் சாத்துதல் புரிவோ
ரங்கவன் றென்பா லாதனத் திருந்தே
யாச மனஞ்செய் தருங்கர நியாசமும்

நேசமோ டங்க நியாசமுஞ் செய்து
பாத்திர மத்திர பரிசுத்தி செய்தே
யேத்திடு மிதையத் திருப்புன னிறைத்தபி
ஞேமெனு மந்திர முச்சரித் தெழுகாற்.

End :

பூசனை செய்திடும் பூசனை முறைமையைச்
சொற்ற மிழகவலிற் சொல்ல வேண்டுமென
நற்றவ னுலக நாயகன் விளம்பச்
சிற்குண னுரைத்தருள் சிவாகம நோக்கி
நற்கம லையில்மாழ் ஞானப்பிர காசன்
சொல்லிய பூசைத் தொகைதனைப் பழுதற
வல்லவர் வீடுற வல்லவர் தாமே.

சிவபூசை அகவல் முற்றும்.

---

753. *(c)* பூசை அட்டவணை.
Lines 4 in a Page.

இதுவும் சிவபூசை செய்யும் முறையைக் கூறுவது இதில், சிவபூசை யகவலில் கூறப்பட்டுள்ளவைகளே வசன ரூபமாகக் கூறப்பட்டுள்ளன. அபூர்த்தி.

Beginning :

பூசைத் தானத்திலே தெற்கே இருந்து வடக்கே முகமாய் ஆசனத்திருந்து ஆசமனஞ் செய்து கர நியாசம் அங்க நியாசம் பண்ணிக் கொண்டு பாத்திரத்துக்குத் தினசுத்தி பண்ணி பாத்திரத்தை அத்திரமந்திரத்தினுலே கழுவிப்போட்டு சாமா னிய அர்க்கியத்துக்கு இருதய மந்திரத்தினுலே பூரித்து ஓ மெனு மந்திரம் ஏழு பிரகாரம் சலத்தை அர்ச்சனைப்பண்ணி அபிமந்திரித்து திக்குபந்தனம் அஸ்திராயப்பட் என்று அவகுண்டனம் கவசத்தினுலே வளைத்து.

பெருவிரலிலிருக்கிற அக்கினியை அத்திரமந்திரத்திஞலே சுட்டதாய் தியானிக்க சூக்கும தேகம் பஞ்சபூத பூதகாரியம் மூன்றும் முன் சொன்ன பாவனையிஞலே போனதாக சர்வ சூனியமாய் இருக்கிற வெளியைத் தியானித்து.

---

754. (*d*) சைவானுஷ்டான முறை.

Lines 3—5 in a Page.

இது சைவர்கள் நாடோறுஞ் செய்தற்குரிய அனுஷ்டான முறையைக் கூறுவது. செய்தவர் பெயர் முதலியவை தெரியவில்லை.

Beginning :

அத்திராய நம என்று அப்பியாசனம்
அத்திராய நம என்று புரோட்சனம்
... திராய நம என்று தாடனம்
அத்திராய நம என்று திக்கு பெந்தனம்
கவசாய நம என்று அவகுண்டனம்
அத்திராய நம என்று தாளத்திரையம்.

End :

ஆமளவுஞ் சிவமயமே மறவாதேத்த அருவினையேன் விண்ணப்பம் ஆக்கை முத்துச்
சாமளவும் உடற்பெலத்தோ டிருக்கவேண்டுஞ் சாம் போதும் நோயின்றிச் சாகவேண்டும்
போமளவும் நாயடியேற் கெதிரே நின்று போந்தாயோ வெனவேண்டும் போந்தால் நாக
கோமளவல்லியும் நீயு மிருக்குங் கோலம் கும்பிட நான் பெறவேண்டும் கூத்தனீரே.

உலகெதா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லான்ய நீண்மதி வேதியன்

அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
வளர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

திருச்சிற்றம்பலம்.

---

## 755. No. 717. திருமந்திரம்.

ஏடுகள் 71 ; Lines 4—7 in a Page.

இதுவும், சைவாகம நுண்பொருள் உரைக்கும் நூல்களுள் ஒன்று. இதில் சில செய்யுட்களே இருக்கின்றன. இதனை இயற்றியவர் திருமூல நாயனார். ஏனையவற்றை 387 (a) யில் காண்க.

Beginning :

ஓங்கார சக்தி உமையொரு பெண்பிள்ளை
ஆங்காரத் தோடு மைவரைப் பெற்றவள்
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ரீங்கார சனத்தில் இனித்திருந் தாளே.

மேலை யண்ணாவில் விரலை விரைந்திடில்
காலனு மில்லை கதவும் திறந்திடும்
ஞால மறிய நரைதிரை மாறும்
பாலனு மாவன் பார்நந்தி பாதமே.

சத்தியார் கோவில் இடவலஞ் சாதித்தால்
மத்தியா னத்தில் வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியம் சொன்னோம் சதாநந்தி பாதமே.

End :

எட்டி மிரண்டு மறியாத வெள்ளை
யெட்டு மிரண்டு மறிவித்தான் என்னந்தி
யெட்டு மிரண்டு மறிவா னறிந்தபின்
எட்டு மிரண்டு மிலிங்கம தாமே.

குறிப்பு :

இத்துடன் சிவவாக்கியத்தில் சில செய்யுளும் விநாயகத் தோத்திரமும், மாட்டு வைத்தியமும் எழுதிய ஏடுகளும் கோக்கப்பட்டுள்ளன.

---

756. No. 386. சிவபூஜா பத்ததி.

ஏடுகள் 135 ; அபூர்த்தி சிதிலம் Lines 4—5 in a Page.

இது சிவபூஜை செய்வதற்குரிய முறையையும் சமய விசேட நிர்வாண தீக்ஷை மார்க்கங்களையு கூறும் வசன நூல். இது 719-ம் நம்பர் பிரதியினும் வேறுபட்டது. இதனை இயற்றிய ஆசிரியரது பெயர்முதலியவை தெரியவில்லை பிழை அதிகமாயிருக்கின்றன. இது அச்சிடப்படவில்லை. இதில் முதல் ஏடும் கடைசி யேடும் இல்லை.

Beginning :

... ... ... ... ... மண்டபாக்ஷே பண்ணிப் பிறத்தானத்திலே அத்துவா பதியான சிவனுக்குத் தெற்கே வடக்கே முகமாக கிருஷ்ணுசன முதலான வாசனத்திலே யிருந்து முன்பு போல முற்பாடு கராநியாதம் பண்ணிப் பூத சுத்தி பண்ணி யிருதயத்திலே யான்மாவை ஆவாகனம் பண்ணி ஆசன மூர்த்திகளை நியசித்து அட்டத்திறிங்கற் கலாநியாதம் பண்ணும்படி மூற்தாமுக மிறுதையங்குய்யஞ் சரனுக்களிலே பிரமங்களைத் தெண்டபங்கியாக நியசித்து வந்திரபங்கி நியசித்துக் கலாபங்கி நியசிக்கும்படி ஊர்த்துவ மூர்த்தாவிலே ஓங் ஈசான சறுவ வித்தியாணுங் சசின்னியை நம பூறுவ மூற்தாவிலே ஓங் ஈசுரவா சறுவ பூதங் கெதாயை நம நெக்ஷண மூற்தாவிலே ... ... ... ... ...

நிருவாண தீக்ஷை

சமய விசேஷ சங்கர காரங்களினுலே சங்காகாரம் பண்ணி ஒருவருஷம் சென்ற பின்பு சீஷனுடைய மல பரி பாகத்தையும் சத்தினி பாதத்தையும் அறிந்து பக்குவனுன சீஷனுக்கு குருவானவன் நிருவாண தீக்ஷையை பண்ணுவான். பின்பு நிருவாண தீக்ஷை பண்ணுமிடத்து முன்பு போலலே துவாரந்துவா ரேசுவரா பூசை பூதசுத்தி அந்திரி யாநம அற்கியத்திறங்களுடைய தாபனம் கும்பபூசை மண்டலபூசை குண்டல சங்ஙக்கார முதலாக அக்கினியினுடைய நாம கரணுந் தமான சங்ஙக காரங்கள் அக்கினித்தனுன சிவனுடைய பூசை தற்பண தீபனந் தானபாக முதலான விசேஷ சங்ஙக கார மளவாகப் பண்ணிப் பிருயச்சித்த ஒமம் பண்ணி நிருவாண தீக்ஷயின் பொருட்டு மூலமந்திர முதல் அத்திர மந்திர மீருன மந்திரங்களிடைனுடைய

* * * * *

End :

வாகீசுவரி வாகி கேசுரர்களாகப் பூசித்து அவர்கள் மந்தி ரத்தினுலே மும்மூர்த்தி பண்ணிப் காரமுகாரகியங் கெடுத்து அவர்களை உத்தாபனம் பண்ணிப் வவுஷடந்த மூலத்தினுலே பூரணுத்தி பண்ணுவான். இது நிவ்ருத்திகால சித்தி.

பிரதிட்ட கலா சுத்தி

பின்பு சோதிக்கப்பட்ட காலே.

Colophon.

கீலக-ஸூ காத்திய மாதம் ஏழாம் தேதி குருதெக்ஷணை சன்ன பெரியான புகராய பிரமன புகபந்தன புக ஆண்டி கோணப்பிளை புக நெட்டை பிரமன்...

757. No. 388. பூசை அட்டவணை.

ஏடுகள் 12; அபூர்த்தி. Lines 9—11 in a Page.

இது சிவபூஜை செய்யும் முறையைக் கூறுவது. இதில் சிவ பூசை அகவலிற் சொல்லியவற்றையே வசனரூபமாக எழுதப்பட்டுள்ளது. அச்சிடப்படவில்லை.

Beginning :

பூசைதானத்திலே வந்து சலமெடுத்து வந்து வட்டகை செம்பு முதலானதெல்லாம் ஸ்திரத்தினுலே வெள்ளையிட்டு கவசத்தினுற் கழுவி கூட்டி, வேதிகையிலே யஸ்திரத்தாற் லெளித்து கவசத்தாற் றடவி யிருதயத்தால் பத்திரம் போட்டுத் திருமஞ்சனக் குடத்துக்கு நிரிக்கணுதி சுத்தி பண்ணிக் கவசத்தால் வாய்கட்டிப் பிரமாங்கத்தால் வடித்தெடுத்து வந்து பூசைக்குள்ள உபகரணங்களெல்லா மாசாரங் கூட்டி யருகே வைத்துக்கொண்டு ...... ........................

* * * *

End :

ஒங், ஆங், யோகபீடாய நம பாத்தியாசமனர்க்கியம் கொடுத்து கெந்த புட்ப மறுகக்ஷதை தூபதீப முதலாயுள்ள சர்வ வுபசாரங்களுடனுஞ் சிவனைப்போலப் பூசித்துத் தேவனுடைய மேல் பாரிசத்திலே ஒங், ஆங், யோகபீடாயநம ஒங், ஆங், வித்தியாபீடாய நம வென்று பூசித்து புட்பஞ் சலித்த .. ரையஞ் சாத்தி ஸ்தோத்திரம் பண்ணி அக்கினி காரியம் பண்ணுவான். அக்கினிக்கு யோக்கிய மல்லாதவன் ஆசமன மூர்த்தி மூலங்களினு நேத்திரமொழித்து இருதையாதி.

இந்தப்பூஜை அட்டவணைக்கும் 387-ம் நம்பரிலுள்ள பூஜை அட்டவணைக்கும் வேறுபாடு காணப்படுகின்றது.

## 758. No **389 B** (*a*) நியமவகவல்

**ஏடுகள் 19 ; பூர்த்தி சிதைந்திருக்கிறது.**

Lines **4—5** in a Page.

இது தினந்தோறும் செய்யவேண்டிய நியமங்களைக் கூறுவது இதனைச் செய்தவர் கமலை ஞானப் பிரகாச பட்டாரகர். அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

அடைவுறு நியம வகவலுக் காரூர்
கடவுள்மாற் றுரைத்த கணபதி காப்பு.

சீர்பெறு மனாதிச் சிவாகமப் படியே
நேர்பெற நித்திய நியமம் புரிவோர்
கதிரவ னெழுமுன் கடிகையைந் தென்ன
மதிபெற வெழுந்து மகேசனை நினைந்தே
துகளது சரீர சுத்தி புரிந்தவன்
தகைமைசேர் தந்த தாவனஞ் செய்தே
போந்துநன் னதிமுதற் புனல்களி லாடித்
தோய்ந்துமுன் காய்ந்த துகிலினை யுடுத்து
மனமுறு மத்திர மந்திரத் துச்சியிற்
புனல்கொடு முக்காற் புரோக்கித் ததனாற்
றற்பண மும்முறை தருஞ்செப மீரைந்
துற்பன வருக்கிய மொருக்காலுதவி
மூவகைத் தத்துவ முறைதனில் முக்கால்
லாவது புரிந்திட் டாச மனத்தையும்
அதர சுத்திசெய் தத்திர மதனால்
இதையங் கொடுதொடு மிடங்களுந் தொட்டு

* * * * *

End :

மூல மந்திர முறைபெயச் செய்தே
சூல பாணியனைத் தொழுதடி வணங்கி

நள்புகழ் கமலையில் ஞானப்பிர காசன்
அற்புத மாகிய ஆகமப் படியே
நயமன் புடனே நவிலக வற்படி
நியமம் புரிவோர் நீடுவாழ் பவரே.

அனுஷ்டான முற்றும்.

---

759. (*b*) சூரிய பூஜை.

Lines 4 in a Page.

இது சைவ அனுஷ்டானம் புரிபவர்க் கவசியமான சூரிய பூசையின் முறையைக் கூறுவது இதனை இயற்றியவர் கமலை ஞானப்பிரகாச பட்டாரகர். அச்சிடப்பட்டிருக்கிறது. இது 387 (*b*) நம்பரிலுள்ள சிவபூஜா அகவலின் ஒரு பகுதியாகும்.

Beginning :

[திருவு]று செல்வமுஞ் சிறந்திடு புகழும்
பெருகுமெய்ஞ் ஞானமும் பெற்றிடவேண்டும்
புத்திசேர் சூரிய பூசனை புரிவோர்
அத்திர பஞ்சிரத் தகத்தின ளுகி
மண்முத லாக மாயை யீருக
எண்ணுதத் துவமனத் திகலறக் கடந்தே
மிக்குள சுத்த வித்தையின் வடிவென
தக்கதோர் பூசைத் தானத் தடைந்தே
கூறுவ கரணங் குறைவற வமைத்தபின்
பூருவ முகமுறப் பூசைசெய் யும்படி
அத்திர மந்திரத் தங்கைகள் புறங்கைகள்
சுத்திசெய் ததற்பின் துணைக்கரங் கூட்டி

* * * * *

End :

அவமதி யின்றி யடைக்கா யுடன்பல
உபகர ணங்க ளுதவிய பின்னர்
வருந்துறு வினைகெட வணங்கியுத் துவாகனம்
புரிந்திடு சூரிய பூசையின் முறைமையை
நலம்பெறக் கற்பவர் நயப்பொடு கேட்பவர்
நிலம்பெறு புகழோடு நீடுவாழ் பவரே.

சூரியபூசை முற்றும்.

ஆக அடி 174.

760. No **532**. அந்தேஷ்டிசமயதீக்ஷை.

ஏடுகள் 82 ; சிதிலம் Lines 4—8 in a Page.

இது, தீக்ஷை பெற்று இறந்த சைவ சமயிகளுக்குச் செய்யவேண்டிய ஸமஸ்காரத்தைப்பற்றிச் சொல்வது இதனை இயற்றியவர் இன்னவரெனத் தெரியவில்லை. அச்சிட்டிருப்ப தாகத் தெரியவில்லை.

Beginning :

ஆசாரியன் சாதகன் புத்திரன் இவர்களுக்கு அத்துவ சுத்தியுடனே அந்தியேஷ்டை பண்ணவேண்டும். சமைய தீக்ஷை உடையவனுக்கு அத்துவ சுத்தி அன்றியிலே பண்ணப்படும். சமைசதீக்ஷை யுடையவனும் நிருவாண தீக்ஷையிலே சிரத்தையுடையவனுய்க் குரு சேர்வை விடாமல் பண்ணி யிருப்பாயிருக்கிற சீழன் நிருவாண தீக்ஷை அன்றியிலே மிருகனுனுகிலும் அத்துவ சுத்தியுடனே அந்தியேஷ்டை பண்ணப்படும். பின்பு மிருதனுயிருக்கிற சில யோகியை மிருககோமய மல காஷ்டங்களினுலே திரி காவனங்களினுலே தானம் பண்ணு வித்து சவ்வியமான அலங்காரங்களினுலே அலங்கரித்து உத்தூளனம் பண்ணி பதாங்குட்டங்களையும்

அத்தாங் குட்டங்களையும் நூலாலே ஆலல் தற்பத்தாலே ஆதல் கூட்டிக்கூட்டி கோமயத்தினாலே சுத்தமாகப்பட்ட தலத்திலே தெற்ப சயனத்திலே கிடத்தி பின்பு சுறுண சுவம் பண்ணும்படி தீக்ஷிதனாயிருப்பானுக்கு பிராணன் போகிற அளவிலே அவனுக்கும் தனக்கும் பஸ்மஸ்நானம் பண்ணி சகளிகரித்து நயினாரை எழுந்தருளப்பண்ணி அவனைக்கொண்டு அஷ்ட புஷ்பம்சாத்திவித்து எழுந்தருளப் பண்ணினபின்...... மாதல் சங்கதா மந்திரமாதல் ஸ்ரீ பஞ்சாக்ஷரமாதல் உபதேசிப்பது கோதானம் பண்ணு .......பொனால் திலதயில மிருக்காமியமாதல் அரித்திரா கெந்தங்களால் ஸ்நானம் பண்ணுவித்து.. முற்பட்ட சாதியை விசாரியாமல் பஸ்மோத்தூளிதனம் பண்ணி உத்திராக்ஷ மாலை கெந்த புஷ்பாபரணங்கள் வஸ்திரங்களால் அலங்கரித்து சுத்தமான இடத்திலே கோமயத்தாலே மெழுகிக் காவணமிட்டு சுந்தர...ந்திலே சவத்தை தெக்ஷிண சிரசாகக்கிடத்தி.

End :

சாந்தியனாய் சமய திருட்டி மானாய்க் கொண்டு தெந்தங்கவொன்றோடொன்று தட்டாமல் வெளியிலே வைக்கப்பட்ட நாவையுமுடையனுமாய்க் கொண்டு ருத்திர பதத்துக்கு சுத்தனை சிவனை வித்தியா தத்துவெஸ்த ருத்திர நீலகண்டம் திரிலோசனம் வியாக்கியா முத்திரா நலஞ்ஞானம் சூல அஸ்திரம் சதுர்புசம் சர்வாலங்கார சங்யுத்தம் நாபி யெக்ஞோபவிதனம் இப்படியே நன்றாகத் தியானம் பண்ணி பூரக கும்பகம் செய்து மூலமந்திரத்தை உச்சரித்து சுத்தப்படிகமணி தீபனையிருக்கிறதாக கத்தாவைத் தியானம் பண்ணி தன் சுழுமுனை நாடியிலே அவனைக்கொண்டு சென்று பூரணாகுதி சகிதமாக அந்தச் சிவனிடத்திலே ரேசகத்திலே யோகிப்பான்.

சமய அந்த ரிட்டை முற்றும்.

Colophon :

இது எழுதினமைக்கு

கீலக ஸு மாசிமீ 2௳ தேவராசன் எழுத்து

குறிப்பு :

இத்துடன் பாஷாண ஸ்தாபனமும் சமயதீக்ஷையும் எழுதிய ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் சமய தீக்ஷை அபூர்த்தியாயிருப்பதோடு சிதிலமாகவுமிருக்கிறது.

## 761. No. 537 சிவபூசை யந்தாதி.

ஏடுகள் 42 ; அபூர்த்தி Lines 5 in a Page.

இது, சிவபூசை செய்யும் முறையைக் கூறும் நூலாகும். 127 செய்யுட்களை யுடையது. இதில் ஆரம்ப முதல் 54 செய்யுட்கள் இல்லை. இடையிடையே சிதைந்திருக்கிறது. ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

பாதத்தின் பெரு விரல் கண் முதலாதார
    பரியந்த மிரண்டு ருவாயதலரி...... ரூருருவா
யோதுற்ற சிரமளவு முளங்கள நாப்புருநள்
    ளுச்சி யிவை களினிடைபிங் கலையொடியை ...ந்தாங்
கோதற்ற தோமுகமுற் றலராத கமலங்
    கூடினதா யுட்டுளையாஞ் சுழுமுனையை நினைந்து
மீதுற்ற வமிர்ததனுள் புறம் பெருக்கும் பரம
    வியோமவுருச் சத்திதனை யுள்ளே பாவித்தே. (55)

தருமூலத் தாலெண்ணெய் மாக்காப்பு நெல்லி
    மஞ்சள் பஞ்ச கெவ்வியம் பாறயிர் நெய்மதுக்குளஞ்சேர்

திகழுபஞ்சா வமிர்தம்பா றயிர்நெ யிளவெந்நீர்
தேண்கருப்பஞ் சாறுகனிச் சாறிள நீராட்டி

..................................................................

வகைதோறு மட்டபுட்ப மணிந்துப்தா கையினு
லகலாத சுவாகாந்த மூலத்தா லேங்கா
லாட்டியபின் சங்கிதையா லாட்டுக மஞ்சனமே. (76)

End :

என்றுமய சிக்கும் பலனுண்டின்ன முதல் சண்டாந்த
மெண்பத்தொன்பது விருத்த மியம்ந லெழுதில் லெழுத்
தொன்றினுக்கா யிரகற்பஞ் சிவலோகம் பெறலா
முரைத்தபடி யனுட்டிக்கிற் சிவஞான முதிக்குங்
கன்றுபிணி நெருப்பவியுங் கலிக்கோடை தீருங்
கல்வி கவிப் பயிர்விளையுங் கான்முளை யுண்டாகுங்
நின்றுணருங் சைவர்சிவ பூசையந்தா திபினை
நித்தியபா ராயணஞ்செய் நியமநீர......ண்டே (127)

சிவபூசை யந்தாதி முற்றும். திருச்சிற்றம்பலம்.

---

## அனுஷ்டான விதி

762. No. (4) (நித்திய கன்ம அகவல்)

ஏடுகள் 125 ; Lines 7 in a Page.

இது, சைவர்கள் தினந்தோறும் செய்தற்குரிய கன்மங்கள் இன்னவை என அகவற்பாவால் கூறுதலின் நித்திய கன்ம அகவல் என்று பெயர் பெற்றது. இயற்றியவர் பெயர் முதலியவை தெரியவில்லை.

Beginning :

நல்ல சவுசமுதல் நான மிருங்கிரிகை
சொல்ல வெனதுளத்திற் றேன்றியே—நெல்லைப்

புரிபுரக்கும் வேழமுகப் பொல்லாத பிள்ளை
யரிபுரத்தான் நல்கும் பயன்.
திருத்தகு சிவாகமஞ் செப்பிய படியே
யுருத்தனைச் சுத்தி யுறப்புரி வோர்க
ளாதவ னெழுமு னெந்துநா ழிகையெனப்
போதமோ டெழுந்து பொழிந்திய வுடலம்
விசுத்த மாயினு மசுத்த மாயினு
மியன்ற சவுச மியற்றிய பின்னர்
பயன்றரு குரவர் பகர்ந்த படியே
தலைமைசேர் துவாத சாந்தத் தாதல்
கலைபயி லிதைய கமலத் தாதல்
சிவனை நினைந்து சேவிக்க மானதந்
தவலறு சமாதி சாதித் தறியா
ராண்ட சதாசிவ ராதியர் தம்மிற்
வேண்டிய தேவை விரும்பி நினைந்து

End :

தங்கிய விந்துத் தானத் தமுதை
யங்கமெங்கு மபிடே கித்துச்
சங்கிதா மந்திரந் தனைச்செபித் தொருகாற்
பொங்கர வணிந்தோன் புகன்றவா கமத்தி
னியம்பிய நியம மியற்றினர்
நயம்பெறு சிதபத நண்ணிவாழ் பவரே.

763. *(b)* நியமவகவல்.

Lines 7—9 in a Page.

இது, 389-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*a*) போன்றது. இந்தப் பிரதியில் இவ்வகவல் முழுவதுமிருக்கிறது.

## 764 (*c*) அந்தர்யாகம்.

Lines 9 in a Page.

இது, அந்தர்முகமாகச் சிவபூஜைசெய்யும் முறையைக் கூறும் வசன நூல். செய்தவர் பெயர் முதலியவை தெரியவில்லை.

Beginning :

ஆசனமூர்த்தி மூலத்தால் பத்திரம் கிள்ளி அர்ச்சித்து மூன்று பத்திரம் கிள்ளிவைச்சு இருதயகமலம் கற்பிச்சு அதில் சிங்காசனம் கற்பிச்சு பூசை உபகரணம் சகலமும் உண்டாக்கி விசேஷ அர்க்கியம் தாபிச்சு பூசை உபகரணத்தையும் தன்னையும் புரோட்சித்து துவாதசாந்தத்தில் இருக்கின்ற சதாசிவ சுவாமியை இருதயகமலத்தில் கொண்டு வந்து வைச்சு அர்க்கியம் கொடுத்து ஒரு புட்பம் சாத்தி அபிஷேகம் வேண்டியது பண்ணி சந்தனக்குழம்பு அபிஷேகம்.

End .

விந்துதானத்தில் அமூர்தத்தினுலே சுறுகஞ் சுரூபத்தை நிறைத்துப் பூரண ஆகுதி பண்ணி இருதயத்திலே யோசிச்சு பின்பு விந்துதானத்திலிருக்கிற சுவாமியை வெளியில் பூசை பண்ணுறேன் என்று அணிக்கை பண்ணிக்கொள்ள.

## 765. (*d*) சிவபூஜை அங்கம்.

Lines 6—10 in a Page.

இது, 387-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*b*) போன்றது.

## 766. (e) போஜனவிதி

Lines 6—8 in a Page.

இது, போஜனம் செய்யும் கிரமம் கூறும் வசன நூல்.

Beginning :

கைகால் சுத்தி பண்ணி வாய் கொப்பளித்து சுத்தாசமனம் பண்ணிக்கொண்டு போஜனத்தானம் சுத்தி பண்ணி இலைபோட்டு அன்னமுதல் பரிமாறினபிறகு அட்டசங்கற்காரம் பண்ணி அத்திராய நம என்று புரோட்சித்து ஈசனுய நம என்று நீர் சுத்தி வலதுபுறத்தில் விட்டு இடது பெருவிரல் கொளவிரல் நடுவிரலால் இலையை இடதுபுறத்தில் பிடித்துக் கொண்டு வலதுகையில் சிறிது அன்னம் எடுத்து வலதுபுறத்தில் நாகாய நம கூர்மாய நம கிருகராய நம தேவ தத்தாய நம தனஞ்செயாய நம என்று அஞ்சிடத்தில் பெலிவிட்டு பெலியின் பேரிலே நீர் ஒழுக்கி தற்புருஷாய நம என்று நீர்க் குடித்து அணிவிரல் நடுவிரல் பெருவிரல் மூன்று விரலினாலே யும் சிறிது அன்னம் அஞ்சுதரம் உள்ளே கொண்டு இடதுகை சுத்திபண்ணி போசனம் பண்ணி எழுந்திருக்கிறபோது தற்புருஷாய நம என்று நீர்குடித்து சுத்திபண்ணி சுத்தாசமனம் பண்ணி விபூதி தரித்து கர நியாசம் பண்ணிக்கொண்டு பரிக முத்திரையால் நாபிமுகமும் தொட்டபின்பு சிவனைத் தியானித்து பஞ்சாட்சரம் இருபத்தெட்டுதரஞ் செபிக்க.

## 767. (f) இரட்சா சக்கரவிதி.

Lines 6—10 in a Page.

Beginning :

சட்கோண சக்கரமெழுதி நடுவே ஸௌம் என்கிற பீசாட்சரமெழுதி அதை வளையப் பிரணவமெழுதி கோண

அறை ஆறிலும் சடாட்சரமெழுதி பீசாட்சரத்தை ஸ்ரீம் க்லீம், ஹ்ரீம், ஐம், ஸௌம் நம என்கிறதை இடைசந்து ஆறிலும் எழுதி அதின்மேல் சக்கரத்தைச் சுற்றிப் பிரணவந்தினுலே வளைத்து.

End :

சருவ சித்திஞ்சுததுவா பிரசுரதனதனுயுதபுத்திரபவுத் திராதி யுத்த சிரமனுவசான்னியே தேவதா மூர்த்திவரமே கனகருசிதயரமமே தேவதிவ்வியாங்கநாபிவிவித்தது திருவ சோபி தோஷிய வெகுகாலம் சண்முகச் சியப் யிரசாதார சிவரகசியம்.

768. (*g*) பஞ்சாக்கரவுண்மை.

Lines 7—9 in a Page.

இது, நம சிவய என்னும் ஐந்து எழுத்துக்களின் தூல சூக்கும உண்மையைக் கூறும் நூல். 56 விருத்தங்களையுடையது. செய்யுட் கருத்துரைக்கும் கொளுச் சூத்திரமும் எழுதப் பட்டுள்ளது.

Beginning :

அந்தநடுவடியகன்ற பரஞ்சோதி யருளுருவமாகி யென்போல்
வந்தருளி யெழுபிறவி வித்தாகு மலவுலக மயக்க வாதைப்
பந்தமறுத் தென்னையுமாட் கொண்டபர தேசிகன் பங்கயப் பொற்பாதஞ்
சிந்தையினு முறவணங்கிச் சிரத்தினுமன்புனடகலா திருத்துவாமே. (1)

தெள்ளுமுப நிடமுமருந் தந்திரமு மற்றுமுள சிறப்பு நூலு
முள்ளரிய வஞ்செழுத்துண்மையினை யருந்தமிழாலொலி நீரோடை

வள்ளைமலர் றடம்புடைசூழ் வலஞ்சுழியிலிமையவர்கள் வணங்கியேத்தும்
வெள்ளைமத கரிவதனத் தொருவனிரு பதந்தொழுது விளம்புவாமே. (2)

எப்பொருளுந் தானாகி யப்பாலா யுணர்வரிய விறைவனும
மொப்பரிய வஞ்செழுத்துந் தூலசூக்குமமான வுண்மை யானுஞ்
செப்புவனென் றிசைந்த துணிவெழுகடலு முலகறியச் செறிந்துபொங்கு
மப்புனலை யொரு சுணங்கன் பருகியடக்கிட நினையு மாசையாமே (3)

* * * * *

பலகலை தெரிந்துபல தத்துவங்களறிந்திடினும் பரனார் நின்ற
நிலையறியா வகைநிறுத்தி யிரும்பொய்யை மெய்யாக்கி நினைப்பித்தோனை
யலகிலிரு வினைப்பயனு மிதமகித முயிர்க்கினிதா யருத்திமூல
மலமகலு மளவுமறைத்திடுவது யாநகாரமென மதித்திடாயே.

இது, திண்ணிய மும்மலச் செறிவு நீங்களவு
நண்ணிடுந் திரோத நகார மென்றுரைத்தல்.

End :

சிந்தனைக் கரியாய் போற்றி சிற்பரானந்தா போற்றி
இந்தனத் தெரிபோ லெங்கு மிடையற நிறைந்தாய் போற்றி
மந்திரத் தனுவு மாயாத் தனுவென மயங்குங் காயப்
பந்தம தறுத்தாட்கொண்ட பரமதேசிகனே போற்றி.

பஞ்சாக்கர வுண்மை முற்றும்.

769. (*h*) தத்துவத்திரட்டு.

Lines 7—9 in a Page.

இது, பலரும் தத்துவ விஷயமாகச் சொல்வனவற்றைத் திரட்டி யெழுதிய வசன நூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

மாமாயை யென்பாளொரு சத்தி முன்செய்த கன்ம வசத்துக் கீடாகப் பூவினது மணத்தைக் காற்றறிவிக்குமாப் போல அனுபோகத் துக்கான கருத்தை ஆத்மாவானது அவத்தைக் காலத்திலே யுண்டாக்கித் தூலத்திலுஞ் சூக்குமத்தை சரீரத் திலே யாக்கிய வினைப்பயன்களை யனுபவிப்பதின் பொருட்டுச் சொர்க்கந்தி லின்பத்தையும் நிரயத்தில் துன்பத்தையும் அனு பவிக்சப்பண்ணி வினைச் சேடத்தினாலே அந்த ஆத்மாவாகிய வணுவை.........பது கொண்ட நல்வினைப் பலத்தினால் எண் பத்து நான்கு நூறாயிரமான பிறப்பினுள் மானிடப்பிறப்பின் விடவேண்டிய பயனைப் பரவை வெண்டிரைப்பாட்டினாலறிக.

End :

நின்மலதுரியாதீதமானது பரத்துடனே தன்னறிவைச் சுவரப்பண்ணிச் சமுகம் பரத்தினது போதமாக்கித் தன்னை யிழந்து தானவனாய் வாக்குமனாதீதமாக அளபடாமல் தானாகத் தெளிவித்துப் பஞ்ச கிருத்தியத்துக்குந் தானாக நிற்பது— ' வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது–வேண்டாமை வேண்டவரும். ,

770. (*i*) அறிவானந்த சித்தியார்.

Lines 8—10 in a Page.

இது, சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கோவையிலுள்ள

நூல்களுள் ஒன்று. வேதாந்த விஷயத்தைக் கூறுவது. கலித்துறையாலமைந்துள்ளது. இதனைச்செய்தவர் சீகாழி சிற்றம்பல நாடிகள்.

Beginning :

வேகமாநெறி சேரும் வினைகளுந்
தாக போக விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியி னுல்வருந்துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுவாம்.

நிரவய நின்மல நிர்க்குண நித்த னிரஞ்சனன்மெய்
பரவிய நித்தொந்தன் பற்றிலி சுத்தன் பரமனந்தம்
விரவிய பூரண னேகன்பேரின்ப வியாபகனென்
கரவுளங் கோயில்கொண்டானெழில் போற்றுவன்
காதலித்தே.

ஈருய் முதலொன் றிருவடி வாகியிம் மூவுருவாய்
மாருத நால்வகைத் தோற்றமைம் பூதமு மற்றுஞ்சுவை
யாருகி யேழிசை யாகித் திசையெட்டு மாகியன்றி
வேருகி நின்ற வகோசரம் போற்றுவன் மேவிநின்றே.

நூற்பெயர்

செறியு(வுறு) முத்தியிற் சேரு மமுதநற் றேவருண்டே
மறியும் பதமல்ல தில்லைகண் டீர்மன்னு மெவ்வுயிர்க்கு
மறிவெனும் வேலை யமுதுண வேயழி யாதசுகம்
பெறநல்கு நூற்கறி வானந்த சித்தி யெனப்பெயரே.

End :

பன்னிய தத்துவந் தொண்ணூற்ருே டாறு பகை செய்
தெனக்
கென்னிது யானென் றிசைந்து கெடுத்த விருளறுமே

மன்னிய பார்வைதன் ளுலே யழிந்த வனமெனக்கே
யின்னதெவ் வாறென் றறியவொண் ணுதிவ் விறையியல்பே.
281

---

## 771. (*j*) திரிகாலத் திரங்கல்.

Lines 8—9 in a Page.

இதுவும் சிற்றம்பல நாடிகள் சாஸ்திரங்களுள் ஒன்று. மூன்று காலத்தும் பயனின்றிக் கழிந்தவற்றிற்கு வருந்துதல். இதனைச் செய்தவர் சீகாழி சிற்றம்பல நாடிகள்.

செல்காலத்திரங்கல்

Beginning :

சீரார் திருநீறுந் தீதிலருள் வேடமுமன்
சேராம லேயோ தெளியா திருந்தனமே. (1)

வந்துபிறந் தந்த மானிடராய் மண்மிசையி
லெந்தைபணி செய்யவதிற் கெண்ணு திருந்தனமே. (2)

திருக்கோயில் சூழ்த்து சிவனுருவங் கண்டு
மருட்கோல மாற்றுமல் மாண்டு திரிந்தனமே. (3)

மஞ்சனமு மாமலரு மாருத் திருவிளக்குஞ்
செஞ்சடையோர்க் கென்றுஞ் செய்யா திருந்தனமே. (4)

End :

நிலையாப் பொருளை நிறுத்துங் குருவைத்
[illegible]ல் வணங்காமல் தாழ்வுசெய்து விட்டனமே. (53)

[illegible]காலத்திரங்கல் முற்றும்.

கீட்செய் தவத்தால் கிளியீடு நேர்பட்டு
மீட்சி தரநமக்கு மெய்கண்டார் வந்தனரே. (3)

சிவமொழிந் தற்றமை பாரீர் சேர்ந்து கலந்தமை பாரீர்
நவமொழிந்தற்றமை பாரீர் நாமவரான்மை பாரீர். (44)

நிகழ் காலத்திரங்கல் முற்றும்.

வருங்காலத்திரங்கல்

Beginning :

தோன்றி மறையுமிந்தத் தொல்லுலகு தோன்ருமலான்ற வறிவுநா மாய்விடுவ தெக்காலம்
ஆரணன்மால் காணு தறிவா யகண்டமுமாம்
பூரணத்துக் குள்ளே புகுவதினி யெக்காலம். 2

End :

ஒத்தொவ்வா விந்த வுலகை மறந்துணவின்
னித்தமாய் நின்றுவிட நின்மலனே தந்தருளே. 49

சத்தியஞான மனந்தானந் தானுகி
நித்தமாய் நின்றுவிட நின்மலனே தந்தருளே. 50

வருங்காலத்திரங்கல் முற்றும்.

772. (*k*) பட்டினத்துப்பிள்ளை

நெஞ்சொடு மகிழ்தல்.

Lines 6—8 in a Page.

இது, தாம் பெற்ற இன்பத்தை எடுத்துரைத்து நெஞ்சொடு மகிழ்தல், இதனை இயற்றியவர் பட்டிணத்துப்பிள்ளையார்.

Beginning:

அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தே

நிலையாகி யுருவிறந்து நின்றனையே நெஞ்சமே. 1

பாராமல் பதையாமல் பருகாமல் யாதொன்று
மோராமல் வுணர்வுட னு மொன்றினையே நெஞ்சமே. 2

களவிறந்து புலையிறந்து காண்பளவுங் காட்சியும்போய்
அளவிறந்து நின்றதிலே யாழ்ந்தனையே நெஞ்சமே 3

End :

வாழ்ந்தனை வாழ்ந்தனை நெஞ்சே மாதலம் பெற்றனை நெஞ்சே
சூழ்ந்தனை சூழ்த்தனை நெஞ்சே சுட்டொன்றிலாத விடத்தே. 70

## 773. No. 719 சிவபூஜாபத்ததி.

ஏடுகள் 59 ; Lines 7—10 in a Page.

இதில் சிவபூஜைக்கிரமங்களும் அவற்றிற்கு அங்கமாயுள்ள அபிஷேகம் அர்ச்சனை தியான முதலிய பிறவும் கூறப்பட்டுள்ளன. இதில் முதல் ஏடு இல்லாததனால் நூலாசிரியர் பெயர் முதலிய காணமுடியவில்லை. சிறந்த நூலாகக் காணப்படுகின்றது. அச்சிடப்படவில்லை.

Beginning :

ரதமாக ரேசக வாயுவினாலே யிருதையத்தால் பூரித்துக் கந்தபுட்பம் அறுகு அட்சதை போட்டு ஓம் என்று ஏழு பிரகாரம் அர்ச்சித்து ஏழுரு அபிமந்த்ரித்துத் தாளத்திரயம் திக்கு பெதனம் அவகுண்டனம் தேனுமுத்திரை கொடுத்து அந்தச் செலத்தினாலே புரோட்சித்துப் பின்னும் நடுவே கற்பகிரகமாகவும் அர்த்தமண்டபமும் கிழக்குப் பார்த்த வாசல்களாகவும் பாவித்து அந்த வாசலை சம்புரோட்சித்து அந்த வாசல் மேற்படியிலே வடபுறத்திலே

பச்சைநிறமும் தொப்பை வயிறு நாலு அத்தமும் வலது கை யிலே யக்ஷமாலையும் கந்தமும் இடது கையிலே துரெட்டியும் மோதகமும் தரித்திருக்கு மவராகத் தியானம் பண்ணி ஓம் ஹாம் கணபதயே நம என்று (பூசித்து) புறத்திலே வெள்ளை நிற(மும் வெள்ளை வஸ் திரமும் இரண்டு கையிலும்........... மாக அக்ஷமாலையும் புஸ்தகமும் தரித்தவளாகத் தியானம் பண்ணி ஓம் ஹாம் ஸரஸ்வதியே நம என்று பூசித்து இவர் களிருவருக்கும் நடுவே பொன்னிறமும் வலது கையிலே தா மரைம்பூவும் இடது கையிலே ஸ்ரீபலமும் இரண்டு யானை இரண்டுபுரத்திலும் நின்று குடத்தில் அமிர்தத்தினாலே பொழி யிற தாரையினாலே நனைகிறவளாக தியானித்து ஓம் ஹாம் மகாலக்ஷ்ம்யை நம என்று பூர்த்தி .........

தாமத ராசதசாத்வித குணரூபமாகிய கறுப்புச் சிவப்பு வெண்மையாகிய மண்டலத்துக்கு மேலே இருக்கிற நாபித் தானத்துக்கிழங்குக்கு மேலே எட்டாங்குல மாகிய நாளத்து டனே கூடிய எட்டிதழ்வெண்டாமரையாகிய இருதய கமலத் தில் ஜோதிமயமாகிய ஞானலிங்கத்திலே துவாத சாந்தத் திலும் சிவனையாவாகனம் பண்ணி க்ஷமையாகிற பாத்தியாசம னார்க்கியத்திலும் விந்துத் தானத்தில் அமுகமாகிய திருமஞ் சனத்தினாலும் வயிராக்கியமாகிய சந்தனத்தினாலும் சித்தசை தன்னியமாகிய ஆபரணத்தினாலும் பாவங்களாகிற புஷ்பங் களாலும் அயிங்கிஸை, பிரமசரியம், பொறை, தயை, ஞானம் தவசு சத்தியம் குருசேவை இந்த எட்டுப்புட்பத்தினாலும் மன தாகிய பாத்திரத்தில் பிராணவாயுவினாலே புகைகாட்ட ஆங் காரமாகிய தூபத்தினாலும் அபிமானமாகிற தீபத்தினாலும் ஞானமிர் தமாகிற நைவேத்தியத்தியத்தினாலும் சுழுமுனா நாடிநாதமாகிய மந்திர செப தோத்திரத்தினாலும் பூசிக்கவும்.

End :

அஷ்ட புஷ்பம் சாத்தும்படி வில்வத்தைக் கண்டத்தில் சிவாதனத்தால் சாத்தி திருமுகத்தில் தாமரைப் பூவைச் சிவ மூர்த்தியினுல் சாத்தி திருமுடியில் எருக்கம்பூ மூலத்தால் சாத்தி மார்பிலே நந்தியாவட்டத்தை இருதயத்தால் சாத்தி உந்தியிலே பாதிரியைச் சிரசினுல் சாத்தி அரையிலே அலரிப் பூவைச் சிகையினுற் சாத்தி முழந்தாளிலே செண்பகப் பூவைக் கவசத்தால் சாத்தி பாதத்தில் நீலத்தை அத்திரத்தால் சாத்திடவும்.

பெருவே தனையுறுங் காயத்தை விட்டுநின் பின்னுடர
வருவே னெனவு மறுத்தனை யேஅந்த வாக்குக்கஞ்சி
திருவே கமலையில் ஞானப்பிரகாச சிதம்பர சற்
க்குருவேயுனைப்பிரிந் திந்நா ளிருக்கவுங் கூடியதே.

தானே வரக்கண்டுங் கைப்பாணி வாக்கியுந் தாரணியி
லூனே வளர்த்துத் திரிவதல்லா லுண்மையாஞ் சிவத்தில்
யானே யிறக்க இருப்பதெந் நாட்சொ லெனதுளத்திற்
றேனே கமலையில் ஞானப்பிரகாச சிதம்பரனே.

குறிப்பு :

இதில் சூரிய பூஜை மந்திரம் எழுதிய ஏடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

774. No. 171. *(a)* சிவப்பிரகாசக் கட்டளை.
ஏடுகள் 33 ; அபூர்த்தி ; Lines 4—5 in a Page.

இது, சைவ சித்தாந்த சாத்திரங்களைப் படிப்பவர்கள் முதலில் அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மதத்துவம் வித்தியா தத்துவம் சிவதத்துவம் என்னும் தத்துவ விவரங்களையும் பிறவற்றையும் கூறும் வசன நூல். ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை. இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

பூதங்களாவன :— பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆக 5.

ஞான இந்திரியங்களாவன :— சோத்திரம், தொக்கு சட்சு, சிங்குவை, கிராணம் ஆக 5.

தன்மாத்திரைகளாவன :— சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் ஆக 5.

கன்மேந்திரியங்களாவன :— வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆக 5

அந்தக்கரணங்களாவன :— மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் ஆக 4.

ஆக தத்துவம் 24 இதற்கு ஆத்தும தத்துவமென்றும் அசுத்த தத்துவ மென்றும் போக்கிய காண்ட மென்றும் பேர்.

End :

இனிச் சிவதரிசனம் பண்ணும்படி :— இவன் கன்மம் போசிக்குமிடத்து இவனுக்கு மூன்று வகையாய் நின்று பார்ப்பன். அதெப்படியெனின், அவன் அவனது வென்னும் முன்னிலையாக நின்று பகரிப்பான். இப்படி யுபகரிக்கு மிடத்துத் தோன்றுகிற மூன்று வகையு மொழித்து அவை யிடமாக நின்று சேட்டிப்பித்துத் தனக் கந்த கன்மத்தைப் பொசிப்பிக்கு மிடத்து தன்னிடத்திலே மறைத்து .....

775. No. **530.** சித்தாந்த தத்துவக் கட்டளை.

ஏடுகள் 47 ; பூர்த்தி சிதிமை ; Lines 5—8 in a Page.

**இது சைவ சித்தாந்த சாஸ்திரப் பயிற்சிக்கு அவசியமான தத்துவங்கட்கு விவரம் கூறுவது.**

Beginning :

பூதங்களானவன பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இவையிற்றுக்கு மகா பூதமென்று ...... சீவிக்கிறஞான இந்திரியங்களாவன சோத்திரம் துவக்கு சட்சு, சிங் குவை, கிராணம் இவையிற்றுக்கு ஞான இந்திரியங்களென்றும் பேராக வேண்டியது. தனது தனது விடயங்களை ...... ... .......... யாலே இவையிற்றின் விஷயங்களாவன சத்தபரிசு ரூப, ரச, கந்தம்......... ன்றும் பேர் இவை யிற்றுக்குத் தன் மாத்திரை யென்று பேர்.

End :

...................யருளுடனே யல்வோ பொருந்திக் கூடிக் கலக்கிறே மென்றறியாமலும் பண்ணு ..... ...............க்கிற தென்றறிக ஆணவ மலத்தை நீக்கி ஆத்ம சுரூபத்தைக் கூடுகிறது. மல நீங்கின..... ...... ....... ராகமாயிருக்கிறது அருளல்லோ வென்னு மரியாதிக்கு அருள் பிரகாசித்த போது ........................ தென்றறிக.

கனக சபை எழுதின.

திருவாக்குஞ் செய் கருமங் கைகூடப்புஞ் செஞ்சொற்
பெருவாங்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கு
மாதலால் வாஞேரு மானை முகத்தானைக்
காதலார் கூப்புவர்தங் ஞ்கை.

---

## XVIII. சைவ சமய நூல்கள்.

### ii. யோகசாஸ்திரம்.

### 776. No. 591 *(a)* சரநூல்.

ஏடுகள் 59 ; பூர்த்தி ; Lines 7—9 in a Page.

இது, சிவ பெருமான் உமாதேவியர்க்கு உரைத்தருளியது

இதில் இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகள் நடக்கும் விதமும் அவற்றைக் கிரமப்படி வசப்படுத்தி யோகமனுட்டிக்கும் வழியும், இன்னின்ன நாடி இன்னின்ன தினத்தில் நடக்க வேண்டும் மாறி நடந்தால் நோயுண்டாகும் என்பதும் இன்னின்ன நாடி நடக்கும் பொழுது இன்னின்ன காரியம் செய்யலாமென்பதும், கூறப்பட்டுள்ளன. இயற்றியவர் பெயர் விளங்கவில்லை. முதலேட்டில் பாதியில்லை. 2-முதல் 5-ம் ஏடுவரையில் நடு மத்தியில் எலி கடித்துச் சிதைத்திருக்கிறது.

Beginning:

சந்திரபான..........................................
..........................................................
..........................................................
சா நூல் தண்ணைப்பரித்து ..............சொல்வாம். (1)

* * * * *

பார்க்கிலிடை யிடமதுவே திங்க ளாகும்
பகலவனும் பிங்கலையும் வலம தாக்கும்
ஏர்க்க வுரைத்திடுஞ் சுழுனை நடுவியங்கி
யிடையான சந்திரனே யமுத மாகுக்
தீர்க்கமுடன் பொருள் வினைக்குங் கரியவண்ணன்
திரராசி யாமவனே செய்யு காலை
வேற்றடங்கள் மடமாதே விரும்பிக் கேளாய்
விதமாக விபையெல்லாம் விளங்கச் சொல்வேர்ம். (6)

* * * * *

தேறுநீ யிதுவென்று செவ்விதாகச்
செங்கதிரோன் றன்னுளில் திங்களோடின்
மாறிவரு கதிரவனுஞ் சோம னுளின்
மறித்தோடின் வருங்கிழமை யேழு மாதின்

கூறுபட வுயிருடல்விட் டேகுமென்க
குணமாக விருகிழமை கோடா தோடின்
சீறிவரு காலனையுஞ் செயித்து மற்ற
சித்த யோகத்தினிலை சித்தியாமே. (29)

End :

புன் பிறப்பிற் பிறப்பினுஞ் சற்குரு முகத்தாற்
பொருந்தியந்தச் சர நூலைப் புகலக் கேட்டு
நன் குணர்த்து நெறிநடந்தோர் யாவ ரெனும்
நாமவரென் றிரண்டில்லை நல்லாய் சொல்லின்
மின் டிறக்குஞ் செந்தழலை யடுத்த தெல்லா
மிகுதழலின் வடிவான விதமே போலத்
தன்பிறப்பி லினிப்பிறவா தவமே சாவார்
சடைமேனு மணிந்தருள்சந் திரனைப்பாமே. (51)

சர நூல் சம்பூரணம் குருவே துணை.

---

777. (*b*) உபதேசத் திருமந்திரம்.

Lines 7—8 in a Page.

இதுவும் யோக நூல்களுள் ஒன்று. இதனைச் செய்தவர் திருமூலர். பூர்த்தியாக இருக்கிறது.

Beginning :

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்
குருவென வந்து குணமாய் வணங்கித்
திருநீறு சாத்தித் திருவருள் செப்பி
எருவுட னறுகு மென்கையி னீரா
லுருவுடன் கொண்டா னுடல் பொரு ளாவியே. (1)

நாடி யிடைபிங் கலையுடன் மாறிக்
கூடியே யவ்விற் கொழுந்தாக நின்றிடு

முடே யயன்மாலுருத்திர னீசனு
நீடுஞ் சதாசிவ னின்றெழுத் தஞ்சுமே. (8)

End :

ஆக்குஞ் சுழிதுறந் தானவ மற்றிடும்
வாக்கிலிடைவிடா மாய்கையு மற்றிடும்
நோக்கி லிடைவிடா நுண்கா மியமறும்
தாங்கும் குருவெனச் சாற்றுங் குருவே. (30)

778. (c) நித்தியபரவிபரம்.

Lines 5—8 in a Page.

Beginning :

புதன் கதிரு மண்ணுகுஞ் சனிதண் ணீராம்
பொங்கு திங்களங்கி செவ்வாய் வியாழங் காற்று

முதன்மைபெறு வெள்ளியா காச மிந்த
முறைப்படியே சரமுதித்தல் பூதமைந்தில்

உதியஞ்சு நாழிகைக்கு விவரஞ் சூரிய
னுதிக்கில் நில முதித்திடுமோன் றரைநீ ருக்கு

பதியுமொன்றே கால் நெருப்புக் கொன்று காற்றில்
பகருமுக்கால் வானமரை படருங் காத்தே.

End :

புந்தி மண்ணில் திங்கள் கதிர் மண்ணில் சூரியன்
புகழ் சனிநீர் தனிற்பருதி மதிற்றுனே

முந்துமனல் தனில்விந்து செவ்வாய் வியாழம்
முழங்கு காத்தினிற்பருதி உயர்வெள்ளிக்கு

வந்தவா காசத்திற் சோமனிந்த
வகைப்படியே சரநடந்த மனிதர்க் கெல்லாஞ்

சிந்தைமகிழ்ந் தாயுசுள்ள மட்டும் வாழ்ந்து
சிவபதத்திற் சேர்வரென்று செப்புநூலே.

### 779. (*d*) கந்தரனுபூதி.

Lines 6—10 in a Page.

இது, 389-ம் நம்பர் (*A*) போன்றது. இதில் 51 செய்யுட்கள் இருக்கின்றன. ஆனால் இதிலுள்ள செய்யுட்கும் அச்சுப் பிரதிக்கும் பாடபேதங் காணப்படுவதோடு அச்சுப்பிரதியில் இல்லாத அடியிற்கண்ட செய்யுளும் காணப்படுகிறது. அருணகிரிநாதர் இயற்றியது.

ஒருகா லடியேன் மனமுன் னைநினைந்
துருகா துருகும் படிதந் தருள்வாய்
பெருகா ழியிலுந் துயிலும் பெருமாள்
மருகா முருகா மயில்வா கனனே.

---

### 780. (*e*) உண்மைநெறி விளக்கம்.

Lines 8—0 in a Page

சைவ சித்தாந்த நூல்களில் ஒன்று. இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். இதில் உரையுடன் 6 செய்யுட்களிருக்கின்றன அச்சிடப்பட்டுள்ளது.

---

### 781. (*f*) நெறியுண்மை போதம்.

Lines 9—10 in a Page.

இதுவும் சித்தாந்த உண்மை கூறும் நூல்களில் ஒன்று. 14 செய்யுட்களை உடையது. இயற்றியவர் மாணிக்கவாசகர். இவர் சைவ சமயாசாரியருள் ஒருவராகிய திருவாதவூரடிகளல்லர். அச்சிடப்படவில்லை.

Beginning :

ஆதிவடி மூலபர மேழ்பு லிக்கு
மாதார பீடலிங்க முதல்முக் கண்ணன்

சோதிவடி மேல்விசிறி யாடி நிற்குந்
தோற்ற முள்ள தத்துவந்தொட் டாடுங்கூத்தன்
சோதியிது மேல்செயல்கண் டுருகி யன்பாய்த்
தெளிவெண்மைப் போதகமென் றறிவி னலே
யோதியநூல் விளங்கவான் முகமைந் தாகி
யுணர்த்து மெழுத் தஞ்சதனை யுரைசெய் வாமே. 1.

ஞானவழி புகுவர்பெருந் துறைநன் ஞட்டில்
நற்கமல பாதமிரன் டெழும்பு விக்கு
மானமணி நாவசைய ஓசை யுண்டா
யண்டபிண்டத் தொருவலிவாய்ப் பேசி நிற்கும்
வானவர்நா டுடையவீ ராருன தன்னை
மருவிய மாணிக்க வாசகரிந் நூலைத்
தானவனாய் நின்றபொழு துரைத்தா ரிந்தத்
தமிழறிந்தோர் தனையறிந்து தலைவராவர். 14.

குறிப்பு :

இவைகளை யல்லாமல் திருமந்திரச் செய்யுளும் பட்டினத்தார் பாடலும் வேறு சில விடுபாட்டுக்களும் இருப்பதோடு இரசவாத முறையொன்றும் லிங்ககட்டும் பித்தத்துக்கு மருந்தும் கிரந்தத்தில் எழுதிய சுக்கு கிஷாயவிதியும் இருக்கின்றன. **34 முதல் 47 வரையிலும் உள்ள ஏடுகள் இல்லை. வெற்றேடுகள் 10 இருக்கின்றன.**

iii. விரசைவ சாத்திரம்.

782. No. 583 (*a*) **சிவப்பிரகாச விகாசம்.**

**ஏடுகள் 75 ; அபூர்த்தி.** Lines **7—9** in a Page.

இது, பதி, பசு, பாச இலக்கணத்தைக் கூறுவது. இதனை இயற்றியவர் சிவப்பிரகாசர். இவர் வீரசைவ மாபினராதலால்

இது, சைவசித்தாந்திகள் கூறுவதிலும் வேறுபாடுடையது. இது, 103-ம் பக்கமுதல் எழுதப்பட்டுள்ளது. 105, 107-ம் ஏடுகள் இல்லை. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

எடாக் கரத்தி லெழிலங்கு சமகப்
படாக்க ருத்துறப் பாகரைத் தாள்களாற்
றடாக்க ழற்றித் தலையிடு மற்புதக்
கடாக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்.

பொன்புரை கடுக்கை வேணி புகன்றவா கமக்கு ளத்தைத்
தன்பெயர் விகாச நாமச் சருக்கரை யாய்ச்ச மைத்தான்
குன்றவிற் குழகன் வாழுங் கூவநற் சரிதந் தன்னைத்
தென்றமிழ்க் கவிபு னைந்தான் சிவப்பிர காசன் றானே. (1)

நீர்கொளும் படர்சடை நிலவெ றிப்பமென்
றூர்கொளும் பரன்றிருத் தாளிடை......
சீர்கொளும் சிவாகமந் தெரிந்து கூறுவன்
பார்கொளும் பதிபசு பாசத் தன்மையே. (2)

முடிந்திடினுங் கடந்த திரிசுழறல்போல விஞ்ஞான முதலாற்றம்மை
யடைந்தவினை கெட்டிடினும் வாதனையான் மாயைமய மாகுமென்று
முடம்புசில பகலுறவான் மலமாயை யெனுமிரண்டோ டுற்றுரேனுந்
துடந்துசிலர் சகலரெனப் படுவாரென வாகமநூ றுணிந்து சொல்லும்.

End :

தத்தமன வுறவிளக்குந் தகைமை யாலந்
தத்துவங்க ளவ்வளவு சாற்றற் காக

வெய்த்தமுறை யோசனைக் கியம்பி னின்னூழை
வெங்கதிரி னெழக்கண்டுங் காணு
வத்துகளொண் பரமாணு வஃதெட் டாயி
ஹுமொருவாக் கிரமங்க மஃதெட் டாயின்
வைத்திடுவரிலீகை யென வஃதெட் டாயின்
வளருக மெனு நாம மருவு மன்றே. (132)

ஊகமொரு நான்கவையா மஃதெட் டாயின்
னொருமா ஞங்குல மஃதோரிருபத் தேழே
லாகுமொரு தனுக்கிரக மென்னு நாம
வத்தமது நான்குதனு....... ...........
.........................................
.........................................

---

783. (*b*) திருவாதவூரர்ப் புராணம்.

Lines 8 in a Page.

இது 274-ம் நம்பர் போன்றது. இதில் பெருந்துறைச் சருக்கத்தில் 52-ம் செய்யுள் முதல் முடிய இருக்கிறது. இதில் 57-வது ஏடு முதல் இருப்பதால் அதற்கு முற்பட்ட ஏடுகள் இல்லை.

---

iv. சிற்றம்பலநாடிகள் சாத்திரம்.

784. No. **716**. (*a*) துகளறு போதம்.

ஏடுகள் 16; பூர்த்தி; Lines 8—11 in a Page.

இது, 541-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*p*) போன்றது. சைவ சித்தாந்தம் கூறுவது. இதனை இயற்றியவர் சீகாழி சிற்றம்பல நாடிகள்.

785. (b) சிவப்பேறு.

Lines 8—10 in a Page.

இது, முத்திநிலை இன்னதென வினாவிடையா லுணர்த்து நூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

அத்தா கருணைமுகி லானந்த மால்தேடுஞ்
சித்தா சிவப்பேறு செப்பெனக்கு—முத்தாகேள்
தப்பாமல் முத்தியிலே தாக்காமல் நின்றநிலை
யப்பா சிவப்பே றது.

நூலைமெய் யென்று நுழையாதே மூலத்திற்
காலைமெய் யென்று கருதாதே—பாலனே
தற்பர மானந்தச் சத்தியத்திற் சுட்டற்று
நிற்பதுவே முத்தி நிலை.

End .

போக்குவர வற்றபரி பூரணத்தை நின்றாலே
தாக்க விழுந்தபிழை சற்றேறுதான்—வாக்குமனந்
தன்னா லறியாத தாட்பா லிரண்டறவே
என்னாளை சும்மா விரு.

குறிப்பு :

இத்துடன் சைவானுஷ்டான மந்திரத்துட் சிலவும் திருவாசகத்துட் சில செய்யுட்களும் எழுதப்பட்டுள்ளன.

V. பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.

786. No. 701. (a) பட்டினத்தார் வெண்பா.

ஏடுகள் 18 ; அபூர்த்தி Lines 8—9 in a Page.

இது ஞானவிஷயத்தை நெஞ்சறிவுறுத்துவது. அந்தாதியாக அமைந்துள்ள நூறு வெண்பாக்களை உடையது.

இதில் 83 வெண்பாக்களே இருக்கின்றன. இதன் தலைப்பில் எழுதப்பட்டிருப்பதைக் கொண்டு இதனைச் செய்தவர் பட்டினத்துப்பிள்ளை என்று தெரிகிறது. பிழைகள் அதிகமாக இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning :

நண்பான நெஞ்சுக்கோ ஞானத்தால் நல்லபுத்தி
வெண்பாவாய் தூறு விளம்பக்கேள்—அன்பர்க்
ககன மறுபத முருகக..................டதிர்
ககன வருமுருகன் காப்பு.

* * * * *

பாக்கியத்தைக் கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடி வந்தாற் சலியாதே—நோக்கும்
ஒருவர் திருவிளையாட்டென் றுணர்ந்து நேஞ்சே
கருவறவே நின்று கருது. (16)

நிலையறிந்து நில்லாமல் நீபாவி நெஞ்சே
அலைமதிபோ லேதினமு மானேயே—கலையறிந்த
மாரனையுங் கூற்றனையு மாபுரத்தை யும்மெரித்த
வீரனையே தேடி விரும்பு. (26)

கனியருந்த மாட்டாமல் காயருந்தினுய் மனமே
கனிருசி போலாமோ காய்தான்—இனியதுகேள்
நானுநீயுங் காண நடுவிருந்த தேருசிகாண்
தேனும்பாலும் போல் சிவம். (52)

End :

வருந்தும் பொருளதுகாண் மாயமால் நெஞ்சே
வருந்துஞ் சிவனமையும் வந்து—வருந்தி
இருவினைத்து டக்கறுத் தெழுவகைப் பிறப்பறுக்குங்
கருமலத் திருக்கறுக்குங் கண்.

787. (*b*) பட்டினத்துப்பிள்ளை மெய்ஞ்ஞானப் புலம்பல்.

Lines 8 in a Page.

இது ஞானவிஷயத்தைக் கூறுவது. நெஞ்சொடு புலம்புவது. இதனை இயற்றியவர் பட்டினத்துப்பிள்ளையார்.

Beginning :

இல்லத் திருந்து இரப்போர் முகம்பார்த்து
செல்வத் துடனே சிவனருளைப் போற்றாமல்
சொல்லப்பி மாதருட கூடிவலைக் குள்ளாகிப்
பல்லற்ற பாம்பதுபோல் பரதவித்தாய் நெஞ்சமே. (1)

அறியயனுங் காணாத ஆனந்த பேரொளியை
எரிசுடரும் நெய்யும்போ லெத்தி வணங்காமல்
கரிபரியு மாதுங் களஞ்சியமும் இல்வாழ்வும்
பெரிதுபிர தாபமென் று பேசினையே நெஞ்சமே. (2)

End :

வில்லா லடித்த விசயன் றனக்கிரங்கிக்
கொல்லா யுதங்கொடுத்த கோமானைப் போற்றாமல்
பொல்லாத வஞ்சமனப் பூவையர்மே லாசைகொண்டு
வல்லாண்மை பேசி மயங்கினையே நெஞ்சமே. (39)

vi. பத்திரகிரியார் பாடல்.

788. (*c*) பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

எக்காலக்கண்ணி.

Lines 7—8 in a Page.

இதனை யியற்றியவர் பத்திரகிரியார் என்பவர். இவரைப் பட்டினத்துப் பிள்ளையின் மாணக்கர் என்பர். 62 கண்ணிகளை உடையது.

Beginning :

முத்திக்கு வேத மொழிந்த மெஞ்ஞானப் புலம்பல் சொல்ல
அத்திமுகன் பாதத் தருள்பெறுவ தெக்காலம். (1)

வேடிக்கையுஞ் சொகுசு மெய்ப்பகட்டு பொய்ப்பகட் டாமிந்த
வாடிக்கையெல் லாமுலக மயக்கறுப்ப தெக்கலாம். (2)

உப்பிட்ட பாண்டமிது உடைந்து கருகுமுன்னே நா
னப்பிட்ட வேணியனுக் காளாவ தெக்காலம். (3)

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பார் முகம்பார்த்து மனம்
சம்பித் திரியாமல் தடுப்பதினி யெக்காலம். (47)

End :

வம்படிக்கு மாதருடன் மண்ணுலகில் வாழ்ந்தாலும் புளி
யம்பழமும் தோடுமென்று பொருந்தி நிற்பதெக்காலம். 61.

பற்றற்று நீரில் படர்ந்த வன்றன் சிற்றிலைபோல் அன்ன
சுற்றத்தை நீக்கிமனந் தூர நிற்பதெக்காலம். (62)

குறிப்பு :

இவைகளை யல்லாமல் பட்டினத்துப் பிள்ளையார் பாடிய வேறு தனிப்பாடல்களும் துரிசு சுன்னம் எழுதிய ஏடு ஒன்றும் இருக்கின்றன.

---

vii. சைவத்திருமுறைகள்.

**789. No. 73. தேவாரப்பதிகங்கள்.**

**ஏடுகள் 94 ; Lines 4—6 in a Page.**

**இதில் திருவீழிமிழலையைப்பற்றிய 24 தேவாரப்பதிகங்கள்**

தொகுக்கப்பட்டிருப்பினும் 23 பதிகங்களே காணப்படுகின்றன. முதலாவது ஏடு இல்லை. 58-ம் ஏட்டினும் ஏனைய ஏடுகளில் சிற்சில இடங்களிலும் பூச்சி அரித்திருக்கிறது. தேவாரத்தைப்பற்றிய விவரங்களை 425 (*g*) இல் காண்க.

Beginning :

சடையார் புனலுடையா னொருசரிகோவண முடையான்
படையார் மழு வுடையான் பல பூதப்படை யுடையான்
மடமான் விழி யுமை மாதிட முடையானெனை யுடையான்
விடையார் கொடி யுடையானிடம் வீழிம் மிழலையே.

End :

விண்ணிழி கோயில் விரும்பி மேவும் வித்தக மென்கொலி தென்று சொல்லிப்
புண்ணியனைப் புகலி நிலாவும் பூங்கொடி யோடிருந் தானைப் போற்றி
நண்ணிய கீர்த்தி நலங்கொள் வேள்வி நான்மறை ஞானசம்பந்தன் சொன்ன
பண்ணிய பாடல் வல்லார்களிந்தப் பாரொடு விண் பலி பாலரே.

திருக்கடைக்காப்பு

ஆக திருக்கடைக்காப்பு 24.

## 790. No. 260 (*a*) தேவாரப்பதிகங்கள்.

ஏடுகள் 326 ; Lines 4—10 in a Page.

இதில் சிற்சில தேவாரங்களும் திருத்தாண்டகங்களும் விரவி எழுதித்தொகுக்கப்பட்டுள்ளன. அவை திருநாவுக்கரசு நாயனாரும், சுந்தர மூர்த்தி நாயனாரும் இயற்றியவைகளாகும். இந்தப்பிரதியின் ஏடுகள் முரிந்தும் சிதைந்தும்

இருப்பதோடு, தலைப்புகள் பூச்சியால் அரிக்கப்பட்டும் இருக்கின்றன. இடையிடை சிற்சில ஏடுகளுமில்லை.

Beginning :

வேகமா நெறி சேரும் வினைகளும்
தாக போக விடாத் தளர்ச்சியுஞ்
சோக வாரியி னுல்வரு துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுவாம்.

வானெழுகு முகின்மேனி வேதன் றேட
மதுரைநா யகனடியார் வினைக டீர்ப்பா
னானெழுகும் புரம்படைத்த மாக்கள் போல்வந்
துலாவுதிரு விளையாடல் பாடல் சொல்வான்
கூனெழுகும் பிறைக்கோட்டுப் புழைக்கை நால்வாய்
குடவுதரச் செம்பவளக் குன்றம் போலத்
தேனெழுகு மலர்க்கடம்ப வனத்து லாவுஞ்
சித்திவினா யகனடிகள் சென்னி சேர்ப்பாம்.

இவ்விரண்டு செய்யுட்களும் தேவாரமல்ல

Bgeinning :

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன
நானறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும் பிரியாது வணங்குவ
னெப்பொழுதுந்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிட
வாற்றே னடியே னதிகைக் கெடில வீரட்டானத்துறை
யம்மானே. 1.

End :

மாலாலு மறிவரிய பாதர் போலும் மறவாதார் பிறப்ப
றுக்க வல்லார் போலும்

நாலாய மறைக்கிறைவரானுர் போலு...ததஞ்சா நம்பர்
போலும்

வேலார்கைவீரியை முன் படைத்தார் போலும் வியன்
வீழிமிழலையமர் விகிர்தர் போலு

மாலால மிடற்றடக்கி யளித்தார் போலு மடியேனை
யாளுடைய வடிகடாமே.

---

## 791. (*b*) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்.

Lines 4—10 in a Page.

இது 425-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*f*) போன்றது.

---

## 792. No 365. (*A*) தேவாரத்திரட்டு.

ஏடுகள் 140; சிதிலம் Lines 7—9 in a Page.

இதில் மூவர் அடங்கன் முறையினின்றும் தேர்ந்தெடுக்சப்பட்ட தேவாரங்கள் எழுதப்பட்டுள்ளன.

Beginning :

நாணுதுடை நீத்தோர்களுங்கஞ்சி நாடக்காலெ
வூணுப்பகலுண்டோது வர்களுரைக்குஞ் சோற்
பேணுதுறு சீர் பெறு மென்பீ ரெம் பெருமானுர்
சேணுர் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே 10

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளி யானைத் திரை சூழ்ந்த
கானல்சங் கேறுங் கழுமல வூரிற் கவுணியன்
ஞான சம்பந்த னலமிகு பாடலிவை வல்லார்
வான சம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே.

End :

கந்தமலி தண் பொழில் நன்மாட மிடைகாழிவளர்
ஞானமுணர்

.. தனமலி செந்தமிழின் மாலை கொடு வேதி குடியாதி கழலெ
சிந்தை செய வல்லவர்க ணல்லவர்க...ணநிகழ் வெய தியிமையோ
ரந்தவுல கெய்தியர சாளுமதுவே சரத மாணை நமதே. 11

793. No. 425 (*a*) அடைவு திருப்பதிக்கோவை.

ஏடுகள் 411 ; Lines 3—11 in a Page.

இது சிவஸ்தலங்களை அடைவு படுத்தக் கூறுவது. 24 விருத்தங்களை உடையது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை. சிற்சில இடத்தில் பூச்சி அரித்துள்ளது. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

இருநிலமெங் குந்திக்கு மூவர்தமிழ்ப் பாட
விருக்குமிரு நூற்றெழுபா னுன்காகுந் தலமு
மருவியவைப் புத்தலங்க ணூற்றென்பத்தெட்டும்
வகைவகையா யொன்றாகச் சேர்த்துலகோர் மகிழத்
திருமருவு மடைவு திருப்பதிக்கோவை யெனவே
செப்புவன்யான் முப்பழமுந் தேன்பாகி னுடனே
பருகுமொரு தொந்திவயிற் றைங்கரன் பொற்பாத
பங்கயங்க ளிரண்டுமென் றன் சிந்தையினிற் பதித்தே

End :

சித்தவட மானிருமங் காளிங்க மிடவை
திருக்களர் காம்பீலி யசோகந்தி கருமாரி
முத்தர்பயில் மாத்தூர திருவேட்டி களப்பாழ்
மொழிதகுஞ் சங்கொண்டல முருகவிழ் பாவநாச
மத்தர்மகிழ் திருவாலம் பொழி லிவையூர் முதலா
யணிதிகழும் பலவிதமாம் பதியீரு யியம்பு.

முத்தமமாந் திருவிருத்த மிருபத்து நான்கு
முறைப்பவர்கள் சிவலோகத் திருப்பது நிச்சயமே.

Colophon.

தாரண ௵ புரட்டாசி மீ 14உ அடைவு.

திருப்பதிக் கோவை யெழுதி முடித்தது முற்றும். முத்தையன் துணை.

---

794. (*b*) திருப்பதிக்கோவை.

Lines 3—10 in a Page.

இது, மூவர் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களை கோவை படுத்துக் கூறுவது. இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning:

மூவ ரோதிய முத்தமிழ் பெற்றிருந்
தேவர் தேவன் றிருப்பதிக் கோவையைப்
பூவின் மீது புகலக் கரிமுகன்
மாவு லாமலர்ப் பாதம் வணங்குவாம்.

ஈழுட் டிரண்டு மலை நாட்டொன் றேர்வடக் கைந்து வைகை
வாஞட்டீ ரேழு நடு நாட்டின் மன்னிரு பத்திரண்டே
சோஞட்டி னூற்றுத் தொண் ணூறே கொங் கேழு துளுவொன்றதா
ஞணட்டிய தொண்டை நன்ஞட்டென் ஞன்கர னன் னகரே.

End:

செங்கமல வாவிபுடை சூழ்துளுவ நாட்டிற்
சேழித்ததிருக் கோகரண மெனுந்தல மொன்றுமை யாள்

பங்கர்திருப் பருப்பதமிந் திரன்பணியு நீலப்
பருப்பதமனே கதங்கா பதந்திருக்கே தாரம்
மங்குறவழ் தருநொடித்தான் மலை வடக்கைந் திவையோர்
வகையாகப் பார்க்கினிரு நூற்றெழுபா னுன்காந்
துங்கமிகு மூவர்தமி ழிருக்கு நகர் வைப்புத்
தொடுக்கி லனேகங்களிவை துதித்தி டில்வீ
டெளிதே, 17

Colophon :

சுபானு ஸ்ரீ மாசி மீ 17 வ திருப்பதிக் கோவை யெழுதி முடிந்தது முற்றும்.

795. (*c*) வைப்புத் திருப்பதிக் கோவை.

Lines 10 in a Page.

இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். அச்சிலிருக்கிறது.

Beginning :

திங்களூர் பீடவூர்கோ வந்தபுத்தூர் குருக்கேத்
திரம்பொதிய மலைதேனூர் விராடபுரஞ் சூல
மங்கைமா வூரளப்பூ ருற்றத்தூர் சேற்றூர்
மாலிருப மிராப்பட்டீச் சரஞ்சித்த வடங்கா
னிங்க முஞ்சை மாகாள நல்லாற்றூர் பேரு
ரேமப்பே ரூர்குன்றி யூரிடவை வெங்கூர்
செங்குன்றூர் வெற்றியூர் மூவலூர் கருப்பூர்
திருத்தேவ னூர் மயிண்டீச் சரங்குருந்தங் குடியே 1.

End :

மறையவனூர் பிறையனூர் தேறனூர் காவம்
வரந்தை யெச்சி லிளமர்கச்சை யூர் விடங்களூர் சீர்
நிறையனூர் தேசனூர் பேறனூ ருடனே
நிகழ்த்து முண்ணீ ரோடங் கோத் திட்டை
கரபுரத்தோ

டிறையவனுர் மருவியவைப் புத்தலங்க ளிவைநூற்
றெண்பத்தெட் டாகுமிசை மாலிவற்றைத் துதித்தோர்
குறையாத செல்வமுடன் வாழ்ந்து திருவருளை
கொண்டுசிவ பதமடைவர் பண்டைவினை யறவே. 7

Colophon :

சுபானு ஸு மாசி மீ 17 வ வைப்புத்திருப்பதிப்பாட்டு
எழுதி முடிந்தது முற்றும்.

---

## 796. (*d*) திருப்பதிக்கோவை.

Lines 10 in a Page.

இது, மூவர் திருப்பதிகம் பெற்ற தலங்கள் இன்னவை எனக்கூறுவது. இது, 446-ம் நம்பரைப் போன்றது. இயற்றியவர் உமாபதி சிவாசாரியர். அச்சிடப்பட்டிருக்கிறது.

Colophon :

சுபானு ஸு மாசி மீ 18 வ திருப்பதிக்கோவை எழுதி முடிந்தது முற்றும்.

---

## 797. (*e*) காரைக்காலம்மையார்

### திருவாலங்காட்டுப்பண்.

Lines 12—14 in a Page.

இது, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தோத்திரம். பதினோராந் திருமுறையின் ஒரு பகுதியாகும் திருத்தொண்டர் அறுபத்து மூவருள் ஒருவராகிய காரைக்காலம்மையார் இயற்றியது. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கவ்வப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக ளுடுமே 1.

End :

சூடு மதியஞ் சடைமேலுடையர் சுழல்வர் திருநட்ட
மாடு மரவ மரையினர்த்த வடிக ளருளாலே
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக்காற் பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப் பாவநாசமே. 11.

798. (*r*) காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

Lines 12—14 in a Page.

இதுவும் பதினோராந் திருமுறையில் ஒரு பகுதியாகும் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்சி சிவந்திரு பற்கணீண்டு பறடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கியலறி யுலறுகாட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க ளப்பனிடந் திருவாலங்காடே. 1.

End :

ஒப்பினையில்லவன் பேய்கள் கூடி யொன்றினை யொன்றடித் தொக்கலித்துப்

பப்பினையிட்டுப்.... ........................ ...பாடிருந்தன்னரி
யாழமைப்ப

வப்பனை யணிதிரு வாலங்காட்டு ளடிகளைச் செடிதலைக்
காரைக்காற் பேய்

செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார் சிவகதி
சேர்ந்தின்பமெய்துவரே. 11.

## 799 (g) தேவாரம் தலமுறை.

Lines 10—13 in a Page.

சைவ சமயாச்சாரியராகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி என்னும் மூவரும் சிவபெருமானைப் பாடியருளிய பாசுரங்கள் மட்டும் தேவாரம் என்று சொல்லப்படும். தேவாரம் என்பதைத் தே ஆரம் எனப்பிரித்து தேவுக்குரிய மாலை எனப் பொருள் கொள்வர். தேவாரம், திருநெறித் தமிழ் எனவும் தமிழ்மறை எனவும் வழங்கும். இத்தேவாரம் 797 பதிகங்களை உடையது. அவற்றுள், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் பாடியவை 384 பதிகங்கள் அவை மூன்று திருமுறைகளாகப் பகுக்கப்பட்டன. திருநாவுக்கரசுநாயனர் பாடிய 312 பதிகங்கள் மூன்று திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனர் பதிகம் 101-ம் ஒரு திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இம்மூவர் தேவாரமும், தலமுறையிற் கோக்கப்பட்டனவும், பண்முறையிற் கோக்கப்பட்டனவும் என்று இருவகையாற் கோக்கப்பட்டுள்ளது. அவற்றுள், இந்தப் பிரதியிலுள்ள தேவாரங்கள் தலமுறையாகக் கோக்கப்பட்டிருத்தலின், இது தலமுறை எனப்பெயர்பெற்றது இத்தேவாரங்கள், ஏற்பட்ட காலமுதற்கொண்டு சிவாலய முதலிய இடங்களில் ஓதப்பட்டுவந்தன. அவற்றை ஓதுவார்க்கு

நிபந்தமும் நடைபெற்று வந்தது தேவாரமியற்றிய மூவர் பெயரும், அவதரித்த முறையில், அப்பர், சம்பந்தர், சுந்தரர் எனவும், அடங்கிய முறையில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் எனவும் வழங்கப்பெறும். இம்மூவருள், திருநாவுக்கரசு நாயனார், பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்திலும், அவனுக்குப் பின் அரசுபுரிந்த நரசிம்மவர்மன் காலத்திலும் இருந்தவர். இவர், சமண சமயத்தை நீத்துச் சைவ சமயத்தைக் கைக்கொண்டபோது சமண அடிகளின் சொற்கிணங்கி இவரை நீற்றறையிலிட்டும், நஞ்சருத்தியும், யானையைக் கொண்டிடறியும், பலவகைத் துன்பமியற்றவும் இவர்க்கு எத்தகைய ஊறுபாடும் நிகழாமையால், இவரை வழிப்பட்டுத் தானும் சைவனாகிக் குணதரேச்சரம் எடுப்பித்தவன் மகேந்திரவர்மனாவான். அவனது ஆட்சிக்காலம் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கமாகும். ஆதலால் இவரது காலமும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கொள்ளத்தக்கது. திருஞானசம்பந்தர், மதுரையம்பதியில் சமணரை வாதில் வென்று, கூன்பாண்டியனை நெடுமாறனாக்கிச் சைவசமயத்தைத் தழுவிடச் செய்த அளவிடற்கரிய பெருமை வாய்ந்தவர். இவர், அப்பரோடு உடனிருந்தவரெனினும், அவர் அவதரித்து நெடுங்காலமான பிறகு அவதரித்தவர். அப்பர் சிவகதி பெற்றபோது அவருக்கு வயது எண்பத்தொன்று. அப்பொழுது இவர் மிக இளம்பருவத்தினர். ஆகவே, சம்பந்தர் ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் இருந்தவராவார். மலை நாட்டரசராகிய சேரமான் பெருமாள் நாயனார் பின்வர வெள்ளையானையில் ஏறிக் கைலாயத்திற்குச் சென்றவராகிய சுந்தரமூர்த்திகள் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவராவார்.

இனி இத்தேவாரத் திருமுறையைத் தொகுப்பித்தவன் இராஜராஜன் I என்பவன். இக்காலத்தில் தஞ்சையிற் பெரிய

கோயில் என வழங்கும் இராசராசேச்சரம் எடுப்பித்தவன். தஞ்சை நகரைத் தனது அரசிருக்கையாகக் கொண்டு கி. பி. 985—1013 வரையில் ஆட்சி செய்தவன். ஆதலால், திருமுறை தொகுப்பித்த காலம் பத்தாவது நூற்றாண்டின் தொடக்கம் என்று கொள்ளத்தக்கது. இதனைத் தொகுத்தவர் நம்பி யாண்டார் நம்பி என்பவர். இவர் காவிரியின் வடகரைத் திருநாரையூரில் அந்தணர் குலத்திற் பிறந்து பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்றவர். இந்நாரையூர் தென்னாற் காடு ஜில்லா சிதம்பரம் தாலூகாவிலுள்ளது.

இத்தேவாரம், தலமுறையாகவும் அச்சிடப்பட்டிருப்ப தோடு தனித்தனியாக மூவர் திருமுறையாகவும் அச்சிடப் பட்டுள்ளது.

Beginning :

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்று வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றாய் நின்றாரைப் பற்றா பாவமே. (1)

End :

கைம்மா வுரிவை யம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுரமன்ன மொழியாண் மடச்சிங்கடி
தம்மானூரன் சடையன் சிறுவனடி யன்ற மிழ்மாலை
செம்மாந்திருந்து திருவாய் திறப்பார் சிவலோகத்தாரே. 10.

Colophon :

திருச்சிற்றம்பலம். தாரணஸு புரட்டாசிமீ 13வ சுந்தரர் பொதுத் திருப்பதிக நாலு மெழுதி முடிந்தது முற்றும்.

தலத்தைச் சார்ந்த பதிகமுதல் பொதுப்பதிகமீறாய் மூவரோதிய தேவார அடங்கன் முறை திருப்பதிகம் 797. எழுதி முடிந்தது முற்றும்.

முத்தையன் துணை.

முத்துக்குமாரனெழுத்து. இந்தத் திருமுறை கண்ணங்குடைப் பொன்னம்பலத்தா பிள்ளை குமாரன் சுவாமிநாத பிள்ளைக்கு எழுதினது.

குறிப்பு :

திருப்பதிக அட்டவணை எழுதிய ஏடுகள் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளன.

தேவாரம்.

800. No. 426. (*a*) அடைவு திருப்பதிக் கோவை

ஏடுகள் 299 ; Lines 5 in a Page.

இது 425 *a* போன்றது, அச்சிடப்பட்டிருக்கிறது.

801. (*b*) திருப்பதிக்கோவை.

இது 425 *b* போன்றது. அச்சிடப்பட்டிருக்கிறது.

802. (*c*) வைப்புத்திருப்பதிக்கோவை.

இது 425 *c* போன்றது. அச்சிடப்பட்டிருக்கிறது.

803. (*d*) திருப்பதிக்கோவை.

இது 425 *d* போன்றது. அச்சிடப்பட்டிருக்கிறது.

804. (*e*) காரைக்காலம்மையார் திருவாலங்காட்டுப்பதிகம்.

இது 425 *e* போன்றது. அச்சிடப்பட்டிருக்கிறது.

---

805. (*f*) காரைக்காலம்மையார் மூத்த திருப்பதிகம்.

இது 425 *f* போன்றது. அச்சிடப்பட்டிருக்கிறது.

---

806. (*g*) மூவர் தலமுறை.

இது 425 *g* போன்றது. இதில் 'கற்றுங்கொளிரியோம்பி' என்னும் பதிகமுதல் திருப்பிரமபுரம் பல பெயர்ப் பத்து திருக் கோமுத்திரியில் 9-வது செய்யுள் வரையில் இருக்கின்றது. 300-வது ஏடில்லை, ஏழு சம்புடமாக எழுதப்பட்டுள்ளது.

---

807. No. **427**. தேவாரம்.
ஏடுகள் 300; Lines 5 in a Page.

இது 426-ம் நம்பரின் தொடர்ந்த பிரதி. இதில் திருப் பிரமபுரம் பல பெயர்ப்பத்து வம்மொழித் திருவிராகம் முதல், திருக்கயிலாயமும், திருவானைக்காவும், திருமயேந்திரமும், திரு வாரூரும் கூட சதுக்கம் வரையுமுள்ள பதிகங்கள் இருக்கின் றன.

---

808. No **428**. தேவாரம்.
ஏடுகள் 300; Lines 5 in a Page.

இது, 427-ம் நம்பரின் தொடர்ச்சி. இதில் அப்பர்

திருவானைக்கா திருக்குறுந் தொகை முதல் சம்பந்தர் திருக் கடவூர் வீரட்டானம் 'பொடியார் மேனியனே' என்னும் பதிகத்தில் 4 பாசுர முடிய இருக்கிறது.

## 809. No. 429. தேவாரம்.

ஏடுகள் 300 ; Lines 5 in a Page.

இது, 428-ம் நம்பரின் தொடர்ச்சி. இதில் திருக்கடவூர் வீரட்டானம் 'பொடியார் மேனியனே' என்னும் பதிகத்தில் 5-ம் பாசுர முதல் திருவாரூர் திருத்தாண்டக முடிய இருக்கிறது.

## 810. No 430. தேவாரம்.

ஏடுகள் 300 ; Lines 5 in a Page.

இது, 429-ம் நம்பரின் தொடர்ச்சி. திருவாரூர் திருத்தாண்டகம் 'எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டான் காண்' என்பது முதல் சம்பந்தர் திருவரத்துறை 'எந்தையீச னெம்பெருமான்' என்னும் பதிகத்தில் 10-வது பாசுரமுடிய இருக்கிறது.

## 811. No. 431. தேவாரம்.

ஏடுகள் 300 ; Lines 5 in a Page.

இது, 430-ம் நம்பரின் தொடர்ச்சி. இதில் அப்பர் திருவரத்துறை 'கடவுளைக் கடலுள்' என்னும் பதிகமுதல் அப்பர் திருக்கோகரணப் பதிகமுடிய இருக்கிறது.

## 812. No 433. தேவாரம்.

ஏடுகள் 144 ; Lines 5 in a Page.

இது, 431-ம் நம்பரின் தொடர்ச்சி. இதில் சம்பந்தர் திருப்பருப்பதப் பதிகமுதல் சுந்தரர் ஊர்த்தொகைப் பதிகம் 'காட்டூர் கடலே' என்பது ஈருக இருக்கிறது.

Colophon :

தலத்தைச் சார்ந்த பதிகமுதல் பொதுப்பதிக மீருய் மூவரோதிய தேவார அடங்கன்முறை திருப்பதிகம்.

797-ம் எழுதி முடிந்தது முற்றும். திருச்சிற்றம்பலம்.

அழகிய திருச்சிற்றம்பலனடி வாழ்க.

## 813. No. 441 தேவாரப்பதிகங்கள்.

ஏடுகள் 46 ; Lines 5—8 in a Page.

இதில் திருவேத வனம், திருக்காளத்தி, திருவாரூர், திருப்பிரமபுரம், திருவெண்ணெ நல்லூரர், திருச்செங்காட்டாங்குடி, திருவூடல், திருவையாறு என்னும் தலங்கட்குரிய தேவாரப்பதிகங்கள் இருக்கின்றன.

## 814. No. 436. (*a*) திருப்பதிக்கோவை.

ஏடுகள் 436 ; பூர்த்தி ; Lines 7—8 in a Page.

இது, சைவசமயாச்சாரியர் மூவர்பாடிய தேவாரப்பதிகங்களில் இன்ன சிவஸ்தலம் இத்தனை பதிகம் பெற்றது எனக் கோவைப்படுத்துக் கூறுவது. இதனை இயற்றியவர் தில்லை வாழ் அத்தனருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார். 19 விருத்தப்பாக்களை உடையது. சிறிது சிதிலம், அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

ஒன்ருதி யோரெழுபத் தொன்றீருய் மூவர்தமிழ்
சென்ருர் சிவதலங்கள் செப்புதற்கு—நின்று
கடக்குஞ் சரமுகனேர் காய்விழியா னீன்ற
கடக்குஞ் சரமுகனே காப்பு.

பன்னுசிவ தலமொருநூற் றைம்பதிற்று மூன்று
பதிகமொன்று நாற்பத்தொன் பதிற்பதிக மிரண்டா
முன்னுமிரு பதிற்றெட்டு நகர்பதிக மூன்ரு
மொருபதிற்ருேர் தலம்பதிக மொருநான்கென்
மன்னுமிரு நான்குதல மோரைந்தே பதிக [றுணர்க
மற்றுமைந்து தலங்களுக்கு வரும்பதிக மாரும்
பின்னுமைந்து வளநகர்க்குப் பெரும்பதிக மேழாம்
பெயர்த்துமோர் நான்குதலம் பெறும்பதிக மெட்டே.
(1)

End :

பின்புசில நாளின்கண் வன்ருெண்டப் பெருமாள்
பிறங்குதிரு வெண்ணை நல்லூர்ப் பித்தாவென்
யின்பமுதற் திருப்பதிகம் மூழ்தோறு மீரு [றெடுத்தே
யெடுத்த தொகை முப்பத்தே ழாயிரமாம் பனுவன்
முன்பவன்றன் கவிநொடித்தான் மலையைச் சேர்ந்து
முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர் தன்னி
னன்பவர்கை யிலச்சினையால் வைத்து மன்ன
ராராய்ந்து தருகவென வருளிச் செய்தார் (19)

Colophon :

திருச்சிற்றம்பலம். சுபானு-ஹு மார்கழி-மீ 19உ திருப் பதிக்கோவை எழுதிமுடிந்தது முற்றும். செல்வ விநாயகர் துணை.

### 815 (*b*) தேவாரப்பதிகங்கள்.

Lines 7—8 in a Page.

இதில் பாடல்பெற்ற சிவஸ்தலங்களுக்கு ஏற்பட்டுள்ள ஒவ்வொரு பதிகத்தினின்றும் ஒவ்வொரு பாசுரம் தேர்ந்தெடுத்து எழுதப்பட்டுள்ளது. 274 தேவாரங்கள் இருக்கின்றன.

---

### 816. No. 437. (*a*) திருப்பதிக்கோவை.

ஏடுகள் 142 ;Lines 6—7 in a Page.

இது, 436-ம் நம்பர் போன்றது. இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியார். அச்சிடப்பட்டிருக்கிறது.

Colophon :

சுபானு-ஸு ஆவணி-மீ 15உ திருப்பதிக்கோவை எழுதி முடிந்தது.

---

### 817. (*b*) தேவாரப்பதிகம்.

Lines 7—11 in a Page.

இது சைவ சமயாச்சாரியர் மூவர் படியவை. இதில் ஒரு பதிகம் பெற்ற தலமுதல் எழுபத்தொரு பதிகம் பெற்ற தலங்கள் ஈருக உள்ள தலங்கள் இன்னின்னவை எனப் பதிகத்துடன் தொகுக்கப்பட்டிருக்கிறதோடு பொதுப்பதிகங்களும் எழுதப்பட்டுள்ளன.

Beginning :

திருப்பழுவூர் சம்பந்தர் பாடல்.

முத்தன் மிகு மூவிலை நல்வேலன் விரிநூல
னத்த னெமை யாளுடைய வண்ணலிட மென்பர்

மைத்தழை பெரும் பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூரே.

End :

காட்டூர்க் கடலே கடம்பூர் மலேயே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூரரசே கொழுநற்
கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப்படுவாய் பனங்காட்டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.

Colophon :

திருச்சிற்றம்பலம். சுபானு-௵ கார்த்திகை-௴ 3-ௗ ஒரு பதிகமுள்ள தலமுதல் சுந்தரர் பொதுப்பதிக மீருகச் சொல்லப்பட்ட பதிகம் 797-க்கு இந்தத் திருமுறையிலே அடங்கலும் பார்த்து எழுதப்பட்ட பாட்டு 536. கண்ணங்குடைச் சுவாமிநாத பிள்ளேயவர்கள் அட்டவணேப் பிரகாரத்துக்கு எழுதி முடிந்தது முற்றும். முத்தையன் துணே.

தாவி லாமறைச் சைவந் தழைத்திடக்
காவல் வேந்துடன் காசினி வாழ்ந்திடத்
தேவர் தேவன் றிருவுரு வாகிய
மூவர் பாடலிம் மூதுல கோங்கவே.

சிவாய நம.

---

## 818. (c) திருவிசைப் பாத்திரட்டு.
Lines 9—10 in a Page.

சிவபெருமானேத் திருமாளிகைத் தேவர் முதல் சேந்தனர் ஈருக ஒன்பதின்மர்பாடிய பாசுரங்களின் தொகுப்பே திருவிசைப்பா எனப்படும். இத்தொகுப்பு ஒன்பதாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் இங்கு 11 செய்யுட்கள் திரட்டப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவ்ளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

End :

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட
லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய
தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே
யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு
கூறுதுமே.

Colophon :

சுபானு-ஸு கார்த்திகை-மீ 3-உ திருவிசைப்பா பாட்டு 11-ம் எழுதி முடிந்தது முற்றும். முத்தையன் துணை.

---

819. (*d*) திருப்பதிக்கோவை.

**Lines 8—10 in a Page.**

இது, 425 *b* போன்றது. இயற்றியவர் உமாபதி சிவாசாரியர்.

Colophon :

சுபானு-ஸு கார்த்திகை-மீ 6-உ திருப்பதிக்கோவை எழுதி முடிந்தது. சிவாய நம.

---

## 820. (*e*) சிவகவசம்.

Lines 8—0 in a Page.

இது, சிவதோத்திரம். பிரமோத்தரகாண்டத்திலுள்ளது. இக்கவசம் பத்திராயு என்னும் அரசகுமாரனுக்கு இடபமுனிவர் அருளிச்செய்ததென நைமிசாரணிய முனிவர்க்குச் சூதமுனிவர் கூறியது. இதனை இயற்றியவர் வரதுங்கபாண்டியர். இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

பங்கயத் தவிசின்மேவி யிருந்துடற் பற்று நீக்கி
யங்குநற் பூதசுத்தி யடைவுடன் செய்துபின்னர்
கங்கையைத் தரித்த சென்னிக் கற்பகத் தருவைச் செம்பொற்
கொங்கை வெற்பனைய பச்சைக் கொடியொடு முளத்தில் வைத்தே.

அகில நாயகனாய் ஞான வானந்தரூபியாகித்
துகடரு மணுவாய் வெற்பின் றேற்றமா யுயிரை யெல்லாந்
தகவுட னவனியாகித் தரிப்பவ னெம்மை யிந்த
மகிதல மதனிற் றீமை மருவிடா தருளிக் காக்க. 2.

End :

கடவுணீ றவனுடல் கவினச் சாத்தியே
யடுகரி பன்னிரண் டாயிரத்துடை
நெடுவலி யளித்து நீடு வாழ் கென
வடுவற வேத்தியே வழிக்கொண்டானரோ. 23.

சிவகவசம் முற்றும்.

## 821. (*f*) தேவிவச்சிர பஞ்சர கவசம்.

Lines 7—8 in a Page.

இது, தேவிதோத்திரம். அதிவீரராமபாண்டியன் தமிழில் மொழிபெயர்த்தியற்றிய காசி காண்டத்திலுள்ளது. தேவர்கள், நெடுநாளாகத் தமக்கு இடரிழைத்திருந்த துர்க்கன் என்னும் அவுணனை உமாதேவியார் சங்கரித்து அவ்விடரை நீக்கியதுண்டு. அத்தேவியை வணங்கித் துதிசெய்தது இக்கவசம். இதனை நியமத்துடன் தினந்தோறும் யாவர் செபிக்கினும் நினைத்தவை கைகூடப்பெறுவர் என்பர். அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருளி னேடுந்
துங்கமென் சென்னி காக்க வயிணவி துகளிலாக
மெங்கணுங் காக்க செய்ய வேந்தெழிலுருத்தி ராணி
தங்குமெண் டிசையு மன்பு தழைத்திட வினிது காக்க. 1.

End :

இன்னநற் காதை கேட்போர் பயின்றுளோ ரெழுதி வைப்போர்
துன்னருந் துன்ப நீங்கி யளப்பரும் போகந் துய்த்துக்
கன்னலிற் கனிந்த தீஞ்சொ லரம்பையர் கவரி நீழற்
பொன்னுலகினிது காக்கும் புரந்தரன் போல வாழ்வார். 21.

தேவிகவசம் முற்றும்.

குறிப்பு :

இதில், மேற்கண்ட நூல்களையன்றிச் சோமசுந்தரக் கடவுள் பாணபத்திரர் பொருட்டு அருளிய 'மதிமலிபுரிசை மாடக்கூடல்' என்னும் திருமுகப் பாசுரமும், சம்பந்த மூர்த்தி நாயனு ரியற்றிய, 'ஒருருவாயினை' என்னும் திருவெழுக்

கூற்றிருக்கையும், காரைக்காலம்மையார் பதிகத்தொருபாட்டும், பெரிய புராணச் செய்யுள் இரண்டும், பட்டினத்தார் பாடலொன்றும் இரண்டொரு விடுபாக்களும் இருக்கின்றன.

## 822. No. 613 தேவாரத்திரட்டு.

**Lines 4—6 in a Page.**

இதில் தேர்ந்தெடுத்த சில தேவாரப்பதிகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :-

| | |
|---|---|
| திருப்பிரமபுரம் | 'தோடுடைய செவியன்' |
| திருவாரூர் | 'முத்துவிதானமணி பொற்கவரி' |
| ,, | 'மீளாவடிமையுமக்கே யாளாய்' |
| திருவீழிமிழலை | 'வாசிதீரவே காசு நல்குவீர்' |
| திருவாரூர் | 'சித்தம் தெளிவீர்காள்' |
| ,, போற்றித் திருத்தாண்டகம் | 'கற்றவர்களுண்ணுங் கனியே போற்றி' |
| ,, அறநெறித்தாண்டகம் | 'பெருங்கை மதகரி யுரிவை' |
| ,, | 'அந்தமாயுலகாதியு மாயினன்' |
| ,, பலபணித்திருத்தாண்டகம் | 'இடர் கெடு மாறெண்ணுதியே நெஞ்சே நீவா' |
| ,, | 'பாடிளம் பூதத்தினும்' |
| திருச்செங்காட்டங்குடி | 'பைங்கோட்டு மலர்ப்புன்னை' |
| கோயில் பெரிய திருத் தாண்டகம் | 'அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை' |
| திருக்காளத்தி | 'வானவர்கள் தானவர்கள்' |
| புள்ளிருக்கு வேளூர் | 'கள்ளார்ந்த பூங்கொன்றை' |
| திருக்கோளிலி | 'நாளாய் போகாமே' |

| | |
|---|---|
| திருக்கோளிலி | 'மைக்கொள் கண்ணுமை' |
| ,, | 'முன்னமே நினையாதொழிந்தேன்' |
| ,, | 'நீள நினைந்தடியே' |
| திருவண்ணாமலை | 'உண்ணாமுலை யுமையாளோடு' |

## 823. No. 683 தேவாரத்திரட்டு.

ஏடுகள் 140 ; Lines 3—5 in a Page.

இதில் மூவர் அடங்கள் முறையினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்சில தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன.

Beginning :

திருவாக்குஞ் செங்கருமங் கைகூப்பும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

அடியிற்கண்ட தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| திருவாரூர் | 'பாடிளம் பூதத்தினானும்' | பதிகமுடிய |
| ,, | 'அந்தியு நன்பகலும்' | ,, |
| ,, | 'சித்தந் தெளிவீர்காள்' | ,, |
| திருப்பாண்டிக் கொடுமுடி | 'மற்றுப் பற்றெனக்கின்று' | ,, |
| திருவையாறு | 'கங்கையைச் சடையுள் வைத்தார்' | ,, |
| ,, | 'தானலாதுலகமில்லை' | ,, |
| திருப்பூந்துருத்தி | 'நில்லாத நீர்சடை' | ,, |
| திருவதிகை | 'நம்பனே யெங்கள் கோவே' | ,, |
| திருவையாறு | 'விடகிலேனடி நாயேன்' | ,, |
| ,, | 'கலையார்மதியோடுரநீரும்' | ,, |
| ,, | 'புலனைந்தும் பொறிகலங்கி' | ,, |

| | | |
|---|---|---|
| திருவையாறு | 'மாதர்பிறைக்கண்ணி' | ,, |
| திருக்காரோணம் | 'பத்தூர்புக்கிறந்துண்டு' | ,, |
| திருவாரூர் | 'குலம் பலம் பாவரும்' | ,, |
| திருச்செங்காட்டங்குடி | 'பைங்காட்டு மலர்ப்புன்னை' | ,, |
| திருத்தோணிபுரம் | 'வண்டரங்கப்புனல்' | ,, |
| திருநொடித்தான் மலை | 'தானெனை முன்படைத்தான்' | ,, |
| திருமயிலாப்பூர் | 'மட்டிட்ட புன்னையங்கானல்' | ,, |
| திருக்காளத்தி | 'வானவர்கள் தானவர்கள்' | ,, |
| திருவண்ணாமலை | 'உண்ணாமுலை யுமையாளோடு' | ,, |
| திருவாரூர் | 'பொன்னு மெய்ப் பொருளும்' | ,, |
| ,, | 'குழல்வலங் கொண்ட சொல்லாள்' | ,, |
| புள்ளிருக்குவேளூர் | 'கள்ளார்ந்த பூங்கொன்றை' | ,, |
| திருவாரூர் பல பணித்திருத் தாண்டகம் | 'இடர் கெடுமாறெண்ணுதியே' | ,, |
| திருவிளமர் | 'மந்தக மணிபெற மலர்வதோர்' | ,, |
| திருவாவடுதுறை | 'இடரினுந் தளரினும்' | ,, |
| திருவண்ணாமலை | 'பூவார் மலர்கொண்டு' | மூன்று செய்யுள் |
| திருவெண்ணைநெல்லூர் | 'பித்தாபிறை சூடி' | பதிக முடிய |
| திருமறைக்காடு | 'யாழைப் பழித்தன்ன மொழி' | ,, |
| திருவாரூர் பரவையுண்மண்டளி | 'தூவாயார் தொண்டு செய்வார்' | ,, |
| திருவாசகம் | திருப்பொற்சுண்ணம் 'முத்து | ,, |
| | நற்றாமம்' | ,, |

குறிப்பு :

பெரிய புராணத்தில் மனுமுறை கண்டபுராணத்திற் சில செய்யுட்களும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்திற் 2 செய்யுட்களும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகளில் ஒவ்வொரு செய்யுளும் இருக்கின்றன.

---

824 No. **257** *(A)* திருவாசகம்.

ஏடுகள் 144 ; Lines 6—8 in a Page.

இது, 380-ம் நம்பரைப் போன்றது. இதில் முதலிலிருந்து 'கண்ணஞ்சனத்தர் கருணைக்கடலினருண்ணின்றுருக்குவரன்னே யென்னும்' என்கிற செய்யுள் முடிய இருக்கிறது.

---

825. No. **298** *(a)* திருவாசகம்.

ஏடுகள் 132 ; Lines 4—6 in a Page.

இது, 257 *a* போன்றது. இதில் 'நமச்சிவாய வாழ்க' என்னும் அகவலில் ஒரு பகுதியும் கீர்த்தித் திருவகவல் முதல் செத்திலாப்பத்து முடிய இருக்கிறது.

---

826. *(b)* பட்டினத்துப்பிள்ளை நெஞ்சொடு புலம்பல்.

Lines 5—7 in a Page.

இதில் 110 கண்ணிகள் இருக்கின்றன. ஏடுகள் சிதைந்து கறையான் அரித்தும் இருக்கின்றன.

Beginning :

அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தே
நிலையா யுயிரிறந்து நின்றனை நெஞ்சமே. 1.

பாராமல் பதையாமல் பருகாமல் மத்தொன்றும்
ஓராமலுணர்வுடனே ஒன்றிலையே நெஞ்சமே. (2)

கனவிறந்து புலையிறந்துங் காணுதே கன்றென்று
மனவிறந்து நின்றதிலே யாழ்ந்தனையே நெஞ்சமே. (3)

End :

குரவனடிக்கழல் பெற்றாய் நெஞ்சே கும்பிடலாடல்
மறந்தாய் நெஞ்சே
அரசனிருப்பிடமுற்று யாடிடும் பாடிடும் நெஞ்சே. (109)
மந்திர தந்திர மற்றாய் வாசனை பூசனை யற்றாய்
சிந்தை தெளிந்திட முற்றாய் திருவடி பெற்றனை நெஞ்சே.

நெஞ்சொடு புலம்பல் முற்றும்.

---

827. (*c*) அபிராமியந்தாதி.

Lines 6 in a Page.

இது, 132-ம் நம்பரைப் போன்றது. இதில் 5 செய்யுட்களே இருக்கின்றன.

Beginning :

ததியுறு மத்தில் சுழலு மென்னுவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணங் கருதுகண்டாய் கமலாலையனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கி யென்றுந்
துதியுறு சேவடியாய் சுந்தரானன சுந்தரியே. (1)

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவதுன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயருளே உமையே யிமையத்
தன்றும் பிறந்த வம்மே யழியாமுத்தி யானந்தமே. (2)

End :

ஆதித்த னம்புலி அங்கிகுபேரன் அமரர்தங் கோன்
போதில் பிரமன் புராரி முராரி பொதியமுனி
கோதிற் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் தாமரைத் தையலையே. (5)

### 828. (*d*) சித்நரந்தாதி.

Lines 5 in a Page.

இது, 127-ம் நம்பரைப் போன்றது. இதில் ஆரம்ப முதல் 15 செய்யுளும் மீளவும் முதலிலிருந்து 8 செய்யுளும் எழுதிய ஏடுகள் இருக்கின்றன.

## தேவாரப்பதிகம்.

### 829. (*e*) கோளறு பதிகம்.

Lines 5—6 in a Page.

இதிலுள்ள ஏடுகள் சிதைந்தும் கறையான் அரித்தும் இருக்கின்றன.

Beginning :

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தெனுளமே புகுந்த வதனன்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க மெருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ னுளமே புகுந்த வதனல்

ஒன்பதோ டொன்றடேழு பதினெட் டொடாறு முடனுய
நாள் களவைதான்

அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு
மிகவே. 2

End :

தேனமர் பொழி கொளாலை விளைசென்னறுன்னி வளர்செம்
பொனெங்கு நிகழ

நான்முக னுதியாய பிரமாபுரத்து மறைஞான ஞானமுனிவன்

தானுறு கோளு நாளுமடியாரை வந்து நலியாத வண்ண
முறைசெய்

யான சொன் மாலை யோது மடியார்கள் வானிலரசாள்
வராணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்.

830. (*f*) சிவானந்தமாலை பஞ்சாக்ஷர

தெரிசனம்.

Lines 4—6 in a Page.

Beginning :

ஊர்பயின்றுண் கோலவகைக் குண்மைமல மானதுபோற்
சார்தருநல் லிந்திரியந் தன்னுகர்ச்சி—யாருயிருக்
கெவ்வமற வெப்பொழுது மின்பமதாகச் செய்யு
நவ்வெழுத்தென் றுள்ளே நவில் 1

கூருமழைக் காலிருளை வாளாக்கிக் கூரிருளற்
றுருயிரின் மூலியிழப் பாயிரண்டற் — றேருயிரின்
வெவ்வரவி னஞ்சின் மிகுமயக்கம் போல்மயக்கு
மவ்வெழுத்தென் றுள்ளே மதி. 2

End :

தற்பரமே தன்னளவாய்த் தானு யறியாது
அற்றஉட லொத்திட் டவையவையாய் — முற்செய்வினை
யெவ்வையினுந் தேடுமரு ளெல்லையிலே மீட்சிபெறும்
யவ்வருணத் தின்னியல்பென் றே. 5

## 831. (*g*) கந்தரபரிபேரிலனுபூதி.

Lines **5** in a Page.

இது, 389 *A* நம்பரின் வேறுபட்டது. ஆரம்பத்திலுள்ள சில செய்யுட்கள் மட்டும் கந்தரனுபூதியினின்றும் எடுக்கப் பட்டவை.

Beginning :

தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளா
லாசா நிகளந் துகளா னதுபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.

* * * * *

முருகன் றனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
வுருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 3

வானொடு காலுந் துய்ய வன்னியு நீரு மண்ணுந்
தானுடன் கூடியொன்ற தாகியே நின்ற போது
வூனுடல் பாரு நீரு முயிருடல் வாயு வானுந்
தீயென நடந்தி ரெண்டுஞ் சேதியாய் வழங்கு மென்றார். 4

End :

புலனற்றாற் பொறிகளற்றால் பொன்னும் வல்வினைகளற்றால்
மலமற்றால் மாய்கையற்றால் மாசற்றால் மமதையற்றால்

சலமற்றுல் வெகுளியற்றுற் றுனற்றுற் சகமுமற்று
லலைவற்று லாசையற்றுலவர்கள் மெஞ்ஞானியாவார். 19

## 832. (*h*) திருமந்திரம்.

Lines 5—6 in a Page.

இது, 387-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*a*) போன்றது. ஏடுகளின் விளிம்புகள் எலி கடித்தும் கறையான் அரித்தும் சிதைந்தும் இருக்கின்றன. இதில் 113 செய்யுட்கள் இருக்கின்றன.

## 833. (*i*) சிவப்பிரகாசம்.

Lines 4—6 in a Page.

இது, 541-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*e*) போன்றது. இதில் 43 செய்யுட்களிருக்கின்றன.

## 834. (*j*) சதாசிவரூபம்.

Lines 8—9 in a Page.

இது, சைவாகமங்களுட் கூறப்பட்டுள்ள பஞ்சசாதாக்கிய விவரம் கூறுவது. இதனை இயற்றியவர் கண்ணுடைய வள்ளல் என்பர். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

மலைமகள் குங்கும வனமுலை சுரி
குலைவளர் ஞானக் கதிர்மணிவள்ளத்
தன்னிலை யமுது செய்த..................கி
யென்னுளங் கவர்ந்தவ னேத்திய மறைதமிழ்க்
கவுணியன் மலர்க்கழல் வணங்கிப் பரசிவன்

பரை.......... பஞ்ச சக்திகளையும்
விரைவுடனைந் தொழில் விரிப்பது வேண்டி
யாக்கி யவர்களிடத்திலருட் சாதாக்கிய
மைந்தாய்த் தம்மில் வைதிரண் டேழிற்
றெழிற்சாதாக்கிய மாமிவர்க
ணிழற்கதிர்ச் சகள நிட்களா மாகையிற்
சுத்தவசுத்த தத்துவ மிவர்தமை
யொத்தா சரிக்கு மொழுக்கமு மிவரே.

End :

இந்த நிலைமையிற் றெரிசன மென்று
நந்தா திருப்பது ஞான பூசை
யந்தரி யாகமும் மாபுற யாகமு
மிந்த நெறிபிறவில்லா தாதலிற்
புந்தியின் ஞான பூசையென் றதுவே.

அவ்விரு பூசையும் பிறிந்தற் சிப்பது
பொய்யி லகிரியா பூசையாகும்
இப்படி யிடையற விதய கமலத்
தற்புத முதல்வனை யற்சனை புரிபவர்
தப்பற வடைகுவர் சாயுச் சியமே.

வள்ளல்

835 (*k*) போற்றிப்பஃறொடை.

Lines 7—8 in a Page.

இது, 543-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*h*) போன்றது. இதில் முழுவதும் இருக்கிறது. ஏடுகள் சிதைந்தும் கறையான் அரித்தும் இருக்கின்றன.

## 836. (*l*) திருநெறிவிளக்கம்.

Lines 9 in a Page.

இது சைவ சித்தாந்த உண்மைகூறும் வள்ளலார் நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் கண்ணுடைய வள்ளல். இது அச்சிடப்படவில்லை.

Beginning :

காயமெனுங் கூடத்து மோகக் கம்பங்
        கற்பனையாங் கணையமவை முறித்துக் காலின்
மாயவிலங் கினை யொடித்துக் கருமப் பேராய்
        வருபரிக்காரரைத் துரந்து வளைந்து நிற்கும்
தீயகுணக் கரணமாம் பாகர் சற்றுஞ்
        சேராத வகைவீசிச் சிவவே கத்தாற்
பாயுமருண் ஞானமத வேழத் தின்பொற்
        பாதமுற வேதமுறும் பவங்கள் போமே.

பேரொளியா யளவில்பே ரின்ப மாகிப்
        பேதமற வெவ்வுயிர்க்கும் போத மாகி
யாரறிவு மறிவரியா வகண்ட வுண்மை
        யனுபவமே தனுவாகி யம்மை காணப்
பாருலவு பிறப்பகலப் பொதுவி னின்று
        பரஞான வானந்தப் பாத நல்குஞ்
சீரொளிய செங்கமல பாத மென்றன்
        சித்தையினி லுறவணங்கிச் சென்னி வைப்பாம். 1

End :

திருநெறி விளக்க மென்னச் சிவகாமத் தெய்வ நூலின்
பெருமையைச் சிறுமை யாக்கிப் பிழைப்புவாய்ப் பறியா நாயே
னருளெனும் பித்து மேலிட் டறைந்தன னங்க ணக்கன்
வரும்பகி ரதிபோ லின்னூன் மதிப்பர்நன் மதிபெற் றோரே.
116

வாழிபுகழ்க் காழிநகர் வாழிதிருத் தண்டைக்கால்
வாழிதிருக் கண்ணுடைய வள்ளல்தாள்—வாழி
சுருதி தொடர்ந்தபெருந் தோணியிறை வாழி
திருநெறிசந்தானத் திரள்.

திருச்சிற்றம்பலம்.

## 837. (*m*) வள்ளல் ஞானசாரம்.

Lines 8—10 in a Page.

இதுவும் சைவ சித்தாந்த உண்மை உணர்த்தும் நூல்களுள் ஒன்ருகும். இதனை இயற்றியவர் வள்ளல்களில் ஒருவரெனத் தெரிகின்றதேயன்றி இன்ன வள்ளலெனத் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை

Beginning :

ஒருமைவெண் கோட்டுக்கன்றையோரிரு கன்னக்குன்றைச்
சொரியு மும்மதத்து நால்வா யைங்கரத் தும்பிதன்னை
யருவிகண்ணுரு மேழை யன்பருக்கன்றி யெட்டாத
திருவடி தவஞ்சே ரின்பத் தெய்துவான் சிந்தை செய்வாம். 1

அஞ்செழுத்துண்மையான வம்பலந் தன்னின் மூலத்
துஞ்சிருள் கிழியநின்று தொந்தோ மென்றம்மைகாணக்
குஞ்சித நடனஞ் செய்யுங் குருமலர்ப் பதமுட்கொண்டு
வஞ்சக மலங்க ணீங்க வழுத்திமுன் வணங்கலுற்ரும். 2

End :

முடிவறு முடிவில் வைத்த முன்னவன் பாதம் போற்றி
யடியொடு முடிவிலின்பா மருளருட் சரணம் போற்றி
வடிவெடுத் தென்போல்வந்த வளர்பெருங் கருணைபோற்றி

படிமிசைப் பயின்றவுண்மைப் பதாம்புயம் போற்றி
போற்றி. (117)

ஞானசார முடிந்தது. வள்ளல் திருவடி வாழ்க.

838. (*n*) ப்ராசாத மந்திர விவரம்.

Lines 7—8 in a Page.

இதில் ப்ராசாத மந்திர விவரம் கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது.

839 (*o*) சிவஞானபோதம்.

Lines 8 in a Page.

இதில் கிரந்த அட்சரத்தில் எழுதப்பட்டுள்ள சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரங்களும் இருக்கின்றன.

840. (*p*) சிவஞானபோதம் மூலம்.

Lines 8 in a Page.

இதில் 12 சூத்திரமும் முடிய இருக்கின்றன. ஏடுகள் சிறைந்தும் கறையான் அரித்தும் தலைப்பு முறிந்தும் இருக்கின்றன.

841. No. **296** திருவாசகம்.

ஏடுகள் 33; பூர்த்தி; Lines 6—8 in a Page.

இது 257-ம் நம்பரைப்போன்றது. மிகப்பழமையானது. சிதிலமாயிருக்கிறது.

842. No. **297** திருவாசகம்.

ஏடுகள் 201 ; Lines 5—6 in a Page.

இதுவும் 257-ம் நம்பரைப் போன்றது. சிதிலமாயிருக்கிறது.

843. No. **686** திருவாசகம்.

ஏடுகள் 132 ; Lines 5—6 in a Page.

இது 257-ம் நம்பரைப்போன்றது இதில் திருச்சதகத்திலிருந்து கோயில் மூத்த திருப்பதிகம் முடிய இருக்கிறது.

844. No. **687** திருவாசகம்.

ஏடுகள் 74 ; அபூர்த்தி. Lines 4—6 in a Page.

இது, முன்பிரதி போன்றது. சிதிலமாயிருக்கிறது.

குறிப்பு :

இந்தப் பிரதியில் 1, 2, 36, 41, 47, 48, 50, 53, 57 to 64, 75, 78, 79, 81 to 87, 90 to 125, 133 to 166, 168 to 171 174 to 176, 178 to 187. இந்த நம்பர் ஏடுகள் இல்லை.

845. No. **380** திருவாசகம்

ஏடுகள் 188 ; பூர்த்தி ; Lines 5—8 in a Page.

இது, சிவபெருமான் தோத்திரம் தன்னை ஓதினவரை உருக்குந் தன்மையுடையது. ஆகையால் 'திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்தினும் உருகாதார்' என்னும் பழமொழி வழங்கும்.

இதனை இயற்றியவர் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர். இவருடைய சொற்கள் மாணிக்கம் போலச் சிறந்திருத்தலின் இப்பெயர் பெற்றனர் என்பர். இவர் பிறந்த ஊர் பாண்டியநாட்டில் வையையின் வடகரையிலுள்ள திருவாதவூராதலால், இவர் திருவாதவூரர் எனப் பெயர் பெற்றனர். இவர் பாண்டியனிடம் மந்திரியாக இருக்கையில் அவன் வழங்கிய பெயர் தென்னவன் பிரமராயன் என்பது. இவர் தாம் இயற்றிய திருக்கோவையாருள் 306, 327-ம் செய்யுட்களில் வரகுபாண்டியனைப் பாடியிருக்கின்றனர். அவன் அரசுரிமை எய்திய காலம் கி. பி. 862—3 ஆகும். அவனைப் பாடிய இவர், அவன் காலத்திலாவது அதற்குப் பிற்பட்ட காலத்திலாவது இருந்திருத்தல் வேண்டும். ஆகவே வாதவூரடிகள் கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் இருந்தவர் எனக்கொள்வது தக்கது சங்ககாலத்தினர் எனவும் தேவாரம்பாடிய மூவர்க்கும் காலத்தில் முற்பட்டவர் எனவும் சிற்சிலர் கூறுவர். இந்நூல் இப்பிரதியில் முழுவதுமிருக்கிறது. இது உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு — முருவாக்கு
மாதலால் வாஞேரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

தொல்லை யருவினையுஞ் சூழுந் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாகியிதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க

கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னனேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

* * * * *

End :

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்று
னம்மையுமோர் பொருளாக நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே 9

தொல்லை யரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே — யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

ஆனந்த மேவடிவ மானந்த மேயுடல
மானந்த மேயுயிரு மானதே — யூனை
மருவாத வாறுதிரு வாசகந்தா னன்பிற்
றருவாத வூரர் தமக்கு.

அகவல் நாலுந் திருவாசகம் அறுநூற்று அன்பத்தி
ரண்டும் முடிந்தது.

Colophon :

இது விகுருதிஸு வைகாசி-மீ பெற்றான் ஆன ஒருவரும் ஒவ்வரித காலிங்கராயன் எழுதின ஏடு.

குறிப்பு :

இதில் திருவாசகத்தின் அட்டவணை யெழுதிய 6 ஏடுகள் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளன.

846. No. 381 (a) திருவாசகம்.

ஏடுகள் 187 ; பூர்த்தி சிதிலமாயிருக்கிறது

Lines 7—9 in a Page.

இதுவும் முற்பிரதி போன்றது. 68, 69-ம் ஏடுகள் பாதியாயிருக்கின்றன.

குறிப்பு :

இத்துடன் மாணிக்கவாசகர் தோத்திரப் பாடலும் காரைக்காலம்மையார் திருவிரட்டைமணி மாலையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

847. (b) மாணிக்கவாசகர்தோத்திரம்.

Lines 6 in a Page.

இத்தோத்திரம் ஒருவர் பாடியதன்று ; பல நூல்களினின்றும் திரட்டியதாகும்.

Beginning :

கொழுதியினவரியளிகள் கூட்டுண்ணுங் கொன்றையந்தார்க்
குழகன்ருளிற்

பழுதறுசொற் பாமாலை யுனேந்தேத்தி யெறிதிரை நீர்ப் பரவை
யாடை

முழுதுலகு மதிக்கவிகை தனிநிழற்றி யொருசெங்கோன்
முறைநடாத்தும்

வழுதிமுனம் பரியழைத்த வாதவூரிறைவனடி வழுத்தல்
செய்வாம். (1)

சீத வார்பொழிற் றில்லைப் பரமனுக்
கோது நற்றமிழ்க் கோவை யுரைசெய்த
நாதன் மாணிக்க வாசக னுண்மலர்ப்
பாத பங்கய மேத்திப் பரவுவாம். (2)

அத்தனுர் பெருந்துறைப்புக் கரியவினைக் கடல்கடந்தார்
புத்தனுர் மதங்களைந்தார் புனிதமா கியசீலன்
முத்தனுர் மாணிக்க வாசகனுர் முத்திக்கு
வித்தனுர் வாதவூர் தாள்போற்றி. (3)

வெள்ளிப்பீ டத்திருந்த வித்தகனு ரோதுவித்த
பள்ளிக்கூ டங்காணப் பாவம்போம்—வள்ளல்
பெருந்துறையைக் காணப் பிணிபோ மரனுர்
குருந்தடியைக் காணப்போங் கூற்று. (4)

End :

திருவா சகமறு நூற்றுச்சில் வானமுஞ் சீருடனே
யருள்சேருங் கண்ணைப் பதிவாழு மெங்கள்பொன் னம்
பலஞ்சொற்
றருசுவாமி நாத னெழுதுவித்தா னிந்தத்தாரணிமேற்
பரிவாகு மீசனைப் போற்றி யெந்நாளும் படிந்திடவே.

848. *(c)* காரைக்காலம்மையார்
திருவிரட்டைமணிமாலை.
Lines 6 in a Page.

இது சிவபெருமான்மீது தோத்திரம். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய காரைக்காலம்மையார் இயற்றியது. வெண்பாவும் கலித்துறையும் விரவிவர அந்தாதியாகப் பாடப்பட்ட 20 செய்யுட்களை யுடையது. அச்சிடப்பட்டிருக்கிறது. இவர் மூத்த திருப்பதிகம் பாடியவராதலால், பதிகம் பாடிய மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவராவார்.

Beginning :

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்ச
மன்பாய்த்
தளர்ந்திங் கிருத்த றவிர்தி கண்டாய் தளராது வந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்திடைவளர் கோட்டு வெள்ளை
யிளந்திங் களுமெருக்கு மிருக்குஞ் சென்னி யீசனுக்கே. (1)

ஈச னிவனல்லா தில்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமை காக்கும் பிரான். (2)

End :

உத்தமராய் வாழா துலந்தக்கா லூற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமு—னுத்தமராய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. (20)

Colophon :

சுபானு௵-தைமீ 30௳ காரைக்காலம்மை யருளிச்செய்த அந்தாதி திருவிரட்டைமணிமாலை யெழுதி முடிந்தது முற்றும்.
முத்தையன் துணை.

---

## 849. No. 383 திருவாசகம்.

ஏடுகள் 105 ; பூர்த்தி Lines 6—8 in a Page.

இது 380-ம் நம்பரைப்போல்வது. முழுவதும் இருக்கிறது.

850. No **384** திருவாசகம்.

ஏடுகள் 71 ; பூர்த்தி Lines 8 in a Page.

இது 383-ம் நம்பரைப் போன்றது.

---

851. No **252** *(a)* திருத்தொண்டத்தொகை.

ஏடுகள் 286 ; Lines 5 in a Page.

இது, திருத்தொண்டர்களின் வரலாற்றினை மிகச் சுருங்கத் தொகுத்துரைப்பது. சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றியது. இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டாகும்.

Beginning :

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே
னில்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (1)

End :

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ

னன்னவனு மாரூர னடிமை கேட்டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (11)

852. (*b*) திருத்தொண்டர் திருவந்தாதி.

Lines 5 in a Page.

இது, திருத்தொண்டத் தொகை தொகுத்துரைக்கும் தொண்டர் வரலாற்றினை ஒருவாறு வகைப்படுத்துரைக்கும் அந்தாதியாகும். இதனை இயற்றியவர் நம்பியாண்டார் நம்பி என்பவர். இவர் சோழநாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள திருநாரையூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்றவர். இவரது காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் கடைசி அல்லது 11 ஆவது நூற்றாண்டின் தொடக்கமாகும். இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning:

செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோ
ரொப்பப் புவனங்கண் மூன்றினு மும்பரி னாரெரித்த
வப்பற் கமுதத் திருநடற் கந்திப் பிறையணிந்த
துப்பற் குரிமைத் தொழில்புரிந் தோர்தமைச் சொல்லு
துமே. (1)

End:

ஓடிடும்பஞ்சேந் திரிய மொடுங்கியென் னூழ்வினைகள்
வாடிடும் வண்ண நின்றெத்தவஞ் செய்தனன் வானினுள்
ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப்பாதத்தர் தொண்டத் தொகையினுள்ளே
சேடர்தஞ் செல்வப் பெரும் புகழந்தாதி செப்பிடவே. (89)

நம்பியாண்டார் நம்பி யடிகளந்தாதி முற்றும்.

853 (c) பெரிய புராணம்.

Lines 5 in a Page.

சிவபெருமானை அடைவதற்கு வழியெனச் சைவர்கள் ஒப்புக்கொண்டவை இரண்டு. அவை பக்தி மார்க்கமும் ஞான மார்க்கமும் ஆகும். அவற்றுள், ஞானமார்க்கத்தைச் சைவாகமங்களும் சைவசித்தாந்த சாத்திரங்களும் கூறும். பக்தி மார்க்கத்தைப் பெரிதும் பாராட்டிக் கூறுவது பெரிய புராணம். இப்புராணத்துக் கூறப்பட்டுள்ள எல்லோரும் பக்தர்களே பக்தர்களாகிய தொண்டர்கள் செயற்கரும் செய்கை செய்த பெரியாராதலால், அவரைப்பற்றிக்கூறும் இப்புராணம் பெரிய புராணம் எனப்பெற்றது. தொண்டர்சீர் கூறுவதால் திருத்தொண்டர் புராணமெனப்படும். இது தனியடியார் அறுபத்து மூவர் தொகையடியார் ஒன்பதின்மர் ஆகிய திருத்தொண்டர்கள் வரலாற்றினை விளக்கு முகத்தால் வைதிக சைவவுண்மை, சைவபரிபாஷை, மூவர் திருப்பாசுரங்களின் நுண்பொருள் முதலிய பிறவும் விரித்துரைப்பது. சைவர்கள் பத்திவிநயத்துடன் பாராட்டிப் பாராயணஞ் செய்யும் சைவத்திருமுறைகளுள் பன்னிரண்டாவது. சைமசமயத்தின் உண்மையையும் சிவனடியார்களின் பெருமையையும் சோழன் அனபாயனுக்கு உணர்த்துதல் காரணமாகச் சேக்கிழார் கனகசபையில் தமக்கு அசரீரியாகக் கிடைத்த "உலகெலாம்" என்னும் தொடர்மொழியினை முதலாகக்கொண்டு இப்புராணம் இயற்றியதாகும். அது "அண்டவாணர்தொழு தில்லையம்பலவரடி யெடுத்துலகெலாமெனத் தொண்டர் சீர்பரவு சேக்கிழார்" என்பதனால் விளங்கும்.

இது முதல் தொடங்கி நமிநந்தியடிகள் புராணம் ஈருக ஒரு காண்டமாகவும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

புராண முதல் வெள்ளையானைச் சருக்கம் ஈருக மற்ருெரு காண்டமாகவும் பகுக்கப்பட்டுள்ளது. சருக்கங்கள் பதின்மூன்று. விருத்தங்கள் 42·6 என அச்சுப் பிரதியால் விளங்குகின்றது. உமாபதி சிவம் செய்யுள் 4253 என்பர். ஆனல், இங்குள்ள ஏடுகளில் திருமலைச் சருக்கத்தையும் வெள்ளையானைச் சருக்கத்தையும் நீக்கிச் சருக்கம் பதிஞென்று எனவும் செய்யுட்டொகை 4302 எனவும் காணப்படுகின்றது.

இதனை இயற்றியவர் சேக்கிழார் நாயனர். இவர் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த இருபத்து நான்கு கோட்டங்களுள் புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூரில் சைவ வேளார் குலத்தில் சேக்கிழார் மரபில் பிறந்தவர். அனபாய சோழனது முதன் மந்திரியாக இருந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். இவரைத் தொண்டர்சீர் பரவுவார் எனவும் சேவையர் காவலர் எனவும் கூறுவர். இவர்க்குச் சோழன் அளித்த பட்டப்பெயர் உத்தம சோழப்பல்லவராயர் என்பது. இவரது வரலாற்றை உமாபதி சிவம் இயற்றிய சேக்கிழார் புராணத்துப் பரக்கக் காணலாம். இனி இவ்வாசிரியர் சேக்கிழார், விக்கிரம சோழன் மகன் இரண்டாம் குலோத்துங்கனது (கி. பி. 1133-1146) மந்திரியாக இருந்தவராதலால் இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டென்று கொள்ளத் தக்கது

Beginning:

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

* * * * *

நற்றமிழ் வரைப்பினிங்கு நாம்புகழ் திருநாடென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்குங்
கொற்றவ னனபாயன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றுன்
மற்றிதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ.

End :

சீர்நிலவு திருக்குறிப்புத் தொண்டர் திருத்தொழில் போற்றிப்
பார்குலவத் தந்தைதா ளறவெறிந்தார் பரிசுரைக்கேன்
பேரருளின் மெய்த்தொண்டர் பித்தனெனப் பிதற்றுதலா
லாருலகி லிதனுண்மை யறிந்துரைக்க விசைந்தெழுவார். 128

திருக்குறிப்புத் தொண்டர் நாயனர் புராணம் முற்றும்.

854. No. 253 பெரிய புராணம்.

ஏடுகள் 283 ; Lines 5 in a Page.

இதில் சண்டேசுர நாயனர் புராணமுதல் திருஞான சம்பந்தர் புராணத்தில் 463-ம் செய்யுள் முடிய இருக்கின்றது. இது 252-ம் நம்பரின் தொடர்ந்த பிரதி.

Beginning :

பூந்தண் பொன்னியெந்நாளும் பொய்யாதளிக்கும் புனனாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையின் மன்ன முன்னாள் வரைகிழிய
வேந்து மயில்வே னிலைகாட்டி யிமையோரிகல் வெம்பகை கடக்குஞ்
சேந்தனளித்த திருமறையோர் மூதூர் செல்வச்சேஞலூர் 1

End :

நீடுதிருநீலநக்கர் நெடுமனையின் விருந்தமுது செய்து
நீர்மைப்

பாடும்யாழ்ப் பெரும்பாண ருந்தங்க வங்கிரவு பள்ளிமேவி

யாடுமவ ரயவந்தி பணிவதனுக் கன்பருட னணைந்து; சென்று

நாடியநண் புடை நீலநக்கடிகளுடனுதர் கழலிற்றூழ்ந்து 463

---

## 855. No. 254 பெரிய புராணம்.

ஏடுகள் 291 ; Lines 5 in a Page.

இது 253-ம் நம்பரின் தொடர்ந்த பிரதி. இதில் சம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் 464-ம் செய்யுள் முதல் ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணம் 405 வது செய்யுள் முடிய இருக்கின்றது. கடைசியில் சிதிலமாயிருக்கிறது.

Beginning :

கோதிலா வாரமுதைக் கோமளக் கொம்புடன் கூடக்
கும்பிட்டேத்தி

யாதிமாமறைப் பொருளாலருந்தமிழின் திருப்பதிக
மருளிச் செய்வார்

நீதியால் நிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ வைத்துப்

பூதிசா தனர்பரவும் புனிதவியலிசைப் பதிகம்
போற்றிசெய்தார் 461.

End :

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றியேயர்

கொற்றவனுரு நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தா

ரற்றைநா ணிகழ்ந்த..... திசயங்கண்டுவானோர்

பொற்றட மலரின் மாரிபொழிந்தனர் புவனம் போற்ற
405

குறிப்பு :

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் கடைசி 4 செய்யுட்களில்லை.

## 856. 255 (a) பெரிய புராணம்.

ஏடுகள் 261 ; Lines 5 in a Page.

இது, 254 ஆம் நம்பரின் தொடர்ச்சி. இதில் திருமூல நாயனார் புராண முதல் வெள்ளையானைச் சருக்கம் இருகப் புராண முழுவதுமிருப்பதோடு பெரிய புராண சாரமும், சேக்கிழார் புராணமும் சேர்க்கப்பட்டுள்ளன.

Beginning :

அந்தியிளம் பிறைக்கண்ணி யண்ணலார் கயிலையினின்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
யிந்திரன்மா லயன்முதலா மிமையவர்க்கு நெறியருளு
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகளொருவர்.

End :

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

திருத்தொண்டர் புராண முற்றும்.

## 857. (b) பெரியபுராணசாரம்.

Lines 5 in a Page.

தில்லைவாழந்தணரு ளொருவாராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அருளியது. அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

மல்குபுகழ் வன்றொண்ட ரருளாற் றந்த
வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை
நல்கும்வகை புல்கும்வகை நம்பி யாண்டார்
நம்பிதிரு வந்தாதி நவின்ற வாற்றாற்
பல்குநெறித் தொண்டசீர் பரவ வல்ல
பான்மையா ரெமையாளும் பரிவால் வைத்த
செல்வமலி திருத்தொண்டர் புராண மேவுந்
திருந்துபய னடியேனுஞ் செப்பலுற்றேன்.

End :

நாடுபுகழ் முனைப்பாடி நாடு மேய
நரசிங்க முனையர்புவி நயந்து மன்று
ளாடுவா ராதிரைநா னடியார்க் கம்பொ
னமுதளிப்பார் தவநிகழ்வா னணைந்த தூர்த்த
வேடமுடை யவர்க்கிரட்டி செம்பொ னீய்ந்து
விடுத்தழகா ராலயங்கள் விளங்கச் செய்து
தோடலர்தா ருடையபிரா னருளை யாளத்
தோன்றினா ரெனையருளி னான்றி னாரே. 57

---

௬௫௩. (c) சேக்கிழார் புராணம்.
Lines 5 in a Page.

இது பெரிய புராணம் பாடிய சேக்கிழார் நாயனாரின் அருமை பெருமைகளைப் பாராட்டிக் கொன்றவன்குடி உமாபதி சிவாசாரியார் பாடியது. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

வானுலகு மண்ணுலகும் வாழ்க மறைவாழ்கப்
பன்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்

End :

அண்ட வாணர்தொழு தில்லை யம்பலவ ரடியெடுத்துல
கெலாமெனத்
தொண்டர் சீர்பரவு சேக்கிழார் வரிசைதுன்று குன்றை
நகராதிபன்
றண்ட காதிபதிதிருநெறித் தலைமைதங்கு செங்கைமுதல்
பைங்கழற்
புண்டரீகமலர் தெண்டனிட்டு வினைபோக்குவார் பிறவி
நீக்குவார். 102

சேக்கிழார் புராண முற்றும்.

குறிப்பு :

திருத்தொண்ட புராண அட்டவணை எழுதிய மூன்று ஏடுகள் கடைசியிலிருக்கின்றன.

859. No. **256** (a) பெரியபுராணம்.

ஏடுகள் 321 ; Lines 7—11 in a Page

இது முன் பிரதிகளைப் போன்றது. முழுவதும் இருக்கின்றது.

860. (*b*) திருத்தொண்டத்தொகை.

Lines 8 in a Page.

சுந்தரமூர்த்தி நாயனர் இயற்றியது. 252 *a* போன்றது.

861. *(c)* திருத்தொண்டர் திருவந்தாதி

Lines 8 in a Page.

நம்பியாண்டார் நம்பி இயற்றியது. 252 *b* போன்றது.

862. *(d)* பெரிய புராண சாரம்

Lines 9 in a Page.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் இயற்றியது. 255 *b*. போன்றது.

863. *(e)* சேக்கிழார் புராணம்.

Lines 9—10 in a Page.

கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் இயற்றியது. 255 *c*. போன்றது.

முதல் ஏட்டில்,

வேகமா முத்தி சேரும் வினைகளுந்
தாக போகம் விடாத தளர்ச்சியுஞ்
சோம வாரியி னுல்வருந் துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுவோம்.

ஒற்றை மருப்பு மிருபதமு மொளிசேர் நயன மொரு மூன்றுங்
கொற்ற வலங்கற் புயநான்குங் கோலக் கரங்க ளோரைந்தும்
வெற்றி புனைந்த மதவாறும் விளங்குங் குன்றிற் றடிவருந்தப்
பெற்ற களிற்றின் றிருநாமம் பேசிப்பாசப் பிறப்பறுப்பாம்.

864. *(f)* அறுபத்து மூவர் மரபின் வகை தொகை தெரியும் அடைவு.

Lines 9 in a Page.

இது ஐந்து விருத்தத்தில் 63 நாயன்மார்களின் மரபு விவரமும் இன்ன மரபினர் இத்துணையர் எனவும் கூறுவது. இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியார். இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

திருஞான சம்பந்தர் தண்டீசர் முருகர்
சிறப்புலியார் கணநாதர் திருநீல நக்க
ரருள்சேரும் பசுபதியாம் சோமாசி மாற
ரப்பூதி நமிநந்தி கலையர்பூ சலையார்
பெருவாய்மை மறையவர்கள் பன்னிருவர் சைவப்
பெருமாணற் சடையரிசை ஞானிப்புகழ்த் துணையா
ரொருநால்வர் சிவமறையோர் சிறுத்தொண்ட ரென்னு
மொருவர் மருத்துவர்மன்ன ரறுவரையு முரைப்பாம் (1)

End :

மாமறையோர் பன்னிருவர் சிவமறையோர் நால்வர்
மருத்துவர்தங் குலத்தொருவர் மன்னவரின் மூவர்
கோமுறைமைக் குறுநிலமன் னவரைவர் வணிவர்
குலத்துமைவர் வேளாளர் பதின்மூவர் குயவர்
தாமறவே டர்கள் பாணர் கடைஞர் செக்கார்
சான்றார் வண்ணார் பரதர் சாலியரோ ரொருவ
ராமிருவ ரிடையரிரு மூவர்மர பறியா
ராகவறு பத்துமூன் றுகுமா தவரே, 5.

அறுபத்துமூவர் மரபினுடைய வகையுந் தொகையுந்
தெரியுமடைவு முற்றும்.

## 865 (g) மூவர் திருப்பாட்டின் பெருமை.

செய்யுள் 3 Lines 7—9 in a Page.

Beginning :

புனலினேடெதிர் செல்லெனச் செல்லுமே புத்தனுர்
தலைதத்தெனத் தத்துமே
கனலினேடது பச்சென் றிருக்குமே கதவு மாமறைக்
காட்டினடைக்குமே
பனையிணுண்பனை பெண்பனையாகுமே பழைய வென்பு
பொற்பாவையதாகுமே
சினவராவிடந் தீரெனத் தீருமே சிறந்த சம்பந்தன்
செந்தமிழ்ப்பாடலே 1.

தலைகொ ணஞ்சமு தாகி விளையுமே தழலினீறு
தடாகமதாகுமே.
கொலைசெய் யானை குறைந்து பணியுமே கூறராவிடந்
தீரெனத்தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னுனே கதவு சென்று
கடுகத்திறக்குமே
யலைகொள் வாரியிற் கல்லு மிதக்குமே யப்பர் செய்யு
மருந்தமிழ்ப்பாடலே. 2.

End .

வெங்கரா வுண்ட பிள்ளையழைக்குமே வெள்ளை யானையின்
மீதேறவைக்குமே
மங்கை பாகரைத் தூது செல்விக்குமே மருவியாறு வழி
பட்டு நிற்குமே
செங்கலான பசுபொன்ன தாகுமே திகழு மாற்றிட்ட
செம்பொன்னுரைக்குமே
துங்க வாம்பரி சேரர்க்கு நல்குமே துலங்கு நாவலூர்ச்
சுந்தரன் பாடலே. 3.

Colophon :

விரோதி-ஷு வையாசி-மீ 10-உ ஆண்டியப்பிள்ளையவர்களுக்கு திரைலோக்கியிலிருக்கு முத்துகுமார வாத்தியார் பெரிய புராணமெழுதி முடிந்தது. முற்றும்.

முத்தையன் பாதாரவிந்தமே துணை.

குறிப்பு :

புராண அட்டவணை எழுதிய ஏடுகள் 3 கோக்கப்பட்டிருக்கின்றன.

---

866 No. **257.** (*a*) பெரிய புராணம்.

ஏடுகள் 240 ; Lines 5—8 in a Page.

இதில் கடவுள் வாழ்த்து முதல் நமிநந்தியடிகள் புராண முடிய அதாவது முதற்காண்ட முழுவதும் இருக்கின்றது. பழைய பிரதியாகக் காணப்படுகிறது.

திருத்தொண்டர் புராணமுதற்காண்ட முற்றும்.

---

867. (*b*) திருத்தொண்டத் தொகை.

Lines 5—6 in a Page.

**252** (*a*) போன்றது.

Colophon :

சோபகிருது-ஷு வைகாசி-மீ அரியிஞன் எழுதி நிறைந்தது முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

---

868. No. 258. (*a*) பெரிய புராணம்.

ஏடுகள் 291 ; Lines 6—12 in a Page

இதில் கடவுள் வாழ்த்து முதல் வெள்ளை யானைச் சருக்க மீருகப் புராண முழுவது மிருக்கிறது.

இதுவும் மிகப்பழமையான ஏடாகக் காணப்படுகின்றது.

ஆக காண்டமிரண்டுக்குந் திருவிருத்தம் 4302.

பெரிய புராணம் முற்றும்.

Colophon :

கனகசபை நாதன் றிருவருளினுலே எழுதிமுடிந்தது. அனந்தப்ப முதலியார் வச்சிரகாயமாயிருக்க, பிரமாதி-ஸூ புரட்டாசி-மீ 2-ல் தொடுத்து அற்பிகை-மீ 10-ல் ஆக நாற்பது நாளையிலே எழுதினுன்.

வேம்பற்றூரில் கல்லூரணியில் கொந்தக வெள்ளாளரில் பெருமாக்கள சொக்கப்பா மகன் பெருமாள், இதுக்குச் சாட்சி அனந்தப்ப முதலியார் பாம்பாட்டியில்.

869. (*b*) திருத்தொண்டத் தொகை.

Lines 7—9 in a Page.

இது, 252 (*a*) போன்றது.

870. (*c*) காசிகாண்டம் கங்கையாயிர நாமம்.

Lines 8 in a Page.

இது, காசிகாண்டத்தின் ஒரு பகுதியாகிய கங்கையாயிர நாமமுரைத்த அத்தியாயத்துள்ளது. இதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியன். அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

அமுதோ தகையச் சுதையனகை யதுலையனந்தை யபிராமை
கமலை கவுரி கந்தவதி கங்கை காந்தை கல்யாணி
யிமையூர் மினையானந்த வல்லியேகை யுதாரை யோங்காரை
விமலை தாரை பராநந்தை விபூதி தேவி யாசாரை 1.

கருணை கோரை பராசத்தி காந்தி துர்க்கை சிராலம்பை
வரசை சாம ரூபைதிரிபதகை யபையை வசுதாரை .
பரையீசர் சேர்வலலவை சார்ப்பானு மதிசூலினி விசையை
விரதை யனுதநாதை தவரூபை மாதா விபாவரியே 2.

சத்தி வினதை சீலவதி தானசாரை குணாதீதை
சித்திரரூபை ரதிவாம தேவி மந்தாகினி வாணி
பத்திரை லீலா வதி சாந்தை வானி பாகீ ரதிநிமலை
முத்தியருண்மா னினிவேத முதலாரியை காயத்திரியே. 3.

வேதவதியம் பிகையயிந்திரத் துதிசந்திரசானவி விளங்கு
போகவதிசொற் கலாவதி மோகினிமா தவிபுண்ணியைமுதல
வாகவருமா யிரம்பெயரு முள்ளத்துணரி னரும்பிறவிச்
சோகந் தணிக்கும் புனற்கங்கை தோய்ந்த பலனிங்கடை
குவரால். 4.

End :

இன்ன கடவு ளுமங்கள் யாவுமெழுதி மனையில் வைப்பின்
முன்னை வினைக டீர்ந்துலக முழுது மேத்த வரும்புதல்வர்
மன்னுநிதிய முதலபெருந் திருவினேங்கி வாழ்வரென
மின்னு கதிர்வேலுடைக் கடவுள் முனிவனேடும்
விளம்பினனுல். 5.

## 871. No. 259 (*a*) பெரிய புராணம்.

ஏடுகள் 344 ; Lines 8—12 in a Page.

இதில் 258-ம் நம்பரைப்போல முழுவதும் இருக்கிறது. ஒன்பது ஏடுகள் அதாவது 320 முதல் 328 வரையிலுள்ள ஏடுகள் இரட்டித்து எழுதப்பட்டுள்ளன.

Colophon :

முதலிங்கர் ஒப்பனை யம்மை திருவாசலிலே இருந்து எழுதி முகித்தேன்.

சரவணைப்பெருமாள் சைவப்பிரகாச பண்டாரம் திருஞான சம்பந்தன் எழுத்து.

நந்தன-ஷு ஆடி - மீ 7 - உ செவ்வாய்க்கிழமையும் தெசமியும் பூசமும் கூடின நாள் முகிந்தது முற்றும்.

---

## 872. (*b*) திருக்தொண்டத் தொகை.

Lines 6—7 in a Pags.

இது, 252 *a* போன்றது.

---

## 873. (*c*) திருத்தொண்டத் தொகை.

Lines 6—7 in a Page.

இதுவும் 252 *a* போன்றது.

குறிப்பு :

இத்துடன் பெரிய புராணச் செய்யுட்டொகை எழுதிய ஏடுகளும் கோக்கப்பட்டுள்ளன.

874 *(d)* திருத்தொண்டர் புராணச் செய்யுட் டொகை.

Lines 7 in a Page.

இது, பெரிய புராணத்துள்ள புராணம் ஒவ்வொன்றிற்கும் செய்யுள் இத்துணை யெனக்கூறுவது.

Beginning :

திருவருள்சேர் திருத்தொண்டர் கூட்டந் தன்னைச்
சேக்கிழா ரெடுத்துரைத்த செய்யுள் சொல்லின்
மருவுதிரு மலைச்சருக்க மைம்பா னட்டு
வளமுப்பத் தஞ்சுமனு வேந்தற் கைம்பான்
பெருவினைறித் திருக்கூட்டம் பதினொன் றுகும்
புகழ்நாவ லூர்க்கோவுக் கிருநூற்று மூன்று
மருணெறிசேர் தில்லைவா ழந்தணர்க்குப் பத்தா
மணிகண்ட குயவற்கு நாற்பத்து நாலே. (1)

End :

ஆருதா ரங்கடந்த பொருளை யேசென்
றப்பாலு மடிச்சார்வார்க் கிரண்ட தாகும்
பேருன பூசலுக்குப் பதினெட் டாகும்
பேதைமங்கை யர்க்கரசி மூன்றும்பேசில்
சீருத நேசனு ரைந்தா மெங்கள்
செங்கணு ரிரண்டொன்பான் பாணர் பன்னிரண்டா
மீருன புகழ்ச்சடைய னிசைஞானிக் கொவ்வொன்று
மிக்க வெள்ளானைச் சருக்க மம்பத்துமூன்றே. 9.

875. **No. 261.** பெரிய புராணம்.

ஏடுகள் 218 ; அபூர்த்தி Lines 7—16 in a Page.

இதில், தில்லை வாழந்தணர் புராணத்திலிருந்து சாக்கிய

நாயனார் புராணத்தில் 9-ம் செய்யுள் வரையும் இருக்கின்றது.

---

876. No. 286. பெரிய புராணம்

ஏடுகள் 190 ; Lines 5—9 in a Page.

இதில், கடவுள் வாழ்த்து முதல் திருநின்ற செம்மைச் சருக்க முடிய இருக்கிறது.

*குறிப்பு :*

இதில் கடவுள் வாழ்த்து முதல் தடுத்தாட்கொண்ட புராண முடிய மீட்டும் எழுதிய ஏடுகள் கடைசியில் சேர்க்கப் பட்டுள்ளன.

---

877. No. 295. பெரிய புராணம்.

ஏடுகள் 89 ; Lines 10—11 in a Page.

இதில் கடவுள் வாழ்த்து முதல் அப்பூதி நாயனார் புராண முடிய இருப்பதோடு, நீலநக்க நாயனார் புராணத்தில் 10 செய்யுட்களும் இருக்கின்றன. இதில் 28-வது ஏட்டில் பாதியும் 29-வது ஏடு முழுவதும் எழுதப்படவில்லை. இந்தப் பிரதியில் ஏடுகள் முற்றும் சிதைந்துமிருக்கின்றன.

---

878. *No.* 707. பெரிய புராணம்.

ஏடுகள் 43 ; *அபூர்த்தி* ; Lines 7—8 in a Page.

இது 252-ம் நம்பர் போன்றது. இதில் நாட்டுச் சிறப்பு முதல் தடுத்தாட்கொண்ட புராண முடிய இருப்பதோடு திருநீலகண்டர் நாயனார் புராணத்து முதற் செய்யுளும் இருக்கின்றது.

879. *No.* **708.** பெரிய புராணம்.

ஏடுகள் 48 ; *அபூர்த்தி* ; Lines 7—9 in a Page.

இதுவும் 252-ம் நம்பரைப் போன்றது. இதில் பாயிர முதல் அமர்நீதி நாயனார் புராணத்தில் 40-ம் செய்யுள் முடிய இருக்கிறது. கடைசியில் வெற்றேடுகள் 48 கோக்கப் பட்டுள்ளன.

---

viii. சைவத் தோத்திரங்கள்.

880. *No.* **149.** திருப்புகழ்.

ஏடுகள் 131 ; *சிதிலம்* Lines 4—6 in a Page.

இது முருகக்கடவுள் தோத்திரம். சந்த விருத்தங்களால் அமைந்தது. இத்திருப்புகழின் தொகை பதினாயிரம் என்பர். அவற்றுள் 1000 செய்யுட்கள் பட்டுக்கோட்டை சுப்பிரமணியப் பிள்ளையவர்களால் சுத்தபாடமாக அச்சிடப்பட்டுள்ளன. இந்தப்பிரதியில் 122 செய்யுட்களிருக்கின்றன. இவை தொடர்ந்தவைகளல்ல. இதனை இயற்றியவர் அருணகிரிநாதர். இவர் திருவண்ணாமலையில் இருந்தவர். முருகக்கடவுளிடத்தில் மிக்க அன்புடையவர். சந்தம் பாடுதலில் வல்லவர். இவர் தாம் இயற்றிய இத்திருப்புகழ் 36-ம் செய்யுளில் பிரபுட தேவராயரைக் கூறியிருக்கின்றனர், அப்பெயர் விஜய நகரத்து அரசனாகிய இரண்டாம் தேவராஜனுக் குரியதாகும். அவன் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்டவன். ஆதலால் அவன் காலத்தினராகிய இந்நூலாசிரியர் அருணகிரியாரும் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டினராவர்.

(Vide G. O. No. 492 Public dated 2-nd July 1906 Paragraph 23.) இவர் இயற்றிய வேறு நூல்கள் திருவகுப்பு,

கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில் விருத்தம்.

Beginning :

எல்லாரு ஞானத் திளேஞரே கேளீர்சொல்
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
றிருப்புகழைக் கேட்குஞ் செவி.

End :

கோலமறை யொத்த மாலேதனிலுற்ற நேரமதன் விட்ட கணேயாலே
கோதல ரருக்கன் மேவு பொழிலுற்ற கோகுல மிகுத்த குரலாலே
ஆலமெனவிட்ட வீசுகலேபற்றி யாவியழவுக்கிற நிலவாலே
யாவிதளர் வுற்று வாடுமெனே நித்தமாசைக ளொறுப் பதழகோதான்
நாலுமறை கற்ற நான்முக னிடத்து நாரணர் தம் வெற்றி கோனே
நாவலர் மதிக்க வேல்தனே யெடுத்து நாகமுற விட்ட மயில்வீரா
சேலனவிழிச்சி வேடுவர் சிறுக்கி சீரணி தனத்தில் மகிழ்வோனே
சீதவயல் சுற்றும் நாவல்தனிலுற்ற தேவர்சிறைவிட்ட பெருமாளே.

இதிலுள்ள திருப்புகழ்களின் முதல் நினைப்பு :

1. முத்தைத்தரு
2. நாலிரண்டிதழ்
3. பெருக்கச் சந்தவித்து
4. மதவெங்கரி
5. மச்சைமெச்சு
6. விடுங்கைக்கொத்த
7. காதைக்காதை
8. ஆரத்தோடணி
9. முதிருமாரவார
10. திருக்குலாவு

11. மனகபாட
12. அடைபடாது
13. உடனூடு
14. இரதமூறு
15. அயலின் வாவி
16. நிலவின்மாரன்
17. சுருதியூடு
18. அலகில்பேறு
19. தொடர்வடாது
20. குருதி தோலினூல்
21. ஆசையோடு
22. வரைத்தடம்
23. மன்றலம்
24. பதித்த செஞ்சன
25. உனைத்தினம்
26. தோலொடு மூடிய
27. மனையகன் மைந்தர்
28. உறவு நெஞ்சிகள்
29. கண்டுமொழி
30. அம்பொற்றிய
31. உரத்த சம்பிரம
32. குழைக்குஞ் சந்தன
33. வெஞ்சரோருக
34. அங்கை மென்குழலாய்
35. அணிப்பட்டனுக
36. காரணிந்த
37. விரைமருவு
38. நரவிலங்கதின்
39. விழியால் மருட்டி
40. இராவினிருள்
41. மகாகேதனர்
42. முறுகுகாளவிட
43. மருவேசெறிந்த
44. சேலுமயிலும்
45 வஞ்சகலோப
46. களவுகொண்டு
47. கருமுகில் போல
48. இலவிதழ்
49. ஒரு வழிபடாது
50. கயல்விழிக்கே
51. முழுகிவிடவா
52. தேதனவாசமுற்ற
53. ஆராத
54 கலகவிழி
55. யமராசனை
56. கடல்பாவு
57. பாணமதுதைக்கும்
58. யானைவிடத்தை
59. தருணமணி
60. கரிய பெரிய
61. கருநிறஞ்
62. பரிமளமிக
63. புனமடந்தை
64. கருப்பற்றி
65. அயில்புக்கயில்
66. அற்றைக்கற்றை
67. தசைதொறும்
68 கனகிரவுஞ்சத்தில்
69. தனிதரும்
70. மக்கட்கு
71. சுறுக்கப்பற்று
72. வார்ந்தப்பிடு
73. கொத்தார்பர
74. முத்தாமுத்தி
75. புரையடுஞ்
76. முலைபுளக
77. துப்பிரப்பா
78. இலைச்சுருள்
79. முத்துத்தேறி
80. கனகத்திற்
81. பெருக்கவுபாயம்
82. பொற்பதத்தினை
83. மாயாசுரூப
84. உறவுகி சு

85. மேகலை குலைத்து
86. அஞ்சனவேல்விழி
87. இருப்பவல்
88. கமலமொட்டை
89. முத்த முதலான
90. & 91. ,,
92. புடர்புவியி
93. ஐந்துபூத
94. குவலைசால
95. பெருளில் மேற்
96. அரிவையர்
97. வாசித்து
98. குமுதவாய்
99. கரையற
100. அறுகுநுணி
101. துஞ்சுகொட்டில்
102. வேலைப்போல
103. ஒருவனை
104. இரதமான
105. நெய்த்த சுரி
106. மருக்குலாவிய
107. முலைகுலுக்கி
108. இரக்கமவர்
109. படிபுனல்
110. மாலையலைந்து
111. சுரும்பணி
112. அல்லசல
113. பையரவு
114. முக........
115. ஆனைமுகவன்
116. சுருதியாய
117. பந்தாடி
118. அன்பாகவந்த
119 ஈரமொடு
120. பரவுவரிக்காய்
121. கரியகுழல்
122 கோலமறை

881. **No. 150** திருப்புகழ்.

ஏடுகள் 68 ; சிதிலம் Lines 5—8 in a Page.

இது முற்பிரதியைப் போன்றது. இதில் 51 செய்யுட்கள் இருக்கின்றன.

Beginning :

எல்லாரு மானிடவ ராவரோ விப்புவியில்
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

முத்தைத்தரு பத்தித் திருநகை யத்திக்கிறை யத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர னெனவோது

முக்கட்பர மற்குச்சுருதியின் முற்பட்டது கற்பித்திரு பொருள்
முப்பத்துமூ வர்க்கத் தமரரு மடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு மொற்றைக்கிரி
மற்றைப் பொழுதொரு
பட்டப்பகல் வட்டத்தி கிரியி லிரவாகப்

பத்தர்க்கிர தத்தைக்கடவிய பச்சைப்புயல் மெச்சித்
தருள்பொருள்
பட்சத்தொடு ரச்சித்தருளுவ தொருநாளே

தித்தித்திசை யொத்தப்பரிபுர நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுதொடு கழுகாடத்

திக்குப்பரி வட்டப்பயிரவி சித்ரப்பவுரிக்குத் திகுதிகு
திக்குத்திகு தொக்குத் திரிகடக மெனவோதும்

கொத்துப்பறை கொட்டக்களமிசை குக்குக்குகு குக்குக்குகு
குத்திப்பிடி புக்குப்புதையென முதுகூகை [குரு

கொட்புற்றெழ நட்புற்றவுணரை வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

End :

வஞ்சகர் லோபர்மோடர் தன்பொருள்தேடி நாடிமஞ்சரி
கோவை தூதுபலவாயின்
வண்புகழ் பாரிகாரி யென்றிசை வாதுகூறிவந்தவர்போல
வீணிலழியாதே
செஞ்சரணுதகீத கிண்கிணி நீபமாலை திண்டிரல் வேல்
மயூர முகமாறுஞ்
செந்தமிழ் நாளுமோதி யுய்ந்திட ஞானமீறு செங்கனி
வாயிலோர்சொ லருள்வாயே

பஞ்சவனீடுகூனு மொன்றிடுதாபமோடு பஞ்சவர்
வாதுகூறு சமண்மூகர்

பண்பெறு பீலியோடு வெண்கமு வேறுபோது பண்டித
ஞான நீறு தருவோனே

குஞ்சரி மானைமேவு புன்புனமீதுலாவு குன்றவர்சாதிகூட
விளையாடிக்

கும்பிடநாடிவாழ்வு தந்தவரோடுவீறு குன்றுதோறுடல்
மேவுபெருமானே.

இதிலுள்ள திருப்புகழ்கள் :—

1. முத்தைத்தரு
2. நாதவிந்து
3. தீதுற்றே
4. பட்டுப்படாத
5. சாலநெடுநாள்
6. அதலசேடனூர்
7. கருவடை ந்து
8. கனகக்கும்ப
9. தீயும் புனலொரு
10. தோதகப்பெரும்
11. எனையடர்ந்த
12. மன்றலங்கொந்து
13. உனைத்தினந்தினம்
14. கொடியன பிணி
15. அனிவப்பரி
16. வாசித்தநூன்
17. காதிலோலை
18. பரிமளமிருகமத
19. பருவாரிநாரி
20. தோடுற்ற
21. கட்டமுறு
22. துள்ளுமதவேள்
23. மருக்குலாவிய
24. ஆரத்தோடணி
25. பெருங்காரியம்
26. இல்லையென
27. அமிழதுத்தி
28. முருகமயூர
29. கடாவினிடை
30. குமரகுருபர
31. தோலெலும்பு
32. முனையழிந்தது
33. தோரணகனக
34. அனிச்சங்கார்
35. கருவினுரு
36. பாதிநதிமதி
37. தோலத்தி
38. கருகியே
39. அகரமுத
40. மாயவாடை
41. இரசமான
42. மக்கட்கு
43. எனக்குச்சற்
44. கடற்றெப்ப
45. இதத்துப்பத்தி
46. இடமருவு
47. பொற்பதத்தினை
48. தாக்கமருக்கு
49. வாரணமுகம்
50. முந்துதமிழ்
51. வஞ்சகர்

Colophon :

குருபாதமே துணை. குமரகுருபர முருக சரவண வள்ளி நாயகன் முன்னின்று சகல பிழையும் பொறுத்து ல(ர)ட்சிக்கக் கடவது.

---

882. *No.* **151.** திருப்புகழ்.

ஏடுகள் 22 ; சிதிலம் Lines 5—6 in a Page.

இதுவும் முற்பிரதி போன்றது. இதில் 38 திருப்புகழ் இருக்கின்றன.

---

883. *No.* **152.** திருப்புகழ்.

ஏடுகள் 32 ; சிதிலம் அபூர்த்தி Lines 5—6 in a Page.

இதுவும், முன்பிரதி போன்றது. இதில் 69 திருப்புகழ் இருக்கின்றன.

---

884. *No.* **153.** திருப்புகழ்.

ஏடுகள் 54 ; சிதிலம் அபூர்த்தி ; Lines 4—5 in a Page.

இதுவும் முன்பிரதியைப் போன்றது. இதில் 100 திருப்புகழ் இருக்கின்றன.

---

885. *No.* **154.** திருப்புகழ்.

ஏடுகள் 48 ; மிகவும் சிதிலமாயிருக்கிறது, அபூர்த்தி Lines 5—6 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் 80 திருப்புகழ்கள் இருக்கின்றன.

886. *No.* **155** திருப்புகழ்.

ஏடுகள் 58 ; சிதிலம் அபூர்த்தி Lines 5 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 99 திருப்புகழ்கள் இருக்கின்றன. பல ஏடுகளில் பாதியே யிருக்கின்றன.

887. No. **156** திருப்புகழ்.

ஏடுகள் 30 ; சிதிலம் அபூர்த்தி Lines 4—5 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 40 திருப்புகழ்கள் இருக்கின்றன.

888. No. **157.** திருப்புகழ்.

ஏடுகள் 66 ; சிதிலம் அபூர்த்தி Lines 4—5 in a Page.

இதுவும் முன்பிரதியைப் போன்றதே. இதில் 101 திருப்புகழ்களிருக்கின்றன.

889. *No.* **158** திருப்புகழ்.

ஏடுகள் 34 ; சிதிலம் அபூர்த்தி Lines 6—7 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் 69 திருப்புகழ் இருக்கின்றன.

குறிப்பு :

39 திருப்புகழ் எழுதிய வேறொரு பிரதியும் இருக்கின்றது.

890. *No.* **159** திருப்புகழ்.

ஏடுகள் 50 ; சிதிலம் அபூர்த்தி Lines 5—6 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் 94 திருப்புகழ் இருக்கின்றன.

891. *No.* **160** திருப்புகழ்.

ஏடுகள் 29 ; சிதிலம் அபூர்த்தி Lines 6 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 64 திருப்புகழ் இருக்கின்றன.

892. *No.* **161** திருப்புகழ்.

ஏடுகள் 71 ; சிதிலம் அபூர்த்தி Lines 4—6 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 145 திருப்புகழ் இருக்கின்றன.

குறிப்பு :

15 திருப்புகழ் எழுதிய வேறு பிரதியும் இருக்கிறது.

893. *No.* **162**. திருப்புகழ்

ஏடுகள் 28 ; மிகச்சிதிலம் அபூர்த்தி Lines 5—6 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 37 திருப்புகழ் இருக்கின்றன.

894 *No.* **163** திருப்புகழ்.

ஏடுகள் 58 ; சிதிலம் அபூர்த்தி Lines 4—5 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 68 திருப்புகழ்

இருக்கின்றன. இதன் நடுமத்தியில் கரையான் அரித்து சிதைந்திருக்கிறது.

---

### 895. *No* 164 (*a*) திருப்புகழ்.

ஏடுகள் 48 ; சிதிலம் அபூர்த்தி Lines 5—6 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. இதில் 61 திருப்புகழ் இருக்கின்றன.

---

### 896. (*b*) தத்துவக்கட்டளை.

Lines 7—9 in a Page.

இதில் தத்துவம் தொண்ணூற்றாறுக்கும் விபரம் எழுதப் பட்டுள்ளது.

Beginning :

பூதமைந்தாவன :—பிருதிவி, யப்புத், தேயு, வாயு, ஆகாயம் 5.

ஞானேந்திரியமைந்தாவன :—சோத்திர, தொக்கு, சக்ஷு சிகுவை, ஆக்கிராணம் 5.

End :

வாக்கு நாலாவன :— சூக்குமை, பைசந்தி, மத்தியமை, வைகரி 4. ஆக தத்துவம் 96.

குறிப்பு :

*a*இல் உள்ள திருப்புகழ்களுக்கு முதற்குறிப்பு எழுதிய இரண்டு ஏடுகள் கடைசியில் கோக்கப்பட்டுள்ளன.

897. *No.* **165** திருப்புகழ்.

ஏடுகள் 50 ; Lines 6 in a Page.

இதுவும் முன்பிரதியைப் போன்றது. இதில் 98 திருப்புகழ்கள் இருக்கின்றன. ஏடுகள் எலிகடித்தும் சிதைந்துமிருக்கின்றன.

898. *No.* **166** திருப்புகழ்.

ஏடுகள் 50 ; Lines 5—6 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் 100 திருப்புகழ்கள் இருக்கின்றன.

Colophon :

சித்தார்த்தி-ஸு புரட்டாசி-மீ 6உ அழகிரி திருப்புகழ் முடிந்தது.

899. *No.* **443** திருப்புகழ்.

ஏடுகள் 7 ; Lines 7—8 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் சிதம்பரத்திருப்புகழில் ஏழு இழுக்கின்றன.

900. *No.* **311** (*a*) சிவஸ்தலக்கோவை.

ஏடுகள் 183 ; சிதிலம் Lines 4 in a Page.

சிவஸ்தலங்களை கோவைப்படக் கூறுவது. இது 425 *b*. நம்பரினும் வேறுபட்டது. ஆரம்பத்தில் சில ஏடுகள் சிதைந்து விட்டன. இடையிடையே சிதிலமாயிருக்கிறது. பிழைகள் மலிந்திருக்கின்றன. 'ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

கடைமுடி நின்றியூர் திருப்புன் கூரொடு
தென்திரு நீடூர் னியூரினில் மன்னி யிருந்தனை
பதிவேள்விக்குடி யெதிர் கொள் [பாடியும்]
திருமணஞ் சேரியு மருள்புரி கொறுக்கையும்
மருப்பயில் சோலை ..............................
குரக்குக் காவும் விருப்புட னமர்ந்தனை
குடதிசை கோகர்ணப்பதி கூடினை வடதிசை
பருப்பத மாமலை விருப்புட னமர்ந்தனை
கடிதிக ழனேகதங் காபத மலையும்
இந்திரன் தொழு மெழுதென் னீலப்
பருப்பத மலையும் திருக்கே தாரமும்
நொடித்தான் மலையு மிருப்பிட மாகிலும்
விடையுடை யண்ணலே
எவ்வுரு வுடையை யெவ்விடத் துகந்தனை
யாது நின்செய லாரறி வாரே.

கண்ணுதலோன் வாழுங் கயிலைப் பதியுடனே
யெண்ணி யிருநூற்றே டொம்பதும்—மண்ணிலே
தேமாலை வார்குழலார் (ய்) தெய்வத் தமிழ்மூவர்
பாமாலை பெற்ற பதி.

சிவதல திருப்பதிக் கோவை முற்றும்.

---

901. (*b*) விஷ்ணு திருப்பதிக்கோவை.

Lines 4—5 in a Page.

இது 433 *a* நம்பரினும் வேறுபட்டது. இதில் திருமால் திருப்பதிப்பெயரும் அவ்விடத்துக் கோயில் கொண்டுள்ள திருமால் திருநாமமும் கூறப்பட்டுள்ளன. ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை.

Beginning :

பொய்கைபூதம் பேயாழ்வார் பொருநர் சடையர் போரேறு
மெய்கொள் வேதம் தமிழ்செய்வார் விதியார்
கமலப்பர காலர்
மைகொள்சோலை மழிசையர்கோன் மண்டங்குடிக்
கோன்மறைமன்னன்
துய்யபாணன் எதிராசன் துயரிற்பாதம் சரணமக்கே.

சீராரும் திருவரங்கம் ரங்கநாதர்
திகழுறையூர் அமர்ந்தபிரான் நின்ற நம்பி
..... ருந் தஞ்சையில் வாழ் நீலமேகர்
............அன்பில் வடிவழகப் பெருமாள்கண்டீர்

ஏராரும் கரம்பனூர் உத்தமன்வாழ்
இயம்ப வெள்ளறை செந்தா மரைப்பூங் கண்ணர்
தாரார் புள்ளம் பூதங்குடி வல்வில் விராமர்
தகுதிருப்போர் வாழ் நாராயணர் தாம்தாமே.

End :

பெரியதோர் வைகுந்தம் பரமபதநாதர்
திருப்பாற்கடலில் வாழ் சிங்காத்திரிநாதர்
திருவயோத்தியில் வாழ் ரெகுநாதரென்க
பெருமதுரையில் வாழு முகுந்தனர்
பெரிய திருவாய்ப்பாடி கிருட்டிணனர்
மருவுவட துவாரகையில் மன்னனரென்க
வந்து தென்துவாரகையில் மன்னனரானர்.

சோழ மண்டல நாற்பத் திரண்டுடன்
துய்ய பாண்டி பதினெட்டுஞ் சொல்லியே
வாழு மாமலை யானமீ ரேழுடன்
மன்னர் போற்றிய வாழ்தொண்டை மண்டலம்
ஏழு மூன்றும் எதிர்மா றிரண்டுடன்
இதன் வடக்குப் பதினொன்றும் பாற்கட.

லாழி யான்பதி நூற்றெட்டு மோதுவார்க்
கன்று செய்வினை யன்றே யகலுமே.

விட்டுணுத்தலம் திருப்பதிக்கோவை முற்றும்.

---

## 902. (c) தேவாரத்திரட்டு.

Lines 5—9 in a Page.

இது 683-ம் நம்பர் போன்றது. இதில் மூவர் அடங்கன் முறையினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தேவாரப் பதிகங்க ளிருக்கின்றன. இவற்றுடன் சிற்சில தனிப்பாடல்களும் திருவாசகத்துள்ள அடைக்கலப்பத்தும் திருவெம்பாவை முதலியவும் அம்பை தோத்திரமும் எழுதிய ஏடுகள் கோக்கப் பட்டுள்ளன. ஏடுகள் சிதைந்தும் ஒடிந்தும் இருக்கின்றன.

---

## 903. *No.* 340 கதிர்காம வேலவன் தோத்திரம்.

ஏடுகள் 21 ; அபூர்த்தி சிதிலம் Lines 4—5 in a Page.

இது கதிர்காமத்தில் வீற்றிருக்கும் வேலாயுதர் தோத்திரப்பா மாலை. இதில் 40 செய்யுட்களே இருக்கின்றன. 6 வெற்றேடுகள் கோக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning :

சிங்கள நாட்டிற் சிறந்தகதிர் காமத்தி
லங்குளசெவ் வேலவனுக் காசையாய்—நங்கருத்தில்
வந்ததொரு மாலை வழுத்தவே தந்திமுகன்
தொந்திவயிற் றோனே துணை.

கதிர் கிரி வருமுருகா கழலிணைகள் சரணம்.

ராமநாதபுரத்திலிருக்கும் முருகப் பண்ணுவியார் பாதமும் தஞ்சாவூரிலிருக்கும் அழகப்பய்யா பாதமு மற்றுமுண்டாகிய போத்திமாருட் பாதமும் பரமேசுரனுக்கு துணையாய் லெட்சிக்கவும். வையாபுரி அய்யன் துணையாய் லெட்சிக்கவும்.

கற்றறிவ......க்கனுவிலும் நின்னுமமே
மற்றொருவ ரில்லை மயிலோனே—பெற்ற
செழுந்திருக்கை வேலைச் சிறுகாலை வாழ்த்தி
எழுந்திருக்க வேலை எனக்கு.

சீர்கொண்ட செங்கமல வல்லி பங்கனுஞ் செம்பொற்பணி
வார்கொண்ட கொங்கை மலைவல்லி பங்கனும் வானவருந்
தார்கொண் டணிந்து தொழும்பாத னேநறுந் தாரளகக்
கார்கொண்ட வள்ளிதன் பங்கா கதிர் கடாசலனே. 1

கொம்புளங் காதலித்தேமத வேள்விட்ட கொக்குமல
ரம்புளங் கண்டைத் துறைந்திடும் வாறை யறை யென்னுமே
அம்புளென் றேவிட்டனளென்னை யேவுமின்று ளந்தக்
கம்புளெங் கேமுருகேசா கதிர்கடாசலனே. 2

மட்டழ கான கருங்கூந்த லாள்கொண்ட மையலுக்காய்
நெட்டழ கான தொடைகேட்க வந்திடு நேரிழையென்
பட்டழ கான மொழிபகராமல் பகைதக்கச் சொன்னாய்
கட்டழ காகதிர் வேலா கதிர்கடாசலனே. 11

வங்காளதேசத்த ரீழத்தர் சீனத்தர் வந்திறைஞ்சி
யிங்கா ளமையென்று துத்தியம்பண்ணு மெழிற்பதனே
வெங்காளர்தந்த பன்னகம் பூண்ட விமலர்கையில்
கங்காள நாதற்குச் சேயே கதிர் கடாசலனே. 21

End :

இந்தாட வித்துலை யாப்பவத் தேகிடந் தெய்த்திடுவேன்
சந்தாபந் தீரவருவதென்றோ தண் ணளியறல்போல்

கொந்தா ரளகக் குறத்தி பயோதரக் கோட்டிலேக்குங்
கந்தா சிலம்பிடுங் காலா கதிர் கடாசலனே. 40

---

## 904. *No.* 346. கந்தரலங்காரம்.

ஏடுகள் 11 ; பூர்த்தி சிதிலம் Lines 4—8 in a Page.

இது முருகக்கடவுள் தோத்திரம். அருணகிரிநாதரால் இயற்றப்பெற்றது. இவர் இயற்றிய வேறு நூல்கள் கந்தரனுபூதி. கந்தரந்தாதி, திருவகுப்பு, திருப்புகழ் முதலியன. இவ்வாசிரியரைப் பற்றிய விவரத்தை திருப்புகழ், குறிப்பில் காண்க. இது 102 கலித்துறைகளை உடையது.

Beginning :

அடலருணைத் திருக்கோபுரத்தே அந்த வாசலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண்டேன் வருவார் தலையிற்
றடபடெனப்படு குட்டுடன் சர்க்கரை முக்கியகை
கடபடகும்தக் களிற்றுக்கிளைய களிற்றினையே.

பேற்றைத்தவஞ் சற்றுமில் லாத வென்னைப் பிரவஞ்ச மென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்டவர் செஞ்சடாடவிமே
லாற்பைப்பணியை யிதழியைத் தும்பையையம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமாள் குமார கிர்பாகரனே.

End :

தலங்காவல் வேந்தர் தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக்குழிக்குமஞ்சார் துக்க நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்றி லொருகவி தான்கற் றறிபவரே. 152

கந்தனலங்காரம் எழுதி முடிந்தது முற்றும்.

---

905 *No.* **365**. *(B)* சிவகாமியம்மை அகவல்

ஏடுகள் 14 ; பூர்த்தி

இது சிவகாமியம்மை தோத்திரம். செய்தவர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning :

பூவினில் வாழும் பொன்னே மின்னே
மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி
சதுமறை இறைவி தனையறி யறிவி
பசுபதி இறைவி பரசமை யுறைவி
திரிபுர தகனி தினகர நயனி
மரகத வடிவி வரைதனி லுறைவி
முருகவிழ் குழவி முருகனை யருளி
அரகர வசனி அரியொடு துணைவி
கரதல கமலி கருணையில் நிமலி

* * * * *

End :

உம்பர்க ளறியா வுன்றன் மலர்த்தாள்
நம்பி யிருக்கும் நாயடியேன் காண
துவலோ துவலோ சொன்னேன் சொன்னேன்
[கவராமலென்றன் கவலையை யொழித்து]
கமலமலர் வந்தென் கருத்தை யொழித்து
காத்தது காத்தாய் கடைபோ கக்கண்
பாத்தெனக் கருளிப் பரிபுரத் தானே
[மாத்தெனக் குனருள் பாலிப்பது பரமே]

சுவகாமி அம்மைபேரில் அகவல் முகிந்தது. முற்றும்.

## 906. *No.* **389** *A* கந்தரனுபூதி.

ஏடுகள் ; 8 Lines 4—5 in a Page.

இது முருகக்கடவுள் தோத்திரம். இதனை இயற்றியவர் திருவண்ணாமலையில் இருந்த அருணகிரிநாதர். இதில் 41 செய்யுட்களிருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

ஆடும் பரிவே ளணிசே வலனைப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோ தரனே. 1

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனும்நீ யலையோ
வெல்லா மறவென் னையிகழ்ந் தநிலம்
சொல்லாய் முருகா சுரர்பூ பதியே. 2

End :

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினைதந் தருள்வா
யாசா நிகளந் துகளா னதுபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே. 41

கந்தனனுபூதி முற்றும்.

குறிப்பு :

அச்சுப்பிரதியிலுள்ள செய்யுள் வரிசைக்கும் இதற்கும் வேறுபாடு காணப்படுவதோடு பாடபேதமும் இருக்கின்றது.

## 907. No. **390.** *(a)* வேழமுகம்.

ஏடுகள் 37 ; பூர்த்தி ; Lines 4—5 in a Page.

இது விநாயகர் தோத்திரம். சிறுவர்கள் நினைவில் வைப்பதற்கு ஏற்றவண்ணம் அக்கரவரிசையில் அமைந்துள்ளது. இதற்குப் 'பள்ளிப்பிள்ளையார் சிந்தனை' யென்றும் பெயருண்டு. பிழை அதிகம். இதனைச் செய்தவர் ஔவை என்பர்.

அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளிக் கொம்பன் விநாயக னைத்தொழ
துள்ளியோடுந் துடந்த வினைகளே.

சிந்தித் தொழுவது கணபதி செய செய
சீரிய வானைக் கன்றே செயசெய
அன்புட னமரர்கள் நாதா செயசெய
ஆபத்துணையே கணபதி செயசெய
இண்டைச் சடைமுடி இறைவ செயசெய
ஈசன் தந்திரு மகனே செயசெய

* * * * *

End :

றகுபதி விக்கின விநாயகா செயசெய
னந்த லோடாகிலும் பள்ளிப்பிள்ளையார்
சிந்தனை முடிந்தது முற்றும்.

---

## 908. *(b)* சரஸ்வதி தோத்திரம்.

Lines 4—5 in a Page.

Beginning :

பொத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமந்துறை வாழ்வே

வித்தகப் பெண்பிள்ளை நங்கா
வேதப் பொருளுக் கிறைவி

* * * * *

End :

மதிகொடுக்கும் வான்பொருளே
ஓடாதே ஒளியாதே
இட்டது சேறும் பெத்ததே கறியும்
உண்டு நங்கி வெள்ளி உதிக்க
பள்ளிக்கூடத்தை வா வா.

## 909. No. 391. வேழமுகம்.

ஏடுகள் 7 ; பூர்த்தி Lines 3—4 in a Page.

இதுவும் முற்பிரதி போன்றது. முழுதும் இருக்கிறது.

## 910. No 393. மீனாட்சியம்மன் கலிவெண்பா.

ஏடுகள் 10 ; பூர்த்தி ; Lines 9 in a Page.

இது மதுரை மீனாக்ஷியம்மன் தோத்திரம். இதனைச் செய்தவர் சிதம்பர சுவாமிகள். இவர் குமார தேவரது மாணாக்கர். தமது ஆசிரியர் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலை மறுத்தல், அவிரோதவுந்தியார் முதலிய நூல்கட்கு உரையும், திருப்பேரூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருப்பேரூர் முருகன் சந்திமுறை முதலிய நூல்களும் இயற்றியவர். இவருடைய காலம் பதினெட்டாம் நூற்றாண்டாகும்.

இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரு மேனிக் கனங்குழையே—யாராயும

வேதமுத லாகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
யாதி பராபரையே யம்பிகையே.

* * * * *

End :

ஆசு மதுரஞ் சித்திரம்வித் தாரமென்று
பேசுகின்ற வுண்மைப் பெருவாக்கும்—நேசமுடன்
தந்தென்னை யாட்கொண்டு சற்குருவா யென்னுளத்தில்
வந்திருந்து புத்தி மதிதந்து—சந்ததமும்
நீயே துணையாகி நின்றிரட்சி யங்கயற்கண்
டாயேநின் ருளே சரண்.

மீனாட்சியகவல் முற்றும்.

சிவமயம்.

## 911. No. 394 அரநூர் திருமேனியம்மன் தோத்திரம்.

ஏடுகள் 10; அபூர்த்தி சிதிலம் Lines 4—6 in a Page.

இந்தப் பிரதியிலுள்ள செய்யுட்கள் சிங்கார ரசமாக இருத்தலால் இதனைத் திருமேனியம்மன் தோத்திரமென நினைப்பதற்கிடமில்லை. இதில் பாம்பை நாடென்றும் விசைய தேவன் கிளையும் வாழியே என்றும் காணப்படுகின்றன. பாம்பை நாடு என்பது பட்டுக்கோட்டையிலுள்ள பாப்பாநாடாகும் என்பர். விசையதேவர் என்னும் பட்டப்பெயர் பாப்பாநாட்டு ஜமீன்தார்களுக்குரிய தென்பதை இன்றும் அறியலாம். இவைகளைக்கொண்டு இதனைப் பாப்பாநாட்டுச் சம்பந்தமான ஒரு பிரபந்தம் என்று ஊகிக்கலாம். இதிலுள்ள ஏடுகள் தொடர்ந்தவைகளாகக் காணப்படாமையாலும் ஆரம்பமும் கடைசியும் இல்லாமையாலும் இன்னநூல் செய்யுட்

டோகை இத்தனை என்று துணியக்கூடவில்லை. ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை. அச்சிடப்படவில்லை

Beginning :

மாரி பொழியவே மன்னர் தழைக்கவே
மகமாயி மாரியம்மன் மலர்ப்பத நான்மறவேன்.

ஆதி பராபரன் சோதிவர பாலன்
வேத விநாயகன் பாத மறவோமே.

சாலைக் கரையிலே சோலைக கிளிகள்போல்
வாலப் பருவமுள்ள மங்கையர் கூடியே.

கொண்டை யசைந்தாடக் கொங்கை வடமாடக்
கொண்டா னடிக்கும் பெண்கள் திண்டாட்டங் கண்டீரோ.

நானுமை கொண்டேனே நம்பி யிருந்தேனே
மானே களபமுலை மாமயிலே சேராயே.

சேரா திருந்தாலும் பாரா திருந்தாலும்
ஊராரு முங்கள் உறைமுறையார் கேளாரோ.

End :

வீரிகவுரி விமலிதிரிசூலி மாரி கருணைமுத்து மாரி மகமாயி
வண்ண மலர்சொரியு மாவும் பலாவுடன்
பண்ணை வயல்சிறந்த பாம்பை வளநாடே
முத்தாரம் பூண்ட முளரி வயலதனில்
நித்தமும் சென்னல் நிறை பாம்பை நன்றுடே.

* * * * *

திரைசேர் மணிகொழிக்கும் தென்பாம்பை நாட்டில்
தென்னூர் பணி விசைய தேவன் கிளைவாழ.

912. No. 394 *B.* சிவகாமியம்மை அகவல்.

ஏடுகள் 16 ; பூர்த்தி Lines 4—6 in a Page.

இது 365 *B.* நம்பரைப் போன்றது. முதல் ஏடு இல்லை. இத்துடன் சித்தரந்தாதியில் 5 செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன.

913 No. 395 சிவகாமியம்மை அகவல்.

ஏடுகள் 14 ; பூர்த்தி Lines 4—5 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. முன்பிரதிகளைவிட இது சுத்தப்பிரதி. இதில் இந்நூல் முழுவதும் இருக்கிறது.

914 No. 439 (*a*) தோத்திரத்திரட்டு.

ஏடுகள் 140 ; Lines 5—7 in a Page.

இதில் தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், உபதேச காண்டம், காசி காண்டம், பிரமோத்ர காண்டம், சிவதரு மோத்தரம், சிதம்பர புராணம், திருவாரூர்ப் புராணம், திருக் கழுக்குன்ற புராணம் முதலியவற்றினின்றும் தேர்ந்தெடுத்த செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன.

Beginning :

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா னடுவு ணியிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்பதானு லடியேனுன்
ன டியார் நடுவுள் ளிருக்கு மருளைப் புரியாய் பொன்
னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

End :

எம்பரமன் றனக்கன்பாய் மறையவர்க்குச் சிவ......யிருந்து
ளோர்கள்

அம்பிகைதன் பதம்பெறுவ ரேதேனும் பரனடியார்க்
கணுமட் டீந்தோர்
நம்பரிசி னுரைக்கு மதென்ன தனிலொரு பரமாணு நலத்
துக்காதி
செம்பதுமன் கற்பத்தி னொருகற்பஞ் சிவபதத்திற் சிறந்து
வாழ்வர்.

---

## 915. (b) சிவபுண்ணியத் தெளிவு.

Lines 7—8 in a Page.

இது, ஏனைய புண்ணியங்களினும் சிவ புண்ணியங்களே சிறந்தவை எனவும், அவை இன்னின்னவை எனவும் தொகுத்து விளக்குவது.

Beginning :

பழகிய பதித்துவப் பான்மை யெய்தவு
முழுகிய பசுத்துவ முற்று நீங்கவு
மொழுகிய மும்மதத் தொளிகொள் ஞானமா
ரழகிய பிள்ளையா ரடிகள் போற்றுவாம். (1)

உலகினு முயிரினு மொன்றி நின்றருள்
குலவிய வொளிவுயிர் குறிக்க வைந்தொழி
லிலகிய மன்றினு ளெழினடஞ் செய்வோன்
வலமிகு மலரடி வழுத்து வாமரோ.

* * * *

சுருதிமுன் மிருதி முற்றுஞ் சொற்றிடு புராண மெல்லாங்
கருதுபுண் ணியங்க டத்தங் கதிபசுத் துவவே காட்டும்
பொருதிமி ரகற்றிச் சைவம் புகல்சிவ புண்ணி யந்தான்
வருதியென் றருளாற் சாலோ காதியை வழங்கு மன்றே. (22)

End :

ஆகமத்தி லிருபத்தை யாயிரநற் சுலோக
மறிந்ததே சிகன் கனிட்ட னைம்பதினு யிரந்தான்
மோகமற வாராய்ந்த தேசிகன்மத் திமனே
முறைமையி னோரிலக்க முயன்றவ னுத்தமனே
யேகனம லேசனருள் காமியமுன் னுக
வியம்பியிடு மிருபத்தெட் டாகமத்து மிஃதே
பாகமிகு சாராற் சாரமென வோரியலைப்
படித்துணர்ந்தோ னியல்களெல்லாம் படித்துணர்
பண்டிதனே (141)

சிவபுண்ணியத் தெளிவு முற்றும்.

916 (c) திருவாரூர் இரட்டைமணி மாலை.

Lines 7 in a Page

இது, திருவாரூரிற் கோயில் கொண்டுள்ள விநாயகக் கடவுள் இரட்டைமணிமாலை. இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை. இதில் முதல் இரண்டு ஏடுகளில் பாதி இல்லை. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

சீர்கொண்ட செம்பொற் செழுங்குன்றை

* * * * *

சேவடியே கைதொழுவல் திண்புகழே சிந்திப்பல்
மாவடியார் கண்ணியர்மால் மாற்றுவார்—பாவடிய
தந்திமுகத் தெந்தையொரு தந்தரிறை தந்தனையர்
பந்தமறு சிந்தையினிற் பார். 15

நிற்பாரெம் முள்ளத்து மண்டத்து மண்டத்து நீர்க்கடலும்
பொற்பார் கனலும் வளியும் புராரிதம் பொற்புயத்து

நற்பார் புகழு மறைமுடி மீது நயந்திலங்குங்
கற்பார் மணிமதி லாரூரிற் றோன்றுங் கணபதியே. 16

கணங்கொண்ட பூத கணநாதன் றாளை
வணங்கத் துதிக்கவுடன் மாறும்—பிணங்குமொரு
முப்பகையு மப்பகையை மூட்டுபகை யாறுமுள
வெப்பகையும் வஞ்சகமு மே. 17

End :

திகைக்கும் பிறவித் துனிநீங்கி முத்திச் செழுந்திருவை
மிகைக்கு முவகையிற் கல்யாணஞ் செய்தென்றும் வீற்றிருப்பேம்
பகைக்குங் கயமுக னாவியுண் டொண்பக டாவியுற்றுத்
துகைக்கு மலர்த்தடத் தாரூ ரனைத்தொழுஞ் சீருறவே. 20

இரட்டைமணிமாலை முற்றும்.

## 917. *(d)* புறத்திரட்டு.

Lines 7 - 8 in a Page.

இது 650-ம் நம்பரைப் போன்றது. இது புத்ரதிரட்டு என்னும் நூலினின்றும் எடுத்துத் திரட்டிய 183 செய்யுட்களை யுடையது.

Beginning :

கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வாள்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநுவ லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கு

பிறை நுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
யெல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே, புறம்

End :

பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளி வானங் கடலுளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்னதகைத் து. 183

## 918. (*e*) இலக்குமி தோத்திரம்.

Lines 5—6 in a Page.

இத்தோத்திரம் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

## 919 (*f*) விநாயக கவசம்.

Lines 5–6 in a Page.

இதுவும், கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

## 920. (*g*) சுப்பிரமணிய கவசம்.

Lines 6 in a Page.

இதுவும், கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது.

## 921. (*h*) கேதாரபூஜை.

Lines 6 in a Page.

இதுவும், கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

குறிப்பு :

இவைகளையல்லாமல் கம்பராமாயணத்தும் சிந்தாமணி யிலும் உள்ள சில செய்யுட்களும் இருக்கின்றன.

---

922. No 458 சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 102 ; Lines 5 in a Page.

இது தேவி தோத்திரப்பா. தேவியின் பாதாதி கேசவர்ணனையும் இன்ன பயனை விரும்புவோர் இன்னவாறு வழிபட வேண்டுமென்பதையும் கூறுவது. சௌந்தரியலகரி ஆனந்த லகரி என இரண்டு பாகுபாடுடையது. இதற்குச் சக்கரங்களு முண்டு. வடமொழியிற் சங்கராசாரியர் இயற்றிய இதனைத் தமிழில் மொழிபெயர்த்து விருத்தப்பாவில் பாடியவர் வீரை கவிராசபண்டிதர் என்பவர். செய்யுள் நடைமிகச் சிறந்தது. இது உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

பிறைதவழுமெழில் தோன்ற பிறங்குகதிர் வெண்கோட்டாற்
செறிகதிர்செய் தடங்குடுமி செம்பொன்மால் வரைவாய்ப்ப
மறைபுகழுஞ் சவுந்தரிய லகரியினை வகுத்தெழுதும்
விறல்கெழுமு வேழமுகன் விரைமலர்த்தாளிணைதொழுவாம்.

சிவமெனும் பொருளு மாதிசத்தியொடு சேரி னெத்
தொழிலும் வல்லதா
மிவள்பிரிந்திடி லியங்குதற்கு மரிதரி தெனு மறை
யிரைக்குமா
னவபெரும்புவன மெவ்வகைத் தொழினடத்தி யாவரும்
வழுத்துதா
ளவனியின் கணொரு தவமிலார் பணியலாவதோ
பரவலாவதோ.

இது தேவியையன்றி சிவத்துக்கோர் செயலில்லையெனக் கூறுவது.




அவ்வும் உவ்வுமவ்வுஞ் சிவாயநம ஓம் ஆனந்தவல்லி அமுதவல்லி அய்யும் கிலியும் சவ்வும் கிலியும் வால சுந்தரி நமஸ்தே.
விநாயக பூசைப்பிரகாரம் செய்ய வேண்டியது.

End :

வேதனுள் பொருளாதி சுந்தரி வீறடங்கலு மோதவே
யீதயர்ந்து விடாய்சொலுங் கவிராச பண்டித வீரையான்
றைதரஞ் சகி தான்பெறுந் திருநாம மொன்பது நூறுமே
யோதினம்பல போகமுஞ் சிவலோகமும் பெறுவார்களே.

திருச்சிற்றம்பலம் பாயிரம்

Colophon :

ஆனந்தவல்லி, சவுந்தரிலகிரி அலங்காரலகிரி முற்றும்.
தேவிசகாயம்.

குறிப்பு :

இதில் ஒவ்வொரு பாட்டிற்கும் சக்கரமும் மூலமந்திரமும் ஆராதிக்கும் விதமும் சொல்லப்பட்டிருக்கின்றன. பாயிரத்தை அலங்காரலகரி என்று இந்தப் பிரதியில் கூறப்பட்டுள்ளது.

923. No. 459 (*a*) சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 54 , Lines 7—9 in a Page.

இதுவும் மேற்பிரதியை யொத்ததே. ஆனால் சக்கரம் மந்திரம் முதலியவை இல்லை. முழுவதுமிருக்கிறது சிறிது சிதிலமாயிருக்கிறது.

## 924. (*b*) அபிராமியந்தாதி மூலம்.

Lines 7—8 in a Page.

இது, 133-ம் நம்பர் போன்றது. முழுவதுமிருக்கிறது.

## 925. (*c*) சித்தரந்தாதி மூலம்.

Lines 8 in a Page.

இது 127-ம் நம்பர் போன்றது. மூலமட்டும் முழுவது மிருக்கிறது.

## 926. No. 460 சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 18 ; Lines 7 in a Page.

இதுவும் முன்பிரதிபோன்றது. சிதிலமதிகமாயிருப்பினும் முழுவதுமிருக்கின்றது. கடைசியில் அடியிற்கண்ட செய்யுள் எழுதப்பட்டுள்ளது.

அடியேன்தான் செய்தபிழை யத்தனையும் செம்பொற்
கொடியே பொறுத்தடிமை கொள்வாய் — நெடிதாய
அனவரத தாண்டவஞ்செய் அம்பலவர் பங்கில்
தனகுசிவ காமியே தான்.

Colophon :

ஈசுர வருஷம் கார்த்திகை-மீ 7உ அமாவாசியும் விசாக நக்ஷத்திரமும் பெற்ற நாள் சவுந்தரி லகிரி எழுதி முடிந்தது.

சௌமிய-ஞ ஆனிமாத முதல் சவுந்தரிய லகரி பாடம் பண்ணி நித்தியம் தோத்திரம் பண்ணிவருகிறது.

சிவகாம சவுந்தரித்தாய் லக்ஷிக்கக் கடவர்.

927. No. 461 சௌந்தரியலகரி மூலமும் உரையும்

ஏடுகள் 70 ; பூர்த்தி ; Lines 8—9 in a Page.

இது முதலிலும் கடைசியிலும் ஓரங்களிலும் சிதைந்திருப்பினும் உரையோடு முழுவதும் இருக்கிறது. இவ்வுரையை இயற்றியவர் தாழைமாநகர் எல்லப்ப நாவலர். இவரைப் பற்றிய விவரங்களை 292-ம் நம்பரிற் காண்க.

Beginning :

மணிக்கூட்டமாயிருக்கிருள். ஒருவரைப் பிறவியாகிய இருட்டையுடைய கடலினிடத்து வீழாதெடுப்பதற்குத் திருமாலானவன் அவதாரஞ் செய்த ஒப்பற்ற பெரிய வராகத்தினுடைய வெள்ளிய கோடாயிருக்கிருள் என்றவாறு. இதனல் அவளையன்றி யோர் நன்மை யடைவதில்லை யென்பது பெற்ரும். தாமத குணத்துடனே கூடி இவளை நினையாதிருக்கின்றவர்களை ஆட்கொள்ளவேண்டி அவர்களுள்ளத்துக்குப் பூங்கொத்திலே நின்ருெழுகுந் தேன்பெருக்காக விருக்கிறபடியினுலே நினைப்பில்லார் செறிமதிக்கிணறின்ருெழுகு தேனருவியென்றும் ஓர்காலத்துப்பூமி கடலினுட்டாழ்ந்து போதலினுற்றிருமாலான பன்றியினுருவமெடுத்துத் தன்னுடைய கொம்பினுல் அதனை ஏந்தி நிறுத்தினது போலப் பிறவியாகிய கடலினின்றுங் கரையேற்றுதலிற் பெருவராக மருப்பென்று முருவகஞ் செய்தார்.

End :

பிறைபுனைந்தருளுஞ் சிவன்றன துவகைப் பெருக்கென
வடமொழி முனிவ

னறை சவுந்தரிய லகரியைத் தமிழாலருள் கவிராச
பண்டிதன்ற

னிறைமனங் கருதித் தாழைமானகரி விலைபெற வார்
கவியெல்ல
னிறையள வெனினுந் தவறிலா துரைதேர்ந் தெழுதின
னெழில் விளக்கெனவே.

சௌந்தரியலகரி யுரை முற்றும்.

Colophon :

சுந்தர வேலாயுத சுவாமியார் துணை. திரிபுரசுந்தரி துணை. தியாகராசர் துணை.

சய-௵ கார்த்திகை-மீ 21 வ ஞாயிற்றுக்கிழமை எழுதி நிறைந்தது. அகத்தியப்பனெழுத்து.

---

928. No. 462 சௌந்தரியலகரி உரையுடன்.

ஏடுகள் 25 ; அபூர்த்தி Lines 5—6 in a Page.

Beginning :

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிருந்து வரும்

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிந்து
முதுஞான தானம்
பொழிந்துதன திணைமணியென் றிருசுடரும் புனைகளிற்
றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையற்றுலகேழு
மேழுமொக்க
வழிந்திடினு மழியாத வபிராமிபாடல் வளமளிக்கவென்றே.

இக்கவி முதலாறு கவியும் பாயிரங் கூறப்பட்டன. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பெனத் தகுநூல்யாப் பீரிரண்டென்ப. எதுகொண்டு தேவியுடைய சரித்திரத்தையு மவயவத்தையு மெடுத்து வடமொழியினால் முற்காலத்துச் சொல்லப்பட்ட பனுவலை மொழி பெயர்த்துத் தமிழ் மொழியில்

இறங்கிச் சொல்லப்படும் பனுவலிது..............................
...................வலையமாக வென் பதனையிரண்டிடத்தினுங் கூட்டுக. கோணவிகாரம் விண்பாலிலியோகெய்தி வீடுவரென்றார் மேலோரும் வலையாயி யென்பதனு ளாமென்னும் வினையெச்சத்தை யாக வெனக்கொள்க வது வென்னுஞ் சுட்டுப்பெயர் விகாரத்தா லத்தென விரட்டித்தது. இ ய யெகை கருதிநின்றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை என்றார் மேலோரும் சிவகோணமைந்தும் கீழ்னோக்கியும் சத்தி கோணமைந்தும் மேனோக்கியும் தம்முட் புணரவே முக்கோணமுமதனைச் சூழ்ந்த வெண்கோணமு மெண்கோணத்தைச் சூழ்ந்த பதின்கோணமு மவற்றைச் சூழ்ந்த பதினாலு கோணமுமாகின்றபடி.

929. (*a*) சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 24 ; பூர்த்தி Lines 10—11 in a Page.

இது 460-ம் நம்பரைப் போன்றது.

930. (*b*) உபதேசக்கட்டளை.

Lines 10 in a Page.

இது, திருமந்திரமென்னும் நூலின் ஒரு பகுதியாகும். யோக உண்மையைக் கூறும் 30 செய்யுட்களை யுடையது. இதனை இயற்றியவர் திருமூல நாயனார். இது அச்சிடப்படவில்லை.

Beginning :

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து விளம்பிறை போலு மெயிற்றனை

நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. 1
ஈரா றெழுத்து மிசைசீ ரொன்ருகப்
பேராமன் நாற்சீற்கு நாற்பத்தெட்டாற் பெய்தங்
காராய்ந் துவதேச மாண்டொன்றி லாதியாய்த்
தேராம னந்தி தொகுத்துரைத் தானே.

End :

ஆக்குஞ் சுழிதிறந் தாணவ மற்றிடும்
வாக்கி லிடைவிடா மாயையு மற்றிடு
நோக்குங் கலைவிட நுண்கா மியமறுந்
தாக்கும் பொருளே.. சாற்றின னந்தியே 30

உபதேசக் கட்டளை முற்றும்.

931. No. 464 சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 16 ; பூர்த்தி Lines 5—8 in a Page.

இதுவும் முன்பிரதியைப் போன்றது. சிதிலமாயிருக்கிறது.

Colophon :

சவுந்தரியலகரி விப-ஸ்ரீ பங்குனி-மீ 20உ திங்கள் கிழமை நாள் படித்து நிறைந்தது. முற்றும்.

930. No. 465 சௌந்தரியலகரி மூலமும் உரையும்.

ஏடுகள் 74 ; பூர்த்தி ; Lines 4—5 in a Page.

இது முழுவதுமிருக்கிறது. இவ்வுரை எல்லப்ப நாவலர் உரையன்று. உரை நடையும் சிறந்ததாகக் காணப்படவில்லை. உரையாசிரியர் பெயர் விளங்கவில்லை.

Beginning :

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிந்து முது ஞான
தானம்
பொழிந்துதன திணைமணியென் றிருசுடரும் புனைகளிற்றைப்
போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வட வரையிற் றுலகேழு மேழு
மொக்க
வழிந்திடினு மழியாத வபிராமி பாடல்வள மளிக்க வன்றே. (1)

பாத தாமரையி னுண்டுகட் பரம வணுவினிற் பல வியற்றி
னல்
வேத னுன்முகன் விதிக்க வேறுபடு விரிதலைப் புவன
மடையாமல்
மூதராவடி வெடுத்தனந்தன் முது கணபணுடவி பரிப்பமே
னுதனுர் பொடி படுத்தி நீறணியி னுமுரைத்தெனவன்
பான்மையே

எ-து வாருமம்மா யீஸ்வரி. பிரமதேவரானவர் யும்முடைய பாதங்களாகிற தாமரை புஷ்பத்திலே யுண்டான யத்தியந்த சூக்ஷமாயிருக்கிற தாளிலே அனேகங்காலந் தவசு பண்ணி யந்த பரமவணுவை யடைந்து பிரமாவானவர் திரிபுவனங்களையும் சிருட்டிக் கர்த்தரானு ரப்படிக்கொதத புவனத்தை விஷ்ணுவானவர் அந்த வணுவினுடைய மகிமையினுலே சேஷனுகவும் பூமிமை வகிஞ்சி ரக்ஷிக்கவும் கர்த்தரானுர். சிவனுனவரந்த வணுவினுடைய பெருமையினுலே யிந்த லோகா லோகங்களை யெல்லாம் தெகிச்சுப் பஸ்மோத் தூளித விபூதியைத் தரித்துக்கொள்ள வதிகாரமுடையவரானுரென்ற வாறு.

End :

வேத நுண்பொரு ளாயசுந்தரி வெற்படங்கலு மாயமே
யீதறிந்து விடாய்கொழுங் கவிராச பண்டித வீரையான்

நாதருஞ்சசி தாள்பெறுந்திருநாம மொன்பது நூறுமே
ஓதினன்பல போகமுஞ் சிவலோகமும் பெறுவார்களே.

குருபாதமே துணை. தேவிசகாயம்.

---

933 No. **466** சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 28 ; பூர்த்தி சிதிலமாயிருக்கிறது,

Lines 6—7 in a Page.

இது 464-ம் நம்பரைப் போல முழுவதுமிருக்கிறது.

---

934. No. **467** சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 22 ; பூர்த்தி Lines 6—8 in a Page.

இது 466-ம் நம்பரை ஒத்திருக்கிறது. சிதிலம் சிறிதுண்டு.

---

935. No. **468** சௌந்தரியலகரி மூலம்.

ஏடுகள் 28 ; Lines 4—5 in a Page.

இது மேற்பிரதியைப் போன்றது. ஆனால் கடைசியில் இரண்டு செய்யுட்கள் இல்லை. சிதிலமாயிருக்கிறது.

ஆடகமா மன்றிலுறை அன்னமே நின்னுடைய
பாடகமுஞ் சிற்றடியும் பற்றினேன்—(தேடரிய)
அற்புதமே அம்மே அணங்கே மணநாறுங்
கற்பகமே நீயென்னைக் கா.

இப்பாடல் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

936. *No.* **469** சௌந்தரியலகரி அலர்.

ஏடுகள் 50 ; பூர்த்தி Lines 5—8 in a Page.

இதுவும் முழுவதும் இருக்கிறது. இடையிடையே சிதில மாயிருக்கிறது.

Colophon :

தேவிஸஹாயம். வாலசவுந்தரீ முன்னின்று சகலபிழை யும் பொறுத்து ரட்சிக்க சவுந்தரியலகிரி முகிந்தது முற்றும்.

---

937. *No.* **597** (*a*) விநாயகர் அகவல்.

ஏடுகள் 28 ; Lines 5—8 in a Page.

இது, விநாயகர் தோத்திரம். இயற்றியவர் ஔவையார். இது 689-ம் நம்பர் உட்பிரிவு (*i*) போன்றது. முழுவதும் இருக்கிறது. அச்சிடப்பட்டிருக்கிறது.

---

938. (*b*) இலக்குமி தோத்திரம்.

Lines 7 in a Page.

இது கொல்லாபுரத்திலுள்ள இலக்குமியை அகத்திய முனிவர் செய்த தோத்திரமாகும். இது காசிகாண்டத்தின் கண்ணுள்ளது. இதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர். அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

மூவுலகு மிடரியற்று மடலவுண ஞுயிரொழிய முனிவு
கூர்ந்து
பூவையுறழ் திருமேனி யருட்கடவு ளகன்மார்பில் பொலிந்து
தோன்றித்

தேவருல கினும்விளங்கு புகழ்க்கொல்லா புரத்தினிது
சேர்ந்து வைகும்

* * * * *

கமலைதிரு மறுபார்பன் மனைக்கிழத்தி செழுங்கமலக் கையாய்
செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேளிலான்றனையீன்ற
விந்தை துய்ய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலு ளவதரித்தாய் யன்பர்
நெஞ்சத்
திமிரமகன் றிட வொளிவுஞ் செழுஞ்சுடரே மெனவணக்கஞ்
செய்தான் மன்னே.

End :

என்றுதமிழ்க் குறுமுனிவன் பன்னியொடும் இருநிலத்தி
லிறைஞ்ச லோடும்
நன்றுனது துதிமகிழ்ந்தோ நான்மறையோ யித்துதியை
நவின்றோர் யாரும்
பொன்றவரும் பெரும்போக நுவர்ந்திடுவார் இங்கிதனைப்
பொறித்த ஏடு
மன்றன்மனை யகத்திருப்பின் வறுமைதரு தவ்வையவள்
மருவல் செய்யாள்.

இலக்குமி தோத்திர முற்றும்.

தேவாரப்பதிகம்.

939. (c) திருவையாற்றுத் திருத்தாண்டகம்.

Lines 6—8 in a Page.

இது, திருநாவுக்கரச நாயனர் இயற்றிய தேவாரத்துள் ளது. இதில் 'ஓசை யொலியெலா மாணய் நீயே' என்னும்

பதிகம் 11 செய்யுட்களும் இருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

## 940. (*d*) சனிபகவான் அகவல்.

Lines 6—7 in a Page.

இது சனிபகவான் தோத்திரம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning :

சீர்பெறு ககனமும் சிறந்தபே ரண்டமும்
பார்பெறு புவனமும் பாதாள லோகமும்
அட்டமா நாகமும் அட்டமா கிரிகளும்
அட்டதிக் காளரு மப்புறக் கடலும்
அப்புறக் கடலும் அருக்கன் வான்பதியு
மெய்ப்புறு லவண சமுத்திர மேழு
மகமேரு கிரியு மற்றுள மலையும்
பகலெனு மிமையோர் பருவத மடங்கலும்
படைத்து அவனியை உண்டாக்கிக் கடந்த
ஞானியள் தமக்குக் கடவுளாய் நின்ற
மூவர் முப்பத்து முக்கோடி அண்டர்கள்
தேவர்கள் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள்

* * * * *
* * * * *

கார்நிற மேனியுங் காக்கைக் கொடியுமாய்ப்
பேர்பெற வமைத்துப் பெருவர மளித்து
மூர்க்கமாய் பார்க்குள் முதல்வராய்த் தொண்டர்க்
கேற்குஞ் சனியே சுரபக வானே.

End :

ஆதர வாயெனை அகத்தினி லிருத்தி
வேதனை யெல்லாம் வேரறப் பிடுங்கிச்

செல்வமும் வாழ்வுஞ் செயமெய் யாக்கிக்
கல்வி கேள்வியுங் கருணையா யளித்து
முன்ன வினையே முடிவறத் துலைத்தென்னை
ஆட்கொண்டு ரட்சிப்ப துனக்குக் கடனே.

சனியேசுர பகவான் அகவல் முற்றும்.

941. (*e*) சுப்பிரமணியர் தோத்திரம்.

Lines 6 in a Page.

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிலில்லை.

Beginning :

ஏறு மயிலும்பன் னிரண்டுடை தோளும்
சூறுமதி சூரனுடல் சிந்தியிடு வேலும்
ஆறுருவில் வள்ளியை மணந்தவடி வழகும்
ஆறுமுகமும் பதமும் அன்பின் மறவேனே.

வீரத்தத்துவமு மேறுமா மயிலு மெய்க்கடம்புமுயர் குக்குடம்
சேருநற் கொடியு மூவிரண்டெ னுமோர் திருமுகத்தழகு பெருமையும்
ஆறொருத்தர் தின மந்தியும் பகலு மதிபிதத்தி னெடுதுதி செய்தால்
சூரரைத் துணிசெய்வேலுங் கையுமெதிர் தோற்றுமே வினைகள் மாற்றுமே.

End :

வெயில்மஞ்சலி தெனுமிவ்வுடல் மெய்யேயென தய்யோ
தொயு மென்துய ரனைவாரெவர் சொலு நீயல தில்லையே
இயலே ழ்கிரி யறவே துகளெழவே சுரர் தொழவே
மயில் மேல் வரு குகனே சிவன் மகனே யறுமுகனே. (25)

தோத்திர முற்றும்.

942. (*f*) பூவனூர்ப் புராணம்.

Lines 6 in a Page.

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதில் 7 செய்யுட்களே இருக்கின்றன. அபூர்த்தி.

Beginning :

புடவியின் வளமிகு பூவ னூர்க்கதை
வடமொழி தமிழினல் வகுத்தி யம்பவே
தடமத அருவியாஞ் சவிதா ழ்த்துயர்
கடமத களிற்றினைக் கருத்தி ருத்துவாம். 1

End :

வாம .....ளை சத்தி மனோன்மணி
சோம சேகலை துர்க்கை சுமங்கலை
சாம வேத சவுந்தரி சாமுண்டி
சேலர் கமலஞ் சென்னியிற் சூடுவாம். 7

943 (*g*) அறுபத்து மூவர் மரபு.

Lines 5—7 in a Page.

இது, 256-ம் நம்பர் உட்பிரிவாகிய (*f*) போன்றது.

944. No. 694 (*a*) திருவகுப்பு.

ஏடுகள் 23; அபூர்த்தி; Lines 4—9 in a Page.

இது முருகன் தோத்திரமாகும். சீபாதவகுப்பு முதல் திருப்பரங்கிரி வகுப்பீருக இருபத்தைந்து வகுப்புக்களை உடையது. அவற்றுடன் இந்தப் பிரதியில் வேல்வகுப்பு, கடைக்கணியல் வகுப்பு, திருவேளைக்காரன் வகுப்பு என்னும் மூன்று வகுப்புக்களே இருக்கின்றன. இதனை இயற்றியவர் அருணகிரிநாதர். அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning.

பருத்தமுலை சிறுத்த இடை வெளுத்த நகை கறுத்தகுழல்
சிவத்தவிழ் மறச்சிறுமி விழிக்கு நிகராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்
பதத்திடுநி களத்தின்முனை தெரிக்க வரமாகும்
பரித்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை யிடித்து வழிகாணும்
பசித்தலகை முசித்தழுது முறைப்படுத லொழித்த வுண
குரத்துதிர நிணத்தசைகள் பொசித்தருணேரும்

End :

திரைக்கடலை யுடைத்து நிறை புனற்கடிது குடித்துடையு
முடைப்படைய வடைத்துதிர நிறைத்து விளையாடுந்
திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கவற ' விசைத்ததிர வோடுஞ்
சினத்தசுரர் எதிர்த்தரண களத்தின்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதுங்
திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை விருத்தனென
துளத்திலுறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே.

---

### 945. *(d)* வருமுருகாற்றுப்படை.

Lines 7—9 in a Page.

இது முருகன் தோத்திரம். அகவற் பாவால் அமைந்துள்ளது. வருக வருகவென்று முருகனைப் பாடியிருத்தலின் வருமுருகாற்றுப்படை யெனப் பெயர் பெற்றது போலும். பிழை யதிகமாக இருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்பட்டுள்ளது.

கருமுரு காருங் குழல்வள்ளி கேள்வன் கருதலரைப்
பொருமுரு காதிப் படைகாட்டு நீயெப்போந்து சொல்ல

அருமுரு காவந்தருளென் றருணை கிரியமைப்ப
வருமுரு காற்றுப்படை கொண்டவா செந்தில் மன்னவனே.

ஓம் செய செய வருக வருக முருக
விரையஸ்த மானச புண்டரீகயொ முகங்களிற்
குண்டலங் குழைபல கண்ட மதாணியு
மாரமும் நூலு மார்புநின் றிலங்கச்
செச்சைத் தொங்கலுங் கச்சுடை மருங்குலு
மாறிரு தோளு மாறிலே வேலும்
வாழி யோங்கிய கோழிப் பதாகையுந்
தண்டையு மணியும் புண்ட ரீகமும்
வேதவொலி பாடலும் கீதகிண்கிணியு
அதல விதல சுதல நிதல
தராதல மகாதல பாதாள லோகமு
மண்ட ரண்டங்களு மெண் டிசை பரவச்
சிறகினி லெழூவகை பறிய வீசு
மரகத கலாப நிருபகுல திலக
மேருப் பகுவாய் புயங்கன் பகுவாய்கீன்
றூரப் பொசிக்கு மாருதப் பிரசண்ட
மயிலுங் கடம்பும் பயிலும்பிர தாபமும்
பன்னிரு கண்ணு மென்னிரு கண்முன்
நீங்கா திருக்கப் பாங்குடன் வந்து
என்னிடர் தீர முன்னெழுந் தருளுக

* * * * *

போற்றி போற்றி புகழ்ந்துனை யெப்பொழுதும்
ஏற்று வார்முன் னிமைப்பினில் வருகவே.
நிகர மகர நிருதர் மடிய
மகர சலதி மறுகச்—சிகரி
தகரவே வேல்வாங்குஞ் சண்முகனைச் சற்றே
பகரவே போமே பகை.

குறிப்பு :

இவையல்லாமல் திருப்புகழில் சில செய்யுட்களும், கிருஷ்ண கர்ணாமிருத சுலோகமும் ஸ்ரீராமர் தோத்திர சுலோகங்களும் இருக்கின்றன.

---

## 946 No. 715 தோத்திரத் திரட்டு.

ஏடுகள் 66 ; Lines 5—9 in a Page.

இதில் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் முதலியவற்றினின்றும் தேர்ந்தெடுத்த செய்யுட்கள் இருக்கின்றன.

Beginning :

ஆனைமுகவர்க்கு நேரிளை... தாறுமுகவர்க்கு மரசே
ஆதிமுதலுக்கும் வேதமுதலுக்கு மாரண மிகுத்த
வளர் கோனே

தானவர்குலத்தை வேல்கொடு தெறித்த தாமசரமுக்க
தனிவீரா
தாளினை வழுத்து மேவியபதத்தை வேளவிட நித்தல்
...கொபம

வானெழு புகைக்கு மாலு மயனுக்கு மா.. மொருவர்க்கு
மறியாதான்
வாழ்மதுரை சொக்கர் மாதுமைவளர்க்கு மாமயிலி
ருக்கு...கொ...

தேனவிழ் புனத்தில் மான்மகள் குறத்திசெ.. மருவுற்ற
திரைதோளா
தேவர்கள் மனத்துள் மேவி...பதத்தை வேல்கொடு
மறித்த பெருமாளே.

End :

கோணுலா வாளியஞ்சேன் கூற்றுவன் சீற்ற மஞ்சே
னீணிலா வணிவு நானை நினைந்து ணைந்துருகு நெக்கு

வாணுலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
காணலா தவனைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

குறிப்பு:

இதில் 'ஆனைமுகவற்கு' 'வேலைப்போல் விழி' என்னும் திருப்புகழ்களும் தேவாரத்தில் திருநீலகண்டம் 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் பதிகமும்

| | |
|---|---|
| திருவையாறு | 'புலனைந்தும் பொறிகலங்கி' |
| திருப்பிரமபுரம் | 'தோடுடைய செவியன்' |
| திருவண்ணாமலை | 'உண்ணாமலை யுமையா ளொடும்' |
| திருநள்ளாறு | 'போகமார்த்த பூண்முலை' |
| கோயில்திரு நேரிசை | 'பத்தனாய் பாடமாட்டேன்' |
| ,, | 'புற்றில் வாழரவு மஞ்சேன்' |
| திருக்குற்றாலம் | 'வம்பார் குன்றம்' |
| திருவாரூர் | 'சித்தந் தெளிவீர்காள்' |
| திருவாலவாய் | 'மங்கையர்க்கரசி' |
| ,, | 'முளைத்தானை யெல்லார்க்கு முன்னே' |
| திருவங்கமாலை | 'தலையே நீ வணங்காய்' |
| திருநீற்றுப்பதிகம் | 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகமும் |

திருவாசகத்தில் 'திருப்பள்ளி யெழுச்சி' 'கோயில் மூத்த திருப்பதிகம்' அடைக்கலம்பத்து குயிற்பத்தும் இருக்கின்றன.

## XIX. வைணவசமய நூல்கள்.

### i. வைணவ சித்தாந்தம்.

### 947. No. 49 A இராமானுஜ நூற்றந்தாதி.

ஏடுகள் 130; சிதிலம் Lines 6 in a Page.

இது வைஷ்ணவமத தத்துவம் உணர்த்து நூல். செய்யுளும் உரையுமாக இருக்கின்றது. இதில் 207 செய்யுள்

இருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

பராபர மாக நின்ற பரப்பிரம மென்னு நாமம்
பராபர மாக நின்ற பரஞ்சோதி யென்னு நாமம்
பராபர மாக நின்ற பரமாத்மா வென்னு நாமம்
பராபர மாக நின்ற பரவாசு தேவ ரென்றும். 1

முன் சொல்லப்பட்ட விகாரத்தாலே மகான் தோன்றும் மகானில் சாத்துவீக ராசத தாமசம் என்று மூன்று ஆங்காரம் பிறக்கும்.

கருதி பத்தி தோன்றுங் காந்தமும் ஊசிபோலப்
பெரிய வியாக்கிரமம் இரையைப் பிரியமாய்ப் பற்றிஞற் போல்
அரியதாய்ச் சிங்கமான கரியதைப் பற்றிஞற் போல்
மருவிய கடைசல் வர்ன்னம் வாகதுபோல நின்றே. 9

என்றது பத்தியாகிற குணந்தோன்றுவது காந்தமும் ஊசியும் போலேயும் பெரிதாயிருக்கிற புலியானது இரையைச் சந்தோஷமாகப் பற்றிஞற்போல அயரூகமாக இருக்கிற சிங்கமானது யானையைப் பிடித்தாற்போல சேந்திருக்கப்பட்ட கடைசலிலே வர்ன்னம் பிடித்தாற் போல இப்படி சொல்லப்பட்ட நாலு காரியமும் போல இருக்கும் பத்தி யென்பது.

கண்டத்துக்குள்ளே அதிரத்தக்கதாக ஆர்ப்பாரங்களாய்ச் சத்தம் அழகுடனே பிறக்கும் கூடியிருந்தது சாந்தமாயிருக்கிறவர்க்குத் தோன்றுவது உதானவாயுவைக் கூடின பிராண வாயுத் தன்னேடு மகிழ்ந்து சேந்துவந்து பெரிய வாக்காயிருக்கிற மூலவாக்கு முதலாயுள்ள வாக்குக்களை செவியின் பகுதியிலே கேட்க நினைந்த பொருள்களை அறியாநிற்கும் பெருமை போலென்பது ஆகச் சதுர்வாக்கு நாலென்பது.

குறிப்பு :

இந்நூலுடன் எழுவகைத் தோற்ற மென்னும் நூலும் சிதிலமாயுள்ள சாமுத்திரிகமும் வேங்கடாசல சரிதத்தின் சிதைந்துள்ள ஒருபகுதியும் கோக்கப்பட்டுள்ளன. இதில் எழுவகைத்தோற்றம் என்னும் நூலை இயற்றியவர் பெரிய சீயர் எனத் தெரிகிறது. அதனால் அதனோடெடுத்து எழுதப்பட்டிருக்கிற இராமானுஜ கிரந்தம் என்பதும் பெரிய சீயரே எழுதி இருக்கலாமென ஊகிக்கலாம்.

---

948. No. **570** திருவாய்மொழி வாசகமாலை என்னும் விவரணசதகம்.

ஏடுகள் 130 ; Lines 8—10 in a Page.

இது திருவாய்மொழியின் ஆரம்பத்திலுள்ள 'உயர்வற' என்னும் பாட்டின் விவரணமே மற்றை ஆயிரம் பாடல்களும் என்று கூறி அதற்குத்தக ஒவ்வொரு பாடற்கும் பொருள் பொருந்தக் கூறுவது. மணிப்ரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. முதலில் 15 ஏடுகள் இல்லை. இதனை இயற்றியவர் திருக்கோனேரிதாஸ்யை. இது அச்சிடப்பட்டுள்ளது.

---

949. No. **571** *(a)* பரமரஹஸ்யம்.

ஏடுகள் 98; Lines 6—9 in a Page.

இதில் வைணவ தென்னாச்சாரிய சம்பிரதாய சில்லரை இரகசியங்களிருக்கின்றன. பிள்ளைலோகாசாரியார் அருளிச் செய்தது. அச்சிடப்படவில்லை பூர்த்தியாய் இருக்கிறது.

Beginning :

நம்பிள்ளை ஒருநாள் பெருமான் திருமுடிக்குறைக் கெழுந் தருளின வளவிலே உங்களுக்குப் பெருமாளை ஸேவிக்கவேண் டாவோ வென்ன தேவரீர் ஸ்ரீபாதமே எங்களுக்கு தேவரீரை ஒழிய தனித்துப் பெருமாள் பக்கல் ஸ்நேகமில்லை. தேவரீரு கந்த விஷயமென்று பெருமாளை ஸேவிப்பித்தோமென்று விண்ணப்பஞ் செய்ய அனந்தரம் தம்முடைய ஸ்ரீபாதத்தை தொட்டானை.........த்துக்கொண்டு அங்கீகரித்தருளிச் சில வார்த்தை அருளிச் செய்தார்.

ஆக ஸத்தையே துடங்க பிரதம சரமங்களை யொரு மடைப்படுத்தி பரமார்த்தங்களை வெளியாக வருளிச் செய் தருளினர். திருக்கோட்டியூர் நம்பியுடையவரைப் பார்த்து பரமபதத்தை யுமக்கிங்கே தருகிறோமென்று இவ்வர்த்தங்களை வெளியாகக் காட்டிக் கொடுத்தார். 428

பிள்ளைலோகாச்சாரியார் அருளிச்செய்த பரமரஹஸ்யம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

950. *(b)* மாதாபிதாயுவதய.

Lines 8—9 in a Page.

இதில், 'மாதா பிதா யுவதய:' என்னும் சுலோக தாத் பர்யம் மணிப்பிரவாள நடையில் எழுதி இருக்கிறது.

---

951. *(c)* சரமரஹஸ்யாநுஸந்தானக்ரம.

Lines 6—8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. பூர்த் தியாயிருக்கிறது.

952. (*d*) பெரிய ஜீயர் திருவுள்ளக்கருத்து.

Lines 6—8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது.

953. (*e*) விஷ்ணுஸ்லோகீ.

Lines 6—10 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டிருக்கிறது இதனைச் செய்தவர் பெரியவாச்சான்பிள்ளை. இதற்கு வியாக்யானஞ் செய்தவர் பிள்ளைலோகாச்சாரிய ஜீயர். பூர்த்தியாக இருக்கிறது.

954. (*f*) நிங்கரிய பெருநெறியும்.

Lines 6—8 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. பூர்த்தியா யிருக்கிறது.

955. (*g*) சரமரஹஸ்யம்.

Lines 5—7 in a Page.

இது மணிப்பிரவாளநடையில் எழுதப்பட்டிருக்கிறது. பூர்த்தியாயிருக்கிறது.

956 (*h*) சரணாகதி நிஷ்டா.

Lines 5—7 in a Page.

இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

### 957. (*i*) திருவாய்மொழிப்பிள்ளை வியாப்தி.

### அனுசந்தானம்.

Lines 5—7 in a Page.

இது மணிப்பிரவாளநடையில் எழுதப்பட்டிருக்கிறது. அபூர்த்தி.

---

### 958. No. 576 (*a*) அர்ச்சராதி.

ஏடுகள் 52 ; Lines 6 in a Page.

இது, இவ்வான்மா இல்வுலகப்பற்றுவிட்டு வைகுண்டம் செல்லுவதைக் கூறுவது. அர்ச்சராதி என்பது வைகுண்ட மார்க்கம் என்று பொருள். இதனைச் செய்தவர் பிள்ளைலோகாசாரியார். அந்தணர் வைணவ சமயத்தர் சீரங்கத்திலிருந்தவர். இந்நூல் அஷ்டாதச ரகசியங்களுள் ஒன்று. இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் 4 பிரகரணங்களிருக்கின்றன.

---

### 959. (*b*) பிரபந்த பரித்திராணம்

Lines 6 in a Page.

இது, அஷ்டாதச ரகசியங்களில் ஒன்று. ஈச்வரனைத் தவிர ஏனையோர் ரக்ஷகரல்லர் எனக்கூறுவது. இதனைச் செய்தவர் பிள்ளைலோகாசாரியரே.

---

### 960. (*c*) சரீரதத்துவம்.

Lines 6 —7 in a Page.

இது, சரீரக்கூறுகளை விளக்குவது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## 961. (*d*) ஸ்ரீவசனபூஷணம்.

Lines 6 in a Page.

வைஷ்ணவ தத்துவார்த்தத்தைக் கூறும் நூல் இதுவும் அஷ்டாதச ரகசியங்களில் ஒன்று இதனைச் செய்தவர் பிள்ளை லோகாச்சாரியார். 3 பிரகரணங்களே இருக்கின்றன.

---

## ii. திவ்விய பிரபந்தங்கள்.

## 962. *No.* 94 இயற்பா.

ஏடுகள் 69 ; சிதிலம் Lines 5–6 in a Page

இது நாலாயிரப் பிரபந்தத்தின் நான்காவது பிரிவு. இதில் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்னும் முதலாழ்வார் மூவர் இயற்றிய திருவந்தாதிகளும், திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியும், நம்மாழ்வார் திருவிருத்தம் திருவாசிரியப் பெரிய திருவந்தாதியும், திருமங்கையாழ்வார் திருவெழுக் கூற்றிருக்கை சிறிய திருமடல் பெரிய திருமடல்களும் இருக்கின்றன. இந்தப் பிரதியில் இவைகள் முழுவதுமிருப்பினும் இடையிடையே சிதிலமாயிருக்கிறது. இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

கைதை சேர் பூம்பொழில்] சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—[வையத்
தடியார்கள்] வாழ [வருந்தமிழ் நூற் றந்தாதி
படி விளங்கச் செய்தான் பரிந்து]

என்பிறவி தீர இறைஞ்சினே னின்னமுதா
வன்பே தகளி யளித்தானை— நன்புகழ்சேர்

சீதத்தால் முத்துகள் சேருங் கடன்மல்லை
பூதத்தார் பொன்னங் கழல்.

End :

[தன்னை ந] யந்தானைத் தான்முனிந்து மூக்கரிந்த
மன்னிய திண்ணனவம் வாய்த்த மலைபோலும்
[தன்னிகரொன்றில்லாத தாடகையை மாமுனிக்காத்
தென்னுலக மே]ற்றுவித்த திண்டிறலும் மற்றிவைதா
னுன்னியுலவா வுலகறிய வூருவன் நான்
முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்து
மன்னியபூம் பெண்ணைமடல்]

என்னிலைமை யெல்லா மறிவித்தா லெம்பெருமான்
தன்னருளு மாகமுந் தாரானேல் ......................
..........................................................

திருமங்கைமன்னன் திருவடி சரணம்.

---

963. No. **131** இராமாநுஜ நூற்றந்தாதி.
ஏடுகள் 24 ; பூர்த்தி ; Lines 5 in a Page.

இது வைணவ சமயாச்சாரியருள் ஒருவராகிய இராமானுசரின் வைபவத்தைப் பற்றிக்கூறுவது 108 கலித்துறைகளையுடையது. பிரபன்ன காயத்திரி என வைணவர்களால் கொண்டாடப்பட்டுத் தினந்தோறும் பாராயணம் செய்யப் படும் பெருமைவாய்ந்தது. இதனை இயற்றியவர் திருவரங்கத்தமுதனார் என்பவர். இந்தப் பிரதியில் பிழையதிகமாயிருக்கின்றது.

Beginning :

[முன்னை வினையகல] மூங்கில் குடியமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்—என்னுடைய

சென்னிக் கணியாகச் [சேர்த்தினேன் தென்] புலத்தார்க்
கென்னிக் கடவுளேன் யான்.

மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்ச முக்
குறும்பாம்
குழியைக் கடக்குமணங் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்
பழியைக் கடத்து மிராமா நுசன் புகழ் பாடியல்லால்
பழியைக் கடத்த லெனக்கினியா தும் வருத்தமன்றே 7

End :

அங்கயல் பாய்வயற் றென்னரங்கன்னியாகமன்னும்
பங்கயமாமலர்ப் பாவையைப் போற்றுதும் பத்தியெல்லாம்
தங்கிய தென்ன தழைத்து நெஞ்சே நந்தலைமிசையே
பொங்கிய கீர்த்தி யிராமாநுசனடிப்பூ மன்னவே 108

Colophon :

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

## 964. No. 140 திருவாய்மொழி.

ஏடுகள் 98 Lines 4—8 in a Page.

இது நாலாயிரப் பிரபந்தமாகிய திவ்விய பிரபந்தத்தின் ஒரு பகுதி. இதற்குத் திருவாய்மொழி யென்று பெயர். இதனை இயற்றியவர் நம்மாழ்வார் இவருக்கு சடகோபர் எனவும் பெயருண்டு. இதனை சாமவேத சாரமாக வைஷ்ணவர்கள் கொண்டாடுவர். இது பத்து ஒன்றுக்கு 100 பாடலாக 10 பத்துகள் கொண்டது ஆகவே 1102 பாடல்களை உடையது இதில் கடைசிப்பத்தில் 2 பத்து இல்லை. ஒவ்வொரு பத்தும் இன்ன பா இன்ன பண் இன்ன தாளம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

Beginning :

நாமவ னிவனுவ......... ளிவளுவளெவள்
தாமலரிவருவரது விதுவுது வெது
வீமவை யிவை யுவையவை நலந்தீங்கவை
யாமவை யாயவை யாயநின்றவரே. 4

மாலே மாயப்பெருமானே மாமாயனே யென்றென்று
மாலே யேறி மாலருளால் மன்னுகுருகூர்ச் சடகோபன்
மாலே தமிழரிசை காரப்பத்தர் பரவு மாயிரத்தில்
பாலே பட்டவிவை பத்தும் வல்லார்க்கில்லை பரிவதே. 11

பா. ஆசிரியவிருத்தம் பண் செந்துருதி தாளம் ஏழொத்து
புலம்பல்.

* * * * *

தளிர் நிறத்தாற் குறைவில்லாத் தனிச் சிறையில்
விளர்ப்புற்று
கிளிமொழியாள் காரணமாய்க் கிளரரக்க னகரெரித்த
களிமலர்து ழாயலங்கல் கமழ்முடியன் கடன்ஞாலத்
தளிர மிக்கான கவராத வறிவினுற் குறைவிலமே 5

End :

உற்றே னுகந்து பணிசெய் துன்பாதம்
பெற்றே னீதே யின்னம்வே......வதெந்தாய்
கற்றூர் மறைவணர்கள் சூழி திருப்பேராற்
கற்று ரடியார் தமக் கல்லல் நில்லாவே. 10

நில்லா வல்லல் நீள்வயல் சூழ திருப்பேர்மேல்
நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன்
சொல்லார் தமிழா யிரத்துள் ளிவை பத்தும்
வல்லார் தொண்டராள்வது சூழ்பொன் விசும்பே. 11

பா. கலிவிருத்தம். பண். இந்தளம். தாளம்
ஏழொத்து—உத்தமம்.

## 965. No. 231 திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஏடுகள் 19 ; Lines 5—6 in a Page.

இது நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழியின் பெருமையை எடுத்துரைப்பது. இதனை இயற்றியவர் மணவாளமாமுனிவர் என்பவர். ஏட்டில் இடையில் முறிந்திருப்பதால் மூன்று செய்யுட்களில் சிறுபாகம் குறைந்துவிட்டது. 100 பாடல்கள் இருக்கின்றன. பலவிடத்திலும் சிதைந்திருக்கிறது.

Beginning :

அல்லும் பகலு மனுபவிப்பார் தங்களுக்குச்
சொல்லும் பொருளுந் தொகுத்துரைத்தா—னல்ல
மணவாளமாமுனிவன் மாறன் மறைக்குத்
தணவா நூற் றந்தாதி தான்.

★ ★ ★ ★ ★ ★

பத்துடையோர்க் கென்றும் பரனெளிய னும்பிறப்பின்
முத்திதரு மானிலத்தீர் மூண்டவன்பால்—பக்திசெய்யு
மென்றுரைத்தான் மாறன்ற னின்சொல்லாற் பொநெடுகச்
சென்றுபிறப் பாமஞ் சிறை.

End :

முனிமாறன் முன்புரைசெய் முற்றின்ப நீங்கித்
தனியாகி நின்று தளர்ந்து—நனியாம்
பரமபத்தி யாலலைந்து பங்கயத்தாள் கோனை
யுரிமையுற்றுச் சேர்ந்தா னுயர்ந்து.

Colophon :

ஆழ்வார் திருவடிகளே சரணம். உயரவே-வாயு-முடியார் ஒருநா—கையாரும் — வைகல்—உண்ணலா—தேவன் ........ றமுயர், ஆழ்வார் திருவடிகளே சரணம். திருவாய்மொழி

நூற்றந்தாதி முற்றும். சீயர் திருவடிகளே சரணம்.

966 No. 312 திருவாய்மொழி.

ஏடுகள் 100 ; Lines 7—10 in a Page.

இது, நாலாயிரப் பிரபந்தத்தின் பெரும்பகுதிகள் நான்கனுள் மூன்றாவதாகிய 1000 பாசுரங்களை உடையது. இதனை இயற்றியவர் நம்மாழ்வார். இவர்க்குச் சடகோபன் எனவும் பெயருண்டு. ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் இருக்கின்றன.

Beginning :

திருவழுதி நாடென்றுந் தென்குருகூ ரென்று
மருவினிய வண்பொருன லென்று—மருமறைக
ளந்தாதி செய்தா னடியிணையை யெப்பொழுதுஞ்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணு
மினத்தாரை யல்லா திறைஞ்சேன்—றனத்தாலு
மேதுங் குறைவிலே னெந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

End :

அவாவறச் சூழ்ந்தரியை யயனை யரற்றி
யவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
வவாவிலந்தாதி களிவை யாயிர முடிந்த
வவாவிலந்தாதி யிப்பத் தறிந்தார் பிறந்தாருயர்ந்தாரே. 11

## 967. No. 433 (a) திருப்பதிக்கோவை.

ஏடுகள் 64 ; Lines 4 in a Page.

இது, திருமால் திருப்பதி நூற்றெட்டையும் கோவை படுத்துச் சொல்லும் நூல் இதனை இயற்றியவர் திருவரங் கத்தமுதனார்.

Beginning :

வாழி

திருவரங்கங் கோயில் திருவா ழூறந்தை
தருவளரும் பூஞ்சோலைத் தஞ்சை—முருகலர்ந்த
அன்பில் கரம்பனூர் அம்பொன்மதின் வெள்ளறை
தென்புள்ளம் பூதம் குடி திருப்பே—ரன்பா
லருந்தவஞ்சே ராதனா ராதி யழுந்தூர்
திருந்து சிறுபுலியூர் சேறை.

End :

வாழுமாமலையாளம் ஆறும் ஏழுடன் நடுநாட்டில்
இரண்டாக நிற்கினில்
தொண்டைமண்டலம் ஈரொன்பதும் மூன்றுடன் இதன்
வடக்கு பதினாலு மோதியே
ஆழியான் பதி நூற்றெட்டு மோதுவார் அன்று செய்வினை
அன்றே அகலுமே.
திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

குறிப்பு :

இதன் கடைசியில் 4 வெற்றேடுகள் இருக்கின்றன.

---

## 968. (b) அமலனாதிப்பிரான் வியாக்யானம்.

Lines 6—8 in a Page.

இது, திருப்பாணாழ்வார் இயற்றிய 'அமலனாதிப் பிரான்'

என்னும் பதிகத்தின் உரை மணிப்பிரவாள நடையில் எழுதப் பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

வேதம்போலே முதலாழ்வார்கள் மூவரும் பரத்வத்திலே மண்டி அர்ச்சையையுந் தொட்டுக்கொண்டு போந்தார்கள் ஸ்ரீவால்மீக பகவானைப்போல ஸ்ரீகுலஸேகரப் பெருமாள் ராமாவதாரத்திலே பிரவணராய் அர்ச்சாவதாரத்தையுமனுப வித்தார். ஸ்ரீபராஸர பகவானையும் ஸ்ரீவேதவியாஸ பகவானை யும் போலே நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் கிருஷ்ணவதா ரத்திலே மண்டி அர்ச்சாவதாரத்தை யுமனுபவித்தார்கள்.

End :

வெண்ணையுண்டவாய னென்னுள்ளங் கவர்ந்தானை... ............த் திருவாய்ப் பாடியில் பெண்டுக ளுறிகளிலே வெண்ணையை வைத்துக் கள்ளக் கயிறுருவிக் குறியிட்டு வைத் துப் போவார்கள். அந்த உறிகளிற் குறியழியாதே யிருக்க வந்த வெண்ணைகளை வெறுந்தறை யாக்கினைப்போலே ரய த்து அரங்கந் தன்னுட்கள்வனுர் நான் குறியழியாதே யிருக்க வென்னுடைய சிந்தையை அபகரித்தபடி என்னுளங் கவர்ந் தானை என்னுடைய சரீரங் குறியழியாதே யிருக்க என்னுடைய மனசை அபகரித்தானை என்னுள்ளங் கவர்ந்தானை..............

## 969. No. 434 (*a*) திருப்பதிக்கோவை.

ஏடுகள் 135 ; Lines 4—6 in a Page

இது திருமாலுக்குரிய திருப்பதிகளைக் கோவைபடுத்திக் கூறும் நூல்களில் ஒன்று. இது 433-ம் நம்பர் போன்றதெனி னும் சிறிது வேறுபாடுள்ளது.

Beginning :

ஓங்கு திருவரங்கர் தாமுகந்த வொண்பதிகள்
மூங்கிற் குடியமுதன் முத்தமிழால்— நீங்காத
அன்பர் தமர்வாழ அருள்செய்த அந்தணர் கோன்
தன்பதுமத் தாளே சரண்.

பங்கயத் தோனுக்கு வாவுக்குப் பண்டளியப்பப்
பொங்கு மயோத்திப் புரிசைநகர்—தங்கிச்
சிலநா ளினிதமர்ந்து தென்னிலங்கைக் கோமான்
குலம்வாழக் கொண்டேகும் வேலை—நலமார்ந்த
சென்னி வளவன் வளநாட்டுத் தெய்வநதிப்
பொன்னி நடுவுட் புளினத்துப்—பன்னரிய

* * * *

யூழி பயிலும் யோடுதுயில்—வாழி
திருவரங்கங் கோயில் திருவாழுறந்தை,

End :

அண்டர்திரு வாய்ப்பாடி யாழ்கடல் சூழ் வண்டுவரை
தொண்டர் குழாஞ் சூழுமித் தொல்பதிகள்—கண்டுந்
தொழுதும் வலஞ்செய்துஞ் சொல்லித் துதித்து
முழுது முணர்ந்து முறையே—யெழுதுகலை
யோதியும் வேத முறைத்து முலகறியத்
தாதி னடிமைத் தலைநின்றும் – வேத
நிழலே சரண மெனநினைந்து வாழ்வார்
கழலே நமக்குக் கதி.

மின்னுதிகிரி வலவன் விசும்பெங்கும்
பன்னு திருப்பதிகள் பாவெல்லா—மன்னுகலை
கற்றூர்கள் தொண்டர் கழற்கமலங் கால்பணியப்
பெற்றூர் பெருதார் பிறப்பு

Colophon :

ஸ்ரீராமஜெயம் ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்.

---

## 970 (*b*) நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.

Lines 4 in a Page.

இது விஷ்ணு திருப்பதி நூற்றெட்டையும் அந்தாதியாகக் கோவைபடுத்துக் கூறுவது. இதனை இயற்றியவர் பிள்ளைப் பெருமாளையங்கார்.

Beginning :

பிறவாத பேறு பெறுதற்கு நாளு
மறவா திறைஞ்சென் மனனே—துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பி திருத் தாள்.

சீர்வந்த வுந்தித் திசைமுகனு லல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமே—யார்வ
மொருவரங்கங் கோயி லுகந்தாரை யாள்வான்
திருவரங்கங் கோயில் சிறப்பு. 1

End :

இடருடையேன் சொல்ல வெளிதோ பொன்மாட
மடரு மரங்க ரருளாற்—றுடருங்
கருவைகுந் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுத் தம்புகுவார் சீர். 108

திருப்பதிக்கோவை அந்தாதி எழுதி நிறைந்தது முற்றும்.

மறையிற் றமிழ்க்கங்க மாறுஞ் சொன் ஞேன்வய
லாலிப்பிரான்
குறையற் கலியன் திருமங்கைமன்னன் திருவடியே

நிறையப் பதித்தென்னை யாண்டுகொண் டான் நித்த
நித்தமுமென்
குறையைத் தவிழ்த்தடி யேன்விண்டு லோகத்தைக்
கூடுதற்கே.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

971. (c) நித்தியானு சந்தானம்.

Lines 4—5 in a Page.

இது, தினந்தோறும் அனுசந்தானம் செய்தற்கேற்ற வாறு பெரியாழ்வார் முதலியோர் இயற்றிய திருவாய்மொழியி னின்றும் திரட்டிய பாசுரத்திரட்டாகும். 575-ம் நம்பர் போன்றது.

972. (d) நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை.

Lines 5 in a Page.

இதுவும் திருமாலுக்குரிய நூற்றெட்டுத் திருப்பதிகளைக் கூறுவது. 434 b நம்பரினும் வேறானது. இதனை இயற்றியவர் வங்கிபுரத்தாச்சி என்பவர்.

Beginning :

கடலலைகள் தோற்றுங் கடும்பிறவி வெள்ளத்
துடரலைகள் தோன்றநின் றுழலாதே—மடநெஞ்சே
ஆழ்வார்கள் பாயிரத்தால் அலங்கரித்த மால்பதிகள்
மூவாறு முப்பதிற்று மூன்று.

செய்ய சுடராழியான் சேவடிக்கே சொன்மாலை
சூட்டிய பொய்கையார் நாரணற்கு ஞானச்
சுடர்விளக்கேற்றிய ஞானமொழி பூதத்தார்
என்னுழி வண்ணன்பால் திருக்கண்ட பேயாழ்வார்

கோதில் பட்டர்பிரான் குளிர்புதுவை மன்னன்
விஷ்ணு சித்தன்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்
கோதை நற்றமிழ் மகிழ் மாறன் சடகோபன்
கொல்லி காவலன் கூட நாயகன்
கோழிக் கோன்குல சேகரன்.

End :

முன்னு மிராமனாய்த் தானே பின்னு
மிராமனாய்த் தாமோ தரனாய் கற்கியும்
ஆனான் றன்னைக் கண்ணபுரத் தடிகள்
கலியன் உரை செயத் தேனாருஞ் சொற்றமிழ்
மாலை செய்யப் பாவநில் லாவே.

ஆர வங்கிப்புரத்தாச்சி ஆழ்வார்கள் பாசுரத்தால்
சேருந் திருப்பதிகள் நூற்றெட்டும்—சீராய்
உரைப்பார் உரைசொல்வார் ஒருவா ருண்மகிழ்வார்
தானே (?) தனக்குச் சரண்.

* * * * *

ஆழியான்பதி நூற்றெட்டும் ஓதுவார்
அன்று செய்வினை அன்றே அகலுமே.

## 973. (e) திருக்கோட்டியூர் நம்பி வார்த்தை.

Lines 4—5 in a Page.

இது, வேதாந்த விஷயத்தைக் கூறுவது. அபூர்த்தி அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

முமூட்சுவாய் பிரபன்னனானவனுக்கு அஞ்சு கோடி தியாச்சியமும் மூன்று கோடி உபாதேயமு மாயிருக்கும் அதென்போல வென்னில் பதிவிருதையாயிருப்பா ளொரு

த்திக்கு அஞ்சு கோடி தியாச்சியமும் மூன்று கோடி உபா தேயமுமானுப்போலே அவர்களுக்கு தியாச்சியர் கன்னிகைகள்.

* * * * *

End :

அரண்ணிய பிரயோசன ரோடே மசக்குப்பாரிட்டுத் திரியிறவர்கள் உபாதேயர் ஆசாரியர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் சாவிரும்மாச்சாரியர்கள் நடுவில் தெருவீதிப் பிள்ளை சங்சாரி தோஷத்தை தன் சத்தியாலே காணுதிருக்கக் கடவன் சாந்தி கருட தோஷத்தை அவர்களுடைய சத்தியாலே காணுதிருக்கக் கடவன் பெந்த லோகத்தில் விலட்சண ஞானத்துக்கு தேசமன்றிக்கே யிருக்கையாது.

974. *(f)* திவ்யப்ரபந்தம் முதலாயிரம் திருமாலை.

Lines 4—5 in a Page.

இது விஷ்ணு தோத்திரம். நாலாயிரப் பிரபந்தத்தின் ஒரு பகுதியாம். இதனை இயற்றியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

மற்றென்றும் வேண்டா மனமே மதிலரங்கர்
கற்றின மேய்த்த கழலி கணக்கிடமுற்ற
திருமாலை பாவஞ்சீர் தொண்டரடிப்பொடி யெம்
பெருமானை யெப்பொழுதும் பேசு.

* * * * * *

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்க
ணச்சுதா வமர ரேறே யாயர்தங் கொழுந்தே யென்னு
மிச்சுவை தவிர யான்போ யிந்திரலோக மாளு
மச்சுவை பெறினும் வேண்டே னரங்கமா நகருளானே.

End :

வளவெழுந் தவளமாட மதுரமா னகரந்தன்னுள்
கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்க மாலைத்
துளவத் தொண்டாய தொல்சீர் தொண்டரடிப்பொடிசொல்
விளையபுன் கவிதையேனு மெய்ப்பிராற் கினிய வாறே. (45)

அன்பர்தாள் தூளி ஆழ்வார் திருவடிகளே சரணம்

975. (g) எழுபத்துநாலு சிம்மாசன திருநாம விபரம்.

Lines 5 in a Page.

இது, திருமுடியடைவு எனவும் பெயர் பெறும் அச்சிடப் படவில்லை.

Beginning :

தொண்டனூர் நம்பி,மருதூர் நம்பி, திருக்குறுங்குடி நம்பி, குரவை நம்பி, முரும்பை நம்பி, ஸ்ரீ பராங்குச நம்பி, வடுக நம்பி, வங்குபுரத்து நம்பி, கூரத்தாழ்வான் பிள்ளைப் பிள்ளை யாழ்வான், நிடாதூராழ்வான், எங்களாழ்வான், சேட்டலூர் சிறியாழ்வான், அருளாளப் பெருமாள் எம்பெருமானார்.

End :

இவர்களுடைய குணகுணங்கள் நிரூபணம் பண்ணுமல் உடையவர் திருநாட்டுக்கு எழுந்தருளினார். இந்தத் திருமுடி யடைவை யன்னிய பிரயோசனரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமண்காப்புச் சாத்துகிற வேலையிலும் திருவாராதன வேளை யிலும் அனுசந்திச்சு பொருவார்களாம். பெருமானார் திருவடி களே சரணம். ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

## 976 (h) சிறிய திருமடல்

Lines 5 in a Page.

இது. நாலாயிரப் பிரபந்தத்திலுள்ள இயற்பாவில் ஒரு பகுதி இயற்றியவர் திருமங்கையாழ்வார். இது தொண்ணூற்றறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. ஏனையவற்றை இழித்துரைத்துக் காமச்சுவையையே பெரிதாகப் பாராட்டி பாட்டுடைத் தலைவனது இயற்பெயர்க்கேற்ற எதுகை அமையத் தனிச்சொல்லின்றிக் கலிவெண்பாவாற் பாடப் படுவது மடல். தலைமகளிடத்துத் தான் கொண்டுள்ள வேட்கை மிகுதியை உலகமறிய தலைமகன் தலைவியன் உருவம் எழுதப்பெற்ற கிழியினைக் கையிற் பிடித்து, எருக்கமலரும் என்பும் விரவத்தொடுத்த மாலையை யணிந்து, பனைமடலாற் செய்த குதிரைமீதேறி வீதியிற் செல்வது மடலாகும். இங்கு திருமங்கை மன்னன் தம்மை நாய்கியாகவும், திருமாலை நாயகராகவும் கொண்ட பாவனை மேலீட்டால் மடலேறியேனும் அடையத்துணிதலால் இது பெண்பால் மடலின் பாற்படும்.

Beginning :

முள்ளிச் செழுமலரோ தாரான் முளைமதியங்
கொள்ளிக் கென் னுள்ளங் கொதியாமே வள்ளல்
செருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் றந்தான் மடல்.

காரார் வரைக்கொங்கைக் கண்ணார் கடலுடுக்கைச்
சீரார் சுடர்ச்சுட்டிச் செங்கலுழிப் பேராற்றுப்
பேரார மார்பிற் பெருமான் மழைக் கூந்தல்
நீரார வேலி நிலமங்கை யென்னுமிப்
பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்று
மாராயிற் றானே யறம்பொரு ளின்பமென்
றாரா ரிவற்றி னிடையதனை யெய்துவார்
சீரா ரிருகலையு மெய்துவார் சிக்கன,

End :

ஊரா தொழியே னுலகறிய லொண்ணுதலீர்
சீரார ...... சேரவளவும்—பாரெல்லா
மன்ரேங்கி நின்றளந்தானின்ற திருநிறை
மன்ரேங்க வூர்வேன் மடல.

977. No 435 ( ) திருப்பதிக்கோவை.

ஏடுகள் 36 ; Lines 3—6 in a Page.

இது திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை. இயற்றியவர் திருவரங்கத்தமுதனர். இது 433-ம் நம்பர் போன்றது

978. (b) சைவத்திருப்பதிக்கோவை.

Lines 4—5 in a Page.

இது 425 b, நம்பர் போன்றது. இயற்றியவர் உமாபதி சிவாசாரியார்.

979 (c) தியாகராஜர் தோத்திரம்.

Lines 4—5 in a Page.

இது, திருவாரூர் தியாகராசர் தோத்திரம். இதிற் சிவாலயங்களேயும் கோவைப்படுத்துக் கூறப்பட்டுள்ளது.

Beginning :

ஆரூர்த்தி யாக ரமர்ந்த திருப்பதிகள்
நேராகக் கோவையதா நிச்சயிக்க—சீராக
என்றனக்கு......தந்தீடேற்றி ரட்சியாய்
கந்தனுக்கு முன்னவனே காப்பு

கயிலைமலை மீதிருந் தேசோழ நாட்டினில் காவேரி
வடகரை தனில்

காரணிக மான திருவழ வேட்களம் கதித்தபுனை
வாசலளவும்

பயிலவந்தே கழிப்பாலை யுளமந்தே பனைந்தே திருப்
பெருமணம்

படைத்தே மயேந்திரப் பள்ளி முல்லை வாசல்
பதிலாக வீற்றிருந்து

இயலையுள ரென கொல்லிக்காமுரலாறலே ஏற்ற
சாய்க்காடுதனிலும்

இருப்பாவ தேதிருப் பட்டினம் பல்லவனீசுரம்
வெண்காடுடன்

கையில் மழு வீசர் காட்டுப்பள்ளி குருகாவூர்
கதித்திடு பிரமபுரமும்

கனமய்யப்படைத்த பொற் சிங்காதனத்தை யுள
கமலாலயத்திறைவரே. 1

End :

வைகைவள நாடுதென் கூடலணி யாப்பனூர் மற்றும்
பரங்குன்றுடன்

வாழி திருவேடகம் திருக்கொடுங் குன்றமு மருவு புத்தூரி
நகரும்

செய்யமும் புனைவாசல் ராமேசுரம் திருவாடனை கான பேரூர்
திருப்புவன முந்திருக் குற்றால முந்திருச் சுழியுடன்
திருநெல்வேலி

அய்யருறை கொங்குநா டானபே ரூர்நக ரமலரவ நாசிதனிலு
மகமரு முருகன் பூண்டிவெஞ்சமாக் கூடல் அமைத்த
கொடுமுடி தன்னிலும்

கய்யமரு வீசர்கரு வூர்வானி கூடல் கலந்த வைய்கை
நாட்டுடன்

கனமாய்ப் படைத்த பொற்சிங்காதனத்தையுள கமலாலயத்
திறைவரே. 11

980. (d) திருவாசகம்.

Lines 4 in a Page.

இது திருவாசகத்தின் ஒரு பகுதியாகும். இதில் நீத்தல் விண்ணப்பமும் திருச்சாழலில் மூன்று செய்யுட்களும் இருக்கின்றன.

981. No 556. திருவாய்மொழி வ்யாக்யானம்.

ஏடுகள் 38 ; அபூர்த்தி Lines 8—9 in a Page.

இது திருவாய்மொழி வ்யாக்யானம். முப்பத்தாருயிரப்படி 2-வது சதகத்தில் சில பாடல்கட்கு உரை மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. இதில் முதலில் 72 ஏடுகள் இல்லை. அச்சிடப்பட்டுள்ளது.

982. No. 559 திருவாய்மொழி.

ஏடுகள் 100 ; Lines 5—9 in a Page.

இது 313-ம் நம்பர் பிரதியைப் போன்றது. முழுவதும் இருக்கிறது.

Colophon.

விகுர்தி-ஸு ஆவணி-மீ 8உ ஆதித்தவாரமும் அஸ்தமும் கூடின சுபதினத்திலெழுதி முடிந்தது முற்றும். தஞ்சை நகரிலிருக்கும் திருவேங்கடதாசர் கை நெட்டெழுத்து. சீயர் திருவடிகளே சரணம்.

## 983. No. 562 திருவாய்மொழி.

ஏடுகள் 119 ; பூர்த்தி ; Lines 4—8 in a Page.

இது, நாலாயிர பிரபந்தத்தின் ஒரு பகுதியாகிய திருவாய்மொழி. 559-ம் நம்பர் போன்றது. இயற்றியவர் நம்மாழ்வார். ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் இருக்கின்றன. கடைசியில் அடியிற்கண்ட செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன.

வண்ட ளிளமணலிற் சங்கங் கிடந்தலறக்
கொண்டல் முழங்குங் குருகூரே—தொண்டர்க்
கிருநூறு முந்நூறு நானூறும் வேதம்
ஒருநூறு மோதுவித்தா னூர்.

இதுவோ பரமபதம் இவ்வாறே தண்பொருந்தம்
இதுவோ பரமபதத் தெல்லை—இதுவேதான்
வேதந் தமிழ்மணக்கு மெம்பொருட்டு முட்பொருளாய்
ஓதுங் குருகேச னூர்.

## 984. No. 560 திருவாய்மொழி.

ஏடுகள் 100 ; பூர்த்தி ; Lines 6—9 in a Page.

இது, 559-ம் நம்பரைப் போன்றது. முதலிலுள்ள ஏடுகள் பூச்சியாலரிக்கப்பட்டு அதிகமாய்ச்சிதைந்திருக்கின்றன.

## 985. No. 561 திருவாய்மொழி.

ஏடுகள் 100 ; பூர்த்தி Lines 6—11 in a Page.

இது, 560-ம் நம்பரைப் போன்றது. அதைவிட அதிகமாகச் சிதைந்திருக்கிறது.

குறிப்பு :

தென்கலையார் ஆச்சாரியாரைப்பற்றிய தனியன் கிரந்தத்தில் எழுதிய சிதைந்த ஏடுகளும் கோக்கப்பட்டுள்ளன.

---

## 986. No. 565 நாலாயிர திவ்விய பிரபந்தம் பெரிய திருமொழி.

ஏடுகள் ; 337 பூர்த்தி (ii) Lines 5 in a Page.

இது, திருமால் பக்தியில் ஈடுபட்ட பெரியாராகிய ஆழ்வார்கள் பன்னிருவரும் அப்பெருமானின் அர்ச்சாவதார விஷயமாக இயற்றியருளிய தோத்திரமாகும். இது முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என நான்கு பெரும் பிரிவினை யுடையது.

அவற்றுள்

| | | |
|---|---|---|
| 1. முதலாயிரம் | 1 பெரியாழ்வார் திருமொழி | பெரியாழ்வார் |
| | 2 திருப்பாவை<br>3 நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| | 4 பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| | 5 திருச்சந்த விருத்தம் | திருமழிசையாழ்வார் |
| | 6 திருமாலை<br>7 திருப்பள்ளியெழுச்சி | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| | 8 அமலனுதிப்பிரான் | திருப்பாணுழ்வார் |
| | 9 கண்ணிநுண் சிறுத்தாம்பு | மதுரகவியாழ்வார்களாலும் |
| 2 பெரிய திருமொழி | 1 பெரிய திருமொழி<br>2 திருக்குறுந்தாண்டகம்<br>3 திருநெடுந்தாண்டகம் | திருமங்கையாழ்வாராலும் |

3 திருவாய்மொழி.................................நம்மாழ்வாராலும்

4. இயற்பா

| | | |
|---|---|---|
| 1 | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| 2 | இரண்டாந்திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| 3 | மூன்றுந்திருவந்தாதி | பேயாழ்வார் |
| 4 | நான்முகனந்தாதி | திருமழிசையாழ்வார் |
| 5 | திருவிருத்தம் | நம்மாழ்வார் |
| 6 | திருவாசிரியம் | நம்மாழ்வார் |
| 7 | பெரிய திருவந்தாதி | நம்மாழ்வார் |
| 8 | திருவெழுக்கூற்றிருக்கை | திருமங்கை யாழ்வார் |
| 9 | சிறிய திருமடல் | திருமங்கை யாழ்வார் |
| 10 | பெரிய திருமடல் | திருமங்கை யாழ்வார் |
| 11 | இராமனுஜநூற்றந்தாதி | திருவரங்கத்த முதனாலும் |

இயற்றப்பட்டன. இந்நான்கு பெரும் பிரிவின் செய்யுளும் ஒன்று சேர்ந்ததே நாலாயிரப் பிரபந்தம் என்னும் திவ்வியப் பிரபந்தமாகும். ஆழ்வார்களுள் திருவரங்கத்தமுதனர் ஒரு வரல்லராயினும் நாலாயிரம் என்னும் சங்கியையில் குறைவு படுதல் நோக்கி இவரியற்றிய நூற்றந்தாதியையும் பிரபந்தத் துட் சேர்த்துக்கொண்டார்கள் போலும். இப்பிரபந்தம் விஷ்ணு ஆலயங்களிலும் வைஷ்ணவ கிருகங்களிலும் விசேஷ காலங்களிலும் பூஜை சமயத்திலும் வேதங்களைப்போல ஓதும் சிறப்பு வாய்ந்தது. வைஷ்ணவர்களால் தமிழ் வேதமெனக் கொண்டாடும் மேம்பாடுடையது இதற்குப் பெரியவாச்சான் பிள்ளை முதலிய பெரியோர்கள் விரிவான உரையெழுதி இருக் கின்றனர்.

இந்த நம்பரில் பெரிய திருமொழியும், திருக்குறுந்தாண் டகமும், திருநெடுந்தாண்டகமும் இருக்கின்றன. இவை பெரிய திருமொழி எனப்படும். இவற்றைச் செய்தவர் திரு மங்கையாழ்வார். சிதிலமாயிருக்கிறது.

Beginning :

தெஞ்சுக் கிருள்கெடு தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதந் தமிழ்நன் னூற்றுறைக

னஞ்சுக் கிலக்கிய மாரண சாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே.

வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால் பெருந்துய
ரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடியிளையவர் தம்மோ டுயர்தருங் கலவியே கருதி
யோடினேனோடி யுய்வதோர் பொருளாலுணர்வெனும்
பெரும்பதந் தேர்ந்து
நாடினே னாவா னான்கண்டு கொண்டே னாராயணாவென்னு
நாமம் 1

ஆவியே யமுதே யெனநினைந்துருகி யவரவர் பணைமுலை
துணையாய்
பாவியே னுணரா தெத்தனை பகலும் பழுதுபோ
யொழிந்தன நாள்கள்
தூவிசே ரன்னந் துணையொடும் புணருஞ் சூழ்புனற்
குடந்தையே தொழுதென்
நாவினா லுய்ய நான்கண்டு கொண்டே னாராயணாவென்னு
நாமம் 2

End :

மின்னுமா மழைதவழு மேக வண்ணா
விண்ணவர்தம் பெருமானே யருளாயென்று
மன்னமாய் முனிவ ரோடமர ரேத்த
வருமறையை வெளிப்படுத்த வம்மான்றன்னை
மன்னுமணி மாட மங்கை வேந்தன்
மானவேற் பரகாலன் கலியன் சொன்ன
பன்னியநூற்றமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார் தாமே. 30

987. No. **566** நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

ஏடுகள் 147 ; பூர்த்தி ; Lines 7 in a Page.

இதுவும் மேற்பிரதி போன்றது. ஆனால் ஏட்டினைக் கறையான் அரித்திருப்பதால் பயன்படக்கூடிய நிலையிலில்லை.

---

988. No. **567** நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஏடுகள் 112 ; பூர்த்தி Lines 7 in a Page.

இதுவும் மேற்பிரதியைப் போன்றது. முழுவதுமிருக்கிறது. முதலில் 4 ஏடுகளும் கடைசி ஏடுந் தவிர மற்றவை நன்னிலையிலிருக்கின்றன.

---

989. No. **568** நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

ஏடுகள் 312 ; பூர்த்தி Lines 5 in a Page.

இதுவும் மேற்பிரதியைப் போன்றது. முழுவதுமிருக்கிறது. ஆனால் முன்பிரதிகளில் இல்லாத அடியிற்கண்ட செய்யுட்கள் ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ளன.

வாழி காலன்
வாழி கலிகன்றி
வாழி குறையலூரர்
வாழி வேந்தன் வாழியவே.

மாயோனைவாள் வலியால் மந்தரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

* * * * * *

எங்கள் கதியே யிராமா னுசமுனியே
சங்கைகெடுத் தாண்ட தவராசா—பொங்குபுகழ்

மங்கையர்கோ னீந்த மறையா யினவனைத்துந்
தங்குமன நீயெனக்குத் தர.

குறிப்பு :

இதில் மீட்டும் 44-முதல் எழுதிய நாலு ஏடுகள் கடைசியில் கோக்கப்பட்டுள்ளன.

990. No. **572** நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

ஏடுகள் 102 ; அபூர்த்தி Lines 8—**11** in a Page.

இது 567-ம் நம்பரைப் போன்றது. இதில் முதலிலிருந்து 11-ம் பத்தில், இரண்டு பத்துவரையும் இருக்கிறது. பெரும்பாலும் கறையான் அரித்துச் சிதைந்திருக்கிறது.

991 No. **573** நாலாயிர திவ்வியப் பிரபந்த

முதலாயிரம்.

ஏடுகள் 70 ; Lines 8—10 in a Page.

இதில், பெரியாழ்வார் திருமொழி நாச்சியார் திருமொழி, தொண்டரடிப்பொடி திருப்பள்ளி யெழுச்சி, திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம், திருப்பாணாழ்வார் அமலனாதிப்பிரான், மதுரகவியாழ்வார் கண்ணினுண் சிறுத்தாம்பு ஆகிய இவைகள் இருக்கின்றன. ஏடுகள் துண்டு துண்டாக முறிந்தும் பெரும்பாகம் கறையான் அரித்துச் சிதைந்தும் இருக்கின்றன.

992. No. **574** நித்தியானு சந்தானம்.

ஏடுகள் 50 ; Lines 4—6 in a Page.

இது, 434-ம் நம்பர் உட்பிரிவு (c) போன்றது. இதில்

இராமானுசர் 108 அந்தாதியில் ஒரு ஏடும் கோக்கப்பட்டிருக்கிறது.

## 993. No. 575 நித்தியாநு சந்தானம்.

ஏடுகள் 130 ; Lines 4—8 in a Page.

இது நாலாயிரப் பிரபந்தத்தினின்று தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட பாசுரங்களை உடையது. விஷ்ணு ஆலயங்களில் நாடோறும் மாலைக்காலத்தில் அனுசந்தானம் செய்யப்பட்டு வருதலின், இந்நூல் நித்தியாநு சந்தானம் எனப் பெயர் பெற்றது.

Beginning :

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

* ஸ்ரீசைலேசதயாபாத்ரம்
தீபக்த்யாதிகுணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே
ரம்யஜாமாதரம் முநிம் ||

★ ★ ★ ★ ★

வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

End :

கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான்
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்—சீர்கலந்த
சொன்னினைந்து பொக்காரேற் சூழ்வினையி னாழ்துயரை
யென்னினைந்து போக்குவரிப் போது. (86)

குறிப்பு :

இதில் இயற்பாவும் இருக்கிறது.

---

* முதற்பதிப்பில் கிரந்த எழுத்துக்களில் இருந்த இந்தப் பகுதியை இந்தப் பதிப்பில் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

## 991. No. **577** நாலாயிர திவ்ய ப்ரபந்தம் முதலாயிரம்.

ஏடுகள் 245 ; பூர்த்தி Lines 5—6 in a Page.

இதில் பெரியாழ்வார் முதல் மதுரகவியாழ்வார் ஈருக ஒன்பதின்மர் இயற்றிய முதலாயிரம் இருக்கின்றது. சிற்சில இடம் சிதைந்துள்ளது. "பல்லாண்டு பல்லாண்டு" எனத் தொடங்கும் பாசுரத்தில் "பல்கோடி நூருயிரமு" மென்ற சுத்த பாடம் காணப்படுவது சிறப்பு.

Beginning :

மின்னுர் தடமதில்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகாற்
சொன்[ஞர் கழற்கமலஞ் சூடினேம்—முன்னுட்
கிழியறுத்தானென் று]ரைத்தோங் கீழ்மையினிச்சேரும்
வழியறுத் தோம்[நெஞ்சமே வந்து ]

[பாண்டியன் கொண்டாடப் பட்டர் பிரான்]வத்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
[வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்க]ள் யாமுடைய பற்று.

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூருயிரமு
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணவுன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

End :

அன்பன் றன்னை யடைந்தவர் கட்கெல்லா
மன்பன் றென்குரு கூர்நகர் நம்பிக்
கன்பனாய் மதுரகவி சொன்ன சொன்
னம்புவார் பதிவைகுந்தங் காண்மினே. (11)

முதலாயிர முற்றும்.

Colophon.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
ஆயனுர் வேங்கட கிருஷ்ண குருவே நமா.

## 995. No. 578 இயற்பா.

ஏடுகள் 160 ; பூர்த்தி Lines 5—7 in a Page.

இது, நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் ஒரு பகுதியா கும். இதில் பொய்கையாழ்வார் முதலாகத் திருவரங்கத்த முதனார் ஈருக எழுவர் இயற்றிய பாசுரங்கள் இருக்கின்றன.

Beginning :

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியார்கள் வாழ வருந்தமிழ் நூற் றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

* * * *

என்பிறவி தீர விறைஞ்சினே னின்னமுதா
வன்பே தகளி யளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்மல்லை
பூதத்தார் பொன்னங்கழல்

அன்பே தகளியா யார்வமே நெய்யாக
வின்புருகு சிந்தை யிடுதிரியாய்—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

End :

இன்புற்ற சீலத் திராமானு சாவென்று மெவ்விடத்து
மென்புற்ற நோயுட ரேறும் பிறந்திறந் தெண்ணரிய
துன்புற்றவியினுஞ் சொல்லுவ தொன்றுண்டு தொண்டர் கட்கே
யன்புற் றிருக்கும்படி யென்னை யாக்கியங் காட்படுத்தே. 107

அங்கயல் பாய்வயற் றென்னரங் கன்னணி யாக மன்னும்
ங்கய மாமலர்ப் பாவையைப் போற்றுதும் பத்தியெல்லாந்

தங்கிய தென்னத் தழைத்துநெஞ் சேநந் தலைமிசையே
பொங்கிய கிர்த்தி யிராமா னுசனடிப் பூமன்னவே. 108

எந்தாதை கூரேச ரிணையடி யோன் வாழியே
எழின்மூங்கிற் குடிவிளங்க விங்குவந்தான் வாழியே
பைந்தாமத் தரங்கர்பதம் பற்றினுன் வாழியே
பங்குனியி லத்தநாட் பாருதித்தான் வாழியே
நந்தாதை யெதிராச னலம்புகழ்வோன் வாழியே
நன்மதுர கவிநிலையை நண்ணினுன் வாழியே
யந்தாதி நூற்றெட்டு மருளினுன் வாழியே
யணியரங்கத் தமுதனு ரடியிணைகள் வாழியே.

இயற்பா முற்றும்.

## 996. No 579 இயற்பா.

ஏடுகள் 135 ; பூர்த்தி Lines 5—7 in a Page.

இதுவும் முற்பிரதி போன்றது. இயற்பா முழுவதுமிருக்கின்றது. சிற்சில இடங்களிற் சிதைந்திருக்கிறது.

## 997. No. 580 நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

ஏடுகள் 197 ; பூர்த்தி Lines 5—7 in a Page.

இது 577-ம் நம்பர் பிரதியைப் போன்றது. முதலாயிர முழுதுமிருக்கிறது.

## iii. வைணவசமயத் தோத்திரங்கள்.

## 998. No. 50 இராமாயணத் திருப்புகழ்.

ஏடுகள், 338 ; பூர்த்தி சிறிது சிதிலமாயிருக்கிறது.
Lines 5 in a Page.

இது, சீராம சரிதத்தை வண்ண விருத்தங்களால் கூறு

தலின் இராமாயணத் திருப்புகழ் எனப் பெயர்பெற்றது. ஒவ்வொரு செய்யுளினும் முன்னிரண்டடிகளில் வேண்டுகோளும் பின்னடிகளில் இராமசரிதமும் அமைந்துள்ளது. இராமாயணத்தைப் போலவே இதுவும் ஏழுகாண்டங்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது 371 வண்ண விருத்தங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் பாலகாண்டத்தில் 58, அயோத்தியாகாண்டத்தில் 15, ஆரணியகாண்டத்தில் 44, கிஷ்கிந்தா காண்டத்தில் 37, சுந்தரகாண்டத்தில் 5 , யுத்தகாண்டத்தில் 100, உத்தரகாண்டத்தில் 65 வண்ண விருத்தங்கள் இருக்கின்றன. இதில் ஏழு காண்டங்களும் இருக்கின்றன. இதனை இயற்றியவர் பாலபாரதி.

இனி இந்த நம்பர் கடைசியில் உள்ள 'சீராமன் ராமசெயம், தன்னைப் பூசித்துப்—பாராயண நாளும் பண்ணினால்,' என்னும் வெண்பாவையும், 'யாதுநினைந் தாலுமந்த வாழ்வு தருந் தியாகசிந்தி ராமசெயம் பாடவந்து துணையாவாய்' என்னும் 7 4-ம் நம்பரின் முதற் செய்யுளையும் ஆராயுமிடத்து இத்திருப்புகழுக்கு இராமசெயம் எனவும் பெயருண்டு எனவும், இந்நம்பர் மூன்றும் செய்யுளில், 'பாரதி நெஞ்சாலுணர்ந்து மேல்வருமென் றேதெளிந்து பாடிய நன்காதை' எனவும், 714-ம் நம்பரின் ஆரம்பத்தில் 'உந்திய செந்தமிழான் வாலபாரதி யோலை யுண்மை' எனவும் காணப்படுதலின் இந்நூலாசிரியர் பாலபாரதி என்வும் விளங்கி நிற்றல் காண்க. முதலில் இரண்டு ஏடுகள் ஒடிந்துள்ளன. இவ்வகை வண்ணவிருத்தங்கள் தமிழ் இலக்கியங்களுள் சில நூற்றாண்டாகப் பயின்று வருவதாகத் தெரிவதால் இவர் சமீபகாலத்தில் இருந்தவராகக் கருதத் தக்கவர். இது அச்சிடப்படவில்லை.

Beginning :

பணிமேலே படுத்தவனைத் தனுவேதா னெடுத்தவனைப்

பகைசேர் தாடகைக்கு முதற்கணை மேவிப்
பதையாதே துணித்தவனைத் திருவோடே தினைத்தவனைப்
பரதாழ்வா ரிருக்கவனத் திடையே போய்க்
கணையாலே குரக்கரசைப் பொருசீ ராமனைக் கடலைக்
கடவாநீ டரக்கர்குலக் கிளைமாளக்
களமீதே யறுத்தவனைப் பரிவோடே துதிக்கமுழுக்
கவிஞானே தயத் வெளிவைத் தரவேணும்
துணைவா காசினிப்புலவர்க் கரசேசீ தனக்குமரித்
துறையாளர் வெதிர் சமயகுல காலா
தொழுவார்தீ வினைச்சிகிரிக்கிடியேறே மணக்குமகிழ்த்
தொடைமாரு பிறப்பினுட பகையாறுந்
தணிவோனே யருட் கடலுட் டுளைவோனே சகத்துணர்வைத்
தருவோனே செழித்தமறைப் பொருள்சேரத்
தமிழொராயிரத்தி லமைத்திடுவோனே யெடுத்தபுகழ்ச்
சடகோபா திருக்குருகைப் பெருமாளே. (1)

கோழையானவர் மிகுத்த வீரமே புகலுகிற்பர்
கோதுசே ரிழிகுலத்தர் குலமேன்மை
கூறியே நடுவிருப்பர் சோறிடார் தருமபுத்திரர்
கோவு நானெனவுரைப்பர் மிடியூடே
யாழுவார் நிதியுடைக்கு பேரனெனவிசைப்ப
ராசுசேர் கலியுகத்தி னெறியீதே
யாயுநூ லடைவுகெட்ட நாணும்வெ ....லிவவர்க்கு
ளாகையா லவையடக்க முரையேனே
யேழைவா னவர்பிழைக்க யானைவா சவனடத்த
வீழமேல் வெயிலெறிக்க மதிவேணி
யீசனார் தமதிடுக்கண் மாறியே கயிலைவெற்பி
லேறியே யினிதிருக்க விருநாலு
வேழமானவையினெட்டு நாலுகோடுகண் முளைக்க

வேதவீடண ஞெருத்தன் முடிசூட
வீரராவ ணனுடற்குண் மூழ்கியே கழுகுகொத்த
வீறுசேர் சிலையெடுத்த பெருமாளே. (2)

End :

மாதாவு மென்ருதையும் பிதாமக ராஞரிறந்தோரு மென்செய்தேகினு
மாருது நின்பாதம் வந்துபேண வென் வழியாஞேர்
வாழ்வோடிருந்தே யனந்தமாயவர் கால் கால் வளந்தேறியன்பராகியுன்
மாகோயிலுஞ் சேவையுங்கை யாளுக வடியேனும்
போதா நடந்தே தெளிந்து சூழ்புன னேரே கலங்கா துணர்ந்ததோர் விழி
போவார் திறம்பி மைந்தபோக மேடுளதான ருப்பென்றே கோளென்ற
போதினில் வீருன கொங்கை மங்கைமேலுற வாசமென்
பாதகெங்கைமுந்து மணிமார்பா
மீதே செழும்பூ மடந்தை வாழ்வுற, நால்வேதமுஞ்சூழ்வந்து தாடொழ
வீருக நின்றே பின்வானரர் சுரராக
வீதான பின்பாகவந்த வூர்வரமேலான சந்தான மென்ரேருர்புக

யாகேசனும் தேவரும் புராரியு மலரோனு
மீடேறமுன்போல் வணங்கி வாழ்வுற
மீளாது சேர்வை குந்த மேவிய
ராமாவரங்கா வனந்தவானவர் பெருமாளே. (65)

உத்தரகாண்டம் முற்றும்.

ஆக காண்டம் 7-க்கு வண்ண விருத்தம் 371-க்கு விவரம்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் கவி | 58 | சுந்தரகாண்டம் | 52 |
| அயோத்தியாகாண்டம் | 15 | யுத்தகாண்டம் | 100 |
| ஆரணியகாண்டம் | 44 | உத்தரகாண்டம் | 65 |
| கிஷ்கிந்தாகாண்டம் | 37 | ஆக காண்டம் 7க்கு கவி | 371 |

Colophon :

சீராமன் ராமசெயந் தன்னைப் பூசித்துப்
பாரா யணநாளும் பண்ணினால்—வாராது
தீது நலமே சிறக்குங்கா ணெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு.

ஆயனூர் வேங்கடகிஷ்ணகுருவே நம.

999. No. 47. (a) இராமாயணத் திருப்புகழ்.

ஏடுகள் 104 ; *சிதிலம் அபூர்த்தி* ; Lines 5 in a Page.

இது முன்பிரதியைப் போன்றது. இதில் முதல் நான்கு காண்டங்கள் இருக்கின்றன. மிகவும் சிதைந்திருக்கிறது.

1000. (b) சீதை கலியாணம்.

Lines 6 in a Page.

இது வசனமும் விருத்தம் அகவல் முதலிய பாக்களும் விரவிவர கதைப் போக்கைத் தழுவிச் சாதாரண நடையில் செய்யப்பட்டிருக்கிறது. மிகவும் சிதைந்துள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning :

பருதிநன் குலத்தில் வந்த பராபர ராமன் தோளில்
திருமண மாலை.............................................

.......................................................................
......மைவா ரணத்தின் பாத கமலமே காப்புத்தானே.
..............   ..........................................................
சேய்வளம் வேள்விவந்த சீதைகல் லியாணம் பாட
.................................................................   ...

End :

திசரத நந்தனற்கு சீதாமனோகரற்குப்
புயபல ராகவற்கு மங்களம்
கோதண்டபாணிக்கு மங்களம்
சானகிதேவிக்கு சரசவுல்லாசிக்கு ரெருபதிதேவிக்கு
மங்களம்.

சீதை கல்லியாணம் எழுதிமுகிந்தது.

Colophon :

யுவ-ஸ்ரீ புரட்டாசி-மீ 11வ வேதன் எழுதிமுகிந்தது முற்றும்.

1001. **No. 714.** இராமாயணத் திருப்புகழ்.

ஏடுகள் 73 ; அபூர்த்தி ; Lines 6—7 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டம் ஈருக ஐந்து காண்டங்கள் இருக்கின்றன. ஆனுல் சுந்தரகாண்டத்தில் 10-செய்யுட்களே இருக்கின்றன. இந்நூல் தொடக்கத்தில்

'உந்திய செந்தமிழான் வாலபாரதி யோலையுண்மை
யிந்திர ரானவ ரெல்லாருங் காண்க இதன்றியிலே
செந்தமிழ் பாடவும் பொன்னுடு பார்க்கவுஞ் சேவிக்கவும்
வந்திட வேணும் விடுதியுஞ் சோடித்து வைத்திடுமே'

என்னும் செய்யுளொன்று எழுதப்பட்டுள்ளது.

## 1002. No. 685. (*a*) சரஸ்வதி தோத்திரம்.

ஏடுகள் 150; Lines 4 in a Page.

இது சமஸ்கிருத பாஷையிற் செய்யப்பட்டுள்ள சரஸ்வதி தோத்திரம் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அச்சிடப் படவில்லை.

Beginning :

சரசுவதி நமஸ்துப்பியம் வரதே காமரூபிணி
வித்தியாரம்பம் கருஷ்யாமி சித்தப்பவது மேசிதா
சரசுவதி நமஸ்துப்பியம் சர்வதேவி நமோ நமா
சாந்தரூபி ச்சிகாரி சர்வதேவி நமோ நமா
நித்தியானந்தி நிராதாரி நிட்களாயி நமோ நமா
வித்தியாதரி விமலாயி சுத்தக்கியானி நமோ நமா
சுத்தப்படிக ரூபாயி சூட்சமரூபி நமோ நமா

End :

இதம் சரசுவதி தோத்திரம் அகத்திய.........
சர்வ சித்தார்த்த காம சாந்தம் சர்வகா.........

---

## 1003. (*b*) கணபதி தோத்திரம்.

Lines 4 in a Page.

இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இது ஏகோஜி மகாராஜா காலத்தில் கி. பி. 1676—1683 செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

Beginning :

கடலை பொரியவல்பயறு கற்கண்டு தேங்காய்
கன்னியிள நீர்கரும்பு கதலிபலாச் சுளையும்
துடவரிய எள்ளுண்டை பாலமுது தேனுந்
துய்யவடை பணியாரம் தோசைப்பச்சரிசி

திடமுடைய அதிரசம் மாங்கனி யோடப்பம்
செழும்பாகு பெருவள்ளி சிறுவள்ளிக் கிழங்கும்
குடவயிறு தனிலடையு மகா கணபதியே
குஞ்சரமே வந்தென்னை அஞ்சலென்பீரே.

End :

சீர்வாழி அளகைவாழி தேவர்களும் வாழி
செய்யபுக ழேகோரி மகாராசன் வாழி
பார்வாழி அந்தணர்களரசர்களும் வாழி
பண்டார வாடை பல பட்டடையும் வாழி
ஏர்வாழி கார்வாழி தாமுமே வாழி
எல்லோருந் தான்வாழி இசைத்தமிழை வளர்க்கும்
பேரான சரசுவதியுந் தாமுமே வாழி
பெருமை முத்துக்குமரரேசர் வாழி நித்தம் வாழி 14.

## 1004. (c) சிவசூரிய தோத்திரம்.

Lines 4—6 in a Page.

இது 5 விருத்தத்தில் சூரியத் தோத்திரம் கூறுவது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

நயனத்தி ஞெளியான மணியே சிவாயநம
நாணுகி நீயாகி நின்ருய் சிவாயநம
பயனத்த பொருளாய பொருளே சிவாயநம
பணிவார்கள் பிணிதீர வருவாய் சிவாயநம
அயனச்சுதன் சிவனு மாணுய் சிவாயநம
ஆருறு சமயங்கள் நீயே சிவாயநம
செயலொத்த தேரேறி வருவாய் சிவாயநம
சிவ சூரி யாயநம சிவனே சிவாயநம

End :

எவ்வாகி யஞ் செழுத்தானாய் சிவாயநம
இடை பிங்கலாதிக்கு நீயே சிவாயநம
பொய்வார மில்லாத பொருளே சிவாயநம
பொன்னான திருமேனி யுடையாய் சிவாயநம
அவ்வாகி ஒவ்வாகி நின்றாய் சிவாயநம
அப்பாலு மிப்பாலு நின்றாய் சிவாயநம
செய்வார் தவப்பேறு தீர்ப்பாய் சிவாயநம
சிவசூரி யாயநம சிவனே சிவாயநம

முற்றும்.

---

## 1005 (*d*) சூரிய தோத்திரம்.

Lines 5 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது.

---

## 1006. (*e*) திருப்பள்ளியெழுச்சி.

Lines 4—5 in a Page.

இது, மன்னார்குடி இராசகோபாலசுவாமி விஷயமானது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

அரிதகரி அரிதகரி அச்சுதாநந்தனே
ஆதிநாராயணா லோகாட்சகரா
வரியரவி லேதுயில்கொள் செண்டலங்காரனே
மன்னவனே பள்ளியுணராய் 1.

அண்டர்தொழு முப்பத்து முக்கோடி தேவரும்
அருமறைகள் முனிவரும் ஆழ்வார்கள் பதின்மரும்

புண்டரிக மேவு மயனு மிந்திரனிரவியும்
புகழீசர்பதி னெருவரும்
பண்டுவகை உண்டசீ ராசை மாலே என்று
பத்தியுடனே வந்துமுத்தியருளென்கிருர்
வண்டுவரை மாயனே செண்டலக்காரனே
மன்னவனே பள்ளியுணராய். 2.

End :

சொல்லரிய செங்கமல வல்லியார் வல்லிமத்
துய்ய சீர்வல்லிபுத்தூர் வல்லியாருடன்
நல்லபுகழ் கொண்ட மன்னனும் பிராட்டியார்
நன்மன்னனே முழுதுமுடையான்
எல்லேயற மாதவஞ்செய்த கோப்பிரனேயமா
ரிஷி தவசினுல் வந்த ராசமா நகரிலே
மெல்லியர்கள் பிரியாத மதனகோபாலனே
மன்னனே பள்ளியுணராய் ஸ்ரீ வாசுதேவனே
பள்ளிபுணராய் 8

## 1007. (*f*) சிவவாக்கியம்.

**Lines 5—6 in a Page.**

இது சிவவாக்கியர் என்பவரால் பாடப்பட்ட ஞான நூல். சில பாடல்களே தேர்ந்தெழுதப்பட்டுள்ளன.

Beginning :

தில்லே நாயகனுமவன் திருவரங்கனுமவன்
எல்லேயான புவனமெங்கும் ஏகமான மூர்த்தியைப்
பல்லுநாவு முள்ளபேர் பயின்றுபாடல் பேசுருர்
வல்லவங்கள் செய்யுமாந்தர் வாய்புழுத்து மாள்வரே.

End :

சாத்திரங்களோதுகின்ற சட்டநாதபட்டரே

வேந்துறக்கம் வந்தபோது வேதம் வந்துதவுமோ
மாத்திரைப் போதாகிலு மறித்து நோக்கவல்லிரேல்
மாத்திரைப் போமெய் கொளாது சுத்திமுத்திபுத்தியே. 14

## 1008. (*g*) இராசகோபாலர் தாலாட்டு.

Lines 4—5 in a Page.

இது, மன்னார்குடி இராசகோபாலசுவாமி பேரில் தாலாட்டுக் கூறுவது.

Beginning :

அண்டர்தொழுஞ் சீராசை அச்சுதனைத் தாலாட்டத்
தண்டுசங்கு நேமிவாள் சார்ங்கத்தைப் போற்றி செய்வாம்
ஆழ்வார் பதின்மரும் அடிபோற்று வண்டுவரை
வாழ்வான செங்கமல வல்லிமன்னனைத் துதிப்பாம்.

End :

வாழ் வாரும் சீராசைப் பதம்வாழும் சீராசை
ஊர் வாழி ராமா உன்செனகெந்த வாழியவே.

## 1009. (*h*) செங்கமலநாச்சியார் தாலாட்டு.

Lines 4—5 in a Page.

இது, மன்னார்குடி செங்கமலவல்லிபேரில் தாலாட்டுக் கூறுவது.

Beginning :

சீராசைச் செங்கமலச் செந்திருவைத் தாலாட்டத்
தாராசை கொண்டகுயில் தாமோதரன் துணையே 1
வண்டுவரைச் செங்கமல வல்லிதனைத் தாலாட்டச்
செண்டலங்கா ரப்பெருமாள் சேனையர்கோன் முன்னடவாய் 2

End :

> விண்ணரும்பும் செண்பகத்தாள் முயத்தாலும்
> அண்ணலரும் செங்கமல வல்லியே கண்வராய்
> பூவுல கெலாம் வாழி புண்டரிகிமார்வாழி
> தேவா திரைவாழி சீராசை வாழியவே.

---

## 1010 (*i*) பஞ்சபட்சி சைனம்

Lines 4—5 in a l age.

இது சோதிடநூல்களுள் ஒன்று இதில் வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் பஞ்சபட்சிகளும் இன்ன பட்சத்தில் இன்னின்ன கிழமைகளில் இன்ன இன்ன தொழில் செய்யும் என்பதை அவரவர் பெயரின் முதலெழுத்துக்குரிய பட்சியைக்கொண்டு அறியும் வகை கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரதி அபூர்த்தியாக இருக்கிறது.

Beginning :

| | | | | |
|---|---|---|---|---|
| செவ்வாய் | ஞாயிறு பகல் | முதற்சாமம் | வல்லூறு | ஊண் |
| | | | ஆந்தை | நடை |
| | | | காகம் | அரசு |
| | | | கோழி | உறக்கம் |
| | | | மயில் | மரணம் |
| | ௸ | 2-ம் சாமம் | மயில் | ஊண் |
| | | | வல்லூறு | நடை |
| | | | ஆந்தை | அரசு |
| | | | காகம் | உறக்கம் |
| | | | கோழி | மரணம் |
| | ௸ | 3-ம் சாமம் | கோழி | ஊண் |
| | | | மயில் | நடை |

| | | | |
|---|---|---|---|
| | | வல்லூறு | அரசு |
| | | ஆந்தை | உறக்கம் |
| | | காகம் | மரணம் |
| ஷை | 4-ம் சாமம் | காகம் | ஊண் |
| | | கோழி | நடை |
| | | மயில் | அரசு |
| | | வல்லூறு | உறக்கம் |
| | | ஆந்தை | மரணம் |
| ஷை | 5-ம் சாமம் | ஆந்தை | ஊண் |
| | | காகம் | நடை |
| | | கோழி | அரசு |
| | | மயில் | உறக்கம் |
| | | வல்லூறு | மரணம் |

End :

மந்தன் திங்கள் குருகுண்ணும் மானே வெள்ளி
மயிலுண்ணும்
புந்தி ஆந்தை பொருதுண்ணும் பொன்னே வலியான்
போசனமாம்
சிந்தை குளிர இரவியுடன் செவ்வாய் காக மினிதுண்ணும்
அந்தி காலத் தடைவிதென்று அமரர்க் கருளிச்செய்தாரே

## 1011. *(j)* இராசி ஆரூடம்.

Lines 5—6 in a Page.

இது சோதிட நூல்களுள் ஒன்றாகும். இதில் ஒருவர் ஒரு விஷயத்தை வினவிடில் அவர் சொல்லிய நேரத்தை உதய ராசியாகக் கொண்டு ஆரூடம் சொல்லும் முறை கூறப்பட்டுள்ளது பன்னிரண்டு இராசிக்கும் பன்னிரண்டு செய்யுட்களிருக்கின்றன. ஆகிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

பாசமாஞ் சிவலைசேரும் பால்பழமுள்ளதாகும்
தேசமே போனூர் மீள்வர் சேயிழை மணமுமுண்டாம்
தூசுபொன் பூமி கொள்ளத்துலைபெற இன்பமாகும்
வாசமாங் குழலி ஞளே வளர்ந்திடு மேஷந்தானே.

End :

ஆனதோர் மழையும் பத்தி அகமது வெகுவாய்த் தாழ்க்கும்
சேனையும் படையும் வெல்லும் செல்வழிதீதேயாகும்
ஊனமா யொருவன் சாவன் ஒண்டொடி வரவுமில்லை
போனதோர் போக்கு மீளார் பொருந்திய மீனந்தானே 12

## 1012. (*k*) கவுளிகாதல்.

Lines 6 in a Page.

இதுவும் சோதிட நூல்களில் ஒன்று. இதில் இன்ன கிழமையிற் பல்லி சொன்னால் இன்னது பயக்கும் என்றுரைக் கப்பட்டிருக்கிறது எட்டுச் செய்யுட்களிருக்கின்றன ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

கதிர்தனில் மொழியும் பல்லி கறுப்பது காலொன்றானம்
பதிபுகழ் பொன்னும் பெண்ணும் பகைவரே கொள்வா
ரென்று
மிருவிழி விசாதி யுண்டாம் விளைவரக்கலகந்தானே. 1

End :

கருதிய பொருளும் செட்டு காரியம் போக்கு மீட்சி
உருகிய மனையாள் பேறு ஊர்ப்பயி ரடுமை மாடு
பதிபுகழ் அரசர் வாழ்வர் பாழொன்று சொன்னதில்லை 8

குறிப்பு :

இதில் மேற்கண்ட நூல்களை அல்லாமல், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருக்கோவையார், பெரிய புராணசாரம், திருப்புகழ், கோயிற்புராணம், பாம்பாட்டி சித்தர் பாடல் முதலியவற்றினின்றும் எடுத்தெழுதிய சிற்சில செய்யுட்களும் காணப்படுகின்றன.

## XX. ஜோஸியம்.

### 1013. No. **523** சோதிட நூல்.

ஏடுகள் 138 ; அபூர்த்தி Lines 4—7 in a Page.

இதில், ஆயிசு லக்கினம், 12 பாவபலன், மகாதிசாபுத்திகள் அஷ்டவர்க்கபலன், நிர்யாணபலன், கோளடைக்க விபரம், மூலத்திரிகோணவிபரம், முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. செய்யுளும் வசனமுமாகக் கலந்து எழுதப்பட்டிருக்கிறது. முதலும் கடைசியும் இல்லாத்தினல் இது இன்ன நூலெனத் தெரியவில்லை. ஏட்டின் நம்பர் தொடர்ச்சியாக இல்லை அச்சிடப்படவில்லை.

Beginning :

.....................................................................................

.....................................................................................

..........யே சுரனிருக்க கண்டவயதாம் ஒருநூறே
பிடியுமீனம் பெட்டங் குசமும் பின்னே துடரு நடையாறே 7
நடிக்கும் சென்மமுதல் நாலாமிடத்து னகடுவே ஞறகலேயும்
படிக்கும் புதன் சுக்குர னரசன் படிந்தே யிருக்கில் சதவருடம்

துடிக்கும் புத ஞெண்டே நின்ருல் துடர் முப்பத்து
மூன்ருகும்
அடுக்கும் வெள்ளிக் கறுபத்தா றரச ஷிருந்தால்
நூருண்டே. 8

அஷ்டமத்தி லாதிபனும் அட்டமத்தி லமந்து நிற்க
சோமன் பாவருடன்கூடி யிரண்டா றெட்டிற் சூழ்ந்திருக்கிற்
ருமும் வயது அன்பத் தெட்டாம் தருமஞா ஸி தாஞவன்
காமன் கணையைப் பழித்து சிலே கடிந்து மிரட்டுங்
கண்ணுரே. 9

கண்ணுர் குடும்ப லெக்கினமே கண்ட சென்மலெக்கினமாய்
பண்ணுதர் கெட்டாங்கிசையில் பயிலு மரசன் பரிந்திருக்க
யெண்ணுர் பாவற் கேந்திர ததி லில்லா திருக்க யிவ்வுலகில்
தன்ஞவருட மறுபதுக்குத் தாஞுற்றிடுவார் தப்பாதே. 10

* * * * *

புதன் திசை.

புதன் திசை—வரு 17—க்கு மொத்த பலன்.

உத்தம ஸ்ரீசங்கமம், சவுக்கியம், நாஞவிதமான கேள்வி, கெவுளி விலாச சௌக்கியம், பொன் ரெத்தினங்கள் லாபம், உச்ச சொக்ஷேத்திரங்களிலே யிருந்தால் வித்யா லாபம், சிங்கார சௌக்கியம், வியாபாரம் பசு பூமி லாபம் களத்திர சௌக்கியம், புத்திர சௌக்கியம் நல்ல போஜனம் பூஷண லாபாதி லாபம் 11-2 வீடு யிதிலிருந்தால் சர்வத்திர பரசங்கம தன தானியலாபம் சேஞதிபத்தியம் பேரிகை மிதங்கவாத்தியத் துடனே பல்லாக்கு லாபம் கேந்திர திரிகோண லாபங்களிலே யிருந்தால் ராஜியலாபம் சௌக்கியம் கீற்தி வித்ய வியாபாரம் பூரண ஜீவனம் பாக்கியங்களும் லக்கினம் இதுக்குடையவஞ யிருந்து கேந்திர பாக்கியத்திலிருந்தால் யானே குதிரை பல்லாக்கு லாபம் கீர்த்தி யிஷ்டமான களத்திர லாபம்.

End :

| | |
|---|---|
| பூரட்டாதி-முதற்-மேடம் | உத்திரட்டாதி-முதற்கா-சிங்கம் |
| ,, 2 ரிடபம் | ,, 2 கன்னி |
| ,, 3 மிதுனம் | ,, 3 துலாம் |
| ,, 4 கடகம் | ,, 4 விருட்சிகம் |

| | | |
|---|---|---|
| ரேவதி | முதற்கால் | தனுசு |
| ,, | 2 | மகரம் |
| ,, | 3 | கும்பம் |
| ,, | 4 | மீனம் |

இந்தப்படி அமுசத்தில் கிரகம் பிரிக்கிறது.

## 1014. No. 654 சாதகாலங்காரம்.

ஏடுகள் 1|2 ; அபூர்த்தி Lines 6 in a Page.

இது சோதிட நூல்களில் ஒன்று. இது சனன காலத்தில் நவக்கிரக நின்ற நிலைக்கேற்ப பலாபலனைக் கூறுவது. இந்தப் பிரதியின் தலைப்பில் எழுதியிருக்கிறபடி இது அகப் பொருளுரையன்று. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதில் 539 செய்யுட்கள் இருக்கின்றன.

Beginning :

நீருலவு மிப்புவியில் நரர்சென்ம காலையினில்
நின்ற நவக் கிரகத்தின் நிகழ்........ ...
மேருலவும் வடமொழியைத் தமிழ் சாதகநூ
லெனத்தமியே னுரைக்க வெழில் வேதமுனிவன்
பாருலகில் குருகுல பாரதக்கதையை வழுத்தப்
பயிலும்வட கிரிமிசையில் பரிந்து கோடதனல்
சீருலவ வரைந்தருளும் தெய்வவாரணத்தின்
செழுங்கமலத் தாளிணையைச் சிரத்தில் வைப்பாம். (1)

வைத்தபல பூதபே தங்க ளேழு
வகையின் மன்னுமுயிர்க்குயிராய் மணியொளிக
ளிலங்கும்
பைத்தலைவாழ ரவர சன் வியாக்கிர மாமுனியும்
பணியநடம் புரியுமலர் பங்கயத்தாள் தொழுதேன்
கைத்திகிரி நெடுமால்தந் தருள்விரிஞ்சன் மகவான்
கருணையுற வணங்குசிவ காமசவுந் தரிசொல்
சத்திகண பதிக்கிளை யோனமரா சிறைமீட்டருளும்
சண்முக வேலாயுதன்பொற் சரணமலர் தொழுவாம் 2)

* * * * *

கொண்டுதமிழ் சாதகத்தினலங்கார மெனப்பேர்
குறித்தருட்டர் சுபமாச யோக மங்கிசையு
மண்டிய நட்பாட்சி உச்சம் பகை நீசம் பலங்கண்
மருவுந் திரேக்கரணம் மூலத்திரு கோணம்
கண்டிடும் வேளை குணங்கள் ஓரைமகா திசையுங்
காலச்சக்கர முதலாங்கிசையில் சக்கரமு
மீண்டியலக்கின முதலாய் பன்னிரு பாவத்தில்
விரித்தபல னவைதெரிந்து விளம்பலுற்றும். (9)

End :

லெக்கனந் தனக்கேழ் வியத்திலிருந்திடுஞ் சோமன் தானும்
புக்கவே பாவாங் கிசையில் பொருந்தியே யிருந்த காலை
சுக்கிரன் பாவ ரோடு துலங்கவே யிருக்க நாரி
கைக்கொள்ளும் புருடன்வேறு கணவனைக் கொள்வள்
கண்டே. 46

1015 No. 658 *(a)* சூடாமணி

உள்ளமுடையான் மூலமும் உரையும்.

ஏடுகள் 184 ; Lines 4—5 in a Page.

இது சோதிட நூல்களுள் ஒன்று. இதில் திதி வார

நக்ஷத்திர கரண யோகம் ராசி கிரகங்களின் பெயரும், கோசர பலன், சாதகபலன் முதலியவைகளும் கூறப்பட்டுள்ளன. இது செய்வித்தோனுற் பெயர்பெற்றது. இதனை இயற்றியவர் பாண்ட மங்கை திருகோட்டி நம்பி. இவரது காலம் சகாப்தம் 1200. அதாவது கி. பி 1278 இதில் 186 செய்யுட்கள் உரையுடன் இருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

மாதவர் முன்பு சொன்ன வடமொழிக் கெணிதநூலைத்
தீதறு தமிழினுலே செப்ப நானிசைந்த தென்னில்
வேதமு மங்க மாறுங் கலைகளும் விரும்பியும்
ஓதிய வுலகுக் கேற்க வுரைப்பனென் றிசைந்த தொப்பாம்.

என்பது அவையடக்கம்.

ஒப்பினு ளோரை வாரந் திதி யோகங் கரண மாதி
செப்பின விதானங் காலஞ் சாதக நன்மை தின்மை
தப்பினல் பிடித்த லுண்ணல் கோசர தசாபலன்கள்
துப்புறு நல்லெண்ணங்க ளியாவையுஞ் சொல்லலுற்றேன்.

என்பது, நாள்களின் பேரும், ராசிகளின் பேரும், வாரங்களின் பேரும், திதிகளின் பேரும், யோகங்களின் பேரும், கரணங்களின் பேரும், நட்சேத்திரங்களும் மீதில் உதா உகங்களும், நட்பாக்ஷி உச்சம் பகை...... ............... சக்கிறை யோகங் கரண வோரை கோட் கூற வச்சுடற் செலவுகளும் விகூ..............................சாதகங்களும் காலங்களும் நன்மை தின்மைகளும்........................விழ தேனை முதலா் யினவையும் ஷூ ஷற்றங்களும்-கானறு... ........................................ளும் ஷெங்களும் சாரங்களும் ரெ மனனமரகெகா கைகொரு சுவை படுத்திச் சொ .........ரா என்றவாறு. (2)

உற்றல குய்யவந்தா னருளுள்ள முடையான் மங்கை
கொற்றவன் புகழ் போலிந்த குவலைய முழுதுங் கேட்கச்
சொற்ற வின்னூற் பெயர் உள்ளமுடை சூளாமணி
யென்றிட்டுப்
பொற்றொடி வளைக்கை நல்லாய் புலவர்முன் புகலலுற்றேன்.

எ-து நூற்பேர் பெறுமிடத்துச் செய்தவன் பெயராலும் செய்வித்தவன் பெயராலும் அளவினாலும் மிகுதியாலும் சிறப்பினாலும் பெயர் பெறு மாதலால் இந்நூல் செய்வித்தோனது செ...ல் உள்ளமுடைச் சூளாமணியென்னும் பெயராலுரைப்பனென்றவாறு. (4)

End :

கற்பனன் மூன்றிலெண்ணை கடிமணஞ் சிராத்தம் போக்கு
வற்புறு பிணிமருந்து மயிரவினை யிவர்களாக
விற்புகழுழுதல் வித்தலினிதுண்ட லறங்கள் செய்தல்
பொற்பணி மகுடரமானடினை யலாமபுகலின் மாதே.

எ-து பிறந்த நாள் மூன்றிலும் எண்ணைவார்க்க விவாகம் சிராத்தம் அசௌளயர்க்கு மருந்து பொசிக்க சவுளம் யிவை விசேசித்து நன்றென்பது. 186.

பொதுவியல் முற்றும்.

## 1016. *(b)* பங்கிரமபலன்.

Lines 5 in a Page.

இது சோதிட நூல்களில் ஒன்று. இதில் வருஷபலன், தலையுவாக் குறி, ஆடிக்குறி, பூரக்குறி, வில்லிடு குறி, கெற்பக் குறி, கிராணம், உடு வீழ்க்குறி, மகவோட்டம், சுக்கிர சரிதை, க்ஷாமக் குறி, கோட்கள் நிலை, மனை நூல், நட்டா முட்டி சிந்தனை முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. இதில் 96 செய்யுட்கள் உரையுடன் இருக்கின்றன. அபூர்த்தி.

Beginning :

பெருவிஷு மறிகோல் பேசிற் சுரு நண்டு மயனப்பேரா
மிரிவிடை குடந்தேள் விண்டு பதமென்க வரிவை வில்மீன்
தருமிதுனங்கள் நான்குஞ் சடாதாரிமுக மிக்கால
மிரவெனல் வினைவுண்டாகும் பகல்வினை வில்லை யென்னே.

ஏ-து. சித்திரை மாதம் அற்பசி மாதம் சங்கற்ம விஷு வென்று பேராம், தைமாதம் ஆடிமாதம் அயனமென்று பேராம், ஆவணி வைகாசி கார்த்திகை விஷ்ணுபதமென்று பேராம், புரட்டாதியும் மார்கழியும் பங்குணியும் ஆனியும் இவை நான்கும் ஜடாதாரிமுக மென்று பேராம் இக்காலங் களிலே யிரவினி வினைவுண்டென்பது பகலெனில் வினை வில்லை யென்பது. 242

End :

தனுசு மேஷ சந்திரன் நடை ரிஷபம் இருப்பு மிதுனம் பூசல், கற்கடகம் வேதமோதல், சிங்கம் வெள்ளை, கன்னி நோய், துலாம் வெறுப்பு, விருச்சிகம் கேடு, தனுசு பட்டினி, மகரம் அனுபோகம், கும்பம் உறக்கம், மீனம் ஊண். யாவ னொருவன் காரியம் வினவின போது சந்திர கெதியைப் பார்த்து யிதனலே பலா பலம் சொல்லுவது.

சந்திர கெதி முற்றும்.

---

1017. No. **659** சூடாமணி உள்ளமுடையான் மூலம்.

ஏடுகள் 139 , அபூர்த்தி Lines 5—8 in a Page.

இது, சோதிட நூல்களுள் ஒன்று. 658 (*a*) போன்றது. சிறிது சிதிலமாயிருக்கிறது.

Beginning :

ஐந்துகரத் தம்பவளத் தன்னிறப்பொற் செந்நிறத்த
தொந்திவயிற் றந்தச் சொரிமதத்து—முந்து
தவளத் தனிமருப்புத் தண்டைக் குறுந்தாட்
கவளக் கரிமுகத்தோன் காப்பு.

எண்ணிய வெண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி பவரே.

விளம்பிய சகர வாண்டா யிரத்திரு நூற்றின் மிக்க
வளம்புகழ் பாண்ட மங்கை மாதவ னரிய வன்சே
யிளங்கொடி மடவாள் காம னியற்றிருக் கோட்டி நம்பி
யுளம்புகழ் கணிதநூலை யுரைத்தன னுலகுக் கெல்லாம்.

உலகொரு மூன்று மேத்த வுயர்மறை நான்கு மெண்ணெண்
கலைகளுந் தெரியு மங்கை மறையவர் கசிந்து போற்றப்
பொலன்மணி யருவி நின்ற பூவண வீசர் பொன்னார்
மலரடி பணிய வின்றென் மனத்தன முடியு மன்றே.

End :

போகமார் கன்னி கோல் தோள் பொ......ம
வேகமார் தலை யெழுச்சி விலங்குமீன் மிக்க பின்னு
மேகிடா தெடுதிபாடு முதையமு மிரண்டு நோக்கிற்
ரேகையா யொன்றேற பின்பு தோன்று நோக்கின்.

1018, No. 660 சூடாமணி உள்ளமுடையான்

மூலம்.

ஏடுகள் 123 ; அபூர்த்தி ; Lines 5—9 in a Page.

இது, முன்பிரதி போன்றது.

இதில் முதலிலிருந்து,
'புகலுந் திசையி லோரொருகோள் பொருந்து மாண்டையம்'
மூன்றீய்ந்து
தொகையுங் கோராண்டதற்குண்ணு நாளென்றறிந்து
சோராமல்
மிகவு முடையான் முதலாக அடைவே விரிக்க ஆண்டு
தோறும்
யகரு மந்தத் திசையூணும்பாலுந் தேனும் போன் மொழியாய்.
என்னும் செய்யுள் முடிய இருக்கிறது.

1019. No. 661 சூடாமணி உள்ளமுடையான்.

ஏடுகள் 90 ; அபூர்த்தி Lines 8—11 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் முதலிலிருந்து 'அழி சனியிற் சனி பெண்டிர் மக்கள் காவி யடியார் கேட்டுந் துயரம்' என்னும் செய்யுள் முடிய இருக்கிறது.

1020. No. 662 சூடாமணி உள்ளமுடையான்.

ஏடுகள் 85 ; அபூர்த்தி Lines 5—7 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது இதில் முதலிலிருந்து 'இனிய பொன் புந்தி நாகம் நெடியவா மிந்து செவ்வாய்' என்னும் செய்யுள் முடிய இருக்கிறது. அடியிற்கண்ட இரண்டு செய்யுளும் இந்தப் பிரதியின் ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ளன.

வெள்ளை வாரணப்
பிள்ளையார் பதம்
உள்ளுவார் மனக்
கள்ள மாறு மே.

எண்ணுங் கருமங்க ளெல்லா முடித்தெனக்கு
நண்ணுங் கலையனைத்து நல்குவான்—கண்ணுதலான்
முண்டத்தான் அண்டத்தான் மூலத்தா னுலஞ்சேர்
கண்டத்தான் பெற்ற களிறு.

---

## 1021. No. 663. சூடாமணி உள்ளமுடையான்.

உரையுடன்

ஏடுகள் 46 ; அபூர்த்தி Lines 9—11 in a Page.

இதுவும் முற்பிரதி போன்றது. இதில் முதலிலிருந்து 'தீரதிலது பனையேறில்' என்னும் செய்யுள் முடிய உரையுடன் இருக்கிறது. மிகவும் சிதிலமாயிருக்கிறது.

* * * * *

கற்றுல குய்ய வந்தா னருளுள்ள முடையான் மங்கை
கொற்றவன் புகழ்பொலிந்த குவலைய முழுதுங் கேட்பச்
சொற்றவிந்நூற் பேருள்ள முடைச் சூடாமணியென் றிட்டுப்
பொற்றொடி வளைக்கை நல்லாய் புலவர் முன் புகலலுற்றேன்.

எ-து. நூற்பேர் பெறுமிடத்துச் செய்தவன் பெயராலும் செய்வித்தவன் பெயராலும் அளவினாலும் மிகுதியாலும் சிறப்பினாலும் பெயர் பெறும். ஆதலால் இந்நூல் செய்வித்தோன் பெயராலே உள்ளமுடைச் சூடாமணி யென்றுரைப்ப வென்ற வாறு.

---

## 1022. No. 664 சூடாமணி உள்ளமுடையான்.

ஏடுகள் 130 ; அபூர்த்தி Lines 5—6 in a Page.

இதுவும் முன்பிரதி போன்றது. இதில் ஆரம்பமுதல் நட்டாமுட்டி சிந்தனை முடிய இருக்கிறது.

குறிப்பு :

இதன் கடைசியில் சினேந்திரமாலை எழுதிய 2 ஏடுகள் இருக்கின்றன.

---

## 1023. No. 665. உள்ளமுடையான் மூலமும் உரையும்.

ஏடுகள் 54 ; அபூர்த்தி Lines 6—9 in a Page.

இது, சோதிட நூல்களுள் ஒன்று. இது திதி வாரம் யோகம் கரணம் நட்சத்திர முதலியவற்றின் பெயர்களும், நட்டாமுட்டி சிந்தனை, சாதக கோசர பலன்களும் பிறவும் கூறுவது. இது சூடாமணி உள்ளமுடையான் எனவுங் கூறப் படும். இந்நூல் செய்வித்தோனுற் பெயர் பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் திருக்கோட்டி நம்பி.

இதில் 34 முதல் 46 வரையிலும் 65 முதல் 74 வரையிலும் ஏடுகளில்லை.

Beginning :

உலகொரு மூன்று மேத்த வுயர் மறை நான்கு மெண்கொள்
கலைகளுந் தெரியு மங்கை மறையவர் கசிந்து போற்ற
[பொலன் மணி யருவி நின்ற] பூவண வீசர் பொன்னூர்
மலரடி பணியி லின்றென் மனத்துயர் முடியு மாதோ.

எ-து. கடவுள் வாழ்த்து.

ஒப்பிலு ளோரை வாரந் திதி யோகங் கரண மாதி
செப்பின விதானங் காலஞ் சாதக நன்மை தின்மை
தப்பில பிடித்த லுண்ணல் கோசர தெசாப லன்கள்
துப்புறு நல்லெண் ணங்கள் யாவையுஞ் சொல்ல லுற்றேன்.

என்பது நாள்களின் பேரும் ராசிகளின் பேரும் வாரங் களின் பேரும் திதிகளின் பேரும் யோகங்களின் பேரும்

கரணங்களின் பெயரும் நட்சேத்திரங்களும் சுபயோகங்களும் சுபகரணங்களும்...... ................ காலங்களின் பெயரும் ...................... நட்டாமுட்டி சிந்தனை முதலான பலன்க ளும் சாதக பலன்களும் கோசர பலன்களும்..................... ..............ங்களெண்ணமுங்கிற...................................

★ ★ ★ ★

நூற் பெயர் பெறுமிடத்து செய்வித்தோன் பெயராலும்... .....ருறியினுலும் பெயர் பெறுமாதலின் நூல் செய்வித்தோன் பெயராலே உள்ளமுடை சூளாமணிப்பேர் பெற்ற தென்ற வாறு.

End :

கண்ட சிந்தனை புவிக்கோள் வலிதெனிற் புவியென் காதல்
மண்டிய விடை நிலைக்கோள் வலிதெனி லிடையே மற்றை
அண்டர்சிந் தனையெ னுச்சக் கோள்வலி தென்னி லாங்கே
பண்டுபோல் தாது;மூல சீவனைப் பணரந்து பாரே.

எ-து. பூமிக் கோள் வலதாகில் பூமிசிந்தனை யென்று மிடை நிலைக்கோள் வலிதாகில் தீதொன்றுஞ் சொல்லுவது.

நட்டாமுட்டி சிந்தனை முற்றும். 307

குறிப்பு :

இதில் சினேந்திரமாலையில் ஒரு ஏடு கோக்கப்பட்டிருக் கிறது.

---

## 1024. No. 666 உள்ளமுடையான் நக்ஷத்திரமாலை மரணகெண்டிகை.

ஏடுகள் 91 ; பூர்த்தி Lines 4-9 in a Page.

இது, இன்ன நட்சத்திரத்தில் பிறப்பவன் இன்ன தன் மையை யுடையவனுக இருப்பான் எனவும் அந்நட்சத்திரம் இன்னின்ன காரியங்கட்கு ஆகும் எனவும் அதில் நோய்

வந்தால் இன்ன பரிகாரம் செய்க எனவும் மரணம் இன்ன காலத்தில் எனவும் வரிசைப்படக் கூறுதலின் இப்பெயர் பெற்றது

Beginning :

செய்வன திருந்தச் செய்வன் சேயிழை யார்க்கு நல்லன்
மையறு மணியும் பொன்னும் வாகுட னணிய வல்லன்
பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் புகழ்பெற வாழ வல்லான்
அய்யமிட் டுண்ணுஞ் சால வசுபதி நாளி னனே.

மேச ராசியின் பலன்

கடுநடையுடையவன் கொடியே கட்டுவன் சால நல்லன் கல்வியே கேள்வி நல்லன் உடையொடு பொன்னும் பூவும் உண்மையாலணிய வல்லன் தமரொடு தாயைப் பேணுவன் தையலார் தமக்கு நல்லன் கதிரவன் காலினனே............ யோகினி மயேசுவரி, சாதி பிராமணன். கோத்திரம் பாரத்துவாசன். பூதம் பிருதிவி, யோனி குதிரை, பக்ஷி ராசாளி, விருட்சம் எட்டி. இந்த நட்சத்திரம் குதிரைத் தலைபோலிருக்கும் கணம் தெய்வகணம், இந்த நட்சத்திரத்துக்கு 50 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம். இந்த நட்சத்திரம் மனைகோல விவாகம் பண்ண உடைமைபூண அன்னப்பிராசனம் பண்ண விதை தெளிக்க நெல்லுகட்ட செட்டுப்பண்ண நல்லது இந்நாளில் மூன்ருங்கால் ஒரு காரியமும் ஆகாது யாத்திரைக்குப் போசனம் பண்ணிப் போவது: வருஷம் பிறக்கில் அகம் ஒத்து நிற்கும். இந்நாளில் சுரவியாதி தோன்றில் 10 நாளில் விடும் விடாதாகில் அரசங் கொழுந்தும் கருப்பஞ் சாறும் நெய்யுடன் கலந்து ஓமம் பண்ணுவது இதற்கு மந்திரம் அசுவ நிலையதத்து தேவு சரணுய சுவாகாவென்று பெலியிடுவது.

★ ★ ★ ★

End :

இந்த நட்சத்திரம் உச்சமானல் கற்கடகத்திலே ஒரு நாழிகை முதல் காலம் மாதா மரணம். 2-ம் காலம் பிதா மரணம். இதுக்கு அபிஷேகம் செபம் ஓமம் பெலி நைவேத்தியம் சூரிய நமஸ்காரம் அசுவத்த பிரதக்ஷணம் தானதர்மங்கள் பண்ணத் தீரும்.

ரேவதி நட்சத்திர பலன் முற்றும்.

Colophon :

விய—ஷூ அற்பசி—மீ 25வ சோழராச்சியத்தில் காவேரி தீரத்தில் தியாக சமுத்திர அக்கிரகாரத்தில் மெய்யூர் வேங்கட ராமய்யன் நக்ஷத்திரமாலே திருமுறைமாலே மரணகெணிகை எழுதி நிறைவேறினது.

முற்றும். பெருந்திருவே துணே. ஹரி ஓம்.

குறிப்பு :

இதில் 'வலவோட்டுச் சக்கரம்' என்கிற சோதிட நூலும் கோக்கப்பட்டுள்ளது.

## 1025. No. 669 உள்ளமுடையான்

நக்ஷத்திரமாலே மரணகண்டிகை.

ஏடுகள் 79 ; அபூர்த்தி Lines 5—7 in a Page.

இதுவும் மேற்பிரதி போன்றது. முதலிலிருந்து கும்பச் சனி சக்கரமுடிய இருக்கிறது.

## 1026. No. 667 சினேந்திரமாலே.

ஏடுகள் 85 ; அபூர்த்தி ; Lines 4—6 in a Page.

இது, பழமையான சோதிட நூல்களில் ஒன்று. நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் மேற்கோளாக

எடுத்தாலும் முதன்மை வாய்ந்தது. தாது காண்டமுதல் மாநிமித்த காண்டம் வரை 25 காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதனை இயற்றியவர் உபேந்திராசாரியார் என்னும் சைன முனிவர். இதில் பிழை அதிகமாக இருக்கின்றன. இது உரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது.

Beginning :

விண்ணியலு மாமதிபோன் மின்னுங் குடை [நிழற்]க்கீழ்ப்
பண்ணவனை நாளும் பணிந்தேத்தி—திண்ணியல்பிற்
றீராத காதலினுல் சென்னிமேற் கொண்டெழுவ
னூராத பாத மவை.

எ—து. தெய்வ வணக்கம் சொல்லியது.

End :

வந்த முறைமையிற் சோமன் வாழ்வாகு
மந்தமி லீசானத் தினிபொன்னு—முந்தி
பிரமன் மேற்கு வலபெருஞ் சிறப்புச் செய்யும்
துரவு கிணறுநிலஞ் சொல்.

எ—து. வடக்கு வாழ்வென்க. வடகிழக்கு நவமணியும் பொன்னு மடைவாரென்க நடு மத்தியும் பிறமஸ்தானமாகில் மகா ஐசுவரியமும் குறத்தியுறுடைய வாரென்க. இந்தப்படி திக்குகளுக்குப் பலாபலம் பார்த்துச் சொல்லுவது.

இதில் கீழ் நீர்க்காண்ட முடிய இருக்கிறது. இதில் சில விடுபாட்டுகளும் இருக்கின்றன.

## 1027. No. 668 லக்கின பாவம்.

ஏடுகள் 106 ; அபூர்த்தி Lines 5—6 in a Page.

இது, சோதிட நூல்களுள் ஒன்று. இதில் லக்கினத்திற்கு இரண்டு முதல் பன்னிரண்டு வரையுமுள்ள இடங்களில் இன்னின்ன கிரகம் நிற்குமாயின் இன்னின்ன நன்மை தீமைகள்

பயக்கும் என்பதைக் கூறுவது. பிழை அதிகமாயிருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை

Beginning :

தேவர் தின்னமுதச் சந்திரன் முதலாய்ச் செங்கதிரளவு
மட் டெண்ணி
மேவிய துகையை மூன்றினிற் கழித்து மீந்த தொண்டுக்
கவன் பிதாவினிற் தாழ்வன்
தீவத மாகக் கதிரிரண்டதே யாகிற் சிறுவனும் பிதாவினுக்
கிணையாம்
பூவில் மூன்ருகில் பிதாவினு மிக்க புத்திர வானெனப்புகலே.

* * * * *

நிச்சயமாஞ் சன்மாதி பதிதிர லக்கினத்து
நீடுதிர வங்கிஷத்து மவைதான் ே......தமர
யிச்சையுட னிருக்கிலவ னிருந்ததலந் தன்னி
னினியவெகு பலன்பெறுவ னவை சுபரங்கிஷமாய்
அச்சமற நிற்கிலவன் சீவபரி யந்த
மாபரணத் துடன் கூடி யவனிதனில் வாழ்வன்
மெச்சிய சென்மாதிபில மறவேகேந் திரத்தின் சேய்
மேவிற்கோ பியுமாகி யாதியுமுத் திடுவன்

End :

அன்னைபிதா வுக்கினியன் ஞானியற்ப நித்திரையனற்ப
கோபி
தன்னில்மிக வயிசுபரியன் மானமுள்ள புகழோன் தாம்பூல
நேயன்
மின்னு முறத்திடு சீறிரந்தினியனி யனிடப்பிற மறுவ்னி
ருஞ் சமத்தன்
பன்னிய சொல் முன் பிரியன் மொவாக் கொட்டை செறி
தாம் பரணியானே.

## 1028 No. 670 மாச பலன்.

ஏடுகள் 35 ; பூர்த்தி Lines 6 in a Page.

இதுவும் சோதிட நூல்களுள் ஒன்று இதில் கிரகங்களுக்கு ஆட்சி உச்சம் பகை நட்பு நீசமும் இவை என்பதும் லக்கினத்திற்கு இத்தனையாவது இடம் இன்னஸ்தானம் என்பதும் பிறவும் கூறப்பட்டுள்ளது.

**Beginning :**

உத்திர மூன்றிேைடும் ரோகிணி ஓணத்தோடும்
சித்திரை மகத்தி ேைடுஞ் சிறந்த சீரனுஷத்தோடும்
கொத்திட ைடு மாடு கொள்வீரேல் குடுப்பீராகில்
சுத்துடன் காலியெல்லாம் ஆண்டொன்றில் மாண்டு
போமே.

இரவிக்கு தனுசு மீனம் என்று நட்புலகுக் கேற்க
அரியது ஆட்சியாகும் ஆடுதான் மிகவே உச்சம்
பெரியது துலாமே நீசம் பேதுமை ராசி யோமும்
பகையது தானே யென்று பகர்ந்திடு முண்மைதானே.

**End :**

ஒரு ராசியை மூன்று கூருக்கி ராசியுடையவன் முதற் கூறு என்றும் அஞ்சாம் ராசியுடையவன் நடுவிற் கூறென்றும் ஒன்பதாம் ராசியுடையவன் கடைசிக் கூறென்றும் இவ் வண்ணமெல்லாம் இராசிகளுக்கும் திரயக்கரண முற்றும்.

நாயிறு முதல் சனிக்கிழமை யீருக ஏழுகிழமையிலும் வியாழ முதல் புதனீருக ஏழுபேரும் அடைவிலே சிறுகாலே வந்து ரெண்டரை நாழிகையுண்பர். ரெண்டரைமுதலுண்ட கோட்களுக்கு ஆருங்கோள் முறைமையாக வந்து வந்துண்பர். காலவோரை முற்றும்.

## 1029. *No.* **672** காலச் சக்கரம்.

ஏடுகள் 19 ; Lines 4—7 in a Page.

இதுவும் சோதிட சம்பந்தமான நூலாகும். இதில், இட வோட்டு வலவோட்டு என்று இரண்டு சக்கரங்கள் சொல்லப் படுகின்றன. இதனைச் செய்தவர் தொண்டை நாட்டில் நந்தி நகர் நில்லை நாயகன் என்பவர்.

Beginning :

சீர்கொண்ட வலவோட்டுச் சக்கரமா மேட
திசைவருட மேழுக் கும்புத்தி வாக்கியந்தான்
கார்கொண்ட வந்தாதி மீது சூட்டென்றே
கையென்று நூருண்டு பகுத்துண்ணுமிதற்கே
யேர்கொண்ட வுடல் மேடமுயர் தனுவாஞ் செவ்வாய்
யுட்பொசிப்பின் பலன் சோரரக்கினி கருவிமன்னர்
போர்கொண்ட சத்துருவாற் பயந் தேக பீடை
பொருட்டன தானிய சேதமலச்ச பதிற் பீடை. 1

End :

திருவுடன் பிறந்த குழவி வெண்டிங்கட் செஞ்சடைக்
கடவுளம் பிகைக்கே
பொருள் விரித்துரைத்த காலச்சக் கரத்தை புதியவசந்
தமிழினுற் செய்தா
னருணெறி தழைக்குந் தொண்டநன் னாட்டி லணிநிகழ்
நந்திமா நகர்வாழ்
இருநிதி யனையா னருந்தவ னுத னிசைந்தருள் நில்லை
நாயகனே.

குறிப்பு :

இச்செய்யுட்களி லுள்ளவைகளை வசனரூபமாக எழுதிய ஏடுகள் கோக்கப்பட்டுள்ளன.

## 1030. *No.* 671 காலச்சக்கரம்.

ஏடுகள் 65 ; Lines 5—6 in a Page.

இது சோதிட நூல்களில் ஒன்று. முன்பிரதி போன்றது.

---

## 1031. No. 673 சகுணமூஸ்டி.

ஏடுகள் 34 ; Lines 5—6 in a Page.

இது, நினைத்த காரியம் கைகூடும் கூடாதென்று ஆராயும் ஆரூட சாத்திரங்களில் ஒன்று. இதில், 2, 8 முதல் 15, 17, 25, 26, 27, 33, 34, 41, 43-ம் ஏடுகளில்லை. 6 வெற்றேடுகள் கோக்கப்பட்டுள்ளன. பிழை அதிகம். அச்சிடப்படவில்லை.

Beginning :

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

கணபதி உதயம்

நீ நினைத்த காரியம் குணமாகும். வினையகலும். பலனுண்டு. நினைத்த காரியம் பலிக்கும் குலதெய்வம் நன்மை தரும், உன்னுடைய தெய்வம் கறுப்பு. அந்த தேவதையை உண்டென்று நடந்தால் நன்மைதரும். உத்தமம்.

End :

அநுமார் விஸ்வரூபம் கொண்ட விடம்

பயப்படாதே. அதிகால தேவதை குறையுண்டு அந்தத் தேவதைக்குச் சொல்லுத் தப்பிதமுண்டு. நடைமேலே போக்குவரத்திலே பயந்த விடத்திலே வந்தது. அது கொண்டு பயமில்லை........ ரத்து நன்மையின் பேரிலே காரியமுண்டாகிறது. பிணிவிட்டுப் போகும்.

---

## 1032. No. 675 சாமுத்திரிகா லக்ஷணம்.

ஏடுகள் 49; Lines 5-6 in a Page

இது, ஆண் பெண்களின் அவயவ லட்சணமும் அவற்றின் பலாபலனும் கூறுவது இது அகத்திய முனிவர்க்கு குமாரக்கடவுள் உபதேசித்தது. இதனைச் செய்தவர் இன்னவரெனத் தெரியவில்லை. இதில் முதல் ஏடு இல்லை 44 முதல் 6 ஏடுகள் பாதியாகச் சிதைந்துள்ளன.

Beginning:

தொப்புள் சந்து தாளிக மென்றறியவும். இப்படியான முப்பத்திரண்டு லக்ஷணமுள்ளவன் பூலோகமெல்லாமொரு குடைக்கீழ் ஆள்வன் என்றறியவும். தலையானது வட்டமாய்ப் பருத்திருந்தால் அழகுஞ் செல்வமு முண்டு. தலை நீண்டிருந்தால் வறுமை தலைமயிர் நுனி பிளந்திருந்தால் வெகு செல்வன். சுகபோசன மில்லாதவனுவன். தலைமயிர் பருத்துக் கருத்திருந்தால் செல்வானுவான். தலைமயிர் பருத்துச் சிவந்திருந்தால் வறுமை பூனைமயிர் போலேயிருந்தால் விசாதியும் செல்வமு முண்டு தலைமயிர் நெருங்கி இருந்தால் தீர்க்காயுசுண்டு. தலைமயிர் சிறுத்துச் சிவந்திருந்தால் வெகு காமன் விகாரியுமாவான்.

End:

ஒன்றுமிடஞ் சுழியானுல் உலகாள்வன். ஒன்றுய் வலஞ் சுழியானுல் விவசாரியாவாள். ......கு ரண்டானுல் பழிச்சொல் ஒன்றுனுல் கறுப்பு முதுகிலே மயிர் மிகுதியானுல் திருடுவள் பயப்படாள். முதுகிலே எலும்பு நரம்பு தோன்றினுல் மிடியுண்டு. முதுகு அறவுயர்ந்தால் சுமை சுமக்கவேணும். அறத்தாழ்ந்தால் உலச்சலுண்டு. முதுகிலே இரண்டு சுழி வலம்புரியானுல் அவள் நினைத்ததெல்லாம் முடியும் இரண்டு சுழி இடம்புரியானுல் வெகு போகியாவள். ஒரு சுழி வலஞ்சுழி யிருந்தால்

அநேகம் பேரை .......புக்கிடத்திலே நன்ருயிருந்து கைம்பெண்ணுவள். விரலுடனே ... ......ந்தால் கைம்பெண்ணுவள் அல்லது புருஷனுக்கு வேண்டாதவளாயிருப்பாள்.

---

## 1033. No. 676. (a) கெவுளி சாஸ்திரம்.

ஏடுகள் 128 ; Lines 6—9 in a Page.

இது, சோதிட நூல்களில் ஒன்று. இது 685-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*k*) இனும் வேறுபட்டது.

Beginning :

..... த் திக்கிலும் காயும் திசைக்கு மூணேமுக்கால் நாழிகையாகப் பாயவா .................... ரஞ்சு நின்ற அருக்க நிலே முதலாய வல ...ட்டுத்திக்குக்குப் பலன். அருக்கனில் இரண்டாம் திக்கில் பிணக்கு அடிபிடி மூணு நாலு அஞ்சு ஆறு இந்த நாலு திக்கும் நல்லது நன்மை ஏழும் எட்டும் இந்த இரண்டு திக்கும் பொல்லாதது.

End :

பாம்பி ஞருடத்தில் சனி யுதையமாகில் பகையாகில் பிரபுக்களிடத்திலும் வெறுப்பு நீசம் குருக்களிடத்தில் வெறுப்பு. நட்பாட்சியாகில் பழம் பணியாரம் புழம் பிடியோலே வரும். உச்சமாகில் உபசாரமாக ஓலே சில பண்டம் வரும். சனி யுதைய பலன் முற்றும். கேது வாருடத்தில் பலன் முற்றும்.

---

## 1034. (b) மாட்டு வைத்தியம்.

Lines 4—6 in a Page.

இது மாட்டு வைத்திய நூல்களில் ஒன்று. இது வைத்திய புத்தகங்களில் 66-ம் நம்பரிலும் வேறுபட்டது.

Beginning :

மாட்டுப் பிணி ஏழுவகை வெதுப்புக்கும் வெக்கைக்கும்.

ஏகமூலமருந்து : கையாந்தகரை சம்மூலமும் ஒருபிடி விழுவியிலையும் ஒருபிடி எருமுட்டை பீனாரியிலையும், சாரணைத் தண்டு ஒருபிடி, நல்லதும்பை சம்மூலமும் ஒருபிடி, கோழியா வரைக்கொடி தழை ஒருபிடி, செருப்படி ஒருபிடி, நல்லவேளை ஒருபிடி, இந்த மருந்து ஒன்பதும் அரிஞ்சு முக்குறுணி தண்ணீர் விட்டு குருணியாய் காய்ச்சி சித்தாத்தை ஒருபலம் கடுக்காய் ஒருபலம் பூவன்பழம் இரண்டு பலம் ஒருபலம் சுக்கு கால் பலம் வசம்பு அரைக்கால் பலம் கஸ்தூரி மஞ்சள்.

End :

உழக்கு வேப்பெண்ணை கொண்டுவந்து மூனுவிரல் அகலம் சீலை கிழித்து அந்த எண்ணையில் நனைத்து அந்த மாட்டுக் கொம்பிலே சுத்திக் கொளுத்தி விடவும். ஒரு லேகண்ட கொம்பிலே வெந்த உடனே அவிச்சுப் போடவும் கொம்பில்லாத மாட்டுக்கு வேப்பெண்ணை உச்சியிலே காய்ச்சி விடவும்.

## 1035. (c) தும்மல் காதல்.

Lines 7—8 in a Page.

இது, சோதிட நூல்களில் ஒன்று. இது வைத்திய புத்தகங்களில் 102-ம் நம்பரின் உட்பிரிவாகிய (b) போன்றது.

## 1036. (d) விஷ வைத்தியம்.

Lines 6 in a Page.

இது, விஷ வைத்திய நூல்களில் ஒன்று. இது வைத்திய புத்தகங்களில் 21-ம் நம்பரின் உட்பிரிவாகிய (c) இனும் வேறு

பட்டது. இத்துடன் விநோத ஜாலங்கள் எழுதிய ஏடுகள் கோர்க்கப்பட்டிருக்கின்றன

Beginning :

கிரந்தி நாயகன் இலை ஒரு பிடியும் சாரு கால்படியும் சாற்றுக்கு அரப்புக்கட்டி கூடப்போட்டுத் துவைத்து உள்ளுக்குக் கொடுத்து உச்சந்தலை நெற்றியில் துவலை இட கடுப்பு நிற்கும் விஷம் மீளும்.

End :

கொல்லன் கோவை தலைச் சுருளி
குறித்த அப்பைக் கிழங்குடனே
வெல்ல உரைத்துப் பொடி செய்து
விரும்பிச் சுரைக் குடுக்கை தனிலடைத்து
வல்ல விரியன மா நாகரம்
வருந்தும் புடையன் பலவிஷமும்
நல்ல வெந்நீரில் வெருகடி கொடுக்க
நாடி விஷங்கள் மீண்டிடுமே.

* * * * *

கடி விஷங்கள் எல்லாத்துக்கும்

வாலுளுவையரிசி நாழிகொண்டு வந்து நன்றாகப் பொடி செய்து பிரமியிலைச் சாறு நாழி செவ்விளநீர்ச்சாறு நாழியாகுதல் ......மேலே கலத்தை வைத்து அதிலே பொடியைப் போட்டு இந்தச் சாற்றை விட்டுவைக்க இரண்டு நாழிகைக்கு மேல் எடுத்து பெருஞ் சேலையிலே பொட்டணமாக கட்டி பிழிந்தால் தயிலம் விளும். இந்தத் தயிலம் ஒரு காசத்தனை தேனிற் கொள்ள பிறக் கோவை போம். மூன்று நாள் கொள்ள செய்யான்கடி போம். இந்தத் தயிலம்.........

## 1037. No. 677. சோதிட நூல்திரட்டு

ஏடுகள் 92 ; Lines 4—6 in a Page.

இது, சோதிட வசன நூல் இடையிடையே தெலுங்கும் கிரந்தமும் கலந்துவர எழுதப்பட்டுள்ளது பல நூல்களி னின்றும் திரட்டப்பட்டிருத்தலால் இன்ன நூல் என்று தெரிய வில்லை. இதில் மாசபலன், வருடபலன், கிரகங்கள் ராசிகளில் இருக்கும் நிலை, கிரகப்பார்வை, காலசக்கரம், பல்லி விழும் பலன், தும்மல் பலன், அலகு நூல் முதலியவை இருக்கின்றன.

Beginning :

மீந்த மோஷத்துக்கு பலன் 1 மீந்தால் ஆல...ம் 2 ஆதா யம் 3 உலச்சல், 4 மீந்தால்......... ந்தோஷம் வரும் 7 மீந் தால் காசு பணம் சிலவழியும் 8 பிரயாணபயம் வரும். இந்தப் படி மாஸபலத்தை...... ..............

End :

ஒன்பது கோள் தனக்கு உறுபல னுரைத்த காலை
அன்புடன் அருக்க ளுகில் ஆறு ..... தாகும்
சந்திரன் தானே யாகில் முப்பது நாள தாகும்
விந்தை சேர் வியாழன் தானும் வெள்ளியு முப்பதாகும்.

# XXI. காம சாஸ்திரம்.

## 1038. No. 433. சம்பராரி புராணம்.

ஏடுகள் 62 ; அபூர்த்தி Lines 5—7 in a Page.

இது, வடமொழி மதன நூலின் மொழிபெயர்ப்பு. இதற் குக் கொக்கோகம் என்று பெயர். இதில் மாதர் ஆடவர் களின் சாதி, பருவம், குணம் முதலிய பிறவும் விரித்துக் கூறப்

பட்டுள்ளன. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தியற்றியவர் வரதுங்க பாண்டியன் என்பவர். இவரைத் தமிழில் நைஷதம் பாடிய அதிவீரராம பாண்டியனுக்குச் சகோதரர் என்பர். இவரது காலம் பதினாறும் நூற்றாண்டாகும். இது அச்சிடப் பட்டிருக்கிறது.

Beginning :

கன்னலன்றி வேம்புநுகர் காமத் துரோகியர்போல்
பின்னையொரு தெய்வத்தைப் பேசேனே—எந்நாளும்
சாற்றுவதுங் காமகலை சாதிப்ப துங்கரணம்
போற்றுவதுங் காமனடிப் போது.

திருமலி கருப்புவில்லி சிலையினு லுலக மெல்லாம்
பொருதுசெங் கோல்நடத்தும் புகழ்புனை யேகவீரன்
விரிகடல் பிறந்த திங்கள் வெண்குடை நீழல் வைகு
மருமலர் மலர்க்கை வாளி மைந்தனைச் சிந்தை செய்வாம்

End :

ஓரிதழ் பற்றி யுருவியே சுவைத்திட் டப்பா
லீரிதட் டானும் பற்றி யிளகவே சுவைத்துப்,பின்னர்
கூரிய நாவினாலே மற்றெனக்கு...வனுகில்
சீரிய வெண்ணெய் என்னக் காமநீர் கொழிக்குமென்ன.

---

## 1039. *No* 326 சம்பராரி புராணம்.

ஏடுகள் 69 ; அபூர்த்தி ; Lines 4—5 in a Page.

இதுவும் மேற்பிரதியை யொத்ததே. இதன் கடைசிச் செய்யுள் பின்வருமாறு :

சோகமே வெதுப்பினோடு துய்ப்பவை தெவிட்டல் செய்யும்
போகமே யழுங்க லோடு மொழிபல பிதற்ற லென்ப

வேகமா மரணந் தானே மிகுமயக் கோட யர்ப்பாம்
பாகடர் சொல்லி னல்லாய் பஞ்சபாணத்தின் செய்கை

## XXII. கிருஸ்தவ மத நூல்.

### 1040. No. 546. (a) தேவமாதாவின் அம்மானை.

ஏடுகள் 98; அபூர்த்தி; Lines 7—9 in a Page.

இது, தேவமாதாவாகிய கன்னியம்மையின் சரித்திரத்தைக் கூறும் அம்மானை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கிறிஸ்தவமதத்தைச் சார்ந்தது நடை சாதாரணமானது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

காரணிந்த நறுந்துடவை யதமெவையினற தினற்கங்
காயம் பூண்டு
பாரணிந்த திமிரகத்தித்தின மூன்றினுயிர்த்தமலன்
வலப்பாலோங்கும்
ஏரணிந்த சுதனை மண்ணி லீன்று வளர்த்தாடனக்கு
வினியபாவிற்
சீரணிந்த வம்மானை செகம்புகழக் கூறவன்னை
திருத்தாள் காப்பு

செம்பொன் திகழ் வானுலகுந் தேனுலகந் தானாகி
நம்பு பலவுயிர்க்கும் நாயகமாய் நின்றோனே
பன்னுடைதவி தாசன் பாடப் பரிவுதந்த
என்னாற் பெல சுருபத் தேகத் திரித்துவனே
அனந்த பெல வாத்தா வத்தனையு முண்டாக்கி
சினந்த பசாசுகளைத் தீநரகில் விட்டோனே
பண்டார்க்கு நின்கருணை பாவித்து நின்றாலும்
உண்டாக்கப்பட்ட புத்திக் குட்படாவுத்தமனே

வாசம் பொருந்து மறைஞானத் துட்பொருளே
ஆசொன்று மில்லாதருவே யருட்கடலே
மண்ணுலகங் காக்கு மகாராச கன்னிபொறும்
புண்ணிய மாமரிய பூதலத்திலே நடந்த
தன்ம சரித்திரத்தைத் தாரணியிலியான்பாட
இம்மைதனிலே யெமக்குவந்து முன்னடவாய்

* * * * *

ஆனாலுங் கன்னிமரி யம்புவியிற் றோன்றியதும்
வானாதி தாயார் வயிற்றேற வுதித்ததுவும்
இந்த வுலகமிவளா வீடேறியதும்
எந்த விதமென்று யான்சிறிது சொல்லுகிறேன்

End :

ஆகஞ் சலித்து அழுதுமுறை யிட்டதனால்
கன்னியர்க்கு முன்னரிக் கருணைக் கடலனையாள்
பொன்னின் மணியாலே போந்த செப மாலையொன்று
செங்கரத்தி லேந்திச் சிறந்தோ மீங்கு முன்னே
இங்கணுகித் தோன்றி இசைக்குமொழி கேட்டருளீர்
ஓகோ மகனே யுருகிச் சலிப்பானேன்
வாகா யுனது வசனத்தைக் கேளாதார்
நேச மிகப்புரியு நீதியுள்ள வெல்லமையோர்
தாயா மெனக்காகச் சகல பலன் தருவார்.

## 1041. (b) அதிரியரம்மானை.

Lines 6—9 in a Page.

இது, அதிரிய ரென்னும் சிரேஷ்டரின் சரிதத்தைக் கூறுவது, இவ்வம்மானையும் மேற்கூறிய வம்மானை பாடியவரின் வாக்காகவே காணப்படுகிறது. ஆனால் பெயர் தெரியவில்லை. நடைசாதாரணம். பூர்த்தியாக இருக்கிறது. அச்சிலிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning :

சீர்மேவு திண்புவியிற் றேவனருள் கூர்ந்து
பார்மேவ வாழப் பரலோகங் கொண்டாட
மெய்வேதம் வாழ விழர் சமயம் போயொதுங்க
துய்யோர் சுகமிருக்கச் சோதிதிருவருளால்
பாவிக ளுய்யப் பரகதியி லெந்நாளும்
மேவுங் கிறீஸ்தவர்கள் மேன்மேலுமுண்டாக
அவ்விய மத்த வரசர் குலக் கன்னியரை
கவ்வையறப் போற்றிக் கழல்பணிந்தே னம்மானே.

★ ★ ★ ★ ★ ★

நந்நரவியாளெனும் பொன்னுட்டுத வக்கன்னியரை
கத்த ரருளாலே கலியாணஞ் செய்திருந்த
அம்புவியிற் கத்த னதிரியா ரென்பவரை
நம்பியொரு பனுவல் நான்பாடவே துணிந்தேன்
அன்பான சுத்த னதிரியா ரென்ற முனி
இன்பாக விந்த விருநிலத்திலே நடந்த
தன்ம சரித்திரத்தை........................

End :

தன்மமுள்ள பேர்கள் சர்வேஸ் சுரர்க்காக
இம்மைதனி லிக்கதைபி லேது குற்றங்கண்டாலு
தீங்கை யகற்றிச் சிறப்பாக வெடுத்தேத்தி
பாங்குடனே போற்றப் பணிந்து கொண்டேனம்மானே

Colophon :

பிரமாதிசவு மார்கழிமீ 16உ சனிவாரநாள் அர்ச்சிய சிஷ்டர் அதிரியரம்மானை எழுதிநிறைந்தது முற்றும்.

குறிப்பு :

கிரிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் செய்துக்கொள்ளும் தியானமும் அவர்களுக்கேற்பட்டுள்ள பத்துக்கற்பனையும்

பிறவும் எழுதிய மிகவும் சிதைந்த ஏடு சேர்க்கப்பட்டிருக்கிறது

1042. No. **547.** ( ) சர்வேஸ்வர மதம்.

ஏடுகள் 67; அபூர்த்தி Lines 5—7 in a Page.

இது, கிறிஸ்துமத ஞானோபதேசத்தையும் பரமண்டலஜப முதலியவற்றையும கூறும் வசன நூல்.

Beginning :

அற்சிய சிஷ்ட சிலுவை அடையாளத்தாலே எங்கள் சத்துருக்களிலே நின்று எங்களை ரக்ஷித்து ............எங்கள் சர்வேஸ்வரனே பிதாவுடையவும் சுதனுடையவும் ஸ்பிரித்து சாந்துடைய .. .. ...லே ஆமென். ஏசு + பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே யும்முடைய நாமம் அற்சிப்பதாக உம்முடைய ராச்சியம்வர உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

1043. (*b*) ஞானோபதேசம்.

Lines 5—7 in a Page.

Beginning :

ஞான உபதேசமாவதேதென்றால் மூணு காரியங்களுக்குள்ளேயடங்கும். அதில் சர்வேஸ்வரனை அறிகிறதென்கிற முதலாம் விசேஷமாகும். செய்த பாவங்களை தீர்க்குறத்துக்கு ஆன உபாயமேதென்று நிச்சயிக்கிறது இரண்டாம் விசேஷமென்று சொல்லப்படும். மூன்றாவது மரணபரியந்திரம் தர்ம வழியிலே நடக்கிறதுக்கு ஆனவழி ஏதென்றும் இதுகளுக்கெல்லாம் உன்னுடைய பிலன் போதாதபடியினாலே செபத்தியான முதலான தன்மகிரிகைகளெல்லாம் உபயோகமாயிருக்கக்

கொள்ள இதுகளெல்லாம் ஆரைக்குறிச்சி எந்தப்பிரகாரம் செய்யலாமென்று அறியிறது மூணும் விசேஷமாகும். ஞான உபதேசத்திஞலே உனக்கு வரப்போற பிரயோசனமேதென்ருல் மோக்ஷம்.

End :

பாதத்தை முத்திசெய்து கொண்டிருந்தான். அந்த சமயத்திலே பரமண்டலத்திலே யிருக்கிற சம்மனஸானவர் சுவாமி மனுஷனுக பிறந்தாரென்று அற்சிய ஷிட்டமாதாவுக்குதவி பண்ணத்தக்கதாக வந்து அற்சியஷிட்ட தேவமாதாகையிலே யிருக்கிற குழந்தையை கையிலே வாங்கிக்கொண்டு முத்தி செய்து கொண்டு சம்மனஸானவர் யிருந்தாராயிதிலே ஒரு பேச்சு விளங்கத்தக்கதாக இடமுண்டாயிருக்கிறது.

---

1044. **No. 549.** *(a)* **கிறிஸ்தவர்களின் செபபுத்தகம்.**

ஏடுகள் **177** ; Lines **7—9** in a Page.

இது, கிறிஸ்துவமதத்தினர்க்குரிய பலவகை செபங்களைக் கூறும் வசன நூல்.

பொது சம்மதி விளக்கம்.

இதில் கிறிஸ்தவர்க்குரிய 12 கட்டளைகள் விளக்கப்பட்டுள்ளன.

Beginning :

சகல மனுஷனுடைய புத்தியிற் சுவயமாய்ப் பதிஞ்சிருக்கிற சத்திய விசேஷங்களிற் சிலதுகளில் இங்கே சொல்லிக் காண்பிக்கிறதிஞலிதன் பேர் பொதுசம்மதியின் விளக்கமென்று சொல்லப்படும். முதலாவது சர்வத்துக்கு மாதிகாரணமாயிருக்கிற பராபர வஸ்துவாகிற ஒரு சுவாமியுண்டென்றும்

அவருக்கு மிக்கவரு மொப்பவரு மில்லையென்று மவரொருவரே சகலத்தையு முண்டாக்கி ரெட்சித்து நிற்கிரகம் பண்ணிக் கொண்டுவருகிருரென்றும் அப்படிக்கொத்த கத்தாவுக்குப் பாவம பொருந்தாதென்றும் * * * * *

End :

இராசா இடும்பொது கட்டளையைக் கைக்கொண்டு நடப்பது மேற்குலத்தோர்க்கு மாததிரமே கடன். நீசரந்த கற்பனையைக் கைகொண்டு நடக்கக் கடனில்லையோ. நீசரந்த கற்பனையை நிறைவேற்றினல் மேற்குலத்தோர்க்கு மிராசாவுக்கு மீனம் வருமோ. இராசாதிராசனுகிய கடவுள் கற்பித்த பொதுவழியாகிற வேதத்தைக் கீழோர் கைக்கொண்டு நடக்கக் கடனில்லையோ. கீழோரந்தக் கற்பனையின்படியே நடந்தால் ஆண்டவர் தந்த வேதத்துக்கும் மேற்குலத்தார்க்கு மீனவென்பது ஞாயமோ. குரு வேசுநாதருதவியால் அக்கியானம் அறியவேணும்.

குறிப்பு :

இதிலுள்ள வேறு நூல்களின் பெயர் பின்வருமாறு :

1045. (*b*) அதிகாலை செபம்

1046. (*c*) பதினலு சந்தோஷம்

1047. (*d*) ஏசுநாதர் திருநாமப் பிரார்த்தனை

1048. (*e*) உத்தரிக்கிற தலத்திலே யிருப்பவர்களுக்காக வேண்டுகோள்

1049 (*f*) ஏசுநாதர் பெரிய பிரார்த்தனை

1050. (*g*) சகல அர்ச்சிய சிஷ்டர்கள் பிரார்த்தனை

1051. (*h*) சும்மன் சுக்கன் பிரார்த்தனை

1052. (*i*) யோசையப்பர் பிரார்த்தனை

1053. (*j*) அன்னம்மாள் பிரார்த்தனை

1054. (*k*) திவ்விய சாங்கோபாங்கத்தின் பிரார்த்தனை

1055. (*l*) நற்கருணைப் பிரார்த்தனை

1056. (*m*) இருதயத்தின் பிரார்த்தனை

1057. (*n*) உத்தரியமாதாவின் பிரார்த்தனை

1058. (*o*) சவரியார் பிரார்த்தனை

1059. (*p*) காவல் சம்மனசின் பிரார்த்தனை

1060. (*q*) இன்ஞைசியார் பிரார்த்தனை

1061. (*r*) அவஸ்தைப் பிரார்த்தனை

1062. (*s*) அரிச்சிரேஷ்டராகிற கொரியபாப்பு

1063. (*t*) ஆறுகாலமந்திரம்

1064. (*u*) அர்ச்சிய சிஷ்டமாதாவின் பாடல் பிரார்த்தனை

1065. (*v*) தேவமாதாவின் ஏழுவியாகுலத்தின் செபம்.

## XXIII. வைத்தியம் *L*

1066. Ne. **49**. *B* (*a*) **கொங்கணர் கடைக்காண்டம்.**

ஏடுகள் 150 ; பூர்த்தி Lines 7—9 in a Page.

இது கொங்கண சித்தர் இயற்றிய நூல்களில் ஒன்று. இதில், ரேசகபூரக கும்பக முதலிய யோகமார்க்கங்களும், நாற்பத்து முக்கோண பூஜை முதலிய பூஜை விவரமும், கற்ப முறையும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவரை போகரது மாணுக்கர் என்பர். 'கொங்கணர் சொன்ன கடைக்காண்டம் அதன் சங்கை யறிவது பிர்மாண்டம்' என்று கூறுவர். இது 500 செய்யுட்களுடையது. இந்தப் பிரதியில் இந்நூல் முழுவது மிருக்கிறது. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

அண்டாண்டங் கடந்த பொருணிற் குணமாய் நின்ற
அளவில்லா நின்மலமே சூட்சாசூட்சம்
எண்டிசையும் பரந்தநிரஞ்சனமேயாகி
ஏகசச்சிதானந்தத் தப்பால் ஞானங்
கொண்டதொரு பூரணமெந்நாளுங் காப்பு
குறிப்பான வெளிப்பாழு மொளிப்பாழுங் காப்பு
புண்டரிக வெளியொளியாள் சுழினேமேவும்
போதமுறு வேதாந்தங் காப்புத் தானே.

End :

வாறான சாத்திரத்தி லாறுகாண்டம்
வகையாகக் குறுக்கியதில் மூன்று காண்டங்
கூறான கடைக்காண்ட மிந்த ஞானங்
கொட்டினேனைந்நூறுஞ் சீஷர்க்காக
வீறான நடுக்காண்ட மைஞ்ஞூறுஞ் சொன்னேன்
வேதையிலே முதற்காண்ட மைஞ்ஞூறுஞ் சொன்
தாறான முந்நூற்குமூன்று சூத்திரம் [னேன்
தப்பாமற் சூட்ச மொன்றுந் தெளிந்துமுற்றே. 501

Colophon.

நந்தனஸு மாசிமீ 27உ திங்கட்கிழமையும் திரயோதசியுங் கூடின புண்ணியதினத்தில் வடசேரிப்பட்டி மிராசுக்கணக்கு இராமநாத பிள்ளை யவர்கள் மகன் சுப்பிரமணியன் கொங்கணநாயன் கடைக்காண்டம் 500-ம் எழுதி முடிந்தது. முற்றும்.

---

1067. *(b)* தெக்ஷணாமூர்த்தி அருளிய
பூரண காவியம் 1500.

Lines 7—8 in a Page.

இதில், அஷ்டகர்ம மந்திரங்களும், பற்பல தியான மந்திரங்களும் தீட்சை விவரமும், யோகமார்க்கமும் சொல்லப்

பட்டிருக்கின்றன. இதில் 290 செய்யுட்களே இருக்கின்றன. இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

பூரணமாய் நிறைந்ததொரு ஆதியந்தம்
பொருளையொரு நவரசமாய்ப் பொருந்தவேண்டி
மாரணமாய்ச் செய்துவொரு மணியாய்க்கட்டி
மதிநிறைந்த ரவிதனிலே வணக்கம் பண்ணி
காரணமாய் வாய்வேகச் சாரணையைத் தீத்திக்
கருணைபெற அண்டவெளி ஒளிக்கப்பாலே
பேரணியாய்த் தான்நிறுத்திச் சுரூபமணியென்று
பேர்கொடுத்த மனோன்மணியின் பீடங்காப் பாமே 1

End :

கனிந்துமனக் கனிவாலே சத்திசிவதீக்ஷை
காரணமாஞ் சிவசக்திதீக்ஷை ரெண்டும்
துணித்துநிலைதனை யறிந்து வழிதப்பாமல்
சுருதிதனில் நீயிருந்து செய்தாயாகில்
அணிந்துகொள்வாய் வாசிமலர்தன்னை மைந்தா
ஆதார பீடமதில் அருளை நோக்கிப்
பணிந்துநின்று மனோன்மணியைத் தியானஞ்செய்தால்
பாலகனே பரமபதத் தெல்கைபாரே. 290

1068. No. **221** *(a)* தேரையர் வைத்தியம் **1001.**

ஏடுகள் 42 ; அபூர்த்தி Lines 5—6 in a Page.

இது, வைத்திய நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவராகிய தேரையரை அகத்திய முனிவரது மாணாக்கருள் ஒருவர் எனவும், அவர், ஒருவருக்குத் தலை நோய்க்கு வைத்தியம் செய்வதற்கு இவரைத் தன்னுடன் அழைத்துச் சென்று

நோயாளியின் கபால ஓட்டினைப் பெயர்த்துப் பார்த்தபொழுது அங்குத் தேரை ஒன்று இருப்பக் கண்டு அதனைக் குறடு கொண்டெடுக்க முயலுகையில் இவர் தடுத்து பாத்திரத்தில் நீரை நிறைத்து அருகில் கொணர அத்தேரை அதில் குதித்த மையின் இவர் தேரையரெனப் பெயர் பெற்றனர் எனவும் கூறுவர். இவர் இயற்றிய வேறு சிறந்த நூல்கள் பதார்த்த குண சிந்தாமணி, நீர்நிறக்குறி நெய்க்குறி, தைலவர்க்கச் சுருக்கம், வைத்திய யமகவெண்பா, கரிசில், மருத்துப் பாரதம் முதலியவை. இந்தப் பிரதியில் 529 செய்யுட்களே இருக்கின்றன. அவற்றிலும் இடையிடையே சில செய்யுட்கள் இல்லை. இந்நூல், அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் கிடைப்பதரிது.

Beginning :

ஆதி சத்தியருள் புதல்வர் சரண்
போதிலுத்த பிணியகலும் படி
வாதி யுத்தம சித்தர் பதம் பணிந்
தோதிவைத்த தோரா யித்தொன்றுமே. (1)

ஒன்று மாத்திரை யொடுங்கும் குமுடுபார்
அன்று லேகியம் ஆடின கண்ணின்மை
மன்று சூரண மாக்கிராணம் சக்கரை
என்று தேடிக் கருத்தி லிருத்திடே. (2)

இருத்திடு மருந்தெண்ணை ரசாயனம்
திருத்திடும் பாலை செந்தூரம் மூலிகை
கருத்திடுங் கிழாயங் கிருதங் கலிக்கமுங்
குரித்திடுந் தயிலங் கூழ் பாண்டமே (3)

பான்றதுநற் குளம்பாஞ் சிலைஎண்ணை
கூன்றது மெழுகொடு பதங்கமும்
வேன்றது நெய் விளங்கு கிரதமு
ஏன்றது களியோர் புகை பத்தியே. (4)

பத்திது வேது பற்பங் கார மூலாம்
சித்திது காரசிலை கபாடமு
மத்திது கட்டு மாத்திரை கற்கமும்
நித்திது குடிநீர் கற்பம் வார்த்திடே. (5)

பாத்திடு வன்பச்சிலை கட்டுகள்
சாத்திடும் நசியம் சார்பூசுதல்
போத்திடுஞ் சூலைபொட்டணங் கேசரி
யேத்திடுந் தேரையர் மொழி யொன்றுமே. (6)

End :

உன்று பிரமியோ டொக்கவே காடிவாத்
தன்று பாரிய சட்டி யடுப்பில்வைத்
தொன்று செய்து சுருள் வதக்குடன்
கொன்று கட்டு குதித்தப்ப வொண்ணுமே. (529)

---

## 1069. (*b*) மருந்து சுத்திகள்.

Lines 5 in a Page.

இது, தாளக முதலிய மருந்துகளைச் சுத்தி செய்யும் முறை கூறுவது. செய்தவர் பெயர் தெரியவில்லை. செய்யுட்கள். தொடர்ந்ததாக இல்லை.

Beginning :

அரிதாரஞ் சுத்தி யாவின் பால் நீர்காடி
பெரிதாங் கூழ்பாண்டம் பிறங்கவின் சுன்னநீர்
தெரியவரசன்தோல் செய்வாய் கசாயமும்
பரிவாருபா ஒன்றில் பாற்றூறு நாள்மூன்றே. (653)

மூன்றுநாளூறி முறையாக வொவ்வொன்றில்
தோன்றவே சாமம் சுடவே எரித்தெடு
மான்றிவிடும் தாளகம் மாசற்று சுத்தியாம்
தூன்றியே சொல்வே னின்னமுஞ் சுத்தியே. (654)

End :

லிங்கம்

ஆமின்னம் வேறு சுத்தி அறிந்திடு முலைப்பால்மேனி
சேமின்னம் பழச்சார் மூன்றும் சேத்துமே சுருக்குத்தாக்க
போமின்னம் மாசுதீர்ந்து புதியதாங் லிங்கம் சுத்தி
தாமின்னம் வேறுமொன்று சாற்றுவேன் தமிழிற்ருனே.

சேங்கொட்டை

செலத்தில் செம்மண்ணை இட்டு சேர்த்தொருநாளே வூறில்
மலத்துகோணிதனிலே தேய்த்து மாசறக்கழுவச் சுத்தி
பலத்தினை சுன்னநீரில் பாச்சியோர் நாளேவூரில்
அழத்தியக்கழுவச் சுத்தியாகும் சேங்கொட்டைதானே.

சூரணம், தயிலம்.

தானென்னும் சூரணங்கள் தன்னைப் பாலிற்புட்டாய்
தானென்ன வாட்டசுத்தி தயிலங்கள் முருகித்தானுல்
தானதில் ரெட்டிபாலை தான்விட்டுக் காச்சகத்தி
தானதில் நீர்னின்ருக்கால்........................

---

## 1070. (c) பாரோபு வைத்தியா சூத்திரம் 50.

Lines 5 in a Page.

இது வைத்திய நூல்களில் ஒன்று. இதில் 16-ம் செய்யுள் முதல் 20-ம் செய்யுள் வரையில் இல்லாதிருப்பதோடு 25-ம் செய்யுள் முதல் நூல் முழுவதுமில்லை. இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

எகுவதனை தகடாக்கி முட்டிச்சாத்தி
லேழுதிரந் தோய்த்தூட்டி இடிக்கத்தூளாம்
பகருமுன்னிலைச் சாத்தில ரைத்தரைத்து
பெருபுடமாய் போட செந்தூரமாகும்

அகிலமதி ஞேயான லன்புகொண்டு
வறிந்தனுபானத்துடனே யீயக்குன்பம்

வெகுபிணியை யகத்து மெய்யை யெருத்தூணுக்கும்
விளங்கவைக்குமிந்திய விளேவுமாமே. (1)

நல்விரும்பினரபொடியை காந்தத்தாலே
நாட்டி எடுத்தாய்ந்ததனை கல்வத்திட்டு

சொல்லினிய செம்புமரமுத்தப்பட்டை
துவைக்கவிழுஞ் சாறுவிட்டு சாமமூன்று

மெல்லியதாய் நவனீ தமாகுமட்டும்
விடாதரைத்து வுலத்தியதை வைத்துக்கொண்டு

சொல்லுமனுபானத்துடனீந்தால் பாண்டுதீருங்
குன்மமகலுமுடல் சொர்ணமாமே (2)

End :

கருனூலிற் சேராளின் பாலையூட்டி
கட்டுகொன்றை சதைநடுவே மறுகாற்றண்ணீர்

அரைஞணே தரித்துவிள கரணமுமாற
வாவினெயில் வேம்பின் றுளிரரைத்துக் காச்சி

யுருவாகக் கருக்களத்தில் மெழுகுபோலே
யுரைந்த களிம்பாகுமடா யுவரும் புண்ணும்

விரைவாத மகலுமென பாரடி சொன்ஞர்
விளங்கினேனவர்பேரு விளங்கத்தானே. (23)

புண்டரீ கக்கொழுப்பெடுத்து யுருக்கநெய்யாம்
போடதிலே கிராம்பு ரெண்டு பலமுள்ளாக்கி

கிண்டிவரிலற்ரேயாமல் வெயிலில்....................
.......................................................
.......................................................
.......................................................
....................................................... (24)

1071. *(d)* அகஸ்தியர் வைத்திய ரேத்தினச் சுருக்கம்.

Lines 5 in a Page.

இதுவும் வைத்திய நூல்களில் ஒன்று. இதில் நாடியைப் பற்றிச் சொல்லும் முப்பத்திரண்டு செய்யுட்களில் 18 முதல் 23 வரையிலுள்ளவை நீங்கலாக ஏனையவை இருக்கின்றன. 33-ம் செய்யுள் முதல் கடைசிவரையில் இல்லை. இது அச்சிடப் பட்டிருக்கிறது.

Beginning :

கரிமுகனடியை வாழ்த்திக் கைதனி னுடிபார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவேதொட்டா
லொருவிர லோடில் வாதம் முயர்நடு விரலில் பித்தம்
திருவிரல் மூன்றிலோடில் சேத்தும நாடியாமே. (1)

ஆகிய நாடி மூன்றும் படபடென் ருேடில் சன்னி
வாகினி லன்னங் கோழிமயிலென நடக்கும் வாதம்
ஏகியவாமை யட்டை இவைஎன நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு போலவாஞ் சேத்து மந்தானே. (2)

End :

தானது பங்குனிக்கும் தனது நல்லாவணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும் மற்றை ராத்திரியில் பார்க்க
தேனென்று மூன்று நாடி வெளிவாகக்காணு மென்று
கானமாமுனிவர் சொன்ன கருத்தை நீ கண்டுபாரே. (32)

நாடிநிதான முற்றிற்று.

அட்டவணை

மாறல் சுரமுதல் 64 சுரத்துக்கும் கிசாயம்: சீந்திக்கொடி பேய்ப்புடல், முத்தக்காசு, சுக்கு, பற்பாடகம் இதுகள் சூரணஞ்

செய்து வடிகட்டிக்கொண்டு களஞ்சி சூரணத்தில் படி ஜலம் விட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி களஞ்சி தேன் விட்டு ஆறு வேளை கொடுக்கவும்.

1072. No. **377**. *(a)* அகஸ்தியர் வாதத் திறவுகோல் 48.

ஏடுகள் 54 ; அபூர்த்தி Lines 8—10 in a Page.

இது, ரசவாதத்தைப்பற்றிச் சொல்வது. இதில் முப்பத்து மூன்று செய்யுட்களே இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning :

வாதமென்ற நூல்களெல்லா மொடுக்கி யொன்றில்
மாட்டவே சிவன் மைந்தன் கணவதியுங் காப்பு
நாதமென்ற உமயவளும் சிவனுங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள் களெல்லாம் ஒடுக்கமாக்கி
வேதாந்த சொரூபமா யிவர்கள் காப்பு
ஆதியந்த மாகிநின்ற ஒடுக்கமெல்லாம்
அடிமுடியி லெபாருங்கினைது தாளுயாமெ. (1)

தானான ஞானமது பத்து நூறு
தனைச்சுருக்கி ஒருநூறு சார்ந்து சொன்னேன்
தேனான வாதமது லட்சங் காப்பைச்
செப்பினே னிருகாண்டம் திறமாய்ப்பாடி
பானான அதைக்குறுக்கி இருநூறும் சொன்னேன்
பாங்கான வைத்தியத்தில் ரெண்டு லட்சம்
கோனான இதைக்குறுக்கி லட்சஞ் சொன்னேன்
கூறியதில் பேர்பாதி கூறினேனே. (2)

End :

மறைத்திட்ட சாஸ்திரங்க ளிதனிற்குள்ளே
மகத்தான சட்டைமுனி நூலைப்பாரு
விறைத்திட்ட என்னுடைய இருநூ றும்பாரு
விதமான சாஸ்திரமும் தேடிப்பாரு
தரை.............................................
............................................................ (33)

## 1073. *(b)* அகஸ்தியர் குரு செயநீர் 60.

Lines 7—8 in a Page.

இது, இரசவாதத்திற்குரிய குரு ஜய நீர் போக்கைச் சொல்வது. இதில் 4-ம் செய்யுள் முதல் 51-ம் செய்யுள்வரை இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning :

.......................................................
......திரங் காச்சிக் கொண்டு
பாச்சியதோர் துரைக் கெல்லாம் மிந்நீருட்டிப்
படுமுன்னே சரக்கெல்லாம் மாறும் மாறும்
காச்சியதோர் குருசெயநீர் மேருவிலே விட்டு
கலங்காமற் பூசை செய்து சாபம் தீர்த்து
பாச்சியதோர் குருசெயநீர் ஆட்டங் கேளு
பரப்பிலே விடுகாதே சொல்லக் கேளே. (4)

உப்பு சுன்னம்

கேளடா மணிமணியா யுப்பை வாங்கி
கெடியான குருசெயநீர் விட்டு ஆட்டி
நாளடா காய்ந்ததனை ஓட்டில் வைத்து
நன்ருக குக்குடத்தின் புடந்தான் போடு

தேளடா கொட்டுதல்போல் உப்புச்சுன்னம்
சேயமாக சரக்கெல்லாங் கொல்லும் பாரு
வாளடா செயநீரு(வை)த்தா யானல்
மகத்தான வித்தையெல்லாம் மாட்டும் பாரே. (5)

End :

போக்கானவசி கரத்தின் மூலங்கேளு
புகழ்பெரிய ஆவின் கோரோசினை கற்பூரம்
(வாக்கான) கண்ணனுடமூலி வேரும்
மகத்தான சந்தனமும் புனுகுங் கூட்டி
.......... மந்திரம் ஓம் ருவி ......................
மோகினி வா வா வென்று போடு
காக்கான..............வே.......................
........................................................ (51)

## 1074. *(c)* அகஸ்தியர் தண்டக பக்ஷணி **200.**

Lines 6 in a Page.

இதில், வசிய முதலிய அஷ்டகர்மங்களும் இரசவாத முறைகளும் பிறவும் கூறப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் 189 செய்யுட்களே இருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

ஆமெனு மெழுத்தை
ஓமெனவு மோத
தாமுமது தானே
நாமு மது வாமே. (1:3)

கெஞ்ச மலர் தனையே
பஞ்ச மது நினையே

செஞ்சொல் மொழியவள் மேல்
நெஞ்சி லிது குறியே. (114)

End :

பத்தரி யரிவை
மத்தரிய நாவை
சித்தரிய நீவை
பித்தரிய வேசெய். (189)

செய்ப தினி யூடெ
மைய் பதி...........

---

## 1075. (d) அகஸ்தியர் வைத்தியம் பின்னெண்பது.

Lines 7—8 in a Page.

இது, வைத்திய முறைகளைக் கூறுவது. இதில் 72 செய்யுட்களே இருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning :

முன்னூலென்பது சொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்ற கணபதியைப் போற்றி
பின்னூ லென்பது சொல்ல வாயிகாப்பு
பேரான வென்குருவா முருகன் காப்பு
அந்நாளி லீசருப தேசத்தாலே
அகஸ்தியனு மென்றெனக்குப் பேருமாச்சு
பொன்னான வாதத்தி லட்சங் காப்பு
பூட்டினது பூரண சூத்திரத்தைக் கேளே. (1)

பூரண நூலாயிரத்து இருநூறுஞ் சொன்னேன்
பொருளாகும் வாதத்துக் காதி நூல் தான்
காரணமாய் வைத்தியத்தில் ரெண்டு லட்சம்
கடையேடு பதினாயிரங் கண்டு கொள்ளே

ஆரணமாம் பெருநூலு குறுக்கிச் சொன்னேன்
ஆயிரத்தி லஞ்ஞூறு முகிவதாகும்
தாரணமாம் வைத்தியத்தில் ஆதிநூல் தான்
தமிழ் நாலாயிரம் வெண்பா சாத்தினேமே. (2)

End :

பாரப்பா நீற்று வகையறிய வேணும்
பாசாணப்பழ.........பழக வேணும்
காரப்பா சிவம் வேணும் தயவு வேணும்
கர்மவினை தீர்ப்பதற்கு கனிவு வேணும்
சேரப்பா...ல வேணு...தைரியம் வேணும்
செய்பாகம் கைபாகம் தீக்ஷை வேணு
மூரப்பா யேக மூலிகையின் போக்கு
உத்தமனே.............................. (72)

---

1076. *(e)* தன்வந்திரியார் அருளிச்செய்த
செயநீர் ஐம்பது.
Lines 9 in a Page.

இது இரசவாதத்திற்குரிய செயநீர்ப் போக்கைச் சொல்வது. இதில் 23-செய்யுட்களே இருக்கின்றன. அச்சிடப்பட்டிருப்பினும் கிடைப்பதரிது.

Beginning :

ஆதியெனும் சின்மயத்தின் பொருளைப் போற்றி
அகண்ட பரிபூரணமாய் குருவைப் போற்றி
நீதியெனுஞ் சர்வாணி குரு அம்மாள் போற்றி
நிலைத்ததொரு வாரணத்தின் விசுவன் போற்றி
மாதியெனு மமர்ந்ததொரு சோதி போற்றி
மகத்தான குண்டலித்தாய் மகுத்துவம் போற்றி

வாதியெனும் பேரான வழலை போற்றி
வாகக சிவயோக மெனும் வாசி போத்தி. (1)

போற்றவே கணபதியுங் கந்தன் காப்பு
புகழான முன்னோர்கள் பாதங் காப்பு

ஆத்தவே பூரணமா மருவே காப்பு
அகண்ட சதா சிவத்தினடி பணிந்தோன் காப்பு

வாத்தவே முக்கருவே சற்குருவாங் காம்பு
வளமான குருநந்திபாதங் காப்பு

நாத்தவே செயநீர் அன்பதுவே காப்பு
நலமான சிவசத்தி பாதங் காப்பே. (2)

End :

வழித்துமொரு பீங்கானிலிட்டு அதை ரவியில்
வளமாக ஒரு சாமம் வைத்தீரே யாகில்

அழுத்தியொரு அருவியது பனியது போலிறங்கு
மப்பாநீ இறங்கினதோ ரடையாளங் கண்டு

தழித்துமொரு சீசாவில் பாறை செயநீரைத்
தனதாகப் பதனமதாய் தருவிப்பீராகில்

பழித்தி ..... ........... ........................ ......
.................................................. (23)

குறிப்பு :

இதன் கடைசியில் வாத, வைத்திய, கற்ப விஷயமாக வேறு வேறு நூலிகளினின்றும் எழுதப்பட்ட 5 ஏடுகள் இருக்கின்றன.

---

## 1077. No. 412. *(a)* பதார்த்த குணம்.

ஏடுகள் 79 ; அபூர்த்தி Lines 5—6 in a Page.

இது பதார்த்தங்களின் குண குணங்களைக் கூறுவது. ஆகிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning :

எலுமிச்சம்பழம்

எல்லாக்கனிக்கும் மெளிதாகும் எதுமருந்துக்கிது முன்னே
நில்லாதாகும் பித்தமெல்லாம் நேரேகையில் வைத்திருக்கப்
பொல்லா நோயுங் கிட்டாது போகுமிந்தகண் ணேவும்
வில்லார் புருவநுதலாளே மேவு மெலுமிச்சம் கனிக்கே. (200)

மதியால் நின்றபித்தமுடன் வாதசன்னி மற்றுமுள்ள
அதியமான தலைவலியும் அங்கந்தன்னில் பட்டவெட்டும்
கதிதாய் நின்ற கண்படலம் கதித்ததாது மிகவுண்டாம்
மிதினல் சீதளமானலும் மாற்று மெலுமிச்சம்பழமே.

பித்தமுடன் வாதம்போம் பேரிரும லீளைபோம்
சித்தத் திளைப்புரெத்த சோபம்போ—முத்தமா
மன்னர்க் கதிசயமாம் மாலுக் கபிஷேகம்
பன்னு மெலுமிச்சம் பழம். (202)

End :

காவிக்கல்

சுரத்தகமுங் கீரிகமும் சோர்காவிக் கல்சேர்
யுரைத்தது வாங்குளுமை யொன்று—இரத்தம்
விளையும் பயித்திய மேல்வெப்பு மோடி
யளையினிடை யேபுகுத லால். (652)

---

## 1078. *(b)* நானுரோக சிகிச்சைகள்.

Lines 5—6 in a Page.

Beginning :

நசித்துப் புத்துமண் நண்டுளை மண்ணெடு
வெசித்து முட்டையின் வெண்கரு சுன்னமுங்
கசித்து வாமணக் கெண்ணெயில் காய்ச்சியே
மசித்து பத்துடை வாதந் தெரித்திடே. (35)

நெஞ்செரிவு, உட்காய்ச்சல், நீரெரிப்பு, சுக்கிலரத்தம், இருக்கு சிங்கி பற்பம்.

கலங்கொம்பை குன்றி இலையரைத்துமூடி
கனபுடமா இட்டரைத்துக் கலந்துகொள்ளில்
ஜெலம் பெருகும் மேகமுதல் ரெத்த பித்தம்
சத்திவலிகுன்மம் நெஞ்செரிவு காங்கை
உலர்ந்த உடல் தாகமருசி அக்கினி மந்தம்
உட்காய்ச்சல் நீரெரிப்பு சுக்கிலரத்தந்
துலங்கு பச்சைக் கற்பூரம் சேத்துக் கொள்ளில்
சொல்வினைக ளகன்றுவுடல் சுகமாங் காணே. (119)

(வகை 1-க்கு விராகனெடை 1. வெள்ளை குன்னி)

சுண்ணும்பு சீலைதனில் வடித்துக் கொண்டு
சுதையதனை நீரிலிட்டு குழம்பதாக்கி
வண்ணுனுக்கிட்ட துணியதனில் தோய்த்து
மங்காமல் காய்ந்தபின்பு யகலில் மூடி
நண்ணுக பிடம்போட்டு எடுத்துக் கொண்டு
நற்பசுவின் நெய்யுடனே கலந்து கொண்டு
புண்ணுன வலிகடுப்பு சிறு நீர்க் கட்டல்
போக்கி வைக்கு மேகமினி புகலாதுண்ணே. (120)

End:

மருந்து செரிக்கும் நாழிகை

மருகி இடு நசியமரை நாளிலே சமிக்கும்
வளர்ந்திடும் மஞ்சனம் இருனளிகையில் மாளும்
கரையுமந்தக் கசாய மதினகடிகை ஏழு
கணக்கவே ஒன்பதெனக் கருதலாம்பின்
பெருகிவளர் பச்சிலை இன்சாறு வஞ்சுகடகை
பிசகாமலறும் பின்னே சூரணம்
ஒருபத்து நாளிகையில் சமிக்குமென்று
........... ...............................

....வைத்து மாவிலிங்க இலைச்சார்விட்டு ஒரு சாமமரைத்து காயவைத்து தூள்பண்ணி ஒரு கலயத்தில் போட்டு சீலை செய்து முழுபுடமிடவும் எடுத்துக்கொண்டு திரிகடுகு சூரணம் செய்து ஷை சூரணம் பலம் 1. ஷை உப்பு வராகனிடை 1. சேத்துக் கொடுக்க சகல வாதமும் தீரும்.

*குறிப்பு :*

இவைகளையல்லாமல் வாதவிஷயமாக இரண்டு ஏடுகளும் ஜாலமெழுதிய ஏடு ஒன்றும் கடைசியில் கோக்கப்பட்டிருக்கின்றன.

---

1079. No. **518.** யூகிமுனிவர் வைத்திய சிந்தாமணி.

ஏடுகள் 66 ; *அபூர்த்தி* ; Lines 7—9 in a Page.

இதில், உடலுற்பத்தி, உடற்கூறுதத்துவம், நாடிவிபரம் சன்னி, சுரம், குன்மம், சூலை முதலிய நோய்களின் நிதானமும் அவற்றின் பேதங்களும், சாத்திய அசாத்திய லட்சணமும் வாதரோகம் 80-க்கு விவரமும் அவற்றின் குணாகுணங்களும் சொல்லப்பட்டுள்ளன. இதில் 321 செய்யுட்களிருக்கின்றன.

Beginning :

ஆனைமுகவன்பாதம் முருகன் பாதம்
அத்தியுரித்திடைதரித்த அய்யர்பாதம்

மானனையவாய் பாதம் மாலின்பாதம்
வயிரவர்கள் பாத மகாலெட்சுமிபாதம்

கானனைய நாதாக்கள் ரிஷிகள்பாதம்
கமலத்தில் வீற்றிருந்த வாணிபாதம்

கோனனைய குருமுனிதன் பாதம் போற்றி
கூறுவேன் ஆயுரு வேதத்தை தானே. (1)

தானான நால்வேதத் தொப்பாய்நின்ற
தக்கான ஆயுறுவேதத் தோடஞ்சாம்

தேனான சிருஷ்டிகுலத் துற்பவித்த
தேவனாந் தன்வந்தரி சொன்ன நீதி

வானான வாகமத்தை மேதினிக்குள்
மருவியே யுரைத்திடவே வண்மையாக

வேனான வைத்திய சிந்தாமணியின்
விவரமெல்லாம் வெளியாக விளம்பிச் சொல்வாம் (2)

சொல்லியதோர் விபரமாந்தூய்மை கேளு
சூக்ஷமாம் பஞ்சபூ தத்தின் கூறு

தெள்ளியதோர் திசைநாடி சத்த தாது
திரிநாடி திசைவாய்வு சுரபேதங்கள்

தள்ளியதோர் சன்னியோடு குன்மஞ்சூலே
தாக்கான வாதமொடுபித்த சேட்டுமங்கள்

மெல்லியதோர் மேகநீரழிவு குட்டம்
மிக்கான பாண்டு மகோதரமுங் கேளே. (3)

End :

சிலேட்டுமவாத சுரரோணிதம்.

கூறியே கெற்பமுண்டாய்ப் பயின்றபோது
குணிகியே பச்சுடம்பில் வலிப்புதோன்றி

மூறியே மூக்கோடு புருவந்தன்னில்
முஷ்கரமாய் மிகநொந்து வலியுண்டாகி

நாறியே நாக்கொடு உண்ணாக்குத்தான்
நலிந்துமே பல்லெல்லாம் கடுப்புண்டாகும்

ஆறியே முன்சொன்னததுவுமன்றி
அசாத்திய அரி அவதான சந்தனுமே. 320.

செயசுரோணிதம்.

அவதான அடிச்சிரசு தன்னைப்பத்தி
அதட்டியே பின்னெல்லாம் பத்திநொந்து

மவதான வடிம்பு குறங் கடியிற் சென்று
வளைந்துடம்பெல்லாம் நொந்து வாட்டமாகி

சிவதான தேகமெங்குந் திமிருண்டாகுஞ்
செடம் பொங்குங் காலத்தில் மூன்றுங்காணும்

...............................................
............................................... 321.

## 1080. No. 590. விஷ வைத்தியம்.

ஏடுகள் 122; Lines 6—8 in a Page.

இதில் பலவகைப்பட்ட பாம்புகள் செய்யான், அரணை பூரான், தேள், வண்டு, எலி, நாய், நரி, பூனை முதலிய கடி விஷங்களுக்கும் மற்றைய சில விஷங்களுக்கும் மருந்தும் மந்திரமும் கூறப்பட்டுள்ளன.

Beginning :

விஷம் தின்றவனுக்கு நெஞ்சு கட்டினால் மார்புக்குத் தளம் :

கோவை, பசரி, சீந்தியிலை, பசளை, ஆவாரம்கொழுந்து, தாளியிலை, உசிலிலை, குளப்பாலை, சிறுசின்னியிலை, பாலையிலை இவையெல்லாம் அரைத்து சமன் வெண்ணெயில் கூட்டி மார்பிலே தளம் போடத் தொண்டைக் கட்டுத் தீரும்.

விஷந்தின்றவனுக்கு கஞ்சிக்கு மருந்து.

கொடிவேலிவேர்த் தோல், முருங்கை கொழுந்து, கெருடன் கொடி, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, வெள்ளுள்ளி இவை கிழி கட்டி கஞ்சி காச்சிகொடுக்க விஷம் தீரும்.

* * * * *

தூதனுரைத்த அட்சரத்தை எட்டிற் கழிக்கச் சேஷம்
சொல்லரிய ஒன்ருகில் மூர்க்கனுகும்

ஓதரிய இரண்டாகில் யுளவ ஞகும்
உரைபொருள் மூன்றேற் கரிய வழலையாகும்

ஆதிதொட்டு நாலாகில் சிலந்தியாகும்
அஞ்சாகில் எலி ஆருகில் தேளதாகும்

ஏதமற ஏழாகில் வண்டுமாகும்
எட்டாகில் விஷமில்லை யியம்புங் காணே.

End :

சாதிலிங்கம் ஒரு பலம், அரிதாரம் பலம் 1, துத்தம் பலம் 1 துரிசு பலம் 1, மஞ்சள் மெழுகு பலம் $\frac{1}{4}$, நல்லெண்ணெய் கொண்டு வந்து மெழுகை உருக்கி மூன்று நாளரைக்க வெண்ணெய் போலேயிருக்கும் அதை சிலந்தி முதலான தெல்லாத் துக்கும் போடவேணும்.

குறிப்பு :

இதில் வசனமும் செய்யுளும் விரவி வந்துள்ளன. செய்யுளை நோக்குமிடத்து சர்ப்பாரூடம் போலக் காணப்படுகின்றது.

---

## 1081 No. 592. (a) பலவகை ஜாலங்களும், மந்திரங்களும்.

ஏடுகள் 108 ; பூர்த்தி Lines 6—11 in a Page.

Beginning :

கலவை நிலவை கதம் நிதமரிய பெரிய தெய்வத்தினை யிற்று மமங்கலாய மாரனையிற்றும் இலங்காபுரம முகின்பால் பொங்காதே. தேவாங்கின் தலையில் தோலையுரித்து நீர்வார்த் தரைத்து தலையிற்றடவி யிருக்க வேகாது. இதன் தோலை வாயிலிட்டிருந்து இரும்பு காச்சிவைக்க வேகாது. இதன்

தோலைத் திலதமிட முன்னின்றரெல்லாம் தன் வசமாவார்கள். தேங்காய் விழ நீர்காகத்தின் நாக்குவாங்கிச் செவியில் வைத்து மாத்திற்றட்ட விழும். பாவட்டை வடக்கே போன வேர் பிடிங்கி யரைத்துக் கையிற்றடவிக் காச்சிப்போட்டு நெய் யிற் கைவிட வேகாது. சூரைவேர் கிராணம் தீண்டுகிற நேரம் பிடிங்கிக் குளியமாடிக் கொள்ள வெல்லுஞ் சூது.

End :

ஓங்காரங் கொண்டுன்னி ஆங்காரங் கொண்டுன்னி
வைத்தேன் ரீங்காரங் கொண்டு கட்டினேன் உன்னு
உன்னு ஆவேசு ஆவேசு கோரக்க நாதா சீக்கிர
சீக்கிர இதுவைத்து விட்டு பிறகு உருச் செய்கிறது.

## 1082. *(b)* திருமந்திரம்.

Lines 10—12 in a Page.

இது, தேவி சக்கரமும் வசிய முதலிய அஷ்டகர்மங்களுக்கு மந்திரமும் கூறும் 300 திருமந்திரங்களை உடையது. இதல் 242 செய்யுட்கள் இருக்கின்றன. அபூர்த்தி.

Beginning :

முடித்தவிம் மந்திர மூலம தாகு
மடுத்த விலக்கமு மக்கரந் தானு
மடுத்திடு வீச மறைபதி னாறு
மெடுக்குங் கரும மினிச் சொல்லு வோமே. (1)

End :

உரைப்போ நிலபேதனந் தன்னை யோங்கிய
பரிப்பூ மய்யிராசப் பார்த்திடி லெட்டுத்
துரப்போ மிருபத்து நாலுந் தொண்ணூற்றஞ்சும்
விரைப்போது நெல்லு விளைவது தானே. (242)

குறிப்பு :

இதில் மூலிகைகளை காப்புக்கட்டிப் பிரயோகஞ் செய்தற்குவேண்டிய மந்திரங்களும் கௌதமரிஷி கோபுரசித்தர் வன்னிமண்டலசித்தர் கயிலைசித்தனுர் மாரணவேதர் குருசித்தர் கோரக்கர் போகர் இரசவாதமுறைகளும் இருக்கின்றன.

---

1083. (c) பதினெண்சித்தர் ஆணிக்கோர்வை.

Lines 5 – 8 in a Page.

இது, இரசவாதத்தைக் கூறும் நூல்.

Beginning :

காத்ததேவன் ஆணிநூல்.

விடியெனவே கூப்பிடுவான் மெய்யிறகும் பின்பு
கொடியெனவே கூப்பிடுவான் கொட்டிறகும்—படினயன்
கொள்ளும்வல் லானிறகு இந்நான்கு
பெலன்கொள்ளு மண்டலத்திற் பேறு.

என்றது கோழி யிறகும் வலியான் இறகும் மனிதர் தலைமயிரும் மூணும் விராகனிடை கெந்தகமும் போட்டுத் தயிலத்துக்கு இவை யெல்லாங்கூட்டித் தாழியில் வைத்துச் சட்டி பொத்துக் கலசம் வைத்து ஆட்டொரு மூட்டம் போட்டுத் தைலம் இறக்கி வைத்துக்கொண்டு இரும்பு முதல் நவலோகமும் பொன்னும் வளையில் மண்தங்கமாம் இது கைகண்டது.

End :

குருதெட்சகாரணி நூல்.

கோழிமுட்டை கொண்டுவந்து நடுவே பொத்து

வெள்ளைக் கருவிற்பாதி ஊத்திப்போட்டு அரை விராகனிடை அரிதாரமும் அரைவிராகனிடை ரசமும் முந்திச் சற்று அக்கினி மந்தனறி அந்த முட்டைக்குள்ளே இரண்டு மூலிகையும் போட்டு ஒரு விராகனிடை சாரணைச் சாறும் விட்டு மூடி நன்ருய் மூணு சீலை மண் செய்து குக்குடபுடம் போட மெழுகாம் அல்லது செந்தூரமாம்.

குறிப்பு :

மூலிகைகளைக் காப்புக்கட்டு மந்திரமும் சில ரசவாத முறைகளும், ஜோதிடக் குறிப்பும் எழுதப்பட்ட ஏடுகள் கோக்கப்பட்டிருக்கின்றன. கிரந்தத்தில் எழுதிய மந்திர ஏடுகளும் பாம்பு மந்திரமும் இருக்கின்றன.

1084. No. **593** மந்திர முறைகள்.

ஏடுகள் 23 ; Lines 8—12 in a Page.

இதில் கிரந்தத்தில் எழுதிய பலவிதமான மந்திரங்களிருக்கின்றன.

1085. No. **594** ஜாலமுறைகள்.

ஏடுகள் 30 ; Lines 4—8 in a Page.

இதில் பலவகை ஜாலம் அஞ்சனம் வசியங்களும் சில யந்திரங்களும் மந்திரமும் இருக்கின்றன.

Beginning :

செவ்வாத்திப்பூவும் ரசமுமத்திச்சு கையில் தடவிப் பிடிக்க போகிக்கும். எலும்மிச்சம்பழத்தில் ரசமும் தேள் கொடுக்கும் அடைத்து முகந்து பார்க்கவும். ரசத்தை ஐவிரலிச்சாறு வார்த்தரைத்துக் கையில் தடவிப் பிடிக்கவும், பற்கொம்பிட்

டுமியவும். 'வாழை வடக்குப்போன வேரண்டையில் எட்டு நாள் சிறுநீர் விட்டு எட்டாநாள் செவ்வாய்க்கிழமையில் பெலியிட்டுப் பிடுங்கி யிதுக்கும் பற்கொம்பிட் டுமியவும். வெண்காரம் கிளுவைப் பாலிற் குழைந்து வெத்திலையிற்றடவி மூன்று சுருள் குடுக்கவும். வெள்ளையவரைச் சாறும் ரசமும் உள்ளங்கையிற் றடவிப் பிடிக்கவும். வெள்ளைக்குன்றி வேரும் அரிதாரமும் புருவெச்சமும் பசுவின் பாலிலரைத்து..... .ழியிற் பூச நடக்கும். உலக்கையிற் பூச உருளும். அம்மியிற் பூச நடக்கும். கையிற் றடவிப் புளியிலை யுருவக் குளவியாம்

End :

பச்சைப் பாம்பின் வால் ஆமணக்கில் வேருவி..... டை திரியாகத் திரித்து நல்லெண்ணையில் விளக்கேத்தி தலை ஓட்டிலே மை பத்தவைத்துக் கண்ணிலிட புதையல் தோணும்.

---

1086. No. 688 *(a)* பலவகை மருந்துகள்.

ஏடுகள் 113 ; அதிக சிதிலம் Lines 5—6 in a Page.

இதில் பலவகை நோய்க்கும் விஷங்களுக்கும் மருந்தும், சாலமுறைகளும், கற்பங்களும், மந்திரங்களும் எழுதப்பட்டுள்ளன.

Beginning :

தேவதாளி சமூலமும் கொண்டுவந்து குறும்பனைக் கிழங்கும் கொண்டுவந்து உலர்த்திப்பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி புதுக்கலசத்தில் வைத்துக்கொண்டு தினமொரு வெருகடிப் பிரமாணம் பசுவின் நெய்யிற் குழைத்து

மிழுங்க ஆறுமாத்தையில் வச்சிரகாயமாம். புளிப்பு போகம் தவிரவும்.

* * * *

ஒரு தலைவலிக்கு பொன்னாங் கண்ணி சம்மூலமும் கொண்டுவந்து இரண்டு வெண்காயமும் நருக்கி நாசியிலே குத்த நிற்கும். நல்ல வேளை இலைச்சாறு திருநீற்றில் கலந்து நாசியில் குத்த நிற்கும்.

செவிப்புழு விழமருந்து நிலக்கடம்பு சாற்றில் சுக்கு தேய்த்து செவியில் குத்தி சிறுபொழுது கழித்துத் தலையைச் சாய்க்கச் செவிப்புழு விழும். கஞ்சாங்கோரைச் சாறும் முலைப் பாலும் கலந்து செவியில் குத்த புழுவிழும்.

* * * * *

சாரணைவேரும் தினை அரிசியும் எருமைப்பாலால் அரைத்து அடைசுட்டுத் தின்ன ஈளையும் இருமலும் தீரும்.

* * * * *

உப்பிலிவேரும் குதிரைவாலிவேரும் குளிசமாடி குடத்தில் வாயில் வைத்துக் கீழும் வைத்துத் தேங்காயை அதின்பேரில் வைத்து [உடைக்க] தேங்காய் தகரும் குட முடையாது.

End :

பொன் அரிதாரம் வேணுமென்றபடி கொண்டுவந்து சிறுகற்றுளை ..............................மத்திச்சு வெயிலிலே வைத்து எடுத்துக் காசுபோல தட்டி ..............................
....................... சாம்பலை ஒரு உலை மூடியிலே இட்டு நடுக் கொண்டு தட்டின .....................சாம்பலை ஒரு உலை மூடி கொண்டு மூடி சீலைமண் செய்து புடம்..................... பற்பமாம்.

குறிப்பு :

இதில் மருந்துகளை அல்லாமல் இராமாயணம் எழுதிய சில ஏடுகளும் அகஸ்தியர் குருநாடியில் சில செய்யுட்களும் திவாகர தோத்திரமும் இருக்கின்றன.

---

## 1087. (*b*) உதைய திவாகர தோத்திரம்.

Lines 5 in a Page.

இது சூரியனைப் பற்றிய தோத்திரம். இயற்றியவர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning :

கடல்தனில் நீயெழுவாய் காரணகாரணனே
புடைபட நின்னடியார் போத உனைத் தொழுவேன்
அடையவுமொரு தேர்மேலசைய எழுந்தருளும்
உடையவ னுருயிரே உதய திவாகரனே. 1

காலையில் மேல்வருவாய் கதிர்பலவுமுடையாய்
வேலையின் மேல்வருவாய் வேதிய வேதியனே
சாலவுனைத் தொழுவேன் என் சங்கை யறுத்தருளும்
ஓலமெனுந் துணையே உதைய திவாகரனே. 2

கிளர்கதி ராயிரமுங் கெழுமி எழுந்தருளும்
வளரின ஒளிமுகவா வானவர் நாயகமே
உளமுற வுட்புகுவாய் உதைய திவாகரனே. 3

End :

பத்தியினலடியேன் பாடிய பதினலும்
நித்த நினைந்துருகி நெஞ்சினில் வைப்பவர்தம்
வைப்பு மிருப்பு மவர் வானுலகுந்தருமே

உதித்து வெளிகாட்டி ஒடுங்கி யிருள் காட்டி
அதித்து மழைகாட்டு மய்யா—மதித்த
சுடரே என் கண்ணலால் சரோதி? அன்ப
ரிடரே களைவாயு நீ.

சாதித்து மூவுலகுந் தானாகி யேவிளங்கும்
ஆதித்த னேகமலை அண்ணலை—பேதித்த
நாளாகி நாழிகையாய் நாயேன் தலையிலிருந்
தாளாகி வைத்தியே தான்.